

WORLD SAIVA CRUSADE



TANJAVUR CONFERENCE RELEASE

(December 19-21, 1997)



PUBLISHED BY LONDON MEIKANDAAR AADHEENAM
FOR WORLD SAIVA COUNCIL (U.K. H.Qrs.)

"AUM NAMSIVAYA"

WORLD SAIVA CRUSADE

உலக சைவ முரசொலி

[Being a consolidated 5-year Action Plan for World Saiva Revival based on Mother Tongue (Tamil) and Thirumurai worship in Saiva Temples, translation of Saiva Scriptures into English, Social Service Saiva Youth Education, and Saiva Tamil Cultural and family values]

Joint Editorial Board:

H.H. Swami Siva Nandhi Adikalaar (Chairman)
(London Meikandaar Aadheenam)

Dr. K. Loganathan
(University of Malaysia)

Sivathiru M. Ramalingam B.Com
W.S.C. Treasurer and Secretary Co-ordinator;
W.S.C. India Branch

Published by London Meikandaar Aadheenam for World Saiva Council (U.K. H. Qrs) to mark :

6th W.S.C. TANJAVUR SAIVA CONFERENCE
19th DEC. 1997

WORLD SAIVA CRUSADE

Published by
MEIKANDAAR ADHEENAM, U.K.

On 19th DEC 1997
SIXTH (WORLD SAIVA COUNCIL) INTERNATIONAL
SAIVA CONFERENCE, TANJAVUR.

PRICE : UK/USA/Europe £ 15
India Rs. 100/-
Sri Lanka Rs. 150
Singapore/Malaysia U.S. $ 25, Durban R.40

Copies Available at :

1. **Meikandaar Adheenam**
   C/o. 72, King Edward Road
   London E 17 6 HZ, U K.
2. **W.S.C. (India)**
   37.R. Block, Anna Nagar
   Chennai 600 040 S. INDIA
3. **World Saiva Council**
   29, Jelan S. Cangat Minden
   11700 Penang, Malaysia
4. **Saiva Vazhipattu Kazhagum**
   38, Oribi Circle, Mobeni Heights-4092
   Durban, South Africa

Printed at : **Kavinkalai Achagam,**
2/141, 2nd Street, Khandhasami Nagar, Palavakkam,
Chennai-600 041. Tamilnadu. S. INDIA.
Phone : 4927721

INVOCATION PRAYERS TO LORD - SIVA



ஓம் சிவசிவ

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

Sinners Know not to Hail Siva
Sin leaves us if we Hail Siva
To Hail Siva is to become Devas too
To Hail Siva is indeed the way to Release.

— Thirumantiram (St. Tirumoolar)

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடமையும் எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ,. எண்தோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய், பிழை செய்வாய் யானோ இதற்கு நாயகமே?

St. Manikkavacagar's Song of Surrender to Siva :

When you showed your Grace on me and vouchsafed release
On that day itself, did not thou take over my life and my All?
What care is left now, in this World for me, oh my three
- eyed Lord!
Do thou good, Do thou ill: I rejoice in thy sweet will!

— THIRUVACAKAM

PRAYER TO LORD SIVA

(சிவன் வழிபாடு)

Let us raise our heart in prayer to LORD SIVA who is the master of our soul, and fix our faith in His Grace:

"Omnipotent SIVA, glory to Thee! Glory to Thy saints! Glory to Meikandar, Appar, Sambandar, Sundarar and Manickavachakar! Supreme Siva, give us more and more of Thy love. Pour into us more and more of Thy Energy. Let Thy Truth-Light descend into us brighter and ever brighter and chase off the thick gloom of our mental being. Let us live in thee, to do Thy will. O Killer of the 'asuric' forces, kill envy, littleness, doubt, arrogance, and Self-sufficient vanity in our mind, and purify our souls. Let us be true vehicles of Thy Grace, Torch-bearers of Thy Truth, and heroes of Thy Faith. Off fear; off doubt and despair! O Shiva, there Thou art ever united in the soul, the life of our lives, the core of our being, the essence of our spirit! O Mercy, let nothing stand in the way of our realising this identity! Let all mind-wanderings cease; Lord, we have seen the world and its nature; we have seen its pleasures, vain hope, deluding mirage! Lord, we anchor our faith at Thy gracious feet. There we find true peace, blissful shelter! Keep us ever attached to Thy feet, O Lord, and save us from temptations. Thou art real. To realise Thee in us is peace. To live in union with Thee is real Bliss! Om, Namah Sivaya! ANBE SIVAM!

அன்பே சிவம், ஒன்றே குலம், ஒருவனே தேவன்

திருக்கயிலாய பரம்பரை : சிவகுருநந்தி

குருமரபு வாழ்த்து



நால்வர் துதி

சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

– உமாபதி சிவம்

திருநந்திதேவர் துதி

அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகிப்
பங்கயம் துளவநாறும் வேத்திரப் படைபொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி!

சிவ சிவ

World Saiva Council

உலக சைவப் பேரவை

Please address all correspondences to :

INTERNATIONAL HEAD-QUARTERS (LONDON)
Chief Executive W.S.C. C/O London Meikandar Aadheenam
72, KING EDWARD ROAD, LONDON E17 6HZ
UNITED KINGDON

(Established in Madras 9-2-92)

W.S.C. CENTRAL EXECUTIVE

President H.H.SRI LA SRI Kasivasi Muthukumarswami (India)	**Chairman** (Chief Executive) Swami Siva Nandhi Adikalaar (U.K.)	**Secretary General** Dr. K. Loganathan (Malaysia)
Treasurer : Thiru M. Ramalingam, B.Com. (India)	**Asst. Treasurer (H.Q)** Mr. V.R. Ramanathan (U.K) Mrs. L. Subashini (MAL)	**Deputy Secretary General** Mr. K. Thayaparan (Sri Lanka)
PUBLIC RELATIONS OFFICERS :		
Dr. S. Sivathasan (U.K) Thiru P.S. Patkunarajah (France); (S. Africa) . Thiru A. Arumukam (Mal)	Dr. S. Navaratnam (U.K) Thiru Selvan Pillai Dr. G. Bhaskaran (India)	Mr. R. Maduraimuthoo, (S. Africa) Mr. S.T. Moodley (S.A)

W S C INTERNATIONAL ADVISORY COMMITTEE ON POLICY (1/17/98)

PATRON
H.H. Sri La Sri Guru Maha Sannidaanam Dharmapuram

SECRETARY
Swami Premananda
(S. Africa)

PRESIDENT
Thavath-Thiru
Santhalinga Ramasamy Adikal
(Tamil Nadu India)

TREASURER
Mr. M. Gounden
(Mauritius)

CHAIRMAN
Thavath-Thiru
Siva Nandhi Adikallar
(U.K)

Members:-
Dr. G. Bhaskaran
Mr. Villa Pillai (S.A)
Dr. Avvai Natarajan (India)
Dr. K.P. Aravaanan (India)
Mr. Balan Gounder (S.A)
Thiru A. Kulasveerasingam (Malaysia)

சிவ சிவ

World Saiva Council

உலக சைவப் பேரவை

Please address all correspondences to: LONDON HEAD QUARTERS

Chief Executive W.S.C. C/O London Meikandar Aadheenam
72, KING EDWARD ROAD, LONDON E17 6HZ UNITED KINGDOM

(Established in Madras 29-2-92)

Saiva Ulakam

சைவ உலகம்

A bilingual, quarterly review of global Saiva Hindu news and views with a focus on service and current events. The function of the W.S.C. Trust as a non-political, Saiva religious charitable organisation is primarilly to co-ordinate policy and render advice and assistance to its regional bodies in achieving the Trust's objectives of International Saiva wellbeing and Social regeneration.

அரசியற் சார்பற்ற சைவ சமய சர்வதேச அமைப்பான பேரவையின் கருத்துளையும் திட்டங்களையும் தாங்கிவரும் ஏடு.

W.S.C. STANDS FOR:

- ☆ The truth that Pati, Pacu, Pasam are eternal and uncreated.
- ☆ That Saivism is a religion on its own and not an appendage to the caste ridden Hinduism.
- ☆ That Tamil language must be reestablished as the language of prayer in all Saivite temples.
- ☆ That all over the world the Saivites should come together to bring about the renaissance in Saivism, so that it is suitable to the modern world.

W.S.C. Board of Trustees (1997)

The Board of W.S.C. an international non-political religious and charitable organisation is constitutionally and legally under the Saiva Religious and policy guidance of London Meykandar Aadheenam Trust (a U.K. registered Religious Charity)

உலக சைவர்களுக்கு ஓர் அறை கூவல்

1. உலக சமயங்களுள் பழமையும் சிறப்பும் வாய்ந்த நமது சைவம் பகுத்தறிவுக்கும்; அறிவியலுக்கும் ஈடு கொடுக்கும் சமயம்;
2. பக்தி நெறி என்ற தளத்தில் "ஒன்றே குலம்", "ஒருவனே தேவன்" என்ற கொள்கை அடிப்படையில் எழுந்தது நமது சைவம்.
3. சைவ சாத்திர, தோத்திர, தத்துவ மூல நூல்களை எமது தாய்மொழியாகிய தமிழிலே தாங்கித் திகழ்வது
4. சைவத்தின் தனித்தன்மையும், தூய்மையும், ஆரிய அயல்வழக்குக் கலப்புக்களாலும், குறிப்பாகத் திட்டமிட்ட பிராமணியத்தின் சதிகளாலும் பல நூற்றாண்டுகளாக சிதைக்கப்பட்டும், சீரழிக்கப்பட்டும் வருவது கண்கூடு

இதைத் தடுத்து நிறுத்துவது உலக சைவர்களது கடமையும், சிவத் தொண்டுமாகும்.

உடனடிச் செயல்திட்டங்கள்

1 எமது சமயம் சைவம் என்ற உலக சைவ மாநாடு (டர்பன் தென்ஆபிரிக்கா 1995) தீர்மானத்தை எங்கும், எதிலும் நிறை வேற்றுக.

2 தாய்மொழியாகிய தமிழ் மூலமே சிவாலய அர்ச்சனை பூசை வழிபாடு, திருவிழா என்பதை நடைமுறைப்படுத்துக

3 உலக சைவப் பேரவையிற் சேர்ந்து அதை ஒரு சர்வதேச சைவப் பேரியக்கமாக வளர்க்க உடன் ஆவன செய்க

சைவத்தில் குறையும், நிறைவும்

1 கோயில் கூடாது என்று பகுத்தறிவாளர் கூறவில்லை கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகக் கூடாது என்று தான் சொன்னார்கள்; சைவத்தை வேரறுக்கும் 5ம் படைக்கு அரணாகக் கூடாது

2. மிகப் பழமை வாய்ந்த சைவத்திலே, வரலாற்று சமூக, அரசியற் காரணங்களினால் குறைபாடுகள் ஒட்டிக் கொண்டுள்ளன. அதற்குக் குழந்தையை அதைக்கழுவிய அழுக்கு நீரோடு வீசி விட முடியுமா? குற்றம் நீக்கி குணம் கொள்ளல் கற்றறிந்த மாந்தர் கடனன்றோ? சைவர்களே செயலாற்ற விழித்தெழுங்கள்.

6th W.S.C. International Saiva Conferance
Tamil University, Tanjavur-613005, S. India
19-21-December 1997.

WORLD SAIVA COUNCIL

An international Saiva Religious, non political, charitable organisation established on 29-2-92 in Chennai with branches throughout the World and Headquarters in London, U.K.

INTRODUCTION AND INVITATION TO PARTICIPATE

Please address all correspondence to :

Chief Executive W.S.C
Swami SIVA NANDHI ADIKALAAR
72, KING EDWARD ROAD, LONDON E17 6HZ
UNITED KINGDOM

BACK GROUND

The World Saiva Council was established on 29-2-92 at a public meeting of international delegates held at Saiva Siddhantha Peru Manram, Mylapore, Chennai 4. The present president is Srilasri Kasi Vasi Swamikal, Head of Thirupanandhal Kasi Mutt. Chairman and Chief Executive is Swami Siva nandhi Adikalaar of U.K. with Dr. K. Loganathan of Malaysia as Secretary General and Chief Editor "Saiva Ulakam." Thiru M. Ramalingam, B.Com., of Madras is Treasurer. W.S.C. has several branches throughout the world.

COUNCIL AIMS

To preserve, foster and promote Saivism, Saiva Siddhantam and the welfare & progress of Saivite Hindus throuhout the world. To take all necessary steps to achieve the above.

ORGANISATION

The Council will be structured on the model of an autonomous body like a university., with a court of GOVERNERS, General Council, a Management Committee, all subject to a Constitution and representing Saiva Mutts. Temples, Organisations, etc., internationally. Advisory council chairman is T.T. Santhalinga Ramasamy Adikal. Perur.

PROGRAMME & REGISTRATION

A TEN-POINT ACTION PLAN including the formation of SIVA THONDAR ANI as a first step for full-time social service work in each country is being drawn up now and the Organising Committee welcomes your ideas & suggestions on all aspects of the councils work.

Successful International Saiva canferences had been held by W.S.C. in Singapore (1992), PARIS (1993), COLOMBO (1994) and DURBAN (1995). Our next conference is at Tanjavur Tamil university.

APPEAL

We appeal to Saiva individuals, Organisations to join or give ideas and support through Donations to our world-wide Saiva humanitarian service.

SAIVA ULAKAM

Please support our bilingual, quarterly Saiva Jounal "SAIVA ULAKAM" with Editor in chief., Dr. K. Loganathan, an international saiva scholar from MALAYSIA.

6–வது உ.சை.பே. உலக சைவ மாநாடு
பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005, இந்தியா
19 – 21 டிசெம்பர் 1997.

உலக சைவப் பேரவை

இப்பேரவை சர்வதேச அரசியற்சார்பற்ற, சமய, அறநிலைய சைவப் பேரமைப்பாகச் சென்னையில் 29–2–92–ல் நிறுவப்பெற்றது. சைவர்கள் வாழும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கிளைகளையும் இலண்டனில் தலைமையகத்தையும் கொண்டு இப்பேரவை இயங்குகின்றது.

அறிமுகமும் அழைப்பும்

சகல தொடர்புகளுக்குமான முகவரி :–
தலைமை நிறைவேற்றுநர் உ.சை.பே.
சிவநந்தி அடிகளார்
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
72, கிங் எட்வெட் சாலை
இலண்டன் E176HZ இங்கிலாந்து

பேரவையின் பின்னணி

சென்னை, மயிலாப்பூரில் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் 29–2–92 அன்று நடை பெற்ற உலக சைவப் பேராளர்கள், பிரதிநிதிகள் கொண்ட பொதுக்கூட்டத்தில் உலக சைவப் பேரவை

என்ற சர்வதேச அமைப்பு ஏகமனதாக நிறுவப் பெற்றது. பேரவையின் தற்போதய தலைவர் : திருப்பனந்தாள் காசிமட அதிபர் சுவாமிகள். பிரதம நிறைவேற்றுநர் : தவத்திரு சிவநந்தி அடிகளார் (இலண்டன்). செயலதிபர்: டாக்டர் கி. லோகநாதன் (மலேசியா). பொருளர்: சிவத்திரு மு. இராமலிங்கம் B.Com (இந்தியா)

பேரவையின் நோக்கம்

சைவம், சைவசித்தாந்தம் ஆகியவற்றைப் பேணி, வளர்த்துப் பரப்புவதும் இந்து சைவ சமயத்தவர்களின் நலத்தையும், முன்னேற்றத்தையும் உலக ரீதியாகப் பேணிக் காத்தலும். இதற்கான நடவடிக்கைகளை எடுத்தலுமாம்.

பேரவை அமைப்பு

ஒரு தன்னாதிக்கமுள்ள பல்கலைக் கழக அமைப்பு மாதிரியில் பேரவையின் அமைப்பும் சட்ட திட்டத்திற்கு ஏற்ப ஆளுநர் குழு, பொதுச்சபை செயலாட்சிக் குழு என்பவை பரந்த பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுத் தலைவர்: பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

செயல்திட்டமும் பதிவும்

நாடளாவிய முறையில் சிவத் தொண்டர் அணிகள் உட்பட, ஒரு பத்து அம்சச் செயல் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதுபற்றியும், உங்களது பிற கருத்துக்களையும் முகவரியுடன் பதிவு செய்க. சிங்கப்பூர், பாரீஸ் கொழும்பு, டர்பன், முதலிய நகரங்களில் எமது சைவமாநாடுகள் நடைபெற்றன. 97ல் தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது.

வேண்டுகோள்

கருத்துக்களையும் செயலாற்ற உதவும் நன்கொடைகளையும் ஈந்து பேரவையின் பணிகளை ஊக்குவிக்குமாறு சைவ அன்பர்களையும் நிறுவனங்களையும் அன்போடு வேண்டுகிறோம்.

சைவ உலகம்

டாக்டர் லோகநாதனை பிரதம ஆசிரியாராகக் கொண்டுள்ள எமது காலாண்டு இருமொழி இதழான "சைவ உலக" த்தை ஆதரிக்க வேண்டுகிறோம்.

உலக சைவப் பேரவை

WORLD SAIVA COUNCIL

[a non-political, saiva, religious, Charitable Trust with London Meikandaar Addheenam as its International Head Quarters]

LIST OF International Saiva conferences held so far:-

1. Formation on 29-2-92 at Saiva siddhanta perumanra Hall, Mylapore, Madras, S.India and Ratification in Singapore, July 1992.
2. PARIS, FRANCE, 1994
3. COLOMBO, SRI LANKA, 1995
4. DURBAN, SOUTH AFRICA, 1996
5. TANJAVUR, S.INDIA, 1997

OUR MOTTO

A VISION WITHOUT A TASK IS BUT A DREAM ONLY

A TASK WITHOUT A VISION IS MERE DRUDGERY

A VISION WITH A TASK CAN ALONE CHANGE THE WORLD

உலக சைவத்தமிழருக்கு ஓர் அறைகூவல்

செயல் வடிவம் பெறாத இலட்சியம் வெறும் கனவு தான்

இலட்சிய நோக்கற்ற செயல் பரிதாப உழைப்பே

இலட்சியத்தில் மலரும் செயலே உலகை முன்னேற்றும்.

THE PURPOSE OF W.S.C. is to arouse SAIVA TAMILS TOWARDS A WORLDWIDE LONGTERM VISION AND CONVICTION FOR SAVING SAIVISM NOW AND FOREVER, AS WE ARE BECOMING DANGEROUSLY COMPLACENT AND APATHETIC.

சிவ சிவ

World Saiva Council

உலக சைவப் பேரவை

Please address all correspondences to:
INTERNATIONAL LONDON HEAD QUARTERS
Chief Executive W.S.C. C/O London Meikandar Aadheenam
72, KING EDWARD ROAD, LONDON E17 6HZ UNITED KINGDOM

W.S.C. VISION for the 21st Century
Present Policies of Future Plans

The 1st conference held in Madras resolved:-

The function of the W.S.C. Trust as a non-political, Saiva religious charitable organisation is primarily to co-ordinate policy and render advice and asistance to its regional bodies in achieving the Trust's objectives of International Saiva well being and Social regeneration with a focus on Saiva Education, Tamils welfare with an awareness of international developments and current events, W.S.C. policy is formulated by W.S.C. General Assemblies meeting at World Saiva conferences:-

1. The 2nd Conference (1992) at SINGAPORE resolved: That the tenet that God, souls, and "pasam" (bonds) are uncreated; beginningless ultimate realities is true and the tenet called Suddha Advaita and Punitha Advaita (Pure Advaita) according to which God bestows His Grace by being in the threefold relationship of identification with, difference from, and togetherness with the souls are fundamental tenets of Saiva Siddhanta.

2. PARIS : 3rd W.S.C. SAIVA Conference (26-6-1994) Resolution No.2: Passed by the General Assembly reads as follows:

This Conference earnestly appeals to World Tamil Saivites to practice, support and promote the use of Tamil Archanas and Saiva THIRUMURAI at ALL SAIVA TEMPLES FOR ALL PRAYER SERVICES, and Saiva Rites etc.

3. COLOMBO: 4th W.S.C. SAIVA Conference (8-10 Sept 1995): Resolution No 1 passed by the General Assembly: "This conference appeals to World Fellow Saivites to take all practical steps such as publications, suitable training of Saiva Tamil priest proficient in Saiva Thirumurai, etc to implement the Paris Resolution and also to consolidate efforts to implement the 10-point conference proposals for Saiva Social Service work with a focus on Youth Welfare and Saiva religious Education worldwide".

4. DURBAN : 5th W.S.C. International Saiva Conference, SEPT 20-23. 1996: Resolved, Mindful of our lofty Saiva concepts of "Anbe Sivam" and "onre Kulam, oruvane Devan" and rejecting the imposition of the obnoxious caste system, untouchability and the alien Sanskrit on our Saiva Tamil culture by Brahiminism designed to undermine Tamil culture and Saivism from within, this conference of world Saivites PROCLAIM THAT OUR RELIGION IS SAIVISM AND SAIVISM ALONE, INDEPENDANT OF Hinduism HENCE FORTH AND FOREVER.

5. TANJAVUR: 6th W.S.C. Conference Dec 19-21, 1997 While re-affirming all the above policies, further resolved to implement a 10-point ACTION-PLAN To consolidate World Saivism.

உ
சிவமயம்

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிரும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம்பல மென்று தேர்ந்து கொண் டேனன்றே.



H.H. Swami Sivanandhi Adikalar

Founder Chairman, World Saiva Council and
Head of London Meikandar Adheenam U.K

திருப்பெருந்திரு இலண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வர்

தவத்திரு சிவநந்தி அடிகளார்

தோற்றுநர், தலைவர், உலக சைவப் பேரவை

திருக்கயிலாய பரம்பரை சிவகுருநந்தி மரபு வாழ்த்து

சிவமயம்



Our Homage to Saiva saints of the Meikandaar Lineage who codified and propagated Saiva Siddhanta philosophy.

சந்தான குரவர் துதி

சிவஞான போதமருள் மெய்கண்ட தேவரிரு செந்தாள் போற்றி.
அவர்பாத மலர்தலைகொள் அருணந்தி யாங்குரவர் அடிகள் போற்றி
தவமாகு மறைஞான சம்பந்த வள்ளலிரு சரணம் போற்றி
பவமோய அருளுமுமா பதிசிவா சாரியர்பொற் பதங்கள் போற்றி

மெய்கண்ட தேவ நாயனார் துதி

வாழ்ந்தேன் அருட்கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமல் மேதினியில் – சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
உண்மைத் தவப்பயனே உற்று – உண்மை விளக்கம் 54

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்

சர்வதேச தலைமைச் செயலகம் :

உலக சைவப் பேரவை :

வாழ்த்துப்பா

செந்தமிழ் நல் திருமுறைகள்
செழித்துயர்க ! சிவநெறியாம்
நந்தம் அரும் பெருஞ்சமயம்
நனிபரவிச் சிறந்தொளிர்க!
நந்தி மெய்கண்டாதீன
உலக சைவப் பேரவையும்
சந்ததமும் இறையருளால்
தழைத்தோங்கி வளர்கநன்றே!

உலக சைவ எழுச்சிப் பாமாலை

20–9–1996 பேரவையின் 5வது டர்பன் மாநாட்டில் பாடப் பெற்றது
(பாடல் : புலவர் பா. ஆழ்வார்)

இராகம் : கானடா **தாளம் : திஸ்ரம்**

சைவர்களே சைவர்களே ஒன்று சேருவீர்
சைவசமய சித்தாந்தம் அறிந்து கொள்ளுவீர்

திருஞான சம்பந்தரும் நாவுக் கரசரும்
சுந்தரரும் மாணிக்க வாசக னாரும்
சைவத்தை வளர்க்கவந்த அடிய ரல்லவா
சைவசமய குரவரெனும் நால்வ ரல்லவா

– சைவர்களே

ஆதியிலே தோன்றியது சைவ மல்லவா
சோதிமய மாகுவது சைவ மல்லவா
வேதநான்கும் விளக்குவது சைவ மல்லவா
நாதநாமம் நமச்சிவாய வென்ப தல்லவா

– சைவர்களே

மெய்ச்சமயம் சைவமென்றார் தாயு மானவர்
பொய்ச்சமயம் விடுகவென்றார் இராம லிங்கரே
மெய்ச்சமயம் சைவமென்று அறிந்துகொள் வீரே
இச்சமயம் நாமெலாரும் இணைந்திடு வோமே

– சைவர்களே

அன்பேசிவம் என்றேநாம் அறிந்திடு வோமே
துன்பநீங்கி ஒடுமென்று தெளிந்திடு வோமே
அன்றும் இன்றும் என்றும்வாழ்வர் சைவ ரல்லவா
மன்றுலாவும் சிவபெருமான் தலைவ ரல்லவா

– சைவர்களே

W.S.C. Appeal to World Saivites : Arise, Awake and Act before it is too late !

I. THE WORLD SAIVA COUNCIL IS ACUTELY AWARE OF THE ON GOING DANGERS OF SAIVA MARGINALISATION BY SUBTLE FORCES BOTH FROM WITHIN BY BRAHMINISM (through its Sanskritisation and Elimination of Tamil worship, using SAIVA-THIRUMURAI, and excessive ritualism designed to debase the Sanctity of Saivism) and FROM WITHOUT BY CHRISTAIN CONVERSIONS (Done overtly and Covertly through subtle educational, financial and economic rewards to uneducated Saivites a Cruel exploitation of Innocents).

II It is well documented that the above evils of slow destruction of Saivism had gone on for centuries and is still going on.

For example,

(i) Do you know that it was our Raja Raja Chola king who restored Thrumurai after these were hidden away by brahminism. (10th Century A.C)

(ii) Do you know that our Saiva Tamil thirumurai Prayer tradition was relpaced in 7 Sivan Temples including Chidamparam by force by brahminism from the time of king kulothunga chola III (13th Centurary A.C) (Thiruthurai Poondi Revolt)

(iii) Even today, because of brahminism's control of T.V, Newspaper, Media, etc Saiva Tamil Culture is adulterated and mixed subtly with foreign vedantic ideas and presented as saiva tamil culture, thus destroying our uniqueness and identity.

So Beware !

RESTORING OUR SAIVA-TAMIL CULTURE IS RE-GAINING OUR SELF-RESPECT

The Durban (1996) Saiva Conference

proclaims to the world:-

(1) Our religion is Saivism the worlds oldest, yet scientific Faith, which is LIFE-AFFIRMING.

(2) We are Saivites (and NOT Hindus) because of the following -

(i) Saivism is based on the loftly principle of one humanity and one godhead " Onre Kulum, Oruvane Thevan", Whereas Hinduism is based on the caste system (like Apatheid)

(ii) Saivism believes in positive life-affirmation holding that the world is real, whereas Hinduism (brahminism) holds that this world is unreal and illusory (Mayavadam)

(iii) Saivism nurtured the Bhakti Movement started by our Nayanmar Saints who sang the Tamil Thirumurai hymns in protest against the imposition of sanskrit and alien practices designed to destroy Tamil culture.

சிவயோக நெறி : வாழ்த்து

1. நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடம்
சிற்றம்பல மென்று தேர்ந்து கொண்டேன் நன்றே

2. ஒன்றே குலமும் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லை நம் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே

3. பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நின்று முயல்தவம் செய்கிலார்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

4. வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார் செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச் செல்வி
வாழி அவன் சீர்பாடும் வாய்

WORLD SAIVA COUNCIL ANNOUNCEMENT

A CLARION CALL TO WORLD SAIVITES	உலக சைவர்களுக்கு ஓர்
May you Proudly proclaim to the world:-	அறைகூவல்! தன்மான உணர்வோடு உலகுக்குக் கூறுங்கள்
Our Religion is SAIVISM	எமது சமயம் சைவம்
Our Godhead is Lord SIVA	எமது கடவுள் சிவபெருமான்
Our Scripture is Saiva THIRUMURAI	எமது மறைநூல் பன்னிரு திருமுறைகள்
Our Philosophy is SAIVA SIDDHANTA	எமது தத்துவம் சைவ சித்தாந்தம்
Our Book of Philosophy is SIVA GNANABHODAM	எமது தத்துவ நூல் சிவஞான போதம்
Our Book of Ethics for life is the THIRUKKURAL	எமது வாழ்க்கை நெறி நூல் : திருக்குறள்

Message of Blessings From President, W.S.C

Kailai Mamunivar H.H. Sri La Sri Kasivasi

MUTHUKUMARASWAMI THAMBIRAN SWAMIKAL

Head of Sri Kasi Mutt. Tirupanandal 612 504

வாழ்த்துரை

உலக சைவப் பேரவையின் கொழும்பு மாநாட்டுத் தீர்மானத்தின்படி, சைவத் திருமுறை வழிபாடு தொடர்பான சிறிய நூலொன்று வெளியிடப் பெறுவதறிந்து மிகிழ்ச்சி.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (அப்பர் – மறைக்காடு – 5)

"ஆரியம் தமிழோடு இசையானவன்" (அப்பர் – கடம்பந்துறை – 3)

"வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்"

(அப்பர் – சிவபுரம் – 1)

எனும் அருளாளர் வாக்குகள் இறைமை, மொழிகட்கு அப்பாற்பட்டுப் பெருமைமிக்கது என்பதை வலியுறுத்துவன.

நாட்டு மக்கள் எம்மொழி பேசுகின்றனரோ அம்மொழியிலேயே இறைவழிபாடும் அமைவது சாலச் சிறப்புடையதாகும்.

"செழுமறை தெளிவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலால்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பி"

(ஸ்ரீ குமரகுருபரர் – மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் – 43)

வேதப்பொருளைத் தெளிவடையச் செய்யும் தமிழ், திருவருள் ஆகிய அமுது இரண்டையும் குழைத்துப் பெருமாட்டி ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு ஊட்டினார் என்பது பொருள். அவ்வாறாகிய அருள் பெற்ற 'பிள்ளை' பாடிய அருந்தமிழ் ' தோடுடைய செவியன்' என்று தொடங்கிப் பொற்றாளம் பெற்றது, முத்துப் பந்தர், முத்துச்சிவிகை பெற்றது, மறைக்கதவம் சாத்தியது, பாலையை நெய்தல் ஆக்கியது, அனல் வாதம், புனல்வாதம் செய்து வென்றது, எலும்பைப் பெண்ணாக்கியது, பாராளும் அரசனை வெப்புநோய் தீர்த்து நெறிப்படுத்தியது எனபன முதலாகப் பல அற்புதங்களை நிகழ்த்தியது.

சூலைநோய் தீர்த்தது, கடலில் கல்லில் மிதந்தது, நீற்றறையில் உய்ந்தது, யானை வணங்க இருந்தது, நஞ்சும் அமுதாக அயின்றது, மறைக்கதவம் திறந்தது, படிக்காசு பெற்றது, பாலனுக்குப் பாம்புவிடம்

தீர்த்தது முதலான அரிய செயல்களும் நாவரசர் திருவாக்கில் பிறந்து பெருமானுக்கு அணியாகிய செந்தமிழ்ப பதிகத்தினாலேயே என்பது பொருத்தமானது.

தம்பிரானைத் தோழராகக் கொண்ட பெருமைமிக்க சுந்தரர் பெருமான் தம் செந்தமிழ்ப் பதிகத்தால், பெருமானையே தூதனுப்பியது, நெல்மழை பெற்றது, முதலை உண்ட பாலனை வரவழைத்தது, ஆற்றில் பொன் இட்டுக் குளத்தில் எடுத்தது முதலான அருஞ்செயல்களைச் செய்து காட்டினார்.

தம்பிரான் தோழராம் சுந்தரருக்கு, 'பித்தா' என்றும் செக்கிழாருக்கு 'உலகெலாம்' என்றும் பெருமானே அடியெடுத்துக் கொடுத்து, மிகப் பெரும் சமயப் பனுவல்களைப் பெருமானே தமிழ்க்கு வழங்கியது எண்ணத்தக்கது.

பெருமான் தமிழ் கேட்கும் இச்சையுடையவன் என்பதை,
'இருந்து தமிழ்கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்'
'என்னைத் தமிழால் பாடுக' என்று பெருமானே சுந்தரரைக்
கேட்டதாகத் திருத்தொண்டர் புராணம் இயம்பும்.

"நமக்கும்அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும் வாயார்'
– (திருத்தொண்டர் புராணம்)

தமிழில் அர்ச்சனை செய்வதற்காகப் போற்றித் திருத்தாண்டகங்கள் உள்ளன. அகத்தியர் தேவாரத் திரட்டு அர்ச்சனை என்றே ஒரு தலைப்பிட்டுத் திருமுறைகளைத் தொகுத்திருக்கிறது, என்பது முதலாயின பெருமானுக்குத் தமிழின்பால் உள்ள பேரருள் திறம் புலப்படுத்துவன.

'வேண்டுதல் வேண்டாமை இலான்' ஆனவன் பெருமான் ஆயினும் அவனை வேண்டி வழிபடும், அடியவர் அவரவர் பேசிப் பழகிய அவரவர் மொழியிலேயே வழிபாட்டு நெறியமைத்துக்கோடல் சிறக்கும்;செம்மையாக அமையும்.

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்"

சீரிய முயற்சி, நன்கு பயனுறும் வகையில் நிறைவுறவும், நூல் வெளியீடு நன்முறையில் அமையவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம் சிவ சிவ

சிவாலயங்களில் தெய்வத்தமிழ் திருமுறை வழிபாடே

கயிலை மாமுனி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள், பேரூராதீனம், பேரூர் – கோவை 10

உலக மொழிகள் பல. அவற்றுள் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தவை சில. தொன்மைச் சிறப்பும் தெய்வத்தன்மையும் உடைய மொழி தமிழ்மொழி. இது உயர் தனிச் செம்மொழியாகும்.

தமிழ் தெய்வநலம் கனிந்த பக்தி மொழியாகும். மனமுருகப்பாடி இறைவனிடம் ஈடுபடத் துணைபுரியும் தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான தெய்வப் பாடல்கள் உண்டு.

கடவுளே மொழிவடிவாக விளங்குகிறார் என்பதைப் "பண்ணும் பதம் ஏழும் பல ஓசை தமிழவதும்" எனத் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். "தொடுக்கும் கடவுள் பழம் பாடல் தொடையின் பயனே, நறை பழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையே" என மீனாட்சியம்மையைப் போற்றுவார் குமரகுருபரர்.

சிவபெருமான் சங்கத்தமிழ்ப் புலவராய் விளங்கினார் என்பதை "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்" என அப்பரடிகள் அருளியுள்ளார்.

தமிழ்ப்பாடலுக்கு இரங்கும் தன்மையாளனாகிய சிவபெருமான் பண் நிறைந்த தமிழ்ப்பாடலுக்காக மண் சுமந்து கூலி கொண்டு புண் சுமந்த நெறியை மாணிக்கவாசகர்

"பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கவி மதுரை
மண் சுமந்து கூலி கொண்ட கோவான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதும் காண் அம்மானாய்"

என்று அருளியுள்ளார்.

இறைவனோடு மிகத் தொடர்புடைய மொழி தமிழ் என்பதும், வான்பழித்து, மண் புகுந்து, மனிதரை ஆட்கொள்ளும் இறைவன் தமிழில் விருப்பம் உடையவன் என்பதை, தமிழ் கேட்கும் இச்சையாய்,

"காசு நித்தம் நல்கினீர்" எனச் சுந்தரர் குறிப்பிடுவார். இவற்றால் இறைவன் விரும்பும் தெய்வமொழி தமிழாகும்.

தெய்வமொழி என்பதற்குச் சான்று உலகமெலாம் ஈன்ற அன்னையாகிய உமையம்மை திருஞானசம்பந்தருக்கு அளிக்க திருமுலைப்பால் தமிழ்ப் பாடலைப் பாடச் செய்தது.

"சீகாழிப் பொய்கைக் கரையில் சிறிதழுத வாகாரும் சேய்க்கு உமை நல்கிய பாலின் மது அன்பர் சோக அந்தகாரம் கெடத் தமிழோடு துலங்கிற்று" என்பார் தண்டபாணி அடிகள்.

முழுதுணர் புலவராக, மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டும் முருகனுக்கு உகந்தது தமிழ். அவர் சிவபெருமானுக்கு உபதேசம் செய்தவர். உபதேசம் செய்த மொழி தமிழ் என்பதை,

"கொன்றைச் சடையர்க்கு அன்றப் பொருளைக்
கொஞ்சு தமிழில் பகர்வோனே "என

அருணகிரிநாதர் அருளியுள்ளார்.

இத்தகைய சான்றுகள் "தமிழ் தெய்வமொழி" என்பதை மெய்ப்பிக்கும். அயல் ஆதிக்கங்களால் புகுந்த வடமொழிக்கு இது போன்றதொரு பெருமைகள் உண்டோ!

அருச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று இறைவனே சுந்தரரிடம் அருளினார் என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. எனவே, ஞானச் செல்வர்களாகிய அருளாளர்கள் காட்டிய வழியில் நமது வழிபாடுகள் அனைத்தும் தமிழில் நடைபெற வேண்டும். அவ்வாறு நடைமுறைப் படுத்த முயல்வதே தமிழர்களது கடமையாகும்.

சேக்கிழார் பெருமான் பிறமொழி வழக்குகள் நம்மிடையே வந்திருப்பதை மாற்றுவதற்காகத் திருஞானசம்பந்தர் தோன்றினார் என்பதை.

"அலகில் செழுந்தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல"

என்று கூறியுள்ளார்.

இத்தகைய மொழியால் இறைவனைப் பாடினால் நெஞ்சம் நெகிழும். மனத்தின் மாசு அகலும். இறைவன் மனத்தகத்தானவன். "வாயானை மனத்தானை", மனத்துள் நின்ற கருத்தாக எனப்பாடினால் அருள்வான் ஆதலினால் திருக்கோயில்களில் சமய வழிபாட்டு முறைகளில் தமிழே இடம் பெற முயலுங்கள்.

எம்மொழியாளரும் தம்மொழியால் வழிபடுவதையே விரும்புவர். தமிழர்களாகிய நாம் ஒண்தீந் தமிழாகக் கன்னித் தமிழாக விளங்கும் நம் மொழியில் வழிபடுவோம். வழிபட்டால் பொன்னும் மெய்ப்பொருளும், போகமும், திருவும் சேரும். மனக்கவலை அகலும். வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.

**செந்தமிழ் நெறியில்
தெய்வம் போற்றுவோம்**

சாந்தலிங்க தாண் மலர் வாழ்க.

THE SACRED TAMIL IN THE TEMPLES

In this article Perur Athenam Canthalinga Ramasamy Adigal outlines the reasons why Tamil must be instituted as the language of rituals in the Temples. Tamil is not ordinary in many ways it is extraordinary. Not only it is the most ancient among the cultivated languages of the world but right from the ancient days it has grown as a divine language, a language that inculcated the presence through immensely beautiful hymns, song, and verses. It is the language of bakti of unsurpassing excellence.

Thirujnana sambanthar mentions that God himself is present in the form of Tamil hymns. Kumara Guruparar mentions

that the Tamil hymns make the presence of God visible and thus made an object of direct experience

There are many legends in which it is communicated that SIVA prefers melodious songs and not so much philosophical disputations, arguments and so forth. Manikkavasagar mentions in one of his verses how SIVA disclosed himself in the form of a labourer who toils for a pittance in order to get a song of praise. Sundarar was told by SIVA himself that archana is singing of hymns and therefore he should pursue the task of composing hymns and songs in praise of SIVA.

The Tamil people throughout their history have been gullible to foreign influences. Their intrinsic open mindedness has sometimes led to a point where their own roots were destroyed by the foreign elements. This happened once before where at the demise of the Third Sangkam, Tamil lost its cultural standing and gave place to Sanskrit. The Alwars and Nayanmarrs recovered for Tamil the rightful place through their sacred love an act of divine Grace itself. We are in a similar situation now. We must reinstitute Tamil as the language of worship in our temples in order to keep alive the essence of Saivism

Tamil is a language that has developed through bakti and bakti is what is needed to experience God directly. The Tamil hymns combine melody with deep intellect, profound understanding with beauties of expression. We as the interiors of this immensely rich tradition are not only dutibound to keep it alive but also make it available to the world at large.

Let us institute Tamil as the language of rituals in our Temples. Should we do this, we shall be favoured by the Gods themselves and all our miseries will be over.

Siva Siva
Thavathiru
Kundrakudi Adigalar
HIS HOLINESS
Deivasigamani Arunachala Desiga Paramacharya Swamigal
Adheenakarthar
Kundrakudi Thiruvannamalai Adheenam

MESSAGE OF BLESSINGS

We feel great pleasure to felicitate Thavathiru Swami Siva Nandhi Adigalaar on ACCESSION as Aadheenakarthar of London Meikandaar Aadheenam.

Swami Siva Nandhi Adigalaar is an exponent of Saiva Siddhanta. Under the superb guidance of Swami, the Aadheenam, we believe, will disseminate the Message of Saint Meikandaar throughout the World.

With best wishes and high regards.

அடிகளார்
(Kundrakudi Adigalar)

தமிழ் இலக்கியங்களானாலும் சமய நூல்களானாலும் தனித் தமிழ் மரபில் தோன்றியவை, பெண்மையை இழித்துப் பேசியதில்லை. "வீடுபேற்றுக்கு மனையறம் தடையானது" என்று ஒரு போதும் தமிழ் நெறி சாற்றியதில்லை. ஆதலால் அரு நிலையில் வணங்கி வந்த சிவவழிபாடு உருவ வழிபாட்டுக்கு வந்ததுடன் முதல் நிலையில் இலிங்க வழிபாடாகவும் இரண்டாம் நிலையில் அம்மையப்பன் வழிபாடாகவும் மலர்ந்தது.

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

(புறம் கடவுள் வாழ்த்து 7 – 8)

என்று புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் கூறப்படுகின்றது

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

உ

சிவமயம்

H.H. Head of Thiruvavduthurai Mutt
Message of Blessings

அருளாசியுரை

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

ஆசியுரை

பாராட்டுதற்கு உரிய திரு கே. ஞானசூரியன், சைவ சித்தாந்தச் செந்நெறிக்கு உரிய முறையான தீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் பெற்றுச் சிறந்து, அண்மையில் இலண்டன் மாநகரிலும் சிவதீட்சை பெற்றுத் தீட்சைப் பெயராக சுவாமி சிவநந்தி அடிகளார் என்னும் உயர் பெயருடன் இலண்டன் மெய்கண்டார் ஆதீனகர்த்தராகப் பீடம் பெற்று உள்ளமை அறிந்து மிக மகிழ்கிறோம்.

சமய நெறிகளுள் மேன்மை கொள்வதாகிய சைவ சித்தாந்த நெறி மேலை நாடுகளிலும் தழைத்து உலகு இன்புற நல்தோற்றம் பெற்ற ஸ்தாபனம் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம். இவ்வாதீனத்தின் தலைவராக (ஆதீனகர்த்தராக) சுவாமி சிவநந்தி அடிகள் பொறுப்பு ஏற்கும் சிறப்பினைக் கொண்டாடும் விழா இனிது நடைபெறவும் இவ் அரிய நிகழ்ச்சியின் இனிய நினைவு என்றும் நின்று நிலவ மலரவுள்ள மலர் சிவமணம் கமழ மலரவும் அடிகள் அருளாட்சி நீடு நிலவி உலகு இன்புறவும் நம் வழிபடு கடவுளாகிய ஸ்ரீஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்திருக்கின்றோம்.

28–11–89
திருவாவடுதுறை

Message of Blessings – அருளாசியுரை

Telegrams: "AADHEENAM" Madurai
Phone: 22793

HIS HOLINESS
Sri-la-Sri Arunagirinatha Sri Gnanasambanda
Desika Paramachariya Swamigal
292nd GURUMAHA SANNIDHANAM
&
AADHEENA KARTHAR
MADURAI AADHEENAM

70, South Avani Moola Street,
MADURAI-625 001.
(S. INDIA)

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக!

தங்கள் 23-11-89 ஆம் நாளிட்ட மடல் கிடைத்து, நமது திருப்பெருந்திரு குருமகாசன்னிதானம் அவர்கள் திருக்கண் பார்வையிட்டார்கள்.

தவத்திரு. சுவாமி சிவநந்தி அடிகளார் அவர்கள் தலைமையில் சைவ சமயப் பிரச்சாரம் சிறப்புற நிகழத் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றார்கள்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்!

திருப்பெருந்திரு குருமகா சன்னிதானம்
அவர்கள் அருளாணைப்படி

S. Rathinasapapathi
ஆதீன மேலாளர்

திருப்பெருந்திரு மதுரை ஆதீனம்
குருமகா சன்னிதானம்
தலைமை அலுவலகம், மதுரை – 625 001.

EDITORS' PREFACE

This is a consolidated presentation of W.S.C. Views already expressed in our official organ "Saiva Ulakam", supplemented by articles of Saiva research scholors which appeared there from time to time and at our conferences and seminars, In presenting this collection of World SAIVA Topics, our Aim has been to give purpose and direction to World Saivites. We request our readers to use Concurrently the W.S.C's all other publications, viz "Saivism" (1994) and "Prayer Manual" (1995) and SAIVISM-questions & Answers(1996), and especially, METAPHYSICA UNIVERSALIS OF MEIKANDAAR (1996).

OUR APPEAL TO SAIVA & TAMIL COMMUNITY LEADERS

SAIVISM'S NEW CHALLENGE : A CLARION CALL FOR ACTION, NOT WORDS!

With the guiding Light of our Almighty Lord Siva, we have learnt, over the last five years of our existence, some painful lessons with regard to our Saiva religious world. On many vital issues we Saivites fail to act when it comes to the Crunch Pious words, Sanctimonious Resolutions seem to be the self-chosen limits of our Saiva Service. There is a difference between leadership and management. In our humble view, leadership is of the spirit, compounded of personality and vision, its practice is an art. Management is of the mind, more a matter of accurate calculation, of statistics and of methods; its practice is a science. In todays Inter-National Saivism of the twentieth century, while we concede that managers are necessary we feel strongly that leaders with vision and oriented tow

ACTION are our paramount need TODAY and this in our view is Saivism's new act more in Promoting saivism: What have I Done? What have I Sacrificed? What have I Done For Saivism. This is the new test and challenge. If we arise and awake, we are sure LORD SIVA will lead us.


தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே — அப்பர்

We take this opportunity to express our acknowledgements and gratitude to all authors and publishers whose works adorn this labour of love given as a Saiva service unto all humanity.

AVM NAMASIVAYA

IN REVERENTIAL HOMAGE to our former World Saiva Council Interrational Advisony Council Chairman : Thava Thiru Kunrakudi Adikalaar with Thava Thiru Siva Nandhi Adikalaar

(London, 1993)



1993ல் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் அளித்த வரவேற்பில் எமது முன்னாள் பேரவை ஆலோசனைச் சபைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன், தவத்திரு சிவநந்தி அடிகளார் அவர்கள்.

Benedictory Message : From Head of London Meikandar Aadheenam and Chairman, World Saiva Council, Swami Siva Nandhi Adikalaar

திருக்கயிலாய பரம்பரை : இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் : குருமுதல்வரும், ஆதீன கார்த்தரும், பேரவையின் ஆட்சிக்குழுத் தலைவருமான

திருப்பெருந்திரு சிவநந்தி அடிகளாரது

அருளாசி அணிந்துரை

"ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும், ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவதும், நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம், தின்று கண்டேற்கு அது தித்தித்தவாறே" 'நமசிவாய', 'அன்பே சிவம்', "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பன நமது திருமூல நாயனார் வழிவந்த சைவத்தின் தாரக மந்திரங்கள்; நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி மந்திரங்கள். நாம் வாழும் உலகம் சிவசக்தி மயமானது – இவ்வாறு அமைந்துள்ள வாழ்க்கையில், அவனருளாலே அவன்தாள் வணங்கும்" அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நமது சைவப் பெருமக்கள். இது உண்மை, வெறும் தற்புகழ்ச்சி அல்ல என்பதை பன்னாட்டு வரலாற்று அறிஞர்களும், சமய தத்துவத்துறை ஆராய்ச்சி வல்லுநரும், ஏன், விஞ்ஞானிகளும் கூட இன்று ஒப்புக் கொள்வதை உணர்ந்து உலக சைவர்கள் பெருமைப்பட வேண்டும்; சைவத்தைப் பாராட்ட வேண்டும்; போற்றிப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

2. "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்பது பழமொழி மனித வாழ்க்கை நிலையற்றது; எனவே நமது சைவம் வற்புறுத்தும் குறிக்கோளை என்றும் மனத்திற் கொண்டே நாம் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்; கல்வியின் பயன். "காலன் வருமுன்னே, கண் பஞ்சடைமுன்னே" என்று பட்டினத்தடிகளும்," "அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை" என்று மணிவாசகப் பெருமானும் வற்புறுத்தியது நம்மை அச்சுறுத்தவல்ல; வீடு பெருகிய குறிக்கோளை அடைய எம்மை ஆற்றுப்படுத்தவே. வாழ்க்கையை அறவழி நின்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பது சைவத்திற்கே உரிய தனிச் சிறப்பு, அறம், பொருள், இன்பம் இவற்றின் துய்ப்பின் பின்னர் வாழ்க்கையின் மணி மகுடமாக

அமைவது வீடுபேறு; சிவானுபூதி; சிவஞான தரிசனம். இவ்வாறு வீடுபேறு பெற்ற திருவருட் செல்வர்களே வீறுகொண்டு சைவத்தைக் காத்தருளினார்கள்.

3. ஏழாம் நூற்றாண்டிலேயே "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று சிவனருள் பெற்ற அப்பர் பெருமான் பல்லவப் பேரரசனை எதிர்த்து நின்று சங்கநாதம் செய்து சைவத்தைக் காத்தருளினார். "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பாடி, பணிவித்து, திருநீற்றுப் பதிகம்பாடி பாண்டிய மன்னனைக் குணமாக்கி, சமணரை வென்று கழுவேற்றி, சைவத்தை மதுரையில் மீண்டும் நிலைநாட்டியவர் நாளும் தமிழ் வளர்த்த நமது ஞானசம்பந்தப் பெருமகனார்; புத்தரை வாதில் வென்று, மேலும் உள்ளம் உருக்கும் திருவாசகத்தேன் வழங்கியவர் மணிவாசகப் பெருமான். சைவ நாயன்மார்கள் வரிசையிலே சமுதாயத் தொண்டாற்றி நடமாடும் தெய்வம் நம்பர்க்கு ஒன்று ஈந்தவர் சிலர். சிவாலய வழிபாட்டிற்சிறந்து விளங்கியோர் சிலர். சிவாலயங்களின் தொண்டரானோர் சிலர்.

இவ்வாறு சைவத்தைப் பேணிப் போற்றும் வழி முறைகள் பல உள. என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று உலக சைவர்கள் செயலாற்ற வேண்டுகிறோம்.

4. இன்று காலத்தாலும், கருத்து வளத்தாலும் மேம்பட்ட எமது சைவம் பல்வேறு அரசியல் சமுதாய சூழல் வரலாற்றுக் காரணங்களின் தாக்கங்களினாலும், எமது செயலின்மையாலும், மாற்றமடைந்தது; மாற்றப்பட்டது; உருக்குலைக்கப்பட்டது வருத்தமான செய்தி. இருப்பினும், அவ்வப்போது நமது சைவ அருளாளர்களின் வழிகாட்டலில் சைவ மக்கள் திரண்டெழுந்து அயலவர் ஆக்கிரமிப்பைத் தடுத்திருக்கிறார்கள். உதாரணமாக இடைக்கால வடமொழி சமண சமய அயல்வழக்குத் திணிப்பு முயற்சிகள் வெற்றி பெறாமைக்கு எமது சைவ நாயன்மார்கள் வழி நடத்தி வெற்றி கண்ட வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த பக்தி இயக்கமே சான்றாகும், இன்றைய 20ம் நூற்றாண்டுச் சூழ்நிலையிலும் மதமாற்றம், சைவத்தை ஓரங்கட்டும் முயற்சி, சைவத்தையும், தமிழையும் பிரித்து அழிக்கும் முயற்சி எனப் பல்வேறு தீய சக்திகள் சைவத்தின் உள்ளும், புறமும் ஊடுருவி, அரசியற் செல்வாக்கையும், அறிவியற் தொடர்பு

சாதனங்களையும், பயன்படுத்தி சைவத்தை நாளும் பொழுதும் அரித்து அழிக்கின்றன. இந்நிலையில், உலக சைவர்கள் விழிப்படைந்து சைவத்தைக் காக்கும் வழிவகைகளை ஆராய்ந்து ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டுவது காலத்தின் கட்டாயம்; சிறந்த சிவத் தொண்டு.

எனவே, உலக சைவர்கள் தாம் தாம் விரும்பிய துறையிலே சிவப்பணி ஆற்றலாம். எல்லோரும், மேடையிலேறிப் பேச வேண்டுமென்ற மனப்பான்மை அகல வேண்டும் – இது பக்குவமற்ற நிலையின் தன்முனைப்பாகும். சிலர் நூல்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதலாம், வெளியிடலாம்; சிலர் நிதி தரலாம், சைவநிதி திரட்டலாம்; சிலர் சைவத்தை ஆலயங்கள் தோறும் போதிக்கலாம், பேச்சுக்கள், சமய நாடக, நாட்டியங்கள் நடத்தலாம்; சிலர் சிந்தித்து நிர்வாகத்தில் உதவலாம்; சிலர் சிவாலயங்கள் கட்டியெழுப்பலாம். எல்லாப் பணியும் சிவனுக்கே – சைவத்துக்கே

சைவ சமயம் தமிழ்ப் பண்பாட்டின், ஆணிவேர் என்று உலக சைவ மறுமலர்ச்சிக்கு நாம் ஒவ்வொருவரும் மனம், மொழி, மெய்களால் ஒருமித்து சிவப்பணி செயல் வழி நிற்போமாக.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாது வேறு அறியேன் பராபமே"

"மேன்மை கொள் சைவ நீதி விளக்குக உலக மெல்லாம்",

ஓம் நமசிவாய அன்பே சிவம்.

W.S.C. POLICY, VIEWS AND APPEALS :

1. International campaign to restore Tamil in the Temples

Following the very successful campaign to conduct archanas in Tamil and as a follow up to this, now W.S.C. is campaigning for conducting Kumbabishekam using only the hymns from Thirumurai. W.S.C. urges that in all new Saiva Temples built any where in the world, the consecration ceremony should be conducted by using the hymns from Thevaram only by qualified Saiva Tamil experts well versed in the agamic rituals. W.S.C can help with adresses of Tamil experts in South India for such purposes.

2. **W.S.C** also wants to resuscitate the tradition of hoisting the Saiva Flag to signify the Saiva renaissance taking place all over the world. The SIVA GNANA SABAY of Lenaisa, S.Africa has done this to the eternal credit of all the Saivites in S. Africa. It signifies a new awakening, a new confidence in the TRUTHS of Saivism. We hope all the Saivite Temples throughout the world will do like wise (see the note on this with the title சைவக் கொடி ஏற்றுவோம் வாரீர்)

3. **W.S.C.** is saddened to note the deploring state of affairs with regard to the place of Saivism among the Saivites through out the world. Over the centuries, certain inimical forces have subtly exploited our tolerance and large heartedness. They have displaced Tamil Saivism with foreign religious practices inconsistent with Tamil cultural tradition. Large scale conversion to other religions has also gone unchecked. It is also taking place throughout the world right now. If it continues unchecked the future of Saivism is bleak indeed.

W.S.C. is determined to put matters right and we appeal for your active support. As a first step, the central executive of W.S.C. is endorsing this urgent appeal to world Saivites particularly the parents. Let every Saiva Tamil adult and child proudly declare

: MY mother tongue is Tamil rich, ancient and still living

: MY religion is Saivism - the world's oldest living faith that is eminently scientific

: Our one God Siva who is also the God Almighty known by other names in other faiths

: Our authority is the SIVAGNANA BOTHAM of Meykandar

: Our Tamil culture is the richest in the world having developed unique forms in Temple architecture. music, dance, sculpture, folk arts and so forth.

Action Plan for Arresting the Decline of Saivism, Worldwide

Following our earlier report based on our regional survey, we submit for your consideration the follwoing action plan -

a. The use of Tamil archanas and Thirumurai in place of Sanskrit in Saiva temples to be speeded up.

b. The malicious propaganda of Brahminism that God knows only Sanskrit should be understood as designed to subjugate Tamils and Saivites from within.

c. Saiva Temple rituals should be minimised, both in number and duration, if only devote more time for congregational singing and for talks on all aspects of Saivism and services, both in Tamil and in English, where necessary.

d. Saiva temple authorities should take great care to appoint only Tamil Saivites (not Brahmins who are mostly Vedantis who undermine Saiva Siddhantam) as priests. Every temple must have an othuwaar, professional Thirumurai singer. W.S.C. can help in both these areas.

e. Saiva temples should encourage the teaching and promotion of our Saiva Tamil arts, music, dance etc.

f. Social service to our fellow Saiva Tamils suffering in many parts of the world today deserves our very urgent attention and actiion to cambat the crisis of conversions. W.S.C. is working on the ongoing programme of forming a Saiva Youth Movement "A Siva Thondar Ani" in each country, to create a dedicated band of Saiva volunteers service units.

5. A World Saiva College is also being planned for Saiva education. W.S.C Saiva Diploma Examination scheme, commencing, 1998. Formation of an International Panel of Saiva Scholars as board of examiners (to formulate exam policy, draw up 2 years syllabus, recommend texts and model questions). While requesting your very kind co-operation, help and guidance on the above, we shall be grateful if you would nominate two Saiva scholars from your esteemed mutt / saiva organisation / university / temple to serve on the above panel as honorary members. It is envisaged that there will be a panel of 20 international Saiva scholars drawn from S.India, Sri Lanka, Singapore, Malaysia, South Africa, France, U.K. and U.S.A.

Dr. Loganathan of the Science University of Malaysia a distinguished author and saiva siddhanta scholar, will function as the director of the diploma award board of the World Saiva Council and will co-ordinate all aspects of this examination.

6. The W.S.C. though not opposed to the use of Sanskrit, English and other languages for religious expositions, it reserves a special place of honour for Tamil, the language of Devaram, Thirumurai and Meykanda Sastras. W.S.C. is also committed to institute Tamil as the language of religious rituals and higher culture of the Tamils. All W.S.C. branches shall comply with this policy, to foster unity, choesion and strength in the long term.

உ. சை.பே. சைவ சமய வழிபாடுகளில் வடமொழி ஆங்கிலம் போன்ற அந்நிய மொழிகளை ஒதுக்காவிட்டாலும், தேவாரத் திருமுறைகளை, மெய்கண்ட சாத்திரங்களைக் கொண்டிருக்கும் தமிழ் மொழிக்கு ஓர் தனிப்பட்ட சிறப்பிடம் தர முடிவு எடுத்துள்ளது. திருக்கோயில் வழிபாடுகளிலும், தமிழ் மக்களது பிற பண்பாட்டு விழாக்களிலும் தமிழிற்கு சிறப்பிடம் தர வேண்டும் என்பதற்கிணங்க, எல்லா உ.சை.பே. கிளைகளும் பேரவையோடு இவ்விஷயத்தில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றது.

7. W.S.C. is pleased with its growing success as the vanguard for spearheading Saiva Awareness and fraternal solidarity and welfare for Saivites everywhere. With a view to widening the framework and scope of an operational base, a W.S.C.

sub-committee has been set up under the chairmanship of Mr. K. Thayaparan of Sri Lanka with powers to co-opt and seek advice, to study and formulate a set of new proposals and organisation structure and related matters in order to cope with the needs of W.S.C. expansion, etc. in the long term. These proposals when ready, will be submitted to all members and branches for comments and then presented to General Body at conference in due course.

உலகளாவியநிலையில் சைவ மறுமலர்ச்சிக்கு உ.சை.பே. நன்முறையில் ஆக்ககரமாக செயல்படுவதைக் கண்டு மகிழ்ந்து, தொலைதூர நோக்கத்தோடு இன்னும் பல இயக்கங்களை அரவணைத்துச் செல்லும் வகையில், சைவ மறுமலர்ச்சியை விரிவாக்கும் நோக்கில், இலங்கை திரு தயாபரன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஓர் செயற்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் பற்பல அறிவுரைகளையும் கருத்துக்களையும் கொண்ட அறிக்கையை தயாரித்து வெளியிட, அது பிறகு எல்லா கிளைகட்கும் அனுப்பப்பட்டு வேண்டிய மாற்றங்களோடு பொதுச்சபைக்கு விடப்படும்.

8. It is W.S.C. policy that all nominations to Central Committees are of an advisory and consultative nature and are normally for a period of one year only, subject to re-nomination by London Headquarters.

தலைமையகத்திலிருந்து இருத்தப்படும் பல்வேறு உறுப்பியங்களும் பதவிகளும் ஆலோசனைகட்கும் அறிவுரைகட்குமேயாகும். ஓராண்டு காலமே நீடிக்கக்கூடிய இவை, பிறகு மீண்டும் தலைமையகத்தால் நியமிக்கப்படலாம் என்று தெவித்துக் கொள்கின்றோம்.

9. A historic turning point was initiated at the DURBAN Conference that will give Saivites all over the world a sense of pride and glory. W.S.C. to anounce at the Durban conference its major policy of declaring Saivism as a world faith on its own. It shall remain true to the noble tenets of "Onre Kulam, Oruvane Tevan", "Anbe Sivam" and so forth and will work to wipe out casterism racial, linguistic and geographical boundaries and tribalism of various kinds. It shall aspire to free itself form

the domination and stonghold of Brahmanism. It shall be declared that Saivism is our religion and faith, that we are no longer an appendage to Hinduism with its obnoxious caste systems and schemes to destory our mother tongue Tamil and Dravidian culture.

வரலாற்றுத் திருப்புமுனையாக இந்த டர்பன் மாநாடு அமைந்தது. இங்கு சைவசமயம், சாதி சழக்காடுகளை வளர்க்கும் இந்து சமயத்தின் ஓர் பிரிவு அல்லவென்றும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "அன்பே சிவம்" என்பனபோன்ற உயரிய கொள்கைகளுக்கு ஏற்ப அமைந்து உன்னதமான ஓர் தனித்த உலகச் சமயம் என பறைசாற்றப்பட்டது. தமிழையும் திராவிடப் பண்பாட்டையும் அழிக்க மறைமுகமாக பற்பல செய்யும் இந்து சமயத்தின் ஓர் சிறிய பிரிவு அல்ல, தனக்கென ஓர் தத்துவக் கோட்பாடுடைய தனிப் பெரும் உலகச் சமயம் என்று அனைவரும் உணர முழங்கப்படும். இது தொடங்கி தமிழ்ப் பண்பாட்டை வளர்ப்பதோடு சாதி சழக்காடுகளையும் மனிதனை மனிதர்களிடமிருந்து பிரிக்கும் பிற பேதங்களையும் முற்றாக ஒழிக்கவும் தொடங்கும்.

"Saiva ulakam" Editor in chief : Dr. K. Loganathan's

COLLECTED EDITORIALS CONVEYING WSC POLICY

"சைவ உலகம்" பிரதம ஆசிரியர் டாக்டர் கி. லோகநாதன் அவர்களின் பேரவையின் கொள்கை விளக்கமாக அமைந்த ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு.

உலக சைவப் பேரவையின் சாதனைகள்

உலக சைவப் பேரவையை அருட்திரு சிவநந்தி அடிகளார் சென்னை மாநகரில் தொடங்கி மூன்று வருடங்கள்தான் ஆகியுள்ளன. ஆனால் இதற்குள் எத்தனை பெரும் பெரும் சாதனைகள்! பற்பல இடுக்கண்கட்கு, இடர்பாடுகட்கு ஊடே, பல எதிர்ப்புக்களையும் கடந்து பீடு நடை போட்டவாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அது வளர்ந்து வந்துள்ளது. வளர்ந்து கொண்டே செல்கிறது. இப்பொழுது அதன் கிளைகள் தமிழ் நாடு, இலங்கை மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, பிரான்சு, தென்னாப்பிரிக்கா, மாவ்ரீசியஸ் என்ற நாடுகளில் இருக்கின்றன. விரைவில் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா என்ற பிற நாடுகளிலும் தொடங்க விருக்கின்றன. அதன் பிற சாதனைகளாக வருடா வருடம் சைவத்தமிழ் மாநாடு நடத்துவதும் தமிழில் அர்ச்சனை. தமிழில் திருக்குட முழக்கு விழா என்றவாறு தமிழர் தம் சமய வாழ்க்கையில் தமிழிற்குரிய சிறப்பான இடத்தை மீண்டும் கொண்டு வர பேரியக்கங்களை உலகளாவிய நிலையில் நடத்தியதுமாகும். மேலும் "Saivite Hinduism" எனும் நூலையும் எல்லாப் பண்பாட்டு நிகழ்ச்சிகட்கும் பயன்படத்தக்க தேவார திருமுறை திரட்டு எனும் நூலையும் வெளியிட்டதுமாகும். உலக சைவப் பேரவையின் சார்பில் அருட்குறளும் வந்து புதிய புதிய வழிகளில் சைவ சமயம் வளர அடி கோலியுள்ளது. மேலும் கடந்த மூன்றாண்டுகளாக எடுப்பான முறையில், புதிய புதிய சிந்தனை கிளர்ச்சிகளை உண்டாக்கும் முறையில் காலாண்டு இதழாக "சைவவுலகம்" எனும் இதழை நடத்தியும் வந்துள்ளது. எத்தனையோ இடர்பாடுகள், நெருக்கடிகள் இவற்றையெல்லாம் கண்டு துவண்டு விழாது உலக சைவப் பேரவை

பீடுநடை போட்டவண்ணம் வளர்ந்து வருகின்றதென்றால், இறையருளின் துணையோடு அயராது பாடுபடும் தவத்திரு சிவநந்தி அடிகளாரின் அயராத உழைப்பே காரணம்.

எத்தனையோ சைவ ஆதீனங்கள் இருக்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் பழைமையின் பிடியில் சிக்குண்டு புத்துலகிற்கேற்ற சிந்தனை வளத்தோடு செயல்படுவதாகத் தெரியவில்லை. அறிவியல் யுகத்திகேற்ற வகையில் சைவ சமயக் கருத்துக்களை வளர்க்கின்ற மையங்களாக இல்லை. இந்நிலையில் இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் உலகில் பரவலாக பரந்து கிடக்கும் தமிழர்களை எல்லாம் நினைத்து. அவர்களது அவலங்களைப் புரிந்து கொண்டு அவர்களோடு தமிழ்நாட்டு சைவத் தமிழர்களையும் மறவாது தழுவி புதிய புதிய சிந்தனைகளை வளர்க்கின்ற நல்லவோர் ஆதீனமாக செயல்படுவது தவத்திரு சிவநந்தி அடிகளாரது தலைமைத்துவத்தால் தானே தவிர பிற காரணங்களால் அல்ல.

இந்நிலையில் இந்த எழுச்சிகட்கெல்லாம் காரணமாக, மூலபுருடராக இருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் மறைவினைப் பற்றி நினைத்து கலங்காது இருக்க முடியாது. இனவாதம் மொழிவாதம் என்றெல்லாம் பேசி தமிழறிஞர்கள் சைவத்தை மறந்து தமிழ் இனத்தையே பிழையான வழியில் கொண்டு சென்று படுகுழியில் வீழ்த்திய அந்தப் பொல்லாத காலத்தில் துணிந்து எழுந்து மக்களோடு மக்களாக வாழ்ந்து பற்பல தொண்டுப்பணிகள் செய்தும் புரட்சிகரமான பல கருத்துக்களை வெளியிட்டும் அவர்களையும் கவர்ந்தவர் நம் அடிகளார். அவரது இழப்பு, அதுவும் சைவ சமயம் மீண்டும் எழுந்து உலகெலாம் செழித்தோங்கி வளரப் புறப்பட்டுவிட்ட இந்நல்லவேளையில் ஈடுகட்ட முடியாத பேரிழப்பாகும்.

இருப்பினும், பேரவையின் உலகளாவிய சைவ விழிப்புணர்ச்சி மாநாடுகள் மூலம் (மலேசியா, பாரீஸ், கொழும்பு, டர்பன்) உலக ரீதியாக சைவக்கொடி பறக்கிறது. சைவர்கள் தமது சமய பாரம்பரியத்தைக் காப்பற்ற முன் வந்திருக்கிறார்கள். இந்த சைவ உலக விழிப்புணர்ச்சி தொடர்ந்து நிலை பெறவே பேரவை அயராது பணியாற்றும்.

The Achievements of W.S.C

It is only three years since W.S.C. was formed by Thavath Thiru Sivanandhi Adikalar in Madras. But within this short span of time it has achieved so much against many obstacles and hurdles. It has emerged as the most significant organisation spread world wide to carry the flag of Tamil Saivism that is probably the most ancient religion in the world. There are branches now in Tamil Nadu, Sri Lanka, Malaysia, Singapore, England, France, South Africa and Mauritious. Plans are afoot soon to open up branches in Australia, Canada, U.S.A. and so forth.

This world wide Tamil Saivite movement in being true to its objectives has organised many rallies to restore Tamil as the language of worship in the Temples. It has now moved one step further and is organising compaigns to restore Tamil as the language of all rituals in the Tamilian temples. there is a firm belief that only through restoring respect for Tamil that true Saivism can be regained not only for the Tamils but also for the whole world. We are not against Sanskrit or any other language. What we want is proper respect for Tamil that it richly deserves.

It has also published 'Saivite Hinduism' as a manual for all Saivites and now is about to release a Prayer Book quite comprehensive in content. It has also published Arutkural, a massive book on Saiva Philosophy that has provoked some criticism as well as praise. Above all the quarterly 'Saiva Ulakam', the only bilingual magazine devoted to spread the message of Saiva Siddhanta at global level, has been kept going though at enormous costs. Against many obstacles and the indifference of the Tamil public to the growth of Saivism in general, if W.S.C. has not only survived but grown in stature, it is entirely to the singular efforts of Thavath Thiru Sivanandhi Adikalar who has persisted in this divine task where ordinary men would have closed shop long ago.

We have learned that Tamil public throughout the world are addicted to cheap entertainments and the vulgar elements

of Hindu culture. There is more eloquent but empty vain glorious speeches than meaningful actions. We lack that quiet determination that results in actions and solid achievements. Men who combine vision with task are so rare in the Tamil community at the moment that the vulgar and mediocre pass as great heroes.

Against this background we cannot but mourn the death of one of the greatest reformers of Tamil Saivism of the 20th century viz. Thavath Thiru Kunrak Kudi Adikalar. He was the principle inspiration behind the dynamics of W.S.C. He stood firm and through his meaningful social actions countered effectively the agnostic tide that swept across the Tamil country in the early decades of the 20th century. Though the Tamil public have abandoned the reflective life to a large degree, if it survives here and there to some extent, Adikalar can take some of the credit for it. If Meykandar Adheenam under the able leadership of Thavath Thiru Sivanandhi Adikalar is spearheading meaningful reforms in Tamil Saivism, something the age old adheenams appear to have failed, it is to a large extent because of the boldness of Kunrakkudi Adikalar.

Todays's world Saiva Council through its world-wide Saiva conferences held in Malaysia, Paris, Colombo and Durban, are containing their efforts to streamline and re-activate world Saivism though Tamil Archanas and Thirummurai in Saiva Temples movement, in all poojahs, Festivals, Rites and also in Thirukuta Mulukku (Kumbabishekam) in Saiva Temples.

LET'S HOIST THE WORLD SAIVA FLAG

Yes, the time has come for the world to know what Saivite Hinduism is. We are not talking about Hinduism in general. We are talking about the Tamil Saivite Hinduism which is the most refined religious system in the world. Completely open, it is sure of itself not because of any authority in terms of a person or book but because it contains TRUTH in the principle that Pati, Pacu and Pacam are the uncreated eternal categories without recourse to which nothing in the world can be understood. It is the fundamental ontology-the unshakeable

metaphysical illumination that has sustained Tamil Saivism at least from the time of Thevaram, Thirumanthiram if not from ancient times itself.

The flag we are hoisting symbolises all these and the true merits of san markam the true path of authentic knowledge. The staff that holds the flag is the JNANA VEL the spear of divine illumination, that weapon of Thirumurukan through which illuminating us drives away the beastly, the asuras in us. The flag contains Trisulam, Kuthuvilakku and Sivanandhi, all symbolic elements with profound meanings. The trisulam is Power or Sakti; the Kuthuvilakku the acknowledgement that a decent home life is the mainstay of society and religious life. The Nandhi symbolises virility and hence good health. We are restating here what Thirumular had said long ago : The bodily frame must be maintained in good state to lead an active life without which the ignorance surrounding us cannot be destroyed.

But to attain this there must be a happy home life, lighted up by a woman of beauty and kindness, the goddess Laxmi incarnate symbolised by the Kuthu Vilakku. It is only people who live thus and later in true asceticism founded upon infinite love that the gnostic power of Athi Sakti will arise and lead towards Paramoksa.. All these are the functions of Jnana Vel which is in reality the sparks of light that issues from the forehead of SIVA when he sees UMA with unbounded love, as stated in Kanda puranam.

திருமுறை மூலமே திருக்குட முழுக்கு விழா

இறைவழிபாட்டில் மனம் ஒன்றி உளம் குழைந்து கண்களில் நீர் மல்க வழிபாடு செய்தல் வேண்டும் என்று நம் பெருமக்கள் அறிவுறுத்திச் சென்றனர். அப்படியின்றி கையொன்று செய்ய, விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ண, பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசச் செவியொன்று கேட்க, புலால் கமழும் மெய்யொன்று சாரச் செய்கின்ற வழிபாடு பயனின்றிப் போகும் என்று எடுத்துக்கூறிப் போந்தனர். வழிபாட்டில் மனம் ஒன்றவேண்டுமானால் வழிபாடு அவரவர்கள் தாய்மொழியில் இருந்தாலன்றிப் பயன்படாது.

தாய்மொழியில் வழிபாடு இருத்தல் வேண்டும் என்ற மாத்திரையில் சிலர் இது மொழி வேற்றுமையில் எழுந்தது என்று கருதுகின்றனர். இது தவறு; மொழி வேற்றுமையின் அடிப்படையில் எழுந்தது அன்று. வழிபாடு மனம் கலந்து உளம் உருகிப் பயன்படவேண்டுமானால் அவரவர்கள் தாய்மொழியில் இருத்தல் வேண்டுமென்பதுதான் இதன் குறிக்கோள். தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருமக்களுக்கு அருள் நெறியைப் பரப்பி ஆண்டவன் புகழைப்பாட வந்த சம்பந்தப் பெருமான் வேள்வி செய்யும் மறையவர் குலத்தில் தோன்றியவர் தான். வட மொழியிலும், நால்வேதம் ஆறங்கத்திலும் தான் வல்லவர் என்று பல இடங்களில் தன்னைப் பற்றிக் கூறிக் கொள்ளுகின்றார். ஆனால் அவர்கள் ஆண்டவன் புகழை வட மொழியில் பாடவில்லை. ஏன் வட மொழியில் பாடவில்லையெனில், அவை தமிழ் மக்கள் உணர்ச்சியில் கலவாமல் அவர்களுக்குப் பயனின்றிப் போகும் என்ற உண்மையைத் திருவருள் உணர்த்த அவர்கள் உணர்ந்தபடியால்தான் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

சைவக் குருமார்கள் நால்வரில் மற்றொருவராகிய சுந்தரர் இறைவனை முப்போதும் திருமேனி தொட்டு வழிபாடு செய்யும் ஆதிசைவ அந்தணர் மரபில் தோன்றியவர்கள். வடமொழியிலுள்ள சிவாகமங்க்ள் யாவும் நன்குணர்ந்தவர்கள். அவர்களை திருவெண்ணெய்நல்லூரின்கண் இறைவன் தடுத்தாட்கொண்டு தம்மைப் பாடப் பணிக்கின்றார். என் சொல்லிப் பணிக்கின்றார்?

"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்று அதுவும் "முன்னர் "பித்தனென்று" திட்டியபடியே பாடுக" என்று பணிக்கின்றார். தமிழில் திட்டுக் கேட்பது கூட அப்பெருமானுக்கு விருப்பம் போலும். அது தமிழ் மொழியின் தன்னேரில்லாத தனிச்சிறப்பு போலும்.

இன்னும் சிலர் வழிபாட்டிற்குரிய ஆகமங்கள் யாவும் தமிழ் மக்களுக்கே உரியதென்றும், அதில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் தமிழர்களுடைய கருத்துக்கள் என்றும் ஆனால் அதைப் புறக்கணிக்கக் கூடாதென்றும் கூறுகின்றனர். ஆகமங்களில் கூறப்பட்ட கருத்துக்களை யாரும் ஒதுக்கவில்லை. அக்கருத்துக்கள் தமிழ் மக்கள் நூற்றுக்கொருவர் கூட புரியாத மொழியில் இருக்கிறதென்றுதான் கூறுகின்றனர். அக்கருத்துக்கள் நிறை மொழி மாந்தர்களாகிய மூவர் பெருமக்களின் மொழிக்கு மொழி தித்திக்கும் தமிழ் மொழியில் இருப்பதைக் கண்டு வழிபாட்டை நடத்துவோமேயானால் பொது மக்கள் யாவரும் வழிபாட்டில் கலந்து உளங்கனிந்து பயன் பெற இயலும்.

வடமொழியில் "வேதம் ஓதில் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவரைக் காண்கிலோம். திருவாசகம் இங்கு ஒருகால் ஓதில் கருங்கல்மனமும் கசிந்து கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய அன்பராகுனர் அன்றி மன்பதை உலகில் மற்றையர் இலரே" என்பதால்தான் தாய்மொழியில் வழிபாடு இருத்தல் வேண்டுமென்று விரும்புகின்றோம். தமிழர்கள் கண்ட பேருண்மைகளாகிய வடமொழியிலிருக்கும் சிவாகமங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்துக் கொணர்ந்து நாட்டில் யாரோ ஒருவர் இருவர் தனி உடமையாயிருக்கும் அவைகளைத் தமிழ் மக்களின் பொதுவுடைமையாக்குவது அறிஞர்களின் கடமையாகும்.

தமிழ் அர்ச்சனை முறை இன்று அவசியத் தேவை

அது ஒரு ஐரோப்பியத் தமிழ்த் திருமணம், விடுமுறை தினத்தில் மட்டுமே வழக்கம் போல முகூர்த்தம். மண்டபம் தடல்புடலாகச் சோடிக்கப்பட்டிருந்தது. சம்பிரதாயம் முதல் சாப்பாடு வரை ஒரே இடத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டதால் அனைத்தும் தயாராக காத்திருந்தது. மணமக்கள் வந்தனர். திடீர் தாயும் தகப்பனும் வந்து சேரும் வரை காத்திருந்து பின்னர் திருமணச் சம்பிரதாயங்கள் ஆரம்பமாகின. ஒருபுறத்தில் ஐயர் எமக்குப் புரியாத பாஷையில் மந்திரம் கூறிக்கொண்டிருந்தார். இடைஇடையே மணமகனுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவரும் அதற்கு அடிபணிந்து கொண்டிருந்தார்.

வீடியோ படப்பிடிப்பாளர்கள் தமது வேலையில் மும்முரமாக ஈடுப்பட்டதால் அவர்களின் பின்னாலும் திருமணத்துக்கு வருகை தந்தவர்கள் அமர்ந்திருப்பதை மதிக்கத் தவறிவிட்டார்கள். பின்னால் இருப்பவர்களுக்கு மண மேடையின் மேல் பக்கமும் வீடியோக்காரரின் முதுகுப் பக்கமும் காணக்கிடைத்ததால் அவர்கள் தமக்கு அருகில் உள்ளவர்களுடன் தமது விடயங்களைக் கதைக்கத் தொடங்கினார்கள். அந்தக் கதை இந்தக் கதை என்று பல சுவாரசியமான கதைகள்...

ஐயரின் மந்திரம் ஐயருக்கு மட்டும் விளங்கியதால் அருகில் இருந்தவர் "தமிழ் தெரியாத தமிழன் இருப்பதாக மட்டும்தான் கேள்விப் பட்டிருக்கிறோம். இங்கு தமிழ் தெரியாத கடவுள்களும் இருக்கிறார்கள் பார்த்தீர்களா?" என்று கூறினார். அவரை நான் உற்றுப் பார்த்தேன்.

உலகத்திலுள்ள அனைத்துக் கடவுள்களுக்கும் அந்தந்த மக்கள் பேசும் மொழியிலேதான் பூசை நடக்கும். ஆனால் தமிழ்க் கடவுளர்க்கு மட்டும் விளங்காத பாஷையில்தான் பூசை நடத்துவார்கள். நமது கடவுளர்க்கு தமிழிலில்லாத – விளங்காத பாஷைதான் விளங்கும் என்று நினைக்க வேண்டியுள்ளது.

பக்தி சொட்ட நெஞ்சுருகிப் பாட அவன் புகழ் கூற அழகு தமிழ் இருக்கிறது. உளமார அவனை வேண்ட இனிய தமிழ் காணாதா?

6-வது உலக சைவ மாநாடு
SIXTH WORLD SAIVA CONFERENCE
CONFERENCE ORGANIZATION

Patrons

1. His Holiness Kayilai Maa Munivar Sri Kasivasi Muthukumaraswami Thambiran, (Sri Kasi Mutt, Tirupanandal).
2. Thava - Thiru Santhalinga Ramasamy Adigalar (Perur Mutt).
3. Thava - Thiru Siva Nandi Adigalar (Meykandar Mutt - London)
4. Prof - Dr. K. Karunakaran, Vice - Chancellor, Tamil University.

INVITATION AND CALL FOR PAPERS

We are happy to announce that the Tamil University, Thanjavur in collaboration with Tiruppanandal Mutt and World Saiva Council, London will be hosting the 6th World Saiva Conference from 19-21 December 1997.

The Theme of this conference is

"Saivism for Universal Brotherhood and Human Upliftment"

We Welcome you to this conference and cordially invite you to present a paper in any one of the following sessions :

Sessions

1. Saiva Philosophy
2. Saiva Religion
3. Saiva Texts
4. Saiva Festivals
5. Saiva Temples

6. Arts & Culture
7. Siddhars
8. Saiva Mutts
9. Saiva Iconography
10. Tirumurais

Panel Discussion

1. The Relevance of Saiva Siddhanta to the Modern society.
2. Saivism - Present State and Future Trends.
3. Saivism for National Integration and Cultural promotion.
4. Meeiting points - Saivism and other religions
5. Applied Saiva Siddhanta

All correspondence to
Conference Secretariat :-

Dr G. Bhaskaran
Organizing Secretary
School of Philosophy
Tamil University,
Thanjavur - 613 005
India

Phone : Off : [043621, 40040, 40740, 73218
Resi : [04362], 40887
Fax : 'Off [043621] 40040

INTRODUCTION

Dr. K. LOGANATHAN
Secretary General, World Saiva Council

மின் இணைய உலகில் சைவம்

(Saivism in the Internet)

தன் அயரா உழைப்பின் பயனாக தவத்திரு சிவநந்தி அடிகளார் மீண்டும் இன்னொரு நூலை இவ்வருடம் வெளியிடுகின்றார். பற்பல விசயங்களைத் தாங்கி வருவதோடு புதிய புதிய வழிகளில் சைவ சமயத்தை சைவ சித்தாந்தச் சிந்தனையை வளர்ப்பதற்கு வேண்டிய பல செயல் திட்டங்களையும் வகுத்து சைவ மக்களுக்கு ஓர் புதிய வழி காட்டுகின்றார்.

இது காலத்திற்கேற்ற நல்லவோர் செயலாகும். தமிழினம் உலகெங்கும் ஓர் பண்பாட்டுச் சிதைவிலே சிக்குண்டு தவிக்கின்றது. சைவ சமயத்தின் அடிப்படைகள் அறிவியல் யுகத்திற்கு ஏற்றவை எனினும், அவற்றின் அறிவு குறைந்து விட அதனோடு தமிழறிவும் மங்கி விட இந்த பரிதாபகரமான நிலை. ஆழமான சிந்தனையை வெறுத்து அற்ப விசயங்களிலேயே பட்டுழன்று அதிலேயே பேரின்பம் காணும் அற்ப இனமாக தமிழினம் மாறிவிட்டது. நமது பண்பாட்டு மூலவேர்களை இதனால் புரிந்து கொள்ள முடியாது தவிக்கின்றோம். இந்நிலையிலே தான் பல சைவ அறிஞர்கள் ஓர் புதிய வலுவான கேள்வியை எழுப்பியுள்ளனர். சைவ சமயம் ஏன் வீழ்ந்தது? சைவ சிந்தனாபாரம்பரியம் ஏன் வலுவிழந்து போய் விட்டது? என்றெல்லாம் கேட்டு அதனைப் பல்வேறு வகையில் ஆராயவும் தலைப்பட்டு தத்தம் கண்டுபிடிப்புக்களையும் மேலும் சைவம் புதிய மறுமலர்ச்சி காண என்னென்ன இனி செய்ய வேண்டும் என்னும் தத்தம் கருத்துக்களையும் வெளிப்படுத்தி உள்ளனர். இக்கட்டுரைகளெல்லாம் 'சைவவுலகம்' எனும் உலக சைவப் பேரவையின் காலாண்டு இதழில் வெளிவந்துள்ளன, வெளி வந்து கொண்டிருக்கின்றன.

சைவ சித்தாந்தச் சிந்தனையை புதிய புதிய வழிகளில் வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் இன்று நாம் இருக்கின்றோம். மேற்கத்திய

உலகு கணிதவியல் விஞ்ஞான ஆய்வுகளில் ஆழமான உண்மைகளைக் கண்டு உணர முடியாது என்று உணர்ந்து உறுதியான உண்மைளைக் கண்டறிய 'Post modernism' என்றவோர் கோட்பாட்டின் வழி புதிய புதிய முறையியல்களை வடித்து அவற்றின் வழி மெய்யறிவு ஆய்வுகளை நடத்தி வருகின்றது. இவற்றில் சில 'Phenomenology' 'Philosophical Hermeneutics' 'Radical Hermeneutics' 'Ethnometodology' 'Semiotics' 'Structuralism', 'Depth Psychology' என்பவையாகும். ஒவ்வொன்றும் தனக்கென ஓர் முறையியலைக் கொண்ட அணுகுமுறையாகும்.

இவ்வாறு பற்பல புதிய அணுகுமுறைகளோடு அவர்கள் தட்டுத்தடுமாறி எத்திசையில் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்று வினவும்போது, சித்தாந்தக் கருத்துக்களை நோக்கித்தான், சைவ சமயத்தை நோக்கித் தான் அவர்கள் சென்று கொண்டிருக் கின்றார்கள் என்று தெரிகின்றது.

இதில் வேதனையான ஓர் விசயம் யாதெனில், சைவ அறிஞர்கள் பெரும்பாலானோர் இப்பேர்ப்பட்ட புதிய வளர்ச்சி களைக் காணாதிருப்பதே. மெய்கண்ட சாத்திரங்களையும் தேவாரத் திருமுறை களையும் பெற்று அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்க, இளைஞர்கட்கு ஓர் வெறுப்பு வந்து சைவ சமயத்தின்பால் ஆர்வமற்றவர்களாக விலகி ஓடுகின்றனர். புதியவற்றைப் படைத்துக் கொண்டே இருக்கும் ஐரோப்பிய பண்பாட்டின்மேல் ஆர்வங் கொண்டவர்களாக அதன் தாக்கத்திற்கு ஆளாகி சைவத்தைத் துறக்கின்றனர். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டுமே எனில், மீண்டும் நாம் புதிய புதிய கருத்துக்களை ஆய்கின்ற திறத்தவர்களாக உயரவேண்டும்.

தமிழை வளர்க்க வேண்டும், அதுவே நம் உயிர் மூச்சு என்றெல்லாம் உணர்ச்சிகரமான முழக்கங்களைக் காண்கின்றோம். இவ்வாறான வெறிகள், அபிமான உணர்ச்சிகள் நல்ல நல்ல கவிதைகளைத் தருமே தவிர, தமிழை வளர்க்கின்ற கருத்துக் குவியல்களைத் தராது. எப்படித்தான் நாம் முழங்கினாலும், தமிழைக் கற்பதால் பயனில்லை எனின் பிற இனத்தவர் யாரும் அதனை ஏற்க மாட்டார்கள். ஏன், தமிழைத் தன் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களும் அதனைப் புறக்கணிப்பார்கள். தமிழ் வளரவேண்டு

மெனில் தமிழர் தம் சிந்தனை வளரவேண்டும். புதிய புதிய கருத்துக்களைப் படைத்துக்கொண்டே, அதனைத் தமிழில் எழுதிக் கொண்டே இருக்க, அது வளம் பெறும்; தமிழர்களை தமிழர் களாகவே இருத்துவதோடு பிற இனத்தவரையும் தன்பால் ஈர்க்கும்.

இந்த அடிப்படையிலேதான் உ.சை.பே. இயங்கி வருகின்றது. புதுமைகளாகப் பல படைத்துக்கொண்டே வருகின்றது. சைவ அறிஞர்களை மதித்துப் போற்றுகின்றது. அவர்களது படைப்புகளை வெளியிட்டும் ஆதரித்து மகிழ்கின்றது. பல்வேறு கருத்தரங்குகளை, பட்டறைகளை நடத்தி இளைஞர்களை சைவத்தைப் பற்றி சிந்திக்க வைக்கிறது.

இப்பொழுது புதியவோர் முயற்சியிலும் இறங்கியுள்ளது. உலகம் கணினி உலகமாக மாறிவருகின்றது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கருத்தினை மெய்யாக்கும் வகையில் "internet" எனப்படும் மின்னிணையங்கள் வழி உலகத்து அனைவரொடும் மிகவும் துரிதமாக சொற்பச் செலவில் தொடர்பு கொள்ளமுடிகின்றது. ஐரோப்பியர்கள் இந்தப் புதிய தொடர்பு சாதனத்தை மையமாகக் கொண்டு திரிபுக் கல்லூரிகளைப் (Virtual University) படைத்து அறிவினை இன்னும் இன்னும் வளர்த்து வருகின்றனர். இப்பேறபட்ட பணியில் உ.சை.பே. இறங்கிவிட்டது என்ற நற்செய்தியை சைவ அன்பர்கட்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். பற்பல பகுதிகளோடு நல்ல ஆய்வுக்கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் தாங்கி வரும் "சைவ சித்தாந்த மின்னாய்விதழ்" (The Electronic Journal of Saiva Philosophy) ஒன்றையும் கொண்ட தமக்கென உரிய ஓர் மின்மனை (Home Page) ஒன்றினை அரும்பாடுபட்டு திருமதி சு.பா. லோகநாதன் அவர்கள் உருவாக்கி உள்ளனர் என்ற நற்செய்தியை இங்கு தெரிவித்துக் கொள்கின்றோம். (Http :// www. Malaysia. net / people / subas/)

சைவ அன்பர்கள், ஆழமாகச் சிந்திக்கும் திறனுடையவர்கள், இனி தங்கள் கருத்தோவியங்களை வெளியிட ஓர் சாதனம் இல்லையே என்று கவலைப்படவேண்டாம். இந்த மின்னாய்விதழ் உங்களுக்கு உதவும்.

டாக்டர். கி. லோகநாதன்
செயல்நாயகம், உ.சை.பே.

"இன்பமே எந்நாளும்"

முருகு. இராமலிங்கம்
பொருளாளர்
உலக சைவப் பேரவை

"திருமுறை"
37, "R" பிளாக்,
அண்ணாநகர்,
சென்னை – 600 040.

உலக சைவப் பேரவையின் சாதனைகள் – 1992 – 97

"உலக சைவப் பேரவை" என்ற அமைப்பு உலகெங்கும் வாழும் தமிழர்களுக்காக 29–2–1992–ல் சென்னையில் தோற்றுவிக்கப் பெற்றது.

தமிழர்கள் உலகின் பல பாகங்களில் வாழ்ந்தாலும், தங்கள் தாய்மொழியாகிய தமிழை மறந்து விடுதல் கூடாது என்ற எண்ணம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. தமிழ் மொழி வாயிலாகத்தான் சைவ சமய தோத்திரங்களான பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் மற்றும் எண்ணற்ற நீதி நூல்களையும் படிக்க இயலும் என்ற எண்ணம் உருவாகி உள்ளது. பன்னிரு திருமுறைகளில் அடங்கிய நால்வர் பெருமக்களால் அருளப்பெற்ற தேவார திருவாசகம் மற்றும் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் முதலிய நூல்களைப் படிக்கின்றார்கள். இதனால் பக்தி வளர்கின்றது. திருமுறைகளை ஊன்றிப்படிப்பதால் சிவபெருமான்தான் முழுமுதற் கடவுள் என்ற தெளிவு ஏற்பட்டுள்ளது. சிவபெருமானை வழிபடும் சமயம் "சைவ சமயம்" என்பதையும் உணர முடிகின்றது. தமிழ்மொழி தெரியாத நாடுகளில் உள்ள தமிழர்கள் கூட தமிழை ஆங்கிலப்படுத்தி (Transliterature) திருமுறைகளை ஓதிவருகின்றார்கள்.

சிறு தெய்வ வழிபாடு அவசியம் இல்லை என்று நம் பேரவை அவ்வப்போது தெளிவுபடுத்தி வருகின்றது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள மாரியம்மன் கோவில், பிடாரியம்மன் கோவில்களில் இப்பொழுது புதியதாக சிவலிங்கம் அமைத்து வழிபடுகின்றார்கள்.

14–1–1994 முதல் உலகளாவிய "தமிழ் அர்ச்சனை இயக்கம்" (சிவாலய மலர் – வழிபாடு) என்ற ஓர் அமைப்பை உலக சைவப்

பேரவை துவங்கியது. சமயக் குரவர் நால்வர்களில் ஒருவரான திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகம் பெரும்பான்மையான கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப் பயன்படுத்தப் படுகின்றது. அர்ச்சனை தமிழ் மொழியில் உள்ளதால் பாடல்களின் பொருள் விளங்குகின்றது. "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்" என்கின்றது மணிவாசகரின் திருவாசகம்.

உலக சைவப் பேரவை ஆண்டுதோறும் உலக சைவ மாநாட்டை வெவ்வேறு நாடுகளில் நடத்தி வருகின்றது. குறிப்பிட்ட நாட்டில் உள்ள சைவ அமைப்புகள் ஒன்றாகச் சேர்ந்து மாநாட்டை நடத்துகின்றன. பல திறப்பட்ட ஆற்றல்மிக்க சைவர்கள் ஒன்றுபடுவதால் மாநாடு மிகவும் சிறப்பாக அமைகின்றது. சைவ சமயம் பற்றியும், சைவ சமய வளர்ச்சியடைவதற்கான வழிகள் பற்றியும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றைப் பேணிக் காப்பதற்கும் வழிகள் வகுக்கப்படுகின்றன. சைவத்திருக் கோயில்களில் வழிபாடு எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதைப்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இச்சொற்பொழிவால் சைவ வழிபாட்டுமுறை, மன அமைதி, அன்பு, அடக்கம், இரக்கம், ஒழுக்கம் முதலிய உயர்ந்த பண்புகள் உள்ளவர்களாக மக்கள் வாழ்வாங்கு வாழ வகை செய்கின்றது.

தகுந்த ஓதுவா மூர்த்திகளைக் கொண்டு பன்னிருதிருமுறைகள் பண் அமைதியுடன் மாநாடுகளில் இசைக்கப் பெறுகின்றன. இதனால் மனம் பண்பட்டு அமைதி பெறுகின்றது. திருமுறைகளில் பலருக்கும் ஈடுபாடு மேலும் மேலும் உண்டாகின்றது. அதிகமாக அன்பர்கள் திருமுறையை ஓத வழிவகை செய்கின்றது.

சமயாச்சாரியார்களைப் பற்றிய சிறந்த நாடகம் மாநாடுகளில் நடத்தப்பெற்று வருகின்றது. இதில் இளஞ் சிறார்கள் ஈடுபடுத்தப் பெறுகின்றார்கள். குழந்தைகளுக்குச் சமய அறிவு வளர இத்தகைய நாடகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

இப்பேரவையின் சார்பில் சைவ சமய விளக்கம் (SAIVITE HINDUISM) சைவ வழிபாட்டு நூல் (SAIVA PRAYER MANUAL) சைவ வினா விடை (SAIVISM QUESTIONS & ANSWERS) மற்றும்

சிவஞானபோதம் ஆங்கில விளக்கம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இந்த நூல்கள் வெளிநாடுகளில் வாழும் சைவ சமயிகளுக்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.

உலக சைவப் பேரவையின் கிளைகள் மலேசியா, சிங்கப்பூர், கொழும்பு, லண்டன், பிரான்ஸ், தென் ஆப்பிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளில் ஏற்படுத்தப்பெற்று, சிறந்த முறையில் சைவத்தை வளர்த்து வருகின்றன. இந்தியக்கிளை அவ்வப்பொழுது சிவன்கோவில்களில் சைவ சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின்றது. குழந்தைகளுக்கு இறை உணர்வும் சைவ சமயப்பற்றும் ஏற்பட தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சிறுவயது முதற்கொண்டு திருமுறை களைப் போதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றது. இதனால் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவதுடன் சிறந்த ஒழுக்க முடையவர்களாகவும் திகழ்வார்கள் என்ற விளக்கமும் தரப்பெறுகின்றது.

"சைவ உலகம்" காலாண்டுச் செய்தி மலரில் சிறந்த கட்டுரைகள் வெளிவருகின்றன. இம்மலரில் வெளியாகும் கட்டுரைகள் உலகின் பல பாகங்களிலும் உள்ள தமிழர்களுக்கு சைவத்தைப் பற்றிய செய்திகளை எளிதில் புரிந்து கொள்ள உதவுகின்றன. உலக சைவப் பேரவையின் கிளைகள் ஆங்காங்கு நடத்தும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளும் வெளிவருகின்றன.

வளர்க சைவம்! **வாழ்க வளமுடன் !!**

21-8-1997

W.S.C 5th Int. Saiva Conference, Bayview Sivan koil Durban, South Africa,1996

President, World Saiva Council, Srila Sri Head of Kasi mutt, Chairman of Int.Advisory committee of WSC; HH. Head of Perur Aadheenam and Chairman of Central Executive; Head of London Meikandaar Aadheenam, U.K. Jointly performing Holy Abisheka Ceremony.



1996 : பேரவையின் 5வது டர்பன் மாநாட்டின் தொடக்க விழாவில் திருப்பனந்தாள் பேரூர் இலண்டன் சைவ மடத் தலைவர்கள், மூவரும் சேர்ந்து பேவியூ சிவன் ஆலய சிவலிங்க அபிடேக ஆராதனையை சைவத் திருமுறை மந்திரங்கள் மூலமே நடத்தியதை உலக சைவர்கள் பாராட்டினர்.

சிவசிவ

World Saiva Council

உலக சைவப் பேரவை

Please address all correspondences to :

Chief Executive W.S.C. C/O London Meikandar Aadheenam

72, KING EDWARD ROAD, LONDON E17 6HZ UNITED KINGDOM

(Established in Madras 29-2-92)

W.S.C. VISION For the 21st Century - Present Policies / Future Plans

The function of the W.S.C. Trust as a non - political, Saiva religious charitable organisation is primarily to Co-ordinate policy and render advice and assistance to its regional bodies in achieving the Trust's objectives of International Saiva well being and Social regeneration with a focus on Saiva Education. Saiva welfare with an awareness of international development and current events, W.S.C policy is formulated by W.S.C General Assemblies meeting at World Saiva Conferences :-

(1) W.S.C is founded on the South Indian Tamil Meikandar's Saiva Siddhanta Philosophy, the 12 Saiva Thimmurais and Thirukkural.

(2) The Conferences of W.S.C in Singapore (1992) and Penang (1993) reaffimmed the above, while further underlining that :-

The tenet that God souls and "Pasam" (bonds) are uncreated: beginningless ultimate realities is true and the tenet called Suddha Advaita and Punitha Advaita (Pure Advaita) according to which God bestows is Grace by being in the three fold relationship of identification with difference from and togetherness with the souls are fundamental tenets of Saiva Siddhanta.

(2) PARIS : 3rd W.S.C SAIVA Conference (26-6-1994) Resolution No.2 Passed by the General Assembly reads as follows :-

This Conference earnestly appeals to World Tamil Saivites to practise, support and promote the use of Tamil Archanas and Saiva THIRUMURAI at ALL SAIVA TEMPLES FOR ALL PRAYER SERVICES and Saiva Rites etc.

(3) COLOMBO: 4th W.S.C SAIVA Conference (8-10 Sept 1995): Resolution No 1 passed by the General Assembly. "This conference appeals to World Fellow Saivites to take all practical steps such as publications, suitable training of Saiva Tamil priest proficient in Saiva Thirumurai, etc. to implement the Paris Resolution and also to consolidate efforts to implement the 10-point conference proposals for saiva social service work with a focus on Youth Welfare and Saiva religious Education worldwide".

4. DURBAN : 5th World Saiva conference, Sept : 20-24, 1996 Unanimously confirmed declaration of Saivism as a world faith on its own.

W.S.C General Council : Tanjavur 1997 conference Resolution :

Recognising SAIVISM now as a world faith on its own and with a view to spreading the message of universal brother hood, inherent in our tenets of "Anbe sivam" and "Onre kulam", across linguistic and national boundaries to all followers of SAIVISM, this conference resolves that,

"The W.S.C., though not opposed to the use of Sanskrit, French, English & other languages for religious expositions, it reserves a special place of honour for Tamil, which is the language of Thevaaram, Thirumurai & Meikanda sastras W.S.C is also committed to institute Tamil as the language of religious rituals & higher Culture of the Tamils. We appeal to W.S.C Branches and Membership to comply with this policy to help promote SAIVA cohesion, progress and wellbeing, world wide across linguistic and national boundaries. AUM Namasivaya. Anbe Sivam."

நமது குறை தீர – அவனிடம் கேட்க – பூசை செய்ய நம் தமிழ் போதாதா? எப்பொழுதோ ஒரு காலத்தில் அர்ச்சகர்கள் அந்த மொழியில் பூசை செய்தார்கள்.

இன்று விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட காலத்தில் வாழ்கிறோம். பழைமையை மாற்றி புதுமையை புகுத்துவோம். நமது மொழியில் பூசைகளை நடத்தி நமது கடவுளர்களை பிரார்த்திப்போம்.

செயல் படுவோம் வாரீர்

தவத்திரு சிவநந்தி அடிகளார் உலக சைவப் பேரவையைத் தோற்றுவித்தபோது அதன் கொள்கை முழக்கமாக, வெறும் சிந்தனை மாத்திரம் உலகை மாற்றாது. புதிய தெளிவான சிந்தனைகளோடு அதற்கேற்ற செயல்களும் சிறந்தால்தான் உலகினை மாற்றி பண்பாட்டில் உயர்ந்து செல்ல ஊக்க முடியும் என்று கூறினார். இது சைவ சித்தாந்த மரபினருக்குப் பெரிதும் பொருந்தும் ஒன்றாகும். அது பிறந்த தமிழ் மண்ணில் கிழடு தட்டி வீரியம் குன்றி மரணாவத்தையில் கிடக்கின்றது. வெளிநாடுகளில் பெரும்பாலும் வேதாந்த நச்சுக் கருத்துக்களே படர்ந்து இந்து மக்களைக் கோழைகளாக்கி வாழ்க்கையிலிருந்து விலகி ஒடி ஒளிந்து கொள்ள வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது. சைவ சித்தாந்தம் என்பது வாழ்க்கையிலிருந்து அஞ்சி ஓடுவதல்ல. மாறாக வாழ்க்கையில் அழுந்தி விழுந்து அனுபவித்து அக மாசுக்களைப் போக்கி சுத்தமாகி இறைவனை நெருங்கி அவனோடு ஒன்றித்து நிற்கும் உறுதியினைத் தருவதாகும். இதுவே தமிழ் நாகரிகம் உலக நாகரிகத்திற்கு அளிக்கக்கூடிய மாபெரும் பண்பாட்டு நன்கொடை, சோழர் காலத்து நடராசப்பெருமான் செப்புச் சிலைகளைப் போன்று, அரிய கலைகளிற் பெரிய கலையாகிய பரத நாட்டியம் போன்று, உலகப் பண்பாட்டிற்கு தமிழர்தம் பெருங்கொடையாக வழங்கக் கூடியது சைவ சித்தாந்தக் கோட்பாடுமாகும். அப்படியிருந்தும் அதனைப் போற்றி புதிய புதிய துறைகளில் அதனை வளர்க்காத சீர்கெட்ட இனமாக இன்றைய தமிழர் இனம் இருக்கின்றது.

இந்த நிலையில் தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பல ஆண்டுகளாக சைவ சித்தாந்தத்திற்கென பெரும் பெரும் மாநாடுகள் நடத்தி அந்தப் பாரம்பரியம் அந்த அந்நிய நாட்டில் மறைந்து விடாது

காத்து வளர்த்து வருகின்றார்கள் என்ற செய்தி மனநிறைவு அளிக்கின்ற ஓர் செய்தியாகும். கடந்த செப்டம்பர் மாதத்தில் தவத்திரு சிவநந்தி அடிகளார் அங்குச் சென்று சிதறிக் கிடந்த பல இயக்கங்களை ஒன்று திரட்டி உலக சைவப் பேரவைக் கிளை ஒன்றைத் தொடக்கியது வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் நிகழ்ச்சியாகும். இனி அவர்கள் தனித்துப் பாடுபடுவது ஒழித்து உலகத்து ஏனைய சைவத் தமிழர்களோடு இணைந்து உழைக்கின்ற சூழ்நிலை பிறந்திருப்பதை எண்ணி மகிழ்கின்றோம்.

தென்னாப்பிரிக்கத் தமிழர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கும் சில இருக்கின்றன. அங்கு ஆடம்பரமான சரியை கிரியைகட்கு நேரத்தையும் பொருளையும் ஒதுக்குவது குறைத்து, கூட்டுப் பிரார்த்தனைகட்கும் சமயச் சொற்பொழிவுகட்கும் அதிக நேரத்தை ஒதுக்குகின்றனர். சமய விளக்கங்கள் என்பன தந்திரக்கலை. மந்திரக்கலை, உபதேசக்கலை என்று வரும் மூவகை ஆகமக்கலைகளில் உபதேசக்கலையின் பாற் பட்டதாகும். இந்த உபதேசக்கலை சிந்தனாக் கலையுமாகும். வாழ்க்கையை விளக்கி அறிவினை வளர்த்து உள்ளொளி பெருக்கி உய்திக்கு வழிகாட்டுவதாகும். மறைந்துவிட்ட சமயஞ் சார்ந்த கலைகளில் இந்த உபதேசக்கலையும் ஒன்று. கோயில்களில் சிவாச்சாரியர்களால் செய்யப்பட வேண்டிய இதனை இப்பொழுது யாரும் செய்வதில்லை. சமயச் சொற்பொழிவுகள் என்பது பெரும்பாலும் கோயில்களில் நடப்பதில்லை. அங்கு பூசைகட்கும், யாகங்கட்கும், திருவிழா போன்றவற்றிற்கும்தான் இப்பொழுது இடம் இருக்கின்றது.

LET'S ACT IMMEDIATELY

"A vision without a task is but a dream only. a vision with a task can alone change the world". This is the clarion call of Thavath Thiru Sivanandhi Adikalar that he formulated as the working maxim when he formed the World Saiva Council. This call is particularly apt for those in the Saiva Siddhanta tradition. In the country of its birth it has grown weary, exhausted and almost dead. It has ceased to be the central philosophy guiding the lives of men. Overseas it is more the Vedanta philosophy rather than Saiva Siddhanta that has taken deep roots, serving almost like a poisonous drug that attracts the weary and feeble providing a false sense of security. It drives away men from the world of existence through characterising it as a snare, a web of maya that has to be avoided. In contrast to this Saiva Siddhanta encourages a positive and wholesome attitude to life. Living is learning and only through existential struggles of various kinds can man get rid off the inner impurities that make them beastly, commit evils of all kinds. This immensely positive and courageous view of life along with a philosophical foundation that is immensely rational is another significant element the Tamils can contribute to world culture along with the world famous bronze sculptures of Siva Nadarajah and Bharata Natyam, the most beautiful among the sacred arts.

It is on account of this we note with great pleasure the dynamism with which the Saiva Tamils of South Africa have kept this tradition alive and active in this foreign soil. Last September Thavath Thiru Sivanandhi Adikalar made a special visit and through several meetings and speeches there served to further the renaissance of Saivism in that country. We note with great pleasure the formation of another branch of W.S.C. here by bringing together several religious organisations. a feat thought quite impossible.

Saivism in South Africa has registered some transformations that is well worth taking note. There it appears that the grandiose archanas and festivals are discouraged and its place have group prayers and spirtual lectures or discourses.

Such religious expositions belong to upadesakkalai, one of the religious arts in the Agamas, the others being tantra kalai and mantra kalai. Upadesa belongs to the art of reflection, an activity that serves to bring about spirtual illumination, gaining insights into the mysteries of existence. Unfortunately this art is almost dead in many other countries and Siva acaryas who were supposed to be doing this are now more bent on rituals, unnecessarily grandiose frequently.

Caste-ridden Hinduism has driven our Saivites to seek refuge in conversion : other reasons being back of saiva education and self-respect.

SAIVISM IS FOR SELF-CONVERSION

It will not be an exaggeration to say that Meykandar's CIVAJNANA BOTHAM, a philosophic classic that emerged as the critique of the different idealistic and positivistic schools of thought is the most profound philosophic treatise that has emerged not only in the Indian soil but also the whole world. It is genuinely Metaphysica Universalis, a philosophic statement of the most primordial in man and because of that the most universal. It delincates and articulates what constitutes existence of every man, no matter to what culture, religion or nation he may belong to. It is not an argument for a particular religion or tradition but rather a theoria of every religion and culture. It is not a romantic going back to a previous, presumably a glorious past and treating that as authoritative and justifying those beliefs presumed to be their essence. On the contrary it is a courageous venturing into the most fundamental in ALL men, an exercise in expounding what makes human existence what it is in fact. It expounds TRUTHS that all thinking men could agree upon provided they dare to tear themselves away from the cultural and philosophic prejudices that condition even their philosophic and spiritual quests. For anyone incapable of raising to this level of universality, this text will remain a closed book, forever incomprehensible as Meykandar himself asserts in the preface.

The universality of aim is combined in this text with a rationality of approach. What we have in this text is metaphysics transformed into the most universal, the most comprehensive hermeneutic science, i.e. a science proper suited to enquire in a thoroughly rational manner the hidden mysteries surrounding human behaviour.

If it has been the privilege of the West to have developed the technological sciences, it has been the privilege of the Dravidian folks, particularly the Tamils to have developed the hermeneutic sciences. It has been their genius for millenniums and because of which they have produced Tolkappiyam, Thirukkural, Thirumanthiram and as the most significant in this series CIVAJNANA BOTHAM.

The expounding of Metaphysica Universalis has an important practical implication : it criticizes religious conversions as acts of arrogance and calls for self conversion. Each man should pause and ponder, reflect deeply about his own behaviour and through that understand for himself Metaphysica Universalis, the undying TRUTHS WITHIN him. The outer gaze, the missionary zeal to convert others to one's own religion, should be thrown out in favour of an INNER GAZE, that of converting oneself to the ETERNAL TRUTHS shining within so brilliantly.

We Saivites of the 20th century, ready to enter the 21st, have to launch a worldwide crusade to end proselytizations and install in its place self-discovery, self-conversion. We must challenge every proselytization as acts of arrogance and self-conceit; acts arising from IGNORANCE. We must point out their own ignorance by mastering the contents of CIVAJNANA BOTHAM and making it available through translations in all languages of the world.

சைவத்தில் இல்லாத, இந்துமத சாதி ஒடுக்கு முறைகளால் தாக்குண்டு எமது சைவர்கள் மதம் மாறுவதற்கான பின்னணிக் காரணங்களில் பொருளாதார நிலை முக்கியமென்றாலும், இந்த மதமாற்றம் ஐரோப்பிய சைவத் தமிழரிடையேயும் பரவலாக உள்ளதால் சைவக்கல்வி இன்மையும், தாழ்வு மனப்பான்மையுமே இன்றைய உலகில் முக்கிய காரணங்களாகும் :-

மதமாற்றம் தேவையில்லை!
சுயமாற்றமே தேவை

இவ்வுலகத்தில் வளர்ந்துள்ள பல்வேறு தத்துவ நெறிகளில் தமிழர்கள் பல்லாண்டு காலமாக வளர்த்த நெறிக்கு ஓர் தனிச்சிறப்புண்டு. நூனெறி பிழையாது உள்ளதை உள்ளவாக் கண்டு உலகியல் அறிந்து மெய்யியல் உரைத்த திறனே அது. சுமேருத் தமிழ் காலந்தொடங்கி இன்றளவு அதுவே தமிழ்ச் சிந்தனா பாரம்பரியத்தின் மூல ஊக்கமாக இருக்கின்றது. இந்த ஊக்கத்தின் அடிப்படையிலேயே தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம் போன்ற நூற்கள் யாக்கப்பட்டன. இவற்றில் மிக உன்னதமான ஒன்றாக மெய்கண்டாரின் சிவஞானபோதம் விளங்குகின்றது. இதுவரை தோன்றியுள்ள உலகத்து மெய்ஞ்ஞான நூற்களில் இதற்கொப்பானதொன்று யாதுமில்லை. இதை அறியாத சைவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதை உணர்ந்து நாம் மிகவும் வெட்கப்பட வேண்டும்.

மெய்கண்டார் சமயாதீத நிலைநின்று, அனைவருக்கும் பொருந்துவதாகிய சமயப் பொதுக்களை நூனெறி பிழையாது மனித உள்ளத்தின் அடித்தளத்திற்கே சென்று பிழையற உணர்ந்து செறிவோடு சிவஞான போதத்தில் விரித்துள்ளார். பரஞ்சோதி முனிவர் வடிவில் இறைவனே அகத்தெழுத்து உணர்த்தி யருளிய நூல் இது என்பதையும் நாம் உணர வேண்டும். இத்தகைய அரிய நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பை தென்னாப்பிரிக்க தமிழன்பர்கள் வரும் உலக சைவ மாநாட்டில் வெளியிட்டு அரும்பெரும் சைவத் தொண்டாற்றுவது சாலப் பொருந்துவதே. எல்லா சமய பேதங்களையும் கடந்து ஆழ ஊடுருவி உள்ளத்தின் அடித்தளத்திற்கே சென்று அங்கே அழியாது ஒழியாது சுடர்ந்து கொண்டிருக்கும்

உண்மைகளை அழகுபட விரித்துரைக்கும் இந்நூலை உலக மக்கள் நிச்சயமாக அறியவேண்டும்.

சமயாதீத நிலை நின்று சமயப்பொது கூறும் சிவஞானபோதம் நமக்கோர் புதிய விழிப்புணர்ச்சியைத் தருவதோடு மட்டுமிலாது, உலகளாவிய நிலையில் நாம் செயல்படுவதற்கு வேண்டிய ஓர் தெளிவினையும் தருகின்றது. இந்திய மண்ணில் இறைவனை மறுக்கச் செய்ய எழுந்த சமயங்களைக் கண்டித்து அவை பட்டொழியுமாறு செய்தது பக்தி இயக்கமாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் இதனைத் திறம்பட நடத்தி இந்திய மண்ணில் இறைவனது ஆட்சியே அழியாது ஓங்கி நிற்குமாறு செய்தனர்.

அதேபோன்று வேறொரு வகையில் இன்று நாம் செயல்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். சமயப் பொதுவினைத் திறம்பட விரிக்கும் சிவஞானபோதம், சமயப்பொதுவை அனைவரும் உணர்ந்து மதமாற்றம் செய்வதை விடுத்து சுயமாற்றம் செய்து கொள்ள வேண்டும், அதுவே அறத்தோடு கூடியவொன்று என்று நன்றாக உணர்த்துகிறது.

எல்லா சமயங்களின் அடித்தளத்தில் கிடப்பது சமயப்பொதுவாகும். ஒவ்வொருவரும் தன் மதத்திலேயே இருந்து கொண்டு தனது அடிப்படையினையே ஆய்ந்து தெளிவான் எனில், அவன் பதி, பசு, பாசம் என வரும் முப்பொருளும் அனாதி என்பதை உணர்வான். எங்கே கற்பனைச் சிந்தை வளர்கின்றதோ, ஆணவச் செருக்கால் வரும் மதம் தலைவிரித்தாடுகின்றதோ அங்கே சமயப்பொதுவுகளாக விளங்கும் உண்மைகளைக் காண முடியாது போகின்றது. ஒருவன் எந்த சமயத்தைச் சேர்ந்தவனாயினும் தன்னுள் தானே சென்று, அங்கே கிடக்கும் அழியாப் பேருண்மைகளைக் காண்பானெனில் அவன் சைவசித்தாந்த உண்மைகளைக் கண்டு தெளிவான். சமயப் பொதுவாகிய உண்மைகள், மரபு வழி வருவனவல்ல – அகத்தே யாண்டும் சுடர்ந்து கொண்டிருப்பவை.

அனைவரும் தன்னையே தான் நூனெறி பிழையாது ஆயவேண்டும். இதுவே சைவர்களாகிய நாம் உலகிற்கு உணர்த்த வேண்டிய பேருண்மையாகும். 21–ஆம் நூற்றாண்டு தொடங்கி உலகளாவிய நிலையில் இதனை உலக மக்கள் அனைவருக்கும் உணர்த்துவதே நமது கடமையாகும். இந்த மாநாடு தொடங்கி இந்தப் பணியே நமது உயிர் மூச்சாக அமைய வேண்டும்.

An outline basis for a 10 point strategic, International Plan for SAIVA REVIVAL in the 21st century

Preamble:-

World Saivism is in deep crisis today. Unless remedial actions are taken forthwith on the basis of a strategic world-wide plan, the future is bleak indeed. In this context, it is important to note that Saivism, the study and use of our Tamil language and the welfare of saiva-Tamils, world-wide all three are integrally interwined and that a viable future for Saivism can only be built on the foundations of all three aspects and their interdependence in any plan envisaged.

In todays context, it is equally vital to have an acknowledged International Saiva organisation vested with power and authority, respected and nurtured by the world Saiva Tamil community. This today is the World Saiva Council whose functions should and could be further strengthened to consult collate and co-ordinate all international efforts and also give directions and cohesion to world Saiva Tamil solidarity and welfare.

Above all, adaptability to science and technology and changing life styles, accomodation and ability to learn from all for the good of Saivism bringing Saivism to the people's needs and realities of the 21st century's context and recognition of the vital roles of Saiva women and youth in plan formulations should be taken into account.

1. Strengthening the existing World Saiva Organisational framework

The primary need, first and foremost, is to further strengthen the already established (1992) World Saiva Council through the establishment of more accredited branches in each and every country of the world with a sizeable Saiva Tamil population, however small. This has to be backed up by Saiva Temple centres, in each country, complete with trained Saiva Tamil

Gurus, teachers etc and dedicated bands of full-time Saiva Swamis in charge in each country sustained by devotees.

2. Promoting Saiva Social Cohesion through congregational participation and uniform religious practices for all Saivites.

In each country, a viable and vibrant cohesive Saiva Tamil society has to be built up on mutual trust and Saiva values of social service. This can be encouraged by reducing ritual times and devoting more times to congregational worship, discourses, questions and answers sessions etc. and the use of Tamil for all worship. To bring about uniformity in prayer, Books, Videos, casettes, guidelines etc can be published and the World Saiva Council has already released two books with this purpose in mind. We hope our Saiva Mutts would also publish books and guide world Saivites towards right religious practices.

3. All prayer Services in Temples, etc should be conducted in our Mother-toungue, TAMIL only with a view to promoting a better understanding of Saivism and our prayer services. The already current worldwide campaign for the use of Tamil Archanas and Thirumurai hymns instead of Sanskrit should be enforced by all Saivites. The prime purpose of this move is to promote Bakti which is the essence of Saivism. In keeping with today's needs and aspirations, some meaningless rituals should be reduced or eliminated and the time thus saved devoted for congregational singing, religious discourses, Saiva services etc.

4. We must encourage new and fundamental international research in all fields connected with SAIVISM.

(a) The World Saiva Council is already encouraged by the continuing research findings of international scholars on a wide variety of SAIVA TAMIL/DRAVIDIAN TOPICS of great international significance and interest:-

1) Historical Analysis : Prof K.P. Aravaanan (Tamil Nadu) and Prof A..Velupillai (Jaffna)

2) (a) Saivism and Depth Psychological Studies

(b) Sumerian - Tamil - Saiva Studies:
Dr. K. Lognathan (Malaysia)

3) Dravidian African studies:
Dr. Cyril A. Hromnik

4) Saiva Tamil anthropological studies:-
Dr. Masa Taranaka (Kyoto, Japan)

b) A World Saiva University is a vital long term necessity for Saiva Teaching, Research and Publications

5. As a matter of priority, we must work towards the eradication of caste and other similar evils which are alien to Saivism.

We have the undisputed authority of our four Saiva founding fathers of the faith who decried both the caste system and the imposition of Sanskrit. Indeed, the Bakti movement rose against these two evils which are foreign to our Saiva Tamil ethos but were surreptitiously introduced to undermine both our language and our separate and ancient Saiva religious identity.

All Saiva Temples should be open for all for worship and Tamil should be the language of worship. These measures will bring about a speedy social cohesion and a stronger saiva-Tamil solidarity. We must administer Saiva religous Dikshas to all.

6. Saiva Revival of the future largely depends on the Saiva Tamil Youth Movements and Initiatives of today.

The future belongs to the young and Saivism is no exception. Any plan for the future must envisage and accomodate the needs and aspirations of Saiva youth throughout the world. Their genuine participation should be encouraged and Saivism must adapt to changes in modes and approaches of prayer if only to keep our youth from the temptations of rampant conversion by other faiths.

7. Saiva womanhood must be encouraged to share equally and underpin the Saiva revival programmes and plans :

Aware of the keyroles of Karaikal Ammaiyar, Queen Mankayarkarasiyar and St. Thilakavathiyar in the sucessful earlier

Bhakti Movement, we must take steps to involve Saiva women at all levels of our campaign as it is they who hold the key to sustain social, family and cultural stability, not to mention their contributions in academic and other fields in recent times. Saiva men and women should be equal partners in plan formulation and implementation.

8. Concerted action for arresting conversion and denigration by other faiths.

Saiva Mutts throughout the world, heads of Saiva Temples and other institutions should unite with Saiva scholars and savants in combating this international menace. The illustrious example of the great Tamil scholar and reformer: Sri la Sri Arumuga Navalar of Jaffna, Ealam during the 19th century, should serve to encourage our efforts in this area. Our own organanisation and access to knowledge of Saivism vis-a-vis other faiths are key aspects and we must co-ordinate our international efforts on this issue. New ideas and approaches must also be employed in this area borrowing from history, research of dedication.

9. Action to counter and defuse anti Saiva propaganda from within (Brahminism) and from without (other faiths)

We must proclaim Thirukkural as our own Saiva Tamil classic and use it to emphasize the positive aspects and life affirmation of Saivism as opposed to the illusion theory (mayavadam) of Vedanta. The Saiva concepts of freewill and the power of BAKTI to annihilate or reduce the effects of karma should be emphasized as Saiva Tamils have, for centuries, been debilated by tormenting thoughts of "talai viti" and "munvinai" which have been used by Brahmanism to oppress us and undermine our initiatives. Indeed, the Periapuranam is a Saiva revoluntionary epic against caste; against social injustice; against foreign Brahmanic evil influences over Saivism. It stands even today as the crowning glory of the golden age of Saivism of the 12th century.

Our twin works, the Thirukkural and the Periapuranam should be expounded to our Saivites and to others to project the greatness of our religion, world's oldest faith.

10. Any Saiva Revival Plan must include both short and long term objectives.

Plan formulations must necessarily take into account the full impact of today's contemporary issues on the life of Saiva Tamil societies in all countries of the World - questions and issues must be answered. Adaptation to change is one of the key elements of management and new strategies must be boldly pursued to meet the challenges of the 21st century. Plans must be made flexible and new plans should emerge as and when necessary.

Above all, we must be prepared for a new and fresh approach and a world strategy impelled by a religious dedication to serve our noble cause to preserve, foster and promote international Saiva Tamil identity, now and forever.

AUM NAMASIVAYA

ANBE SIVAM

சைவ மறுமலர்ச்சிக்கு 10 செயல்திட்டங்கள்

உலகெங்கும் சைவசமயம் நசிந்து அழிந்துகொண்டு வருகின்றது. சைவமக்கள் சைவத்தையும் தமிழையும் தமிழ்ப்பண்பாட்டினையும் மறந்து வருகின்றார்கள். உடனடியாக ஆதீனங்களும், கோயில்களும் பிற சமய அமைப்புக்களும் புதிய அணுகுமுறைகள் வழி சைவத்திற்குப் புத்துயிர் அளிக்காவிட்டால், சைவத்தமிழர்கள் உலகெங்கும் சீரழிந்து கெடுவார்கள். அறிவியல் யுகத்திற்கேற்ற புதியபுதிய அணுகுமுறைகளை நாம் கையாண்டு உடனடியாகச் செயலில் இறங்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

1. உலக சைவப் பேரவையை வலுப்படுத்தல்

இந்த புதிய வேகத்தோடு தோற்றப்பட்டிருக்கும் உ.சை. பேரவையை இன்னும் பல்வேறு வகைகளில் வலுப்படுத்த வேண்டும். உலகெங்கும் நல்லவர்கள் தலைமையில் இன்னும் பல கிளைகளை உருவாக்கி பெரியதொரு அமைப்பாக இதனை உயர்த்தவேண்டும். கோயில்களும் பிற சைவ அமைப்புக்களும் இதற்கு உறுதுணையாக நிற்கவேண்டும்.

2. சைவ மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தல்

சிதைந்து சிதைந்து பிரிந்து பிரிந்து எந்தவொரு கட்டுப்பாடும் கட்டுக்கோப்புமின்றி போய்க்கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தை இழுத்துப்பிடித்து அடிப்படையான சில சமய விஷயங்களில் ஒன்றுபடுத்த வேண்டும். சிவத்தொண்டு சிந்தனையை வளர்க்க வேண்டும். ஆடம்பரச் சடங்குகளைக் குறைத்து சிவஞானத்தை வளர்க்கும் கலந்துரையாடல்கள் சமயபாடங்கள் கருத்தரங்குகள் போன்றவற்றை அதிகப்படுத்த வேண்டும்.

3. தமிழிற்கு முதன்மை தந்து அதனை வளர்த்தல்

எல்லாவகை அர்ச்சனைகளிலும் சமய பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் தமிழே இடம்பெற வேண்டும். தேவாரத் திருமுறைகட்கு சிறப்பிடம் தரவேண்டும். கூட்டுப் பிரார்த்தனைகட்கு இடம் தந்து மெய்யான இறைபக்தியை வளர்க்க வேண்டும்.

4. சைவம் தமிழ் தொடர்பான அடிப்படை ஆய்வுகளைப் போற்றல்

உலகெங்கும் பல நல்ல அறிஞர்கள் சைவ வரலாறு, சுமேருத்தமிழ், ஆப்பிரிக்கத் திராவிடத் தொடர்பு, சைவ சமூகவியல், உளவியல், மொழியியல் என்றவாறு பற்பல நடத்தி புதுப்புது உண்மைகளைக் கண்டுபிடித்து உலகிற்கு எடுத்துக் கூறியவண்ணம் இருக்கின்றனர். ஆனால் இவர்கட்குத் தமிழ்ப் பெருமக்கள் ஆதரவு தந்து வளர்க்காத நிலையில் உ.சை.பே. இயன்ற அளவில் ஆதரவு தந்து நிற்கும். இத்தகைய அடிப்படை ஆய்வுகளை வளர்த்துப் போற்றும். பிற அமைப்புக்களும் இவற்றைப் போற்ற வேண்டும்.

5. உலக சைவப் பல்கலைக்கழகம்

சைவ அறிவினை, சைவத்துறைகள் பலவற்றை மேலான முறையில் வளர்க்க உலகெங்கும் பல சைவக்கல்லூரிகளையும் பிற ஆய்வு மையங்களையும் அமைப்பதோடு, இவற்றிற்கு ஓர் ஆதாரத்தலமாக உலக சைவப் பல்கலைக்கழகத்தையும் உருவாக்க வேண்டும்.

6. தீவிர சாதியொழிப்பு

சைவப்பெருமக்களை பலவாறு பிரித்து ஒற்றுமையும் ஐக்கியமும் விளங்காது செய்யும் சாதிசழக்காடுகளை முற்றாக அழிக்கவேண்டும். இதேபோன்று புதியதாக அரும்பியுள்ள பிற வேற்றுமைகளையும் முற்றாகப் போக்கவேண்டும். பக்தியை வளர்த்து அதன்வழி சமத்துவத்தை வளர்க்கவேண்டும்.

7. இளைஞர்களைக் கவர்ந்து சமய ஈடுபாட்டை வளர்க்க வேண்டும்.

பிராப்த்தம்: இப் பிராப்த்தத்தை அனுபவிக்கும் போது புதிதாக ஈட்டும் வினை ஆகாமியம். ஒருவன் செய்யும் தீவினையும் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் அது இரும்பு விலங்கு போன்றது. அவன் செய்யும் நல் வினையும் தளையே! அது பொன் விலங்கு போன்றது. ஆன்மா வினை, மாயை, ஆணவத்தைச் சார்ந்து வாழுவதினின்று விடு பெற்று பதியை (கடவுளைச்) சார்ந்து நிற்றல் வேண்டும். ஆன்மா ஒருபோதும் தனித்து நிற்பதில்லை. கட்டுண்ட நிலையில் ஆணவத்தைச் சார்ந்து நிற்கும்: கட்டறுத்த முத்தி நிலையில் கடவுளைச் சார்ந்து நிற்கும். சார்ந்தே நிற்றல், முன்வினையையே நம்பியிருத்தல் நல் வினையும் விலங்கே எனல் ஆகியன தத்துவ நிலையில் கருத வேண்டியனவாக இருப்பினும் பாமர நிலையில் அது பேரளவு சமுதாயத்தை பாதித்த ஒன்றாக செயற்பட்டு விட்டது. தமிழர் பொருளாதார ரீதியில் வர முடியாமைக்கு அவர் முற்றுமாக நம்பிய கர்மக் கொள்கை காரணமாக இருந்தது; இருக்கின்றது.

உலக கிறித்துவ அணுகுமுறை :

புரட்டஸ்டான்டு நாடுகளில் முதல் முதலாளித்துவ முறை கருக்கொண்டது என்றார் மாக்ஸ் வேபர். (MAX WEBER 1864 - 1920) கால்வின் என்ற மத அறிஞர் தம் கருத்துகள் புரட்டஸ்டாண்டு தொடங்கிய காலத்தில் பெருஞ்செல்வாக்கில் இருந்தன அவர் கூறினார் -

> மக்கள் கடுமையாக உழைக்கவேண்டும் உழைப்பில் கிடைக்கும் வருவாயை உடனுக்குடன் சுக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி பொருளை வீணாக்குதல் கூடாது. அப்பொருளை மீண்டும் மீண்டும் இலாபம் கொடுக்கிற தொழில்களில் முதலீடு செய்து மேலும் மேலும் பொருளீட்டவேண்டும். அப்படிச் செய்தவருக்கே கர்த்தரின் கருணை வாய்க்கும்.

கால்வினுடைய இந்த மத போதனையே புரட்டஸ்டான்டு மக்களைப் பெரிதும் உழைக்க வைத்து பொருளீட்டச் செய்து பணக்காரர் ஆக்கிற்று. சான்று: ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா. வேபர் மதக் கருத்துகள் உறுதுணையாக இல்லாத நாட்டு மக்கள் முதலாளித்துவ நெறிக்கு எழுவதில்லை என்பதற்கு இந்தியரை (தமிழரை) எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

எல்லாம் தலைவிதிப்படியே அமைகின்றன என்ற கர்மா மதக்கோட்பாட்டில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக மக்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. (சமுகவியல் – 50) பொருளியலில் உயர்வதும் இல்லை.

சமுதாய நல நோக்கற்ற தன்மை :

பதி, பசு, பாசம் என்ற சைவ சமயக் கொள்கை, மனிதனைத் தனித்தனியாகவே நோக்கிற்று. அவனவனிற்கு உரிய கர்மாவை அவனவனே நீக்குதல் வேண்டும். தன்னையே நினைக்க வைக்கிறது. தன்னையே ஆராய வைக்கிறது பாசக் கட்டினின்று ஒவ்வோர் ஆன்மாவும் கட்டறுத்துக் கடவுள் திருவடியை அடைதல் வேண்டும். தன்னையே உள்நோக்கும், இந்தத் தத்துவம் தத்துவ அளவில் சிறந்ததாயினும் சமுதாய அளவில் பொது நலனிற்கு எதிராகச் செயல்பட்டது; செயல்படுகிறது. தமிழரிடையெ குழு உணர்வும், கூட்டுணர்வும் வளராமைக்கும், தமிழர் என்று ஒன்றுபடாமைக்கும், ஆன்ம வாதம் முதன்மைக் காரணம் ஆகும். ஒரு தனி மனிதனைவிட, அவன் சார்ந்த சமுதாயமே மிக ஆற்றல் வாய்ந்தது என்ற உண்மை தமிழரிடையே அறியப்படாமல் போனதற்கு அவர் தம் சமயச் செயற்பாடும் காரணமாயிற்று. நிறுவன அமைப்பு எய்தாமையால் கூட்டுணர்வை இழக்க வேண்டுவதாயிற்று. தனிமனித ஆன்மவாதத்தால், தனி உணர்வு மேலும் இறுகுவதாயிற்று.

ஒரு மனிதன், தனியாக இருப்பது ஒரு நிலை, அவன் சமுதாய உறுப்பாக இருப்பதே உயிர் நிலை, மெய் நிலை, தனிமனிதனின் செயல் முறைகள், சிந்தனை முறைகள், உணர்ச்சி முறைகள் முதலானவற்றை அவனே முடிவு செய்வதுமில்லை. பின்பற்றுவது மில்லை பின்பற்ற முடிவதுமில்லை. ஒருவன் உண்ணும் முறை உடுக்கும் முறை பழகும் முறை பேசும் மொழி அனைத்தையும் தானே செய்வதாக எண்ணுதல் பேதமை. ஒருவன் வாழும் சமுதாயமே மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளைத் தீர்மானிக்கின்றது.

எனவேதான் அம்மதத்தாரிடை கூட்டுணர்வு கூடுதலாக உள்ளது. தமிழர் போற்றிய சமயங்களில் சமூக மெய்மை உணரப்படவில்லை. எனவே தமிழர் தீவுகளாகவும், திட்டுகளாகவும் விலகி விலகி நின்றனர், நிற்கின்றனர். ஆன்மாவின் உயர்ந்த இலட்சியம் கடவுளை அடைவதே. ஆன்மாவின் முயற்சிகள்

அனைத்தும் அதன் நன்மையை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களிலிருந்தும் ஆன்மா தன்னை விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும். இறைவனது துணையைக் கொண்டு ஆன்மா விடுதலை எய்த வேண்டும். அவனருளால் அவன் தாள் வணங்கி (சிவபுராணம் – திருவாசகம்). மாறாக கிறிஸ்தவம் போன்ற மதங்கள், சக மக்களின் நலத்தின் மூலமும், சமுதாயத் தொண்டின் மூலமும் மனிதனை கடவுளை அடைய ஆற்றுப்படுத்துகின்றன.

தன்னை அறிதலும், உணர்தலும் முதன்மையானவையே. அதனினும் தான் வாழும் சமுதாயத்தை அறிதலும், உணர்தலும் மிக முதன்மையானவை. நான் உணர்வு அழியவும் நாம் உணர்வு பெருகவும் இது ஒரு பெரும் வழி. தனி உணர்வு அழிந்து குழு உணர்வு தோன்றவும் ஊன்றவும் இதுவே வழி. எனவே தான் சில சமய நிறுவனங்களில் ஞாயிறு வெள்ளி எனக் குறிப்பிட்ட நாட்களில் கூடுதல் கடவுள் போதனை மட்டுமின்றி சமுதாயப் போதனைகளைக் கேட்டல், ஒருவரோடு ஒருவர் பழகல், உரையாடல் ஆகியன சமய நெறிகளாகப் போற்றப் பெறுகின்றன. கோயில் பூசாரிக் குருவிற்கு ஒவ்வொருவரையும் தெரியும், தெரிதல் வேண்டும். பிறப்பு, திருமணம், இறப்பு முதலான சடங்குகள் குருவிற்குத் தெரியவே நிகழும், நிகழ்ந்தாக வேண்டும். ஒவ்வொரு செயலையும் சுற்றி நாட்டவர் வழக்கங்கள், வழக்கப் பாடுகள், சட்டங்கள் ஆகியன ஒரு தொகுதியாக அமைக்கப்பெற்றிருக்கும். ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக ஒரு செயல் செய்ய வேண்டி இருக்கிறது என்றால் அச் செயலை எப்படிச் செய்வது என்ற வழியை சமய நிறுவனம் காட்டும், காட்ட வேண்டும். வாழ்க்கையைச் சேர்ந்த அனைத்துச் சடங்குகளும், முரணின்றி, வேறுபாடின்றி எல்லா இடத்திற்கும் எல்லா மனிதருக்கும் சாதி, மொழி வர்ண வேறுபாடின்றி ஒரே மொழியாக இருக்கும், இருக்க வேண்டும். இதனால் இவற்றால் ஒரு சமய நிறுவன உறுப்பினரிடையே கட்டொருமைப்பாடு பெருகும். சமுதாய கட்டொருமைப்பாடு மிகுதியாக உள்ள சமுதாயம், நம்பிக்கைச் சமுதாயமாக அமையும். குறைநிறை உள்ள சமுதாயம் அவநம்பிக்கைச் சமுதாயாமாக அமையும். இவ்வுலக வாழ்க்கையில் முன்னதில் அக்கறை இருக்கும்

பின்னதில் இராது. தனி மனிதர்களின் பண்புகளோ, உளவியல் கூறுகளோ, உடலியல் கூறுகளோ முதன்மையானவை இல்லை. ஒரு சமூகத்தின் கட்டொருமைப்பாடு அச் சமூக உறுப்பினர்கள் எந்த அளவிற்கு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொருத்தே இருக்கிறது.

உலக இன்பத்தைக் குடிமக்களுக்கு உறுதிப்படுத்த இயலாத சமய – அரசியல் – பொருளியல் அமைப்புகளே, இறப்பிற்குப் பின் வரும் மறுவுலக வாழ்க்கைப் பேற்றை உயர்வாகக் கற்பனை செய்கின்றன: கற்பிக்கின்றன. வாழ்வில் நேர்ந்திருக்கும் துயரத்திற்கு உண்மைக் காரணமான அரசியல் – சமய – சமுதாயச் சக்திகளை அடையாளம் காட்டவும், எதிர்த்துப் போராடவும் ஆற்றலற்ற சமய – சமுதாய அமைப்புகளே, கர்மக் கொள்கையையும், முற்பிறப்பு, மறுபிறப்புக் கொள்கையையும், வற்புறுத்துகின்றன. ஆளுகை ஆற்றலை வளர்க்க முடியாத அமைப்புகளே, மாற்றாக ஆறுதலை வளர்க்கின்றன வளர்க்கும்.

சைவம் : கர்மம், மலம், மார்க்கம் முதலாய நம்பிக்கை ஊட்டுதலால், தமிழ் மானுடக் குடும்ப அமைப்பில் – அரசியல் சமுதாய பொருளாதாரக் காரணங்களால் நேரும் துயரை மறைத்து, வினைக் கொள்கையை வற்புறுத்துகிறது. மெய்க் குற்றவாளிகளை, பொதுமக்கள் நேர்ப்பார்வையினின்று மறைக்கவும், இல்லாமையையும் இருப்பதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவும், போதும் என்று ஆறுதல் அடையவும், மேல் முயற்சியைக் கைவிடவும், துயரத்திற்குரிய கொடியோரை எதிர்க்காது இருக்கவும் வழி செய்கிறது வினைக்கொள்கை. இது தனிமனித அமைதிக்கு ஏற்பாக இருக்கலாம். ஆனால் நேர்ந்த சிக்கலுக்குரிய நீண்ட காலத் தீர்வன்று. ஏழ்மைக்கும், துன்பத்திற்கும், சமமின்மைக்கும் காரணமான அநியாயச் சக்திகள் நிலைபெறவும், வளம்பெறவும் இப் போக்கு வழிவகுத்தது : வழிவகுக்கும். கர்மத்திற்கு ஏற்றவற்றை – உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தைப் பெறச் செய்வதிலும், பெற்று நல்குவதிலும், உரிய கர்ம பலனை நல்காதோரை எதிர்ப்பதிலும், மானுட ஆன்மா அக்கறை கொள்ளுமாறு, வினைக் கொள்கை புதிய செயல் வடிவம் பெறவேண்டும்.

முடிவுரை

கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்பது எப்படி மெய்க்கர்ம விளக்கமாக இருக்க முடியும்? தன்வினையைக் கண்ணிற்கு தெரியா, அடுத்த சென்மத்திற்குத் தள்ளி வைத்தால், கண்ணிற்கு எதிரே கொடியவர்களால் துன்புறுத்தப்படும் நிகழ்காலச் சமுதாயம் நம்பிக்கை அற்றுப் போகும்.

அறிவியல் அறைகூவலுக் கேற்ப அமைப்பினை இழக்காமல், தமிழ்ச் சமுதாயம், புதுக் கோலம் பூண வேண்டும். இன்றைய இராக்கட்வேகச் சமூகத்திற்குப் பதியும் முதன்மை அன்று : பசுவும் முதன்மை அன்று. பாசம் நோக்கு நேசம் காட்டும் பருப்பொருள் வேட்டையாக விளங்கும் வாழ்வே முதன்மை. மறுபிறவியில் இறைவனடி எப்படிச் சேர்வது என்பதன்று சிக்கல். இன்றைய சூழலில் எப்படி வாழ்வது என்பது தான் சிக்கல் : எப்படிச் சாவது என்பதன்று.

தமிழினத் தோல்விக்கும், தமிழர் சமயத்தோல்விக்கும் காரணம் எம் சமயம் நிறுவன அமைப்பின்றி இருத்தல் கூட்ட உணர்வை மட்டும் ஈட்டுவதாக இருத்தல். சமுக உணர்வை ஊட்டாது இருத்தல். ஆகியன மெய்க் காரணங்களாகும். இனிவரும் காலத்தில் எமது சமயம், கடவுளுக்குத் தொண்டு செய்யும் சமயமாக மட்டும் இல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனமாக மாற வேண்டும்; நாம் மாற்ற வேண்டும்! மாறினால் தான்; மாற்றினால் தான் வெற்றி.

சைவ மக்களின் சமூகப் பிரச்னைகள்

திருமதி சுபாஷினி லோகநாதன், மலேசியா

தற்காலத்தில் பெரும் வாழ்க்கைப் பிரச்னைகளாக நமது சைவ மக்களிடையே தோன்றியுள்ளவற்றில் பற்பல சமூகப் பிரச்னைகளும் அடங்கும். இவற்றின் காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. கல்வி அறிவு போதாமை 2. பொருள் வளம் இல்லாமை 3.தன்னைப் பற்றிய தெளிவு இல்லாமை என இவற்றை அடையாளங் காணலாம். பொதுவாக எல்லா வகை சமூகப் பிரச்னைகளையும் இம்மூன்று பெரும் பிரிவில் அடக்கி விடலாம்.

1. சைவர்களிடையெ கல்வியறிவு குறைவு

தமிழ் மக்கள் உலகின் பல நாடுகளில் தற்பொழுது பரவலாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கை நிலை பல்வேறு வகையில் அவரவர் நாட்டின் சூழ்நிலைகட்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கின்றது. பெரும்பாலான நாடுகளில் நல்லதோர்முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள தக்க உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. சலுகைகளும் பேரளவில் தரப்படுகின்றன. ஆனால் உண்மையில் நாம் அச்சலுகைகளை உரிமைகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுகின்றோமா என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது. கல்வியின் அவசியத்தைப் பல சான்றோர்கள் பல வகையில் பல மொழிகளில் வலியுறுத்திக் கூறியிருந்த போதிலும், ஒழுங்கான கல்வியறிவு பெறாத மக்கள் நம்மிடையே பேரளவில் இருக்கவே செய்கின்றனர். வாழ்க்கையில் மேம்படுதற்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் கல்வி அவசியம். ஓர் அடிப்படைத் தேவை என்பதை நாம் அறிந்திருந்தவொன்றெனினும், கல்வியறிவு போதுமான அளவிற்கு சைவ மக்களிடையே இல்லையென்பது கவனிக்கத்தக்கது.

உ. பொருள் வளமின்றிச் சமய வளர்ச்சி இல்லை

பொருள் வளமிக்க ஓர் சமயம்தான் நல்ல முறையிலான வளர்ச்சியைப் பெற்று நிலைத்து நிற்க முடியும். ஏற்புடைய பல்வேறு வகையில் சமய போதனைகளையும், நன்னெறி வகுப்புக்களையும் பண்பாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்தி மக்களை நல்வழியில் இட்டுச் செல்ல பொருள் வளம் தேவையாகும். இருக்கின்ற பிற சமயங்களோடு வாதிட்டும். ஆழமான சைவ சமயத்தின் உண்மைகளை எடுப்பாக தக்க காரண காரியத் தொடர்போடு நிறுத்த, ஆய்வுப் பணிகளும் தேவை. இவற்றை நடத்த பொருள் வளமும் தேவையாகின்றது.

௩. தற்கல்வி குறைந்திருக்கின்றது

மனிதர்களாகிய நாம் எப்போது நம்மை ஆழ உணர்ந்தவர் ஆகின்றோமோ அதுபொழுதே, நாம் மனிதப்பிறவி எடுத்ததின் காரணத்தையும் உணர்கின்றோம். ஆன்ம அறிவை பெருக்குவதற்கே வாழ்க்கை என்று வாழ்க்கைக்கு சைவ சமயம் விளக்கம் அளிக்கின்றது. தான் ஓர் ஆன்மா இவ்வுடல் தான் வாழ இறைவன் எனக்கு அருளியுள்ள ஓர் அற்புதமான இல்லம், மாயா இயந்திர தனு. நம்மைச் சுற்றியுள்ள எல்லா உயிரினங்களும் தன்னைப்போலவே இறையருளால் அறியாமையையும் விலங்கெனப் பிணிக்கும் வினைகளையும் நீக்கி சுத்தமாகத் தத்தமக்கேற்ற வகையில் போராடிக் கொண்டிருக்கின்றன என்ற தெளிவு சிந்தனையில் உதிக்கும்போதே மனிதன் மனிதனாக உயர முடியும். அருளுள்ளத்தனாக ஆக முடியும். மாந்தர்கள் அனைவரும் ஒரே வகையில் ஒரே நிலையில் ஒரே காலக்கட்டத்தில் புனிதமாகுவர் என்பது உண்மைக்குப் புறம்பானது மக்களிடையே பக்குவ முதிர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. மக்கள் அனைவரும் புனிதமாகும் வரை சமூகப் பிரச்சினைகள் விடாது வந்து கொண்டே இருக்கும். அருளுள்ளம் மேம்பட மேம்பட குறையும்.

இத்தகைய பிரச்னைகளைக் களைய நம்மிடையே சைவசமயம் ஆற்றல் மிக்க கருவியாக இருக்கின்றது. இக்கருவியை அடிப்படையாகக் கொண்டு பற்பல செயல் திட்டங்களைத் தீட்டி முனைப்பாக நின்று செயல்பட்டால் நம்மால் ஓரளவேனும் இந்த பிரச்னைகட்கு தீர்வு காண முடியும். இறைச் செயலை மீறி யாதும் நடக்காது. அதே பொழுது இறையருளோடு நின்று காரியத்தில் இறங்கினால் செயல்கட்கு ஆதரவும் பெருகிக்கொண்டே வரும்.

4. பிரச்சினைகளின் பட்டியலும் செயல்திட்டங்களும்

என் அறிவிற்கு எட்டிய தற்கால சைவ மக்களின் பிரச்சினைகளையும், அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்னும் சில கருத்துக்களையும் கீழே தருகின்றேன்.

1. போதைப் பொருள்களுக்கும் போதையைத் தரும் கீழான கலைகளுக்கும் அடிமையாகி நிற்றல்
2. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்முறைகளில் ஈடுபடுதல்
3. கல்வியில் அக்கறை செலுத்தாமல், பயனற்ற காரியங்களில் ஈடுபட்டு காலத்தை விரயமாக்குதல்
4. கோயில்களை ஒழுங்காகப் பராமரிக்காமை, நடத்தாமை.
5. ஆய்வுகளைப் போற்றி தரமான சிந்தனை நூற்களை அறிஞர்கள் எழுதி வெளியிட ஊக்குவிக்காமை
6. மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தாமை
7. மெய்யான சைவ சமயத்தைப் பற்றிய அடிப்படை அறிவும் இல்லாமை
8. மக்களிடையே அருளுள்ளம் குறைந்துவிட, பல்வேறு வர்க்கப் போராட்டங்கள், பிளவுகள், சாதி சழக்காடு, ஆண்கள் பெண்களை அடக்குதல், பணக்காரர் ஏழை பேதம் என்பன போன்று பல
9. புதுமையை வரவேற்க, புதுமையான எண்ணங்களைப் படைக்கத் தடைகளைத் தோற்றுதல். காலத்திற்கு ஏற்ற முறையில் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு, அதற்கேற்றவாறு பண்பாட்டினைத் திருத்தியமைக்கத் தயங்குதல், அஞ்சுதல்.
10. தாழ்வு மனப்பான்மையின் காரணமாக தெய்வமொழியாம் தமிழினைக் கற்காது புறக்கணித்தல்.
11. பெண்களிடையே ஞானசிந்தனை செய்தற்கும், சிவத்தொண்டில் ஈடுபடுதற்கும் ஆர்வம் இல்லாமை.
12. மக்கள் மனதில் தெய்வம் இல்லாதுபோக அங்கே தீய காமக்கொடூர எண்ணங்கள் நிலவுதல்.

13. இல்லறவாழ்க்கையின் இயல்பினை அறியாதுபோக, குடும்பங்கள் சிதைவது; கணவன் மனைவி, பெற்றோர் குழந்தைகள் ஆகியோரிடையே புரிந்துணர்வு இல்லாது போக, ஒற்றுமை இன்மை.

14. சமுதாயத் தலைவர்கள் சுயநலத்திற்காகவும் மக்களை வஞ்சித்து ஏமாற்றுபவர்களாகவும் இருப்பது.

இவை போன்று இன்னும் பல.

இத்தகைய பிரச்னைகளைக் களைவதற்கு முன்பு வகுத்துரைத்த காரணங்களாகிய கல்வி அறிவு, பொருள் வளம், தன்னறிவு ஆகியவற்றை பெருக்க வேண்டும். மனிதர்கள் சரியான கல்வி அறிவு பெற்றவர்களாக உயரும்போதே, ஞானநூற்களை விரும்பிப் படித்து ஞானத்தெளிவுகள் பெற்று அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வர். பிற சமயங்களின் தாக்கம் ஏற்படும்போது, அவற்றோடு விவாதித்து சைவ சமயத்தின் உண்மைகளை நிறுத்தும் திறனுடையவர் களாகவும் இருப்பர்.

பிற தமிழ் சைவ அமைப்புக்களும் பண்பாட்டு இயக்கங்களும் வாளே இருக்க, தமிழர் தம் சமயப் பண்பாட்டு சிதைவுகளைக் களையவே பிறந்துள்ள உ.சை.பே அவ்வாறு இருக்க முடியாது. என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படும் நேரம் பிறந்துவிட்டது.

5. உ.சை.பே. செய்ய வேண்டியன

1. சைவ மக்கள் எங்கெங்கு குடியேறி இருக்கின்றார்களோ, அங்கெலாம் உ.சை.பே கிளைகளை உருவாக்க வேண்டும். அது பொழுது தவறாது இளைஞர் அமைப்புக்களையும் உறுப்பாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பேரவையில் நல்ல சமய ஞானமும் ஆர்வமும் உள்ள பெண்களுக்கு தக்க வாய்ப்புக்களையும் பொறுப்புக்களையும் தர வேண்டும்.

2. உருவாக்கப்பட்ட இளைஞர் அணி உறுப்பினர்கள், பள்ளி மாணவர்களிடம் சென்று அவர்களிடம் உரையாடி தக்க நடவடிக்கைகளும் எடுத்து அவர்களிடத்தே சைவ சமயத்தின் ஆர்வத்தை எழுப்ப வேண்டும். மலை நாட்டில் அரசாங்கத்து ஆதரவோடு எல்லா இன மத இளைஞர்களும் ஒன்று கூடி

பல்வேறு பயன் மிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பயனடையுமாறு பல செய்யப்படுகின்றன. அதே போன்று நோக்கோடு இந்த இளைஞர் அணிகள் பற்பல செய்ய முடியும். உதாரணமாக, இலவச பரதநாட்டிய வகுப்புக்கள், சங்கீத தேவார திருமுறை வகுப்புக்கள் போன்றவற்றை நடத்தலாம்.

இறைவன் அருளிய மேலான கலைகளை பாமர மக்களுக்கும் உரித்தான ஒன்றாக ஆக்க வேண்டும். பணம் சம்பாதிக்கும் தொழிலாக அதனை ஆக்கக்கூடாது. கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் தங்களை சிவத்தொண்டர்களாக பாவித்துக்கொண்டு எளிய வகையில் எல்லாரும் கற்றுப் பயனடைய ஆவன செய்ய வேண்டும்.

இவற்றோடு பாரம்பரிய விளையாட்டுக்களையும் புதுமையாக மலர்ந்து வரும் நல்ல கலைகளையும் ஊக்குவிக்க வேண்டும்.

3. எல்லா உறுப்பினர்களும் தத்தம் இல்லங்களிலே ஓர் சிறிய நூலகத்தையாவது ஏற்படுத்தி, அங்கே சைவசமயம் தொடர்பான நூற்களையும் இதழ்களையும் வைக்க முயற்சிக்க வேண்டும். எல்லா இல்லங்களும் சைவ மணம் கமழும் இல்லங்களாக உயர வேண்டும்.

4. சைவ சமய போதனைகள் குறையாகவும் முறையாகவும் இல்லாத காரணத்தால், பேரவை ஆங்காங்கே சைவக் கல்லூரிகளைத் தோற்றுவிக்க வேண்டும். அவ்வாறு அமையாத போதும், அதற்கு காத்துக்கொண்டிராது, சைவ சமய அறிஞர்களைக் கொண்டு பல்வேறு வகையில் சமய போதனைகளை நடத்த வேண்டும். அதனோடு சமுதாய உணர்வோடு இருக்க, வாரந்தோறும் ஓர் முறையாவது மக்கள் இல்லங்கட்குச் சென்று பழகி அவர்களின் குறைகளை அறிந்து ஆவன செய்யவும் வேண்டும். இவ்வாறான சந்திப்புக்கள் வழி மக்களின் பிரச்னைகளைக் கேட்டறிய வாய்ப்புக்கள் தோன்றுவதால் சமுதாயவுணர்வோடு கூடிய சமயிகளாக நாம் இருக்க முடியும். இதன் வழி மத மாற்றத்தையும் தடுக்க முடியும். நாம் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகட்கு மக்கள் ஆதரவையும் திரட்ட முடியும்.

5. கோயில்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவற்றை சிவஞான நிலையங்களாக, சைவ சமயத்தை விளக்கி தெளிவு

படுத்தும் மையங்களாகவும் ஆக்க வேண்டும். இங்கே பொதுமக்கள் ஆதரவோடு சிவஞானத்தை வளர்க்கும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடை பெற வேண்டும்.

6. குடும்ப வாழ்க்கையை இன்னும் நன்றாக மக்கள் புரிந்துகொண்டு கணவன் மனைவி ஒற்றுமையோடும் இணக்கத்தோடும் வாழ நாம் பல்வேறு வகையில் வழிகாட்ட வேண்டும். திருமணத்தைப் பற்றி பல்வேறு வகையில் ஆய்வுகள் செய்து திருமணம் செய்ய விரும்புபவர்கட்கும் செய்து கொண்டவர்கட்கும் தக்க முறையில் விளக்கி பாடங்கள் நடத்த வேண்டும். உள்ளங்கள் ஒன்றிய பின்னே திருமணம் என்ற பாரம்பரியத்தை – சாதி வழக்கிற்கு முற்பட்ட – வழக்கினை மீண்டும் கொண்டு வரவேண்டும். குழந்தைகட்கு இளம் வயதிலிருந்தே சைவ சமயத்தின் அடிப்படைகளைச் சிறிது சிறிதாக அவர்கள் மனங்கொள்ளுமாறு புகுத்த முயற்சிகள் செய்ய வேண்டும். நவீன போதனா முறைகளை (ஒலிப்பதிவு நாடா, கணினி, வீடியோ போன்றவற்றை) கையாளவும் வேண்டும்.

7. பெண்கள் அடங்கிக் கிடப்பதை ஒழித்து மென்மேலும் விழிப்புணர்ச்சி பெற பேரவை ஆவன பல செய்ய வேண்டும். அவர்களை ஆய்வுப்பாதையில் சிந்தனை ஆராய்ச்சியில் இழுக்க வேண்டும். பெண்கள் அறிவிற் சிறந்தவர்களாக இருந்தால்தான், ஓர் தாய் ஆகும்போது சைவ சமயத்தை தக்க முறையில் அறிந்தவர்களாக வளர்க்க முடியும். பெண்கள் கூச்சசத்தையும் அச்சத்தையும் விட்டொழித்து சிவத்தொண்டு காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும்போது, அதனைப் பார்க்கின்ற குழந்தைகள் தாமாகவே தொண்டினை தமது வாழ்க்கையின் அடிப்படையாகக் கொள்வர். இதனால் பல்வேறு சமுதாயப் பிரச்னைகளும் எழாது போகும்.

8. இத்தோடு நம்மிடையே இடைக்காலத்தில் தோன்றி சமுதாயத்தையே சீர்குலைத்து வரும் சாதி சழக்காடுகளையும் இதனைப்போன்ற பிறவற்றையும் போரிட்டுத் தூக்கி வீச வேண்டும். சேக்கிழார் சாதியைக் கண்டு நாயன்மார்களை அடையாளங் காணவில்லை என்று ஒப்புக்காக மாத்திரம்

கூறிக்கொண்டு திரியாது வாழ்க்கையிலும் அதற்கேற்ப வாழ்ந்து காட்ட வேண்டும்.

(கொழும்புவில் செப்டம்பர் திங்கள், 1995 ஆண்டு உ.சை.பே. மாநாட்டில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை)

Abstract : Saivism and The Social Problems of the Saivites

In this article, Mrs. Subashini Loganathan, explores the social problem encountered by the Tamil Saivites now dispersed all over the world. She maintains that opportunities are not lacking in many countries but the Saivites are not enterprising enough to make use of these opportunities and progress in their life. She identifies three main lacks : interest in education, financial resources and self understanding. The Saivites lacking these have degenerated now suffering from a variety of problems all characteristic of an uncultured, degenerate group of people. Drug addiction, wanton destruction, lacking moral principles, selfishness, cruelty, meanness and so forth are enumerated.

The time has come for W.S.C. to sit up and effect actions that immediately would be uplifted then. The W.S.C. by establishing branches all over the world must initiate activities where interest in learning is reinstituted. The youth must be drawn towards healthy cultural activities and the temples should cease to be simply a center for worship and become educational as well. The social cohesion and consciousness must be established by making active contacts with the public. When we are alert to problems people face and do something to alleviate then, the people can be drawn closer to the temple.

The philosophy of family life must reworked so that the females are not supressed. Women are at the moment reluctant and unwilling to enter the field of religious reflections. They must liberate themselves and learn more of Saivism. It must be remembered that Saivism is the only religion in the world that sees God as ammaiappar, the feminine and masculine in equal measures. Once the women are well educated, the children will be brought up better and the whole society will be lifted up.

பகுதி 2

யாருக்கு வேண்டும் சைவசமயம்

இன்றைய நிலையும், இனிச் செயல்பட வேண்டிய வழி முறைகளும்

சைவ மக்களிடையே சமய விழிப்புணர்வு எவ்வகையில் இருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

1. மக்கள் கோவிலுக்குச் செல்கின்றனர்.

2. சில வேளைகளில் தேவாரங்களும் இறைபாடல்களும் பாடுகின்றனர்.

3. திருவிழாக்களின் போது குடும்பத்தோடு சென்று வேடிக்கை பார்க்கின்றனர்.

4. நவக்கிரக, சிறு தெய்வ வழிபாடுகளைச் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

5. ஜோசியம், சடங்குகள் ஆகியவற்றிற்கு பெரிய அளவில் மதிப்பும் மரியாதையும் தருகின்றனர்.

6. தெய்வங்களை விட குருமார்களை வழிபாடு செய்வதை அதிகமாக விரும்புகின்றனர்.

7. சைவ உணவை மட்டும் சாப்பிட்டால் இறைவனை உண்மையில் உணர்ந்தவர்கள் ஆகிவிடுவோம் என்ற மாயையில் வாழ்கின்றனர்.

8. தனக்குப் புரியாத சமஸ்கிருத மொழியில் இறை வழிபாட்டையும் பாடல்களைப் பாடியும் நிறைவு கொள்கின்றனர்.

நான் மேற்குறிப்பிட்டவைதான் நம் சைவ மக்களிடையே சமயம் என்று போற்றப்பட்டு வருகின்றது. பாமரர்கள் மட்டுமின்றி கல்வி கற்ற பெரியோர்களும் இப்படித்தான் சைவ சமயத்தை வளர்த்து வருகின்றனர். இவர்கள் இப்படி இருக்கையில் சைவ சித்தாந்த நூல்களைக் கற்ற அறிஞர்களில் பலர் தங்கள் வாழ்க்கையில் தாம் கற்றவற்றைக் கடைபிடிப்பதே இல்லை. உதாரணமாக சாதிக் கொள்கையைக் கூறலாம்.

இதைக் கவனிக்கும்பொழுது நமக்கு பெரிய அதிர்ச்சிதான் ஏற்படுகின்றது. நம் சைவ மக்கள் உண்மை நெறியான சைவ

சித்தாந்தத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் படிப்படியாக அதனை மறந்துவிட்டதால்தான் இப்போது பற்பல சீர்கேடுகள் சமுதாயத்தில் பல்வேறு நிலையிலுள்ள நம் மக்களிடையே பரவி இருக்கின்றது. இதைப் பார்க்கும்போது தான், யாருக்கு வேண்டும் சைவ சமயக் கல்வி எனும் கேள்வி நம் மனதில் தோன்றுகிறது.

சமயக் கல்வி நமக்கு வயது கடந்த பின் தேவைப்படுகின்ற ஒன்றன்று. சிறு குழந்தை வளர்கின்ற போதே அதற்கு உணவோடு சேர்ந்து சமயக்கல்வியும் ஊட்டப்பட வேண்டும். நல்ல தெளிவான அடிப்படை சைவ சமயக் கல்வியைப் பெற்ற இளைஞனுக்கு மற்றவர்கள் ஆலோசனை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது; பாவம் எது புண்ணியம் எது என்று மற்றவர்கள் எடுத்துக்கூற வேண்டிய அவசியம் ஏற்படாது;வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று பிறர் புத்திமதி கூற வேண்டிய அவசியம் தோன்றாது. அண்டமெல்லாம் நிறைந்துள்ள இறைவன், என் உள்ளத்திலும் அமர்ந்து என்னை ஆட்டுவிக்கின்றான் என்று புரிந்து கொண்ட பிறகு நமக்கு வழிகாட்ட இறைவனே துணையாக அமைந்து விடுகின்றான். இறைவன் காட்டுகின்ற வழியில் செல்லும்போது இருள் படிப்படியே குறைந்து இல்லாமல் போகின்றது.

சைவ சமயத்தை நாம் புதிய கண்கொண்டு நோக்க வேண்டும். பிற சமயத்தவர் தத்தம் சமயத்தைப் பரப்புவதற்குக் காட்டும் ஆர்வத்தைக் கண்டு நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். மாற்றத்தைக் கொண்டு வர எவ்வகையில் நாம் செயல்பட வேண்டும் என்பதைச் சிந்திப்போம்.

1. சைவ சமயம் என்பது சைவ உணவைச் சாப்பிடுவது அன்று; மாறாக ஆழமான உண்மைகளைக் கொண்ட தத்துவம் என உணர வேண்டும்.

2. சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளை சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் தெரிந்திருக்க வேண்டும்

3. சைவ சமயம் என்பது வாழ்க்கையில் பலவாறு வாழ்ந்து அனுபவித்த பிறகு இறுதிக் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய கொள்கை என்ற தவறான கருத்துக்கள் மாற்றப்பட்டு எல்லா வயதினரும் சமயத்தை ஆர்வத்தோடு கற்கும் மனப்பக்குவம் வளர்க்கப்பட வேண்டும்.

4. தேவாரப் பாடல்களையும் தெய்வீகப் பாடல்களையும் இசையின் அழகிற்காக மட்டும் ஓதாமல் அதன் கருத்துக்களையும் அறிந்தும் புரிந்தும் ஓத வேண்டும்.

5. இறை உருவத்தின் தத்துவங்களைப் பிழையின்றி உணர வேண்டும்.

6. சைவ சித்தாந்த நூல்களைப் படிப்பதோடு, அவற்றைப் பற்றி விவாதிக்க கலந்துரையாடல்களும், மாநாடுகளும் கூட்ட வேண்டும்.

7. சைவ மக்களிடையே பரவியுள்ள சாதிக் கொள்கையை வேரோடு அழித்து மக்களிடையே அன்பையும் பரிவையும் காட்டும் தன்மையை வளர்க்க வேண்டும்.

வைச சித்தாந்தமும் இறைவழிபாடும் முதியோர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டவையல்ல. உலகத்தில் பிறந்துள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் வழங்கப்பட்ட பொதுச் சொத்து. இறைவனைப் போன்று ஞானத்தைப் பாகுபாடின்றி எல்லோருக்கும் வாரி வழங்கிக் கொள்ளும் பக்குவத்தை நாம்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு வயது ஒரு வரம்பாக அமையவே முடியாது.

இதைப் புரிந்து செயல்பட்டால், நாம் இப்போது இருக்கும் அவல நிலையிலிருந்து உயர முடியும்; சைவ சமயமும் சைவ மக்களும் உலகை ஆள முடியும் என்பது திண்ணம்.

Who needs Saivism?

In this thought provoking article Mrs. Subashini addresses the question of why the Saivites throughout the world are suffering a cultural decay of a serious kind. Despite various attempts by social and political leaders to arrest the decay nothing tangible has resulted. The main reason is that they attribute the decay to external sociophysical circumstances and have failed to note the inner psychology underlying the moral decay particularly the youths. When the soul is corrupted and ignorant there cannot be any noble behaviour.

In order to improve the moral fibre of Saivites the essentials of Saiva Siddhanta must be taught even from early childhood.

At the moment there is a presumption that Saiva Siddhanta reflections is only for the aged who are awaiting death and not meant for the youths about to enter active life. This deep misunderstanding about the relevance of Saiva Siddhanta must be immediately wiped out and youths must be told in no uncertain terms that Saiva Siddhanta is for living and living better. The falsity that Saivism means vegetarian food and that purely by practicing vegetarianism one can understand the deep truths of Saivism and godhead must also be eradicated.

Another serious shortcoming is that the Saiva scholars do not practice what they preach, do not lead a life consistent with the truths of Saivism. One glaring example is that while Saivism does not condone caste distinctions even eminent Saivites show strong caste sentiments. There are also many superstitions, hypocritic behaviours and lowly religious practices which mar the sanctity and purity of Saivism. Singing and chanting hymns in Tamil and Sanskrit without ever attending to their meanings has reduced religious activities to a meaningless ritual.

We must do something immediately to reinstate the life of enquiry, of thinking, or reflection in order to install the truths of Saiva Siddhanta in hearts of everybody, young and old, women and men.

சித்தாந்த சைவம் உணர்த்தும் சைவ மறுமலர்ச்சிக்கான பகுத்தறிவுக் கொள்கைகள்

சைவம் கண்ட பகுத்தறிவு

'பகுத்தறிவு' என்னும் சொல் இக்காலத்தில் தவறான ஒரு பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பகுத்தறிவாளர் என்பவர் கடவுள் நம்பிக்கை அற்றவர் என்ற கொள்கையே இன்று பரப்பப்பட்டு வருகிறது. கடவுள் நம்பிக்கைக்கும் பகுத்தறிவுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதைப் பலர் உணர்வதில்லை. நல்லவை எவை, தீயவை எவை? அறம் எது, அறத்திற்கு மாறுபட்டமறம் (பாவம்) எது? எது தேவையானது, எது தேவையற்றது? என்பதை ஆய்ந்தறியும் அறிவே பகுத்தறிவு. கடவுள் உணர்வு என்பது தேவையானதும், அவசியமானதும் ஆகும். ஆனால் மூடநம்பிக்கைகள் தேவையற்றவை; ஒதுக்கப்பட வேண்டியவை. தேவையற்ற மூடநம்பிக்கைகளைச் சைவசமய ஆசிரியர்கள் என்றுமே ஒதுக்கி வைத்து, தூய பக்தி நெறியையே பரப்பினர் என்பதற்குப் பல சான்றுகளை நாம் காட்டமுடியும்.

திருஞானசம்பந்தர்:

திருஞானசம்பந்தரும், அப்பர் பெருமானும் திருமறைக்காட்டில் இருக்கும்பொழுது, பாண்டிய நாட்டிற்கு வரும்படி பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரிடமிருந்து, திருஞானசம்பந்தருக்கு அழைப்பு வருகிறது. சமண இருள் அகற்றித் தூய சைவ ஒளி பரப்ப நாட்டம் கொண்ட ஆளுடையபிள்ளையார் பாண்டியநாடு செல்ல உடன் ஆயத்தமானார். அதுசமயம் அப்பரடிகள் ஞானசம்பந்தரிடம் சமணர்களின் கொடுமைகளை எடுத்துக்கூறியதுடன், 'நாளும், கோள்களின் நிலையும் சரியல்ல; தற்போது போக வேண்டாம்' என எச்சரிக்கிறார். அப்பர்பெருமானுக்குப் பதில் கூறும் வகையில் ஞானசம்பந்தர் பாடிய அருந்தமிழ்ப்பாக்களே 'கோளறு பதிகம்'. எல்லாம்வல்ல சிவபெருமானிடம் தூய அன்பும், பக்தியும் உடைய எவரும் நாளுக்கும், கோளுக்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லை என்பதை ஆணித்தரமாகவும் தெளிவாகவும் சம்பந்தர் கூறியது போல் யாரால் கூறமுடியும்?

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே"

இறைவன் நம் உள்ளத்தில் கொலுவீற்றிருக்கும்போது எந்தக் கோளும் நமக்குத் தீங்கிழைக்காது, அவை நமக்கு நன்மையே செய்ய வல்லன என்பதைக் கோளறு திருப்பதிகத்தின் முதற்பாடல் தெளிவுபடுத்துகிறது.

"என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய் நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே"

இத்திருப்பாட்டில் வழிநடைக்கு ஆகாத நாட்கள் எனக் கருதப்படும் நாட்கள் அடியார்கட்கு நல்லனவாகவே முடியும் என்பது அழகாகக் கூறப்பட்டுள்ளது.

ஒன்பது = ஒன்பதாவதுநாள் (ஆயில்யம்) ; ஒன்பதொடு ஒன்று = பத்தாவது நாள் (மகம்); ஒன்பதொடு ஏழு = பதினாறாவது நாள் (விசாகம்); பதினெட்டு = பதினெட்டவாது நாள் (கேட்டை); ஆறும் = ஆறாவது நாள் (திருவாதிரை) உடனாய நாட்கள் = இவைகளோடு சேர்த்து எண்ணப்படும் மேலும் ஏழு நாட்கள் (பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம் பூரட்டாதி) ஆகிய பன்னிரண்டு நாட்களும் சிவனை வழிபடும் அடியவர்களுக்கு நல்ல நாட்களே. நாட்களைக் குறிப்பிடச் சம்பந்தர் பெருமான் கையாளும்சொற்களின் நயம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது; நம்மைச் சிந்திக்கவைப்பது.

இறைவனிடம் தூய அன்பு செலுத்தினால் போதும் கோள்களுக்காகப் பயப்படவேண்டியதில்லை. 'கிரஹசாந்தி' செய்ய வேண்டியதில்லை. இவ்வளவு எடுத்துக்கூறியும் நமக்கு நம்பிக்கைவருமோ வராதோ என்று எண்ணிப் பதிகத்தின் திருக்கடைக்காப்பானகடைசிப் பாடலில் தான் பாடிய பாடல்களை நாளும் ஓதும் அடியார்கள் மேலான நிலையை எய்துவர் என்று ஆணையிட்டுச் சொல்கிறார் ஞானசம்பந்தர்.

"தேனமர் பொழில் கொள். ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

அருணகிரிநாதர் :

நாளும், வினையும், கோளும் நம்மை என்ன செய்துவிடமுடியும்? முருகன் அருள் முன்னிற்கும்போது நாளுக்கும், கோளுக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் என்ன? இது அருணகிரிநாதர் எழுப்பும் வினா. இவர் இன்னும் ஒருபடி மேலே சென்று பிரமன் நம் தலையில் எழுதிய எழுத்தையே முருகன் அருள்கொண்டு மாற்றிவிடலாம் எனப்பாடுகிறார்.

"நாள் என் செயும் வினைதான் என்செயும் எனைநாடிவந்த
கோள் என்செயும் கொடுங்கூற்றென்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே"

"சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம், மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும்,சூரனும், வெற்பும் அவன்
கால்பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே"

– கந்தர் அலங்காரம்

ஊழ்வினையைக்கூட முயற்சியால் வென்றுவிடலாம் என்பார் தெய்வத்தமிழ்ப்புலவர் திருவள்ளுவர்.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்."

உமாபதிசிவம் :

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட வாக்கென்றால் தெய்வத்தன்மை பெற்றது என்றும், இன்று எழுதப்பட்டது என்றால் பெருமைக்குரியது அன்று என்றும் எண்ணும் ஒரு நிலை நம்மிடையே இருப்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியது பயன் அற்றதாகவும், இன்று தோன்றியது மாணிக்கமாகவும் இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. எதையும் தீர ஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். தெளிந்த சிந்தனையுடையவர் உயர்ந்த இரத்தினக்கல்லினை மூடியிருக்கும் களங்கத்தைக் கண்டு அது குற்றமுடையது என நீங்கிவிடமாட்டார். அக்களங்கத்தை அகற்றி அதன் உண்மைத் தன்மையைக் கண்டறியவே முயல்வர்.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று
தோன்றிய நூல்எனும் எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினார் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தென உண்மை நயந்திடுவர்; நடுவாம்
தன்மையினார் பழமை அழகு ஆராய்ந்து தரிப்பர்;
தவறுநலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர்; ஏதிலரு்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்றிலரே"

– சிவப்பிரகாசம்.

நல்லது எங்கிருப்பினும், என்று தோன்றியிருப்பினும் அதை ஏற்றுக் கொள்வதே அறிவுடையவர் இயல்பு என்பதை உமாபதி சிவாசாரியர் தமது நூலான சிவப்பிரகாசத்தில் குறிப்பிட்டிருப்பதை எண்ணி நாம் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

மேற் குறிப்பிட்ட ஒரு சில எடுத்துக்காட்டுகள் 'சித்தாந்த சைவம்' நமக்கு உணர்த்தும் பகுத்தறிவுக்கொள்கைகள். இவற்றின் மூலம் பகுத்தறிவோடு கூடிய பக்தி நெறியே சைவநெறி என்பதும், அதுவே தமிழர் நெறியுமாகும் என்பதும் நன்குவிளங்கும்.

நாளும் கோளும் நம்மை ஒன்றும் செய்யா

தமிழ்மணி அரங்க முருகையன், இலண்டன்

காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு, தமிழர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையில் அவர்கள் காலங்காலமாய்க் கடைபிடித்தொழுகி வரும் சமயநெறி சைவமே என்றும் மறைமலையடிகளாரும், வேற்று (கிறித்தவ) சமயத்தினரான தேவநேயப் பாவாணரும், பிறரும் நன்காய்ந்து நிறுவியிருக் கின்றார்கள். இருப்பினும் அவ்வப்போது சாக்கியர் சமயமான பௌத்தமும் அருகதேவனை வழிபடும் சமணமும் எவ்வாறோ தமிழ்நாட்டிற்குள் புகுந்தது மட்டுமல்லாமல் அரசர்கள் ஏற்றொழுகும் சமயங்கள் ஆகிவிட்டன. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழியே அல்லவா? மக்களிலும் பலர் சமணநெறி போன்றவற்றைக் கடைப்பிடித்தொழுகிவந்தனர். இந்த கால கட்டத்தில்.

திருநாவுக்கரசரும் தருமசேனர் என்ற பெயர் பூண்டு அத்தகைய சமண நெறிகளைக் கடைபிடித்தவர்தாம். தொல்லை தரும் சூலை நோயினால் அவதியுற்று அவர்தம் தமக்கையாரான திலகவதியாரின் அறிவுரையை ஏற்றுத் திருநீறு பூசிச் சிவனை வழிபட்டு கொடுஞ்சூலை நோய் நீங்கப் பெற்றுச் சைவராயினர். சமண சமயத்தைச் சார்ந்தொழுகிய பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் நாவுக்கரசர் சைவம் சார்ந்தது அறிந்து வெகுண்டு அவருக்கு நஞ்சூட்டியும், கடலில் தள்ளியும், சுண்ணாம்புக் காளவாயில் போட்டு அடைத்தும் அவரைக் கொல்ல முயன்று தோற்றான். நாவரசரின் அருமை பெருமைகளை நன்கறிந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுப் பின் அவனும் சைவனாயினன். இதெல்லாம் அனைவரும் அறிந்த வரலாறு.

சமணர் மரைக்காட்டில் (மரைக்காடு அச்சுப்பிழை அல்ல. மரை = ஒரு வகை மான் மரை வாழும் காடு) மரை என்ற சொல்லை 'மறை' என்று தவறாகக் கொண்டு பின் வேதம் என்ற வட மொழிச் சொல்லாக்கி, காடு என்பதை ஆரண்யமாக்கி, வேதாரண்யம் என்று வடமொழியினர் வலிந்து பெயர் மாற்றினர். இவ்வாறே, மயிலாடுதுறை மயூரம் ஆகிப் பின் மாயவரம் ஆயிற்று. (மயில் –

தமிழ்ச்சொல் அதனடியாகப் பிறந்த வடமொழிச் சொல்லே மயூரம்), முதுகுன்றம், விருத்தாசலம் ஆக்கப்பட்டது வடமொழி மந்திரங்களைச் சொல்லி அடைத்த கோயில் கதவை அப்பர் தமிழில் பாடித் திறக்க செய்தார் (இலண்டனிலும் கூடத் தமிழ்க் கடவுளான முருகன் கோயிலுக்குச் சென்று "வடமொழியில் மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்யுங்கள்" என்று வேண்டுவோரும் "வட மொழியில் மந்திரம் சொல்லி பூசை செய்தால்தான் மனநிறைவாய் இருக்கிறது" என்று வெளிப்படையாகவே அதைப் பெருமையாகவே நினைத்துக் கூறவோரும் கவனிக்க) அப்போது திருஞான சம்பந்தரும் அவருடனிருந்தார். அப்போது மதுரைக் கூன் பாண்டியனின் பட்டத்தரசி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறை நாயனாரை அனுப்பி, திருஞானசம்பந்தர் பாண்டியநாட்டுக்கு வரவேண்டு மென்று வேண்டிக்கொண்டார். ஞானசம்பந்தர் புறப்பட முனைந்த போது, நாவுக்கரசர் "நாளும் கோளும் சரியில்லை. இன்று போக வேண்டாம்" என்று கூறியதாகவும் நாளும் கோளும் சிவனடியார்க்கு நல்லவையே! என்றும் நல்லவையே; எப்போதும் நல்லவையே! அவை அஞ்சுதற்குரியனவும் அல்ல"

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்தவ தனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே"

என்று பாடியதாகவும் சொல்கிறார்கள்.

சிவனாராலேயே "என அப்பன் என்னைப் பாடினான்" என்று பெருமையாகச் சொல்லும் பேறு பெற்ற உண்மைச் சிவனடியாரான நாவுக்கரசர், மகேந்திர பல்லவன் அவரைக் கொல்ல முனைந்த போதெல்லாம் அஞ்சாது சிவனின் பெயரைச் சொல்லி அமைதியாக எதிர்த்து நின்று வாகை சூடியவர். அவரா "நாளும் கோளும் நல்லனவாகத் தெரியவில்லை" என்று சொல்லியிருப்பார்? இல்லவே இல்லை. இது இடைச் செருகல். யாரோ கட்டிவிட்ட

பொய்க்கதை. இறையருள் பெற்றோர் எதற்கும் அஞ்சார், நாளும் கோளும் அவர்க்கு எந்த வகையிலும் தீங்கிழைக்க இயலாது.

எல்லாத் துறைகளிலும் முனைப்பழிந்து அயலவரின் ஆட்சியில் அலைக்கழிக்கப்பெற்று இன்னலுற்ற நாம், இறைவழிபாட்டிலும் தேவையற்ற சடங்குகளைப் புகுத்தி சடங்குக்கு முதன்மை தந்து வழிபாட்டின் சிறப்பை மாசு படுத்திவிட்டோம்.

நாளும் கோளும் பார்த்தல் பற்றிக் கற்றறிந்துணர்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் கருத்தை இப்போது பார்ப்போம்.

"கோள் என்பது பூத காரியங்களுள் ஒன்று. கோள்கள் மாறுபடின் தட்ப வெப்பம் மாறலாம். தட்ப வெப்பம் மாறுபடின் மனிதன் வாழ்வில் மாறுபாடுகள் தோன்றலாம். ஆனாலும் அவை மனிதனை அழித்துவிடா. மனிதன் காலதத்துவத்தில் காலூன்றி நின்று கடமைகளைச் செய்து, காலம் அவனிடத்தில் கிழட்டுத் தனத்தைச் சேர்க்காமல் காலத்தை வெற்றி கொள்ள வேண்டும். இதுவே வாழ்க்கை முறை".

ஆனால் எதையும் எளிதில் வழிபடும் மனப்போக்குடைய நம்முடைய சமுதாயத்தினர் நாளையும் கோளையும் கூட வழிபாட்டுப் பொருளாக்கிவிட்டனர். அதுவும் அன்பில் மலர்ந்த வழிபாடா? இல்லை. அச்சத்தில் தோன்றிய வழிபாடு! வழிபாட்டிற்கு அடிப்படை அச்சமாக இருப்பது முறையன்று. இன்று பலர் கடவுளைக் கூட வழிபடுவதில்லை. ஒன்பது கோள்களையே (நவக்கிரகங்களையே) வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். என்ன பேதமே! எப்படியிருந்தாலும் சைத்தான் சைத்தான்தானே! நாம் என்னதான் நன்மை செய்தாலும் சைத்தான் மாறாகத் துன்பத்தைத்தான் தரும். வழிபடுதற்குரியது கடவுள் ஒன்றேயாகும்.

திருஞான சம்பந்தர், சமணரோடு பொருத மதுரைக்கு பயணமாகிறார். பாலறாவாயர் மீது பரிவு கொண்டோர் "நாளும் கோளும் நன்றாக இல்லை" என்று சொல்கின்றனர். காழிப் பிள்ளையாரோ நாளும் நமக்கு என்றும் நன்றே என்று ஐக்கியத்திற்கிடமின்றிக் கோள்வழிப்பட்ட அச்சத்தை மறுக்கின்றார்.

"எனது தந்தை ஈசன்; அருளே உடலாகவுடைய அம்மையைப் பங்கில் கொண்டவன். அந்த அருள் முன்னே இந்தக் கோள்கள் என்ன செய்ய முடியும்?

இறைவனைத் தொழுதல் ஓர் அறிவியல் முயற்சி. அறியாமையில் அல்லலுறும் உயிர், ஞானத்திரளோனாக நிற்கும் அவனைத் தொழுதல் மூலம் அறியாமை நீங்கப் பெறுகிறது. துன்பத் தொடக்கில் தொல்லையுறும் உயிர், துன்பத் தொடக்கிலிருந்து விடுதலை பெற்று, இன்பத்தில் திளைத்து மகிழ்கிறது.

இறைவனைத் தொழுதல் ஒரு சடங்கல்ல. இறைவனைத் தொழுதல் இறைவனை நோக்கிச் செய்கின்ற கைம்மாறும் அல்ல. கழனியை உழுது பண்படுத்துதல் கழனியின் நன்மைக்கா? நூல்களைப் படித்தல் நூலகத்தின் நன்மைக்கா? வள்ளுவரை வாயார வாழ்த்துதல் வள்ளுவரின் நன்மைக்கா? இல்லை. அதுபோல இறைவனைத் தொழுதல் இறைவனுக்காக அல்ல. அவன் பெறகூடியது ஒன்றுமில்லை. இறைவனைத் தொழுதல் இறைவனுக்காக அல்ல. அவன் பெறக்கூடியது ஒன்றுமில்லை. இறைவனைத் தொழுதல் உயிரின் வளர்ச்சிக்கேயாம். இறைவனைத் தொழுதல் என்றால், உடனடியாகச் சடங்குகளே நினைவுக்கு வரும். சடங்குகள் சமயமாகா, இறைவனைத் தொழுதல் ஆகா. ஆனால் அவையின்றியும் சமய வாழ்வு வாராது. கடவுளைத் தொழுதலும் ஆகாது. சடங்குகள் சமய வாழ்க்கைப் பயிற்சிக்குத் தொடக்க நிலையில் துணை செய்வன. வழிபாட்டுணர்வில் நிலைத்து நிற்கக் காப்பாகத் துணை செய்வன. இறைவனைச் சடங்குகளால் தொழும் அளவிலேயே தொழுகை முற்றுப் பெறாது. சடங்குகள் தொடக்க நிலையின, இறைவனைத் தொழுதலாகிய பயன் அல்லது சமய வாழ்க்கையின் முழு நிறைவு வாழ்க்கை அகநிறை அன்பால், அருளார்ந்த சீலத்தால், நீதியால் என்று முழுமை பெறுகின்றதோ அன்றே இறைவனைத் தொழுதல் முழுமை நலம் எய்துகின்றது.

சிலர் இறைவனைச் சடங்குகளால் தொழுகின்றனர். இல்லை நாடகத்தால் நடிக்கின்றனர். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் அழுக்காறு அடங்கவில்லை. அழுக்காறு தோன்றுவதற்குரிய கூறுகளும் கெடவில்லை. அவாக்களால் அலைப்புறுகின்றனர். வெகுளியால் வெந்து அழிகின்றனர். கடுமொழி பேசுகின்றனர். ஆங்காரத்தில் விஞ்சுகின்றனர். பகைத் தீயால் பலருக்குத் துன்பம் செய்கின்றனர். தற்சார்பே தழைத்து நிற்கிறது. அநியாயமே ஆட்சி செய்கிறது. அநீதி அணிகலனாக விளங்குகிறது. இத்தகையோர் மனிதரில் 'பொக்கு' போன்றவர். 'பொக்கு' என்றால் உள்ளீடில்லாத பதர்.

"பொக்க மிக்கவர் பூவும்
நீரும் கண்டு நமக்கு நிற்பன்"

என்பது அப்பர் வாக்கு. இத்தைகையோர் சமய வேடங்கள் பூணலாம். ஆரவாரமான சமயச் சடங்குகளைச் செய்யலாம். ஆயினும் என்ன? அது இறைவனைத் தொழுதலாகாது.

திருஞானசம்பந்தர் இறைவனைத் தொழும் நெறிகாட்டுகிறார். இறைவனைத் தொழுதல் என்பது இறைவனின் குணங்களை மேற்கொண்டு தொழுதல் என்பதே பொருள். பொறிகளால் செய்யும் நூறாயிரம் சடங்கைவிடப் புலன்களில் நின்றொழுகும் பண்பு ஒன்றேயாயினும் அதற்குரிய தகுதி உண்டு. பலநூறு பண்புகள் புலனில் நின்றொழுகினும் உயிர்க்கு அவற்றைப் பண்பாகச் சேர்த்தல் அதனினும் விழுமியது. ஆதலால் வாழும் வாழ்க்கை முறையில் இறைவனைத் தொழுதல் சிறந்த தொழுகை முறை.

இறைவனுக்குகந்த நம் இனிய தமிழ் மொழியில் மந்திரங்களைச் சொல்லிப் பூசனை செய்யாமல், வடமொழியில் மந்திரங்களைச் சொல்லச் செய்வதும், சந்திரன், சனி போன்ற கோள்களை இறைவனுக்கும் மேலாக மதிப்புக் கொடுத்து வழிபடுவதும் நாம் செயலாற்றக் கூடிய பகல் நேரத்தில் சில மணி நேரத்தை இராகு காலம் என்றும், எமகண்டம் என்றும் நாமாகவே பகுத்துக் கொண்டு தொல்லையுறுவதும் தேவைதானா என்று எண்ணிப்பாருங்கள்.

1969 ஆம் ஆண்டில் அமெரிக்கர் அனுப்பிய விண்கலத்தின் வழிச் சந்திரன் சென்று தரையிறங்கி ஆங்கே தன் பாதங்களைப் பதித்து வரலாறு படைத்தான், நீல் ஆம்ஸ்டிராங்கு என்ற வான்வெளி வீரன், அடுத்த சனி என்னும் கோளத்தில் இறங்குவதற்கு முன்னோடித்தனமாகத் துணைக்கோளமொன்றை அனுப்பி வைத்துள்ளனர். ஆகவே அவற்றிடம் "எங்களுக்கு அருள் பாலி" என்று வேண்டிக் கொள்வதில் பயனில்லை அல்லவா? நாம் பிறந்த நேரப்படி சில கோள்கள் நம் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தவும் செய்யலாம். அதற்காக நாம் கோள்களையே முதன்மையாகக் கொண்டு வழிபட்டுக் கொண்டிருக்காமல், இறைவனை வழிபட்டு வரின் தொல்லைகள் எல்லாம் விலகும்.

"பழையன கழிதலும் பதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கிணங்க, காலத்துக்கேற்ப சில மாறுதல்களை நம் வழிபாட்டு முறையிலும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். விஞ்ஞானிகளாகவும் பொறியாளர்களாகவும், பேராசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும் எண்ணற்றோரைக் கொண்ட நம் தமிழ்ச் சமுதாயத்தில், "அமெரிக்கர் போய் இறங்கிய சந்திரனை நாம் ஏன் கோயிலிலே வைத்து வழிபடுகிறோம்?" என்று நம் பிள்ளைகள், புதிய இளந்தலைமுறையினர் கேட்கும் கேள்விகளுக்கு நாம் தக்க மறுமொழி சொல்லித்தான் ஆக வேண்டும்.

Abstract: In this article Aranka Murugaiyan of London severely critisises the displacement of the worship of God with the worship of planetary bodies the invasion of baseless astrology into the genuine religious life of Tamils. He argues forcefully that this practice was not condoned by Saint Thirujnana Sambandar and other saints. There is no solace from the worship of these stone objects as they are powerless to remove the ignorance of man, the root cause of all evil, which only the grace of God can help to rid off. He quotes a similar opinion of Kunrak Kuti Atikalar who has also advocated the elimination of this from Saivite temples. Genuine worship should be directed only to God and that too for the purpose of getting rid of the evil inherent to man.

PART - III

சைவ இளைஞர் சமயக் கல்வி, சைவ ஆலயப் பராமரிப்பு, சைவத்திருமடங்களின் பணி, சைவ தேவார, திருவாசக மற்றும் இலக்கிய தத்துவ நூல்களின் மொழிபெயர்ப்பு என்பன வற்றின் முக்கியத்துவத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

சைவத்தின் வளர்ச்சிக்கு

டாக்டர் நா. மகாலிங்கம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை நமக்கு அளிக்க வல்ல ஒப்பற்ற வழி முறைகளே சமயங்கள். சமயக் கோட்பாடுகளுக்கும், அறிவியல் உண்மைகளுக்கும் பெரிய மாறுபாடு இருப்பது போலச் சிலர் எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறார்கள். "அறிவியல் என்பது பயிற்சி பெற்று ஒழுங்கு படுத்தப்பட்ட பொது அறிவுக்கலையே'" என்கிறார் தாமஸ் ஹக்ஸ்லி. "அரை குறையான அறிவியலே சமயத்தைக் குறை கூறும். எங்கு அறிவியற்கலை தடுமாறுகிறதோ அங்கு இருந்துதான் சமயம் குருட்டுத் தன்மை உடையது. சமயம் இல்லாத அறிவியல் மூடத் தன்மை வாய்ந்தது" என்கிறார் தலைசிறந்த அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டைன்.

"நாம் சமய உணர்வை சமயச்சான்றோர்களின் அரிய அனுபவ உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டோம். இன்றைய உலகில் அணு அரக்கன் ஓங்கி வளர்ந்து வருகிறான். அமைதியை விடப் போரையும், வாழ்வதை விடக் கொல்வதையும் பற்றியே தெரிந்து கொண்டு வருகிறோம்". என்று அறிஞர் பெருமக்கள் மிகுந்த வேதனையுடன் பேசி வருகிறார்கள். மனித வாழ்வுக்குச் சமய உணர்வு எவ்வளவு அவசியம் என்பதை இது நமக்கு அறிவுறுத்துகிறது.

சைவ சமயம் ஒரு காலத்தில் உலகம் எங்கும் பரவி இருந்தது. உலகில் நாகரிகம் பெற்ற மக்கள் வாழ்ந்த பல பகுதிகளில் சிவலிங்க வழிபாடு இருந்திருக்கிறது. எகிப்து, சிரியா, பாரசீகம், ஆசியா, கிரீஸ், இத்தாலி போன்ற நாடுகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிவலிங்க வழிபாடு இருந்து வந்திருக்கின்றது. இன்றும் ஆப்பிரிக்கா

கண்டத்தின் பல பகுதிகளில் சிவலிங்க வழிபாடு இருக்கிறது. ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் முதன் முதலில் அமெரிக்கா நாட்டைக் கண்டுபிடித்து அங்கு குடியேறியபோது அங்கிருந்த மக்கள் சிவலிங்க வழிபாட்டைச் செய்து வந்ததைப் பார்த்தார்கள். அதை மிகுந்த பக்தி சிரத்தையுடன் அவர்கள் செய்து வந்தார்கள். சிவலிங்க வழிபாடு மனிதனை விலங்கு நிலையில் இருந்து மனித நிலைக்கும், மாமனித நிலைக்கும் உயர்த்தும் உன்னதமான வழிபாடு என்று அவர்கள் கூறிப் பெருமைப்பட்டார்கள். இவ்வாறு வரலாற்று ஆராய்ச்சி நிபுணர் களான சர் ஜான் மார்ஷல், எச்.ம். வெஸ்ட்ராப், இ.பி. டைலர், அலன்கிராண்டு முதலியவர்கள் சொல்லி வியக்கிறார்கள்.

பாரத நாட்டின் சைவ சமயத்தில் பரம் பொருளான சிவபெருமான் தம்முடைய ரிஷப வாகனத்தில் ஏறி, டமாரத்தை அடித்துக் கொண்டு உலகம் எங்கும் பவனி வந்திருக்கிறார். ஜாவா, சுமத்திரா, போர்னியோ, செலிபிஸ், ஆஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் அமெரிக்காவின் பல பகுதிகளிலும் சிவலிங்க வழிபாடு நடைபெற்றது வந்து இருக்கின்றது.

இது போலவே திபெத், ஜப்பான், சைபீரியா போன்ற நாடுகளிலுள்ள மக்கள் சிவலிங்க வழிபாடு செய்திருக்கிறார்கள் என்பதைப் பல அறிஞர்கள் கண்டு சொல்லி இருக்கிறார்கள் என்று சுவாமி'விவேகானந்தர் கூறியுள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'நியூஸ் ரெவ்யூ' என்ற பத்திரிகையில் 1937–ஆம் ஆண்டில் வெளியாகி இருந்த ஒரு வியக்கத்தக்க செய்தியைப் பாருங்கள்.

அமெரிக்காவின் ஏழாவது பெரிய மாகாணமாக விளங்குவது கொலராடோ. இது மலைகள் சூழ்ந்து இயற்கை வளம் கொஞ்சும் மாகாணம். இந்த மாகாணத்தில் மறைந்து போன உலகை மீண்டும் கண்டுபிடித்திருக்கிறோம் என்று அமெரிக்காவின் தொல் பொருள் ஆய்வாளர்களும், வரலாற்று நிபுணர்களும், விஞ்ஞானிகளும் சேர்ந்து ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறார்கள். "இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலப்பகுதியில் ஒடிக் கொண்டு இருந்த ஆற்றில் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக நாகரிகம் பெற்ற மக்கள் வசித்த நகரமும் அதன் எல்லையில் இருந்த மலைப்பகுதியும் துண்டிக்கப்பட்டன.

மலைப்பகுதிகளுக்கும் மக்கள் வசித்த பகுதிகளுக்கும் இடையில் ஒன்பதாயிரம் சதுர அடி நிலப் பகுதிகள் மறைந்து விட்டன. இந்த மறைந்த நிலப் பகுதிக்கு அப்பால் இருக்கும் மலை மீது அரைசதுர மைல் பரப்பளவு உள்ள கலை கொஞ்சும் சிவன் கோயில் ஒன்றைக் கண்டோம். மறைந்து போன ஒரு நாகரிக உலகத்தைக் கண்டு பிடித்திருக்கிறோம்", என்று அந்த சிவ ஆலயத்தின் படத்தையும் அங்கு இருக்கும் சிற்பங்களையும் விக்கிரகங்களையும் அந்தக் கட்டுரையில் வெளியிட்டு இருந்தார்கள். அவை அப்படியே நமது தென்னாட்டுச் சிவன் கோயில்களைப் போலக் காட்சி அளித்தன.

சிந்து வெளியில் அகழ்ந்த புதை பொருளைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள், "ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டில் பரவி இருந்த நாகரிகத்தில் சிவலிங்க வழிபாடும், சிவபெருமான் வாகனமாகிய ரிஷபமும் இருந்தமை தெரிய வந்திருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள்.

உலகத்திலும், இந்தியாவிலும் பழைய சமயமாக விளங்கியது சைவ சமயம் என்பதை இந்தச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழ் நாட்டில் சமய ஆசாரியர்களாலும், சந்தான ஆசாரியர் களாலும் பரப்பி வளர்க்கப்பட்டது சைவ சித்தாந்தம். சமய ஆசாரியர்கள் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர். சமயாசாரியர்கள் நால்வரும் ஏழாம், எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சைவத்தை வளர்த்தவர்கள். சிறப்பாக பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள். சாத்திரப் படிப்பு, குலப்பெருமை ஆகியவற்றை விட அன்பு நெறியே இறைவனின் அருளைப் பெறுவதற்கு வழி. உலகுக்கு ஒரே தெய்வம். அந்தத் தெய்வம் சிவம். அந்தத் தெய்வத்தை வழிபட்டு தங்கள் வினைகளில் இருந்து நீங்கி உரிய காலத்தில் இறை அருளைப் பெறலாம் என்பதே இவர்களுடைய பொதுவான உபதேசம். அன்று முதல் இன்று வரை இவர்கள் காட்டிய நெறியிலேயே சைவம் வளர்ந்து வருகிறது.

சைவ சமயம் பிறரைப் பழிக்காதது. நிலையாமையைப் பற்றிப் பேசாதது. ஊர் ஒன்று தான்; அதற்கு வழிகள் ஆறு இருக்கின்றன. ஆறுவித சமயங்களும் இறைவனை அடைவதற்கு வெவ்வேறு வழிகளே. பசுக்கள் பல நிறங்களில் இருக்கலாம். அவற்றின் பால் வெண்மையாகத்தான் இருக்கும். சமயங்கள் பலவாக இருந்தாலும்,

அவை கூறும் முடிவான பொருள் ஒன்றுதான், என்பன சைவ சாத்திரம் கூறும் சில கருத்துக்கள்.

வேதங்களும், ஆகமங்களும் நால்வர் பாடிய திருமுறைகளும், மெய்கண்டாரின் சைவ சித்தாந்த இலக்கணமும் சைவத்தின் நெறிகளாகும்.

இந்த நாட்டில் சைவ சமயம் மட்டுமே பிற சமயத்தினரைத் தன் கூட்டத்தில் சேர்க்க முயலாத சமயம். காரணம் ஆதி காலத்தில் இந்த நாட்டில் இருந்த ஒரே சமயம் சைவ சமயம்.

சைவ சித்தாந்தத்திற்கு உரிய அடிப்படைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மையையும் உணர்வையும் நிறுவுவதற்குத் துணைபுரிகின்றன என்று மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து கூறி வருகிறார்கள்.

சர் மானியர் வில்லியம்ஸ் என்ற பேரறிஞர் சைவ சித்தாந்தத்தைப் பற்றிக் கூறி இருப்பது எவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

"சைவ சித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றுக் கொள்ளும் இயல்புடையது. எதையும் ஒதுக்காமல், இகழாமல் அணைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையது. உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளும் தகுதியுடன் கூடிய உலகச் சமயமாக விளங்கத்தக்கது. வேறு மதங்களின் வளர்ச்சியைக் கண்டு மயங்காதது. மாறாக அந்த மதங்களைத் தன்னோடு அணைத்துக் கொள்ளும் பெருந் தன்மையுடன் விளங்குவது. ஒவ்வொரு தனி மனிதரின் மன வளர்ச்சிக்கு ஏற்ப அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடியதாகச் சைவ சித்தாந்த நெறி வகுக்கப்பட்டு இருக்கிறது. நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்கு உரிய ஆன்மீக அருவக் கூறுகளும், கவிதை உணர்வும், கற்பனைத் திறனும் மிக்கவர்களுக்கு உரிய நடைமுறை பருவடிவக்கூறுகளும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்கு உரிய சாந்தி நலம் தரக்கூடிய சிந்தனைக் கூறுகளும் நிறைந்தது சைவ சிந்தாந்த நெறி" என்று சர் மானியர் வில்லியம்ஸ் வியந்து போற்றுகிறார்.

1. நமது இளைஞர் சைவ சமயக்கல்வி :

ஒரு நாட்டின் செல்வங்களுக்கெல்லாம் தலையான செல்வம் அந்த நாட்டில் உள்ள மக்களே ஆகும். அதிலும் இளைஞர்களே ஆகும். இன்றைய இளைஞர்களே நாளைய தினம் நாட்டை நடத்துபவர்களாக

வருபவர்கள். எனவே ஒரு நாட்டின் சிறப்பும், செழிப்பும் நமது இளைஞர்களின் திறத்திலேயே இருக்கின்றன. நம் தமிழ்நாட்டின் "சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்", நம்முடைய இளைஞர்களின் பொறுப்புணர்ச்சியிலும் அறிவாற்றல் உள்ள செயல் திறமைகளிலும் அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டின் பலவிதமான பெருமைகளும் சமயமும், சமய நூல் களும், சமயச் சான்றோர்களும், திருக்கோயில்களும், திருமடங்களும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வனவாகும்.

இவற்றைப் போற்றி வளர்ப்பதை நம் குறிக்கோளாகக் கொள்வது நம்முடைய கடமை. அதை நமது இளைய தலைமுறைக்கு உணர்த்துவது நமது கடமைகளில் தலையாய கடமையாகும். இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்குச் சமய நெறிகள் பற்றிய உண்மைகளை நாம் உணர்வதுடன், மக்களுக்கும், இளைய தலை முறையினருக்கும் திறமையாகக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப உணர்த்தும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது. இன்று இளைய தலைமுறையினர் களிடம் சமய அறிவும், ஒழுக்க ஆர்வமும் குறைந்ததால் பெரிதும் குழப்பம் காணப்படுகிறது. அரசியல் துறையில் ஈடுபட்டு உயர விரும்புபவர்கள் சமய உணர்வால் முன்னேற்றம் தடைபடுமோ என்று பயப்படுகிறார்கள். நமது கண் முன்னாலேயே, காந்தி அடிகள் சமய உணர்வின் மூலமாகவே அரசியலில் உலகம் வியக்கும் மகத்தான அற்புதத்தை நடத்திக் காட்டி இருக்கிறார். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் ஒரு மனிதனுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சமயப் பற்று என்பதை நாம் உணர வேண்டும்; மக்களுக்கு உணர்த்த வேண்டும். மக்களின் எண்ணங்களுக்கும், அவற்றின் வெளிப்பாட்டு முறைகளுக்கும் உயிர் கொடுப்பது மொழி. சமய உணர்வோ. மக்களின் வாழ்க்கைத் துறை அனைத்திற்கும் ஆக்கம் கொடுக்கக்கூடியது. ஒரு நாட்டின் நாகரிகமும், பண்பாடும் பிற எல்லாச் செல்வங்களும் அந்த நாடு வளர்க்கும் உன்னதமான சமயநெறிகளால் உருப்பெற்றுச் சுடர்விட்டு ஒளிவிடுகின்றன. நம்மிடம் சமய உணர்வு இயல்பாகவே அமைந்திருக்கிறது. குறித்த பருவத்தில் 'பால் உணர்வு' ஏற்படுவது போலக் கடவுள் நெறியும் சமய ஒழுக்கமும் எப்போதாவது ஒரு சமயம் ஒவ்வொருவருக்கும் தேவை வந்தே தீரும். அது தவிர்க்க முடியாதது. ஆக அதற்கு இளமையிலிருந்து பயிற்சி கொடுத்துப் பழக்க வேண்டும்.

2. சைவ ஆலயப் பாதுகாப்பு

நால்வர் பாடிய அருட்பாசுரங்கள் தான் இன்று சைவத்தின் உயிர்நாடி. இந்தப் பாசுரங்கள் ஓர் ஐந்நூறு ஆண்டு காலம் சோழ மன்னர்கள் தமிழ்நாடு எங்கும் பெருங்கோயில்களைக் கற்றளியாக எடுத்துப் பரிபாலிக்குமாறு தூண்டியவை. இந்தக் கோயில்களில் தான் இன்று சைவ சமயத்தின் உயிர்த் தத்துவம் ததும்பிக் கொண்டு இருக்கிறது. சங்க நூல்களில் காணும் மதுரை வெள்ளி அம்பலத்தைப் பற்றிய செய்தி நமது திருக்கோயில்களின் தொன்மையை நன்கு தெளிவுபடுத்துகிறது. அதற்கு முன்பே தில்லையில் பொன் அம்பலம் இருந்ததால் வெள்ளியம்பலம் என்று வேறு ஒன்று ஏற்பட்டது. கோச் செங்கட் சோழர் எழுபத்து எட்டு மாடக்கோயில் கட்டினார் என்று அப்பர் சொல்கிறார். திருமங்கையாழ்வார் இந்தச் சோழர் கட்டிய திருநறையூர் மணிமாடம் என்ற திருமால் ஆலயத்தைக் குறிப்பிடும் போது அவர் சிவபெருமானுக்கு எழுபது மாடக்கோயில்கள் கட்டிய விவரத்தை எடுத்துச் சொல்கிறார். "இருக்கு இலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு, எழில் மாடம் எழுபது செய்து உலகு ஆண்ட திருக்குலத்து வளச் சோழன் செய்த திருக்கோயில், திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"! என்பது அவர் பாசுரம். இந்தக் கோயில்கள் யானை புகமுடியாத அமைப்புகளுடன் கூடியவை என்றாலும் எல்லாமே பெரிய கோயில்கள். இந்தத் திருக்கோயில் களை எல்லாம் போற்றிக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. இந்தக் கோயில்களில் வழிபாட்டுக்காகவும், கலைச் செல்வங்களை அங்கு வளர்ப்பதற்காகவும் நமது முன்னோர்கள் ஏராளமான சொத்துக்களை அவற்றுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

அதன் மூலமாகத் திருக்கோயில்கள் நமது நாகரிகத்தை, பண்பாட்டை, கலைகளை, இசையை, கல்வியை, ஒழுக்கத்தை, தருமத்தை மிகச் சிறப்பாக வளர்த்து வந்தன.

திருக்கோயில்களுக்கு உரிய சொத்துகளைத் திரும்பவும் திருக்கோயில்கள் பெறுவதற்கு நாம் பெரும் இயக்கமே நடத்த வேண்டும். ஏன்? அகிம்சை முறையிலான மாபெரும் போராட்டத்துக்கே கூட நாம் தயாராக வேண்டும்.

அப்படி நடத்துவதே இன்றைய உண்மையான தெய்வ வழிபாடு என்றும் சொல்லலாம். திருக்கோயில்களின் சொத்துக்

களைத் திரும்பப் பெறுவதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்து, எந்தெந்தக் கோயிலின் சொத்துகள் அவற்றிற்குப் பயன்படாமல் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அவற்றைத் திரும்பப் பெற்று அந்தந்தத் திருக்கோயில்களில் வழிபாடுகள் மட்டுமல்லாமல் ஏற்கனவே அது வளர்த்து வந்த கலைகளும் அங்கு சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடுசெய்ய வேண்டும். இந்த உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் வேண்டும். திருக்கோயில் சொத்துகளைத் திரும்பப் பெறுவது போலவே சிதைந்தும், மறைந்தும் கிடக்கும் நமது திருக்கோயில்களையும் திரும்பப் பெற்றாகவேண்டும். அதற்கான எண்ணங்களையும் எழுச்சியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் திருக்கோயில்களைப் போலவே சைவத் திருமடங்கள் பல இருக்கின்றன. இந்தத் திருமடங்கள் பல நூறு ஆண்டுகளாக சைவ சமயத்துக்குப் பெரும் பணிகளைச் செய்து மக்களை வழிநடத்தி வந்திருக்கின்றன. மிகச் சிறந்த சைவ சிந்தாந்திகள், சைவத் திருமடங்களின் தலைவர்களாக இருந்து தங்கள் அரும்பணிகள்மூலமாக மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

3. திருமடங்களின் பணி

இந்தச் சைவத் திருமடங்களுக்கும் நமது முன்னோர்கள் ஏராளமான சொத்துகளை அறக்கட்டளைகளாக அளித்திருக் கிறார்கள். அந்தச் சொத்துகளின் வருவாய்களையும் திருமடங்கள் இன்று பெறுவதற்கு முடியாத சூழ்நிலை நாட்டில் உருவாக இருக்கிறது. பல மடங்கள் செயல் இழந்து கிடக்கின்றன. அவற்றின் சொத்துகளை மீண்டும் பெற்றுச் சைவத் திருமடங்களின் பணிகளைத் தொடர முயலவேண்டும். சைவத் திருமடங்கள் சைவ குடும்பத்தில் இருந்து பத்து, பன்னிரெண்டு வயதுடைய வாலிபர்களைத் தேர்ந்து எடுத்து அவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சிகளையும் ஞானயோக முறை களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சைவ சமயத்தில் உள்ள செயல்முறைத் தத்துவங்களை அவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். அவர்களுக்குத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய பல மொழிகளையும் கற்றுக் கொடுத்து அவர்களைப் பன்மொழிப் புலவர்களாகவும் உயர்த்த வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்ட

ஆன்மீக முதிர்ச்சி பெற்றவர்களைச் சைவத் திருமடங்களின் தலைவர்கள் தங்கள் வாரிசுகளாக நியமிக்கவேண்டும். துறவிகளுக்கு எப்படிப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதை இராமகிருஷ்ண மடம் செய்து கொண்டு வருகிறது. இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் மகத்தான ஆன்மீகப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களைப் போல் சைவத்திருமடங்களும் சைவத் துறவிகளைப் பயிற்றுவித்துச் சைவ மடங்களின் பல்வேறு பொறுப்புகளை அவர்களிடம் கொடுக்கவேண்டும்.

சங்கராச்சாரியார் மடத்தில் தங்கள் வாரிசுகளை நல்ல குடும்பங்களில் இருந்தே முறையாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கும் வாலிபருக்குப் பல மொழிகளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பல சமயங்களின் அடிப்படை உண்மைகளையும் கற்றுக்கொடுக் கிறார்கள். தியானம், யோகம் முதலிய பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். ஆன்மீகத் துறையில் சிறந்து விளங்கும்படி அவர்களைத் தயாரிக்கிறார்கள். அம்மாதிரி ஒவ்வொரு சைவ மடமும் செயல்படவேண்டும்.

அன்று நாயன்மார்கள் வளர்த்தது போலவே சைவத்தை வளர்க்கும் திருப்பணியில் சைவத்திருமடங்களின் தலைவர்கள் ஈடுபடவேண்டும். திருமடங்களுக்குள் அதன் தலைவர்கள் அடங்கிக் கிடக்காமல் வெளியில் வந்து மக்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் மத்தியில் பக்தி நெறியையும், சமய ஒழுக்கத்தையும் பரப்பும் திருப்பணியில் ஈடுபட வேண்டும். இன்று காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் அந்தப் பணியை ஒரு முன் மாதிரியாகவே செய்து வருகிறார்கள். ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பாத யாத்திரையின் மூலமாக நாட்டில் சமய உணர்வும், பக்தி இயக்கமும் பரவி வருகிறது. ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பணிகள் மக்கள் மத்தியில் ஒரு சமய மறுமலர்ச்சியையும், ஆன்மீக விழிப்பையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இதைப் போலவே நமது சைவத் திருமடங்களின் தலைவர்கள் பணியாற்ற முன்வரவேண்டும். சைவ சித்தாந்தப் பயிற்சியும் ஆன்மீக வளர்ச்சியும் பெற்ற, பன்மொழி பாண்டித்தியம் பெற்ற, உலக சமயங்களின் ஞானங்களையும் பெற்ற, சைவ சித்தாந்தத் துறவிகளைச் சைவத் திருமடங்கள் ஏராளமாகத் தயாரிக்கவேண்டும்.

சைவ சமயத் தலைவர்கள் தியானப் பயிற்சியில் தேர்ந்து விளங்கவேண்டும். வாழ்க்கையில் மேற்கொண்ட லட்சியங்களை எப்படியும் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று சிந்தித்து அதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வது தான் தியானம். சைவ மடங்களின் வாரிசுகளைச் சர்க்கார் அதிகாரிகள் நியமிக்கும் மிகப் பரிதாபமான நிலையில் சில சைவ மடங்கள் இன்று இருக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். சைவத் திருமடங்களின் தலைவர்களே தங்கள் வாரிசுகளை, அதற்கு உரிய ஆற்றல் பெற்றவர்களை அமைக்க வேண்டும். சைவ மடத்தின் தலைவர்கள் மக்கள் பணியே மகேசன் பணி என்று தொண்டாற்ற முன்வருவார்களானால் மக்கள் அவர்களுக்கு நமது முன்னோர்களைப் போல ஏராளமான செல்வங்களை வாரி வழங்கத் தயாராக இருக்கிறார்கள்.

எனவே சைவத் திருமடங்களின் தலைவர்கள் வெறும் மடங்களின் சொத்துப் பராமரிப்புத் தலைவர்களாகச் செயல்படாமல், உண்மையான சைவ சித்தாந்தக் குருமார்களாக நமது நாயன்மார் களைப் போல – அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற சமய ஆசாரியர்களைப் போலச் செயல் படவேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலையை நாம் நாட்டில் உருவாக்க வேண்டும். அதற்கு முதல் காரியமாகத் திருக்கோயில்களின் சொத்துக்களையும் திருமடங்களின் சொத்துக்களையும், நமது முன்னோர்கள் எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளை நியமித்துக் கொடுத்திருக் கிறார்களோ, அந்த லட்சியம் நிறைவேறுவதற்காக ஒரு செயல் முறைத்திட்டம் தீட்டி முழுநேரமாகத் தொடர்ந்து செயல்பட்டு அதில் வெற்றி காண முயலவேண்டும்.

4. சைவ இலக்கிய மொழிபெயர்ப்பு

தமிழின் சிறப்பைப் பற்றியும் தமிழ் மக்களின் நாகரிகம் ப்ண்பாடு முதலியவை பற்றியும் இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில் அறிஞர் பெருமக்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் முன்வரவேண்டும். அதற்கு நம்முடைய சாத்திரங்கள், திருமுறைகள் ஆகிய எல்லா நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மிக அழகிய புத்தகங்களாக வெளியிட வேண்டும். எல்லா விதமான வசதியும் கொண்ட கம்யூட்டர்

யுகத்தில் நாம் அந்த வசதிகளை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு நமது திருமுறைகளை உலகுக்கு அளிக்க வேண்டும். புது உலகத்துக்கும் மனித குலத்துக்கும் செய்யும் மகத்தான தொண்டு இது என்பதை மறந்துவிடக்கூடாது.

நம்மிடம் இருக்கும் சமயச் செல்வம் ஒன்றுதான் அழிக்க முடியாத செல்வம். அது ஒன்று தான் குறையாத செல்வம். நம்மை உலகத்தின் முன்னால் நாகரிகம் உள்ள மக்களாக, பண்பாடு உள்ள மக்களாக, பல்லாயிரம் ஆண்டு பராம்பரியம் உள்ள மக்களாக உயர்த்தக்கூடிய செல்வம். அதன் மூலமாக நமக்கு உலகில் மரியாதை ஏற்படும். புதிய விஞ்ஞான யுகத்திலும் நாம் மேலும் மேலும் உயர முடியும். நாம் தொழில் உலகிலும் உயர்வதற்கு உலகம் நம்மீது நம்பிக்கை வைக்க உதவி செய்யும். 'இனி ஒரு புது விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம்' என்று சைவ அறிஞர் பெருமக்கள் சபதம் ஏற்றுச் செயல்பட முன்வரவேண்டும். தமிழ் மொழியையும், சமஸ்கிருதத்தையும் தம் இரு கண்களாகப் பார்த்து வந்த சமயம் சைவ சமயம். இன்று தமிழும் சமஸ்கிருதமும் மட்டும் போதாது. உலக மொழிகள் எல்லாவற்றையும் தமிழ் அறிஞர்கள் பயில முன்வரவேண்டும். அந்த முயற்சியிலும் ஈடுபட வேண்டும். பட்டம் பெற்ற மாணவர்களை இவ்வாறு பல மொழியிலும் திறமை உள்ளவர்களாக உருவாக்க வேண்டும் அதற்கான பணிகளில் சைவத் திருமடங்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும். நமது மாணவர்களுக்குப் பள்ளிகளில் சைவம், வைணவம், புத்தம், கிருத்துவம், இசுலாமியம் ஆகிய சமயங்களைப் பற்றியும் போதித்து அவற்றின் அடிப்படை ஞானங்களை அவர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். இதற்கு ஏற்ப, கல்லூரிகளின் பாடத் திட்டத்தை மாற்றி அமைக்க முயலவேண்டும். சமயமுறைப்படி வாழ்வதற்கு நமது பிள்ளைகளுக்கு நாம் பயிற்சி அளிக்கவேண்டும். காலை நேரத்தில் திருமுறைகளின் ஓசையைக் கேட்காத குழந்தைகள் துர்ப்பாக்கியம் வாய்ந்தவர்களே! அதுபோலவே, தியானப் பயிற்சியில் ஈடுபடாத பிள்ளைகளும் துர்ப்பாக்கியசாலிகளே!

5. சைவமும் குடும்ப வாழ்க்கையும்

நம் குடும்ப வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சமயம் முழுமையாக வெளிப்பட வேண்டும். நம் குழந்தைகள் தம் கண்களால்

சமய வாழ்க்கை முறையைக் கண்டுகொண்டே இருக்கவேண்டும். நம்முடைய செயல்களிலிருந்தும் அன்றாட நடைமுறைகளிலிருந்தும் சமயத்தின் சுவையை அவர்கள் உணர வேண்டும். அதன் நல்ல பாதிப்புகள் அவர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதியவேண்டும். இறைவனின் வாக்குகளும் நாயன்மார்களின் அருள் மொழிகளும் அவர்களின் காதில்பட வேண்டும்; இடைவிடாமல் பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அவர்கள் தாமாகவே சமயத்தைப் பின்பற்றத் தொடங்கவேண்டும். உற்சாகத்துடன் தொடங்க வேண்டும். பெரியவர்கள் தியானம் செய்வதைக் கண்டு பிள்ளைகளும் தியானம் செய்யத் தொடங்கவேண்டும். சமயத்தின் அடிப்படையைத் தாயின் மடியிலேயே குழந்தைகள் கேட்கவேண்டும். இறைவனுக்கு அடிபணிவதன் பொருளை நம் வாழ்க்கையைக் கொண்டே அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். சமயத்தின் அழகிய முத்திரை அவர்களின் உள்ளங்களில் பதிந்திட வேண்டும். அவர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, ஆகிய அனைத்தும் சமயத்திற்கு ஏற்றவாறு அமைய வேண்டும். இளைய தலைமுறையினரைச் சரியான மரபுகளில் வார்த்தெடுத்தால் நம் நாட்டை அவர்கள் சமயமுறையில் பண்பாடுள்ள அமைதி ததும்பும் நாடாக மாற்ற முற்படுவார்கள்.

(கட்டுரைச்சுருக்கம்)

(நன்றி : சை.சி. பெ. மலர்)

தமிழகமே உலக சைவ வளர்ச்சிக்கு வழிகாட்டுதல், பிறமொழிகளில் சைவநூல்கள், இலவச சைவ தமிழ் ஆங்கில நூல் வெளியீடுகள், ஆங்கிலத்தில் பல சைவதத்துவ நூல்கள் வெளியிடுதல் உள்ளிட்ட :-

சைவசித்தாந்தம் பரவ வழிவகைகள்

சைவசித்தாந்தம் தனிச் சிறப்பான பல கோட்பாடுகளை யுடையது. மேலோட்டமான சில ஒப்பிடுகைகள் மூலம் சில உதாரணங்களை இங்கே குறிப்பிடுவோம்.

இந்த உலகம், உயிர்கள், இறைவன் என்பன யாவற்றுள்ளும் எதுவுமே கணம் கூட நிலையானதன்று; உண்மையில் ஒன்றுமே யில்லை என்ற கோட்பாட்டை யுடையதே பௌத்தம். உண்மையில் ஒன்றுமே கணமும் நிலைப்பதில்லை;யாவும் சூன்யம் என்ற இந்தக் கோட்பாட்டைச் 'சூன்யவாதம்' எனக் குறிப்பிடுவது வழக்கம். இதற்கு நேர்மாறாக உலகம், உயிர், இறைவன் யாவுமே உண்மை எனக் கொள்வது சைவ சித்தாந்தம். பௌத்தத்தை ஆங்கிலத்தில் 'Nihilism' எனவும் சைவசித்தாந்தத்தை 'Realism' எனவும் குறிப்பிடுவது வழக்கம்.

உலகம் பொய், உயிர்களும் பொய், அடிப்படையிலுள்ள 'பிரமம்' எனப்படும் ஒரேயொரு பொருள் மட்டுமே உண்மையென வாதாடுவது அத்வைத வேதாந்தம். இதற்கு நேர்மாறாக உலகம் உயிர் இறைவன் யாவும் உண்மை. உண்மையானது பிரம்மம் மட்டுமன்று உயிர்களும் உண்மையானவை. உண்மையான பொருள் ஒன்றே யொன்று மட்டுமன்று. உலகு உயிர்கள் உட்பட உண்மையான பொருள்கள் பல என வாதாடுவது சைவ சித்தாந்தம். ஒரேயொரு பொருள் மட்டுமே உண்மை என்பதால் அத்வைத வேதாந்தம் 'ஒருமைவாதம்' ஆகின்றது. பலவும் உண்மை என்பதனால் சித்தாந்தம் 'பன்மைவாதம்' ஆகின்றது. ஆங்கிலத்தில் அத்வைத வேதாந்தத்தை (Monism) எனவும் சித்தாந்தத்தை (Pluralism) எனவும் குறிப்பிடுவதுண்டு.

ஆன்மாக்கள் நிலையானவை யெனினும் அவற்றுக்கு ஒரேயொரு பிறப்பு மட்டுமேயுளது மறுபிறப்பு எதுவுமே கிடையாது

என்பதே கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகியவற்றின் கோட்பாடு. இதன் விளைவு, கிடைத்த ஒரேயொரு பிறப்பில் நாம் இழைத்த தீவினைகள் காரணமாக மோட்சத்தை அடையத் தவறிய ஆனமாக்கள் அனைத்தும் மீளா நரகத்தை அடைந்து உய்தி எதுவுமின்றி எல்லையில்லாத் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கு மென்பதாகும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டின்படி பிறப்பு ஒன்றல்ல; ஒவ்வொரு ஆன்மாவுக்கும் பல பிறப்புகள் உண்டு. எனவே ஒரு பிறப்பிலே செய்த தவறுகளுக்கு அடுத்த பிறப்புகளிலே ஈடுசெய்து ஈற்றில் மோட்சத்தை அடையும் வழியும் நம்பிக்கையு முண்டு.

வைணவம் பல விதத்திலும் சைவ சித்தாந்தத்தோடு ஒத்த கோட்பாடுகளையுடையது. ஆயினும் வைணவம் ஆன்மாக்களை இறைவனுடைய சரீரமாகக் கருதுகின்றது. வைணவக்கோட்பாட்டின் படி இறைவன் சரீரி. ஆன்மாக்கள் யாவும் இறைவனுடைய சரீரம். இவ்வாறு கொள்வதனால் ஒரு புறம் இறைவனுடைய தனித்துவம் குறைகின்றது. மறுபுறம் ஆன்மாக்களுடைய நிறைவும் குறைகின்றது எனக் கருத இடம் ஏற்படுகின்றது.

சைவசித்தாந்தக் கோட்பாடுகளை இவ்வாறு ஒப்பீட்டு முறையிலும் நுணுகியும் நோக்கும்போது அவற்றை நல்ல முறையில் உலகுக்கு எடுத்து விளக்க முடியுமாயின் ஆன்மீக நாட்டமுடைய பலரும் அவற்றால் ஈர்க்கப்படுவதும் அவற்றில் ஈடுபாடு கொள்வதும் நிச்சயம் என்ற எண்ணமே மேலோங்குகின்றது.

சைவசித்தாந்தம் மேலே குறிப்பிடப்பட்டனவும் அவை போன்ற இன்னும் பல தனிச் சிறப்புகளும் உடையதாயிருந்தும் தன் சிறப்புகளுக்கு ஏற்ற அளவு பலராலும் அறியப்படவும் இல்லை, பயன்படவு மில்லை என்பது பலருடைய கவலை. இதனைப் பலர் தம் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் பற்பல சமயங்களிலெ தெரிவித்துள்ளனர். அண்மையில் நிகழ்ந்த சைவ சித்தாந்தப் பெருமன்ற விழாவிலே உரையாற்றிய பெரியவர் ஒருவருடைய உரையிலும் இக் கவலை புலப்பட்டது.

வெளி நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களிலும் சைவ சித்தாந்தத்தைப் பற்றி அறிந்தவர்கள் மிகச் சிலரே. சென்ற ஆண்டு டெல்லியிலே துறவிகள் மாநாடொன்று நடைபெற்றது. அது இந்து மதத் துறவிகளுடைய மாநாடு. ஆயினும் அதிலே கலந்துகொண்ட பலருக்குச் சைவசித்தாந்தம் பற்றி எதுவுமே

தெரியவில்லை எனத் தமிழ் நாட்டிலிருந்து அம்மாநாட்டுக்குச் சென்று திரும்பிய அடிகள் ஒருவர் குறிப்பிட்டுத் தமது கவலையையும் தெரிவித்தார்.

சைவசித்தாந்தம் போதிய அளவு பரவில்லை. அதன் சிறப்புகள் உணரப் படவும் பாராட்டப்படவுமில்லை எனக் கவலைப்படுவோர், அது எங்கு, யார் மத்தியில் பரவமேண்டுமென விரும்புகின்றனர்? ஐரோப்பாவிலும், கடல் கடந்த அமெரிக்கா ஆப்பிரிக்காக் கண்டங்களிலும் சைவசித்தாந்தம் நன்கு பரவ வேண்டுமென்பதா அவர்கள் விருப்பம்? எதற்காக அங்கெல்லாம் பரவ வேண்டும்? யார் அதனைப் பரப்புதல் வேண்டும்? பிற தேசத்தவர்கள் சைவ சித்தாந்தத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் அறிவியல் ரீதியில் அறிந்து கொண்டால் போதுமா? நடைமுறையிலும், அவர்கள் இதுவரை பின்பற்றி வந்த நெறி முறைகளைக் கைவிட்டுச் சைவசித்தாந்த அடிப்படையிலே தம் வாழ்க்கை நெறிகளை அமைத்துக் கொள்ள வேண்டுமா? இத்தகைய வினாக்கள் எழுவது இயல்பு.

சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பொருத்தமட்டில் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய தேசங்களிலுள்ள சில பல்கலைக்கழகங்களில் ஒரளவு ஆராய்வுகள் நடைபெறுகின்றன. அண்மையில் தருமபுரத்தில் நடைபெற்ற அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி மாநாட்டிலே கனடாவிலுள்ள மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த கனடிய இளம் பெண்ணொருத்தி "சைவ சித்தாந்தத்தில் கன்மம்" என்ற தலைப்பிலே சபையோர் வியக்கும்படி பேசிப் பலருடைய பாராட்டையும் பெற்றது நினைவுக்கு வருகின்றது. மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்திலே சைவசித்தாந்தம் பயிலும் ஆராய்ச்சி மாணவர்கள் சைவ சித்தாந்தத்துக்கு முக்கிய மூல இலக்கியங்களாகிய 14 சாத்திர நூல்களையும் 12 தோத்திரங்களையும் அவற்றின் மொழி பெயர்ப்புகளையு மட்டுமே கொண்டு ஆராய்வதோடு திருப்தியடையாமல் தமிழிலுள்ள மூலநூல்களையும் வாசித்தறியும் நோக்கத்துடன் தமிழ் மொழியையும் குறுகிய கால எல்லையுள் பயின்று வருகின்றார்களெனத் தெரிகின்றது.

1. தமிழகத்தில் சைவசித்தாந்த நிலை

சைவசிந்தாந்தம் பரவுவதற்கான வழிவகைகளையொட்டி எழக்கூடிய எல்லா வினாக்களும் இங்கு ஆராயப்படவில்லை. எனினும் இத்தொடர்பில் எழக்கூடிய முக்கியமான வினா ஒன்றை

ஆராய்வது இங்கு அவசியமாகும். சைவசித்தாந்தத்தை வெளிநாடு களில் பரப்புவதற்கு வழிவகைகளை ஆராய முற்படும் போது உள்நாட்டில் – அது தோன்றிப் பல நூற்றாண்டுகளாக வழங்கிவரும் அதன் சொந்த நாடாகிய தமிழ் நாட்டில் அதன் நிலைமை என்ன என்பதே அந்த வினா. தமிழ் நாட்டில் சைவசித்தாந்தம் அடைந்து வரும் விருத்தியிலும் அதற்குக் கிடைத்துவரும் ஆதரவிலுமே அது வெளிநாடுகளில் பரவுவது மிகுதியும் தங்கியுள்ளது. எவ்வளவுக்கு எவ்வளவு அதிக தொகையினர் இங்கு சைவசித்தாந்தத்திலே அக்கறையும் ஈடுபாடும் கொள்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அதன் சிறப்புகளை உலகுக்கு நன்கு விளக்கவல்ல தரமான நூல்களும் ஆற்றல்மிக்க சொற்பொழிவாளர்களும் உருவாக வாய்ப்புகள் ஏற்பட இடமுண்டு.

தமிழ்நாட்டிலே சைவசித்தாந்தத்தின் நிலைமையைப் பல்கலைக் கழகங்களிலும் ஏனைய கல்வி நிலையங்களிலும் அது வகிக்கும் இடம், ஆதீனங்கள் அளிக்கும் ஆதரவு, மன்றங்கள் ஆற்றிவரும் பணிகள், பொதுமக்கள் காட்டும் ஆர்வம் எனப் பல நிலைகளிலே ஆராயலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும் மதுரைப் பல்கலைக் கழகத்திலும் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் காஞ்சியிலுள்ள தத்துவ மையத்திலும் சைவசித்தாந்த ஆராய்ச்சிக்கெனத் துறைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவது சைவசித்தாந்தத்தின், பல நூற்றாண்டு வரலாற்றிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி யாகும். இச்சமயத்தில் இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் சைவசிந்தாந்தத்துக்கென ஒரு துறை அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுவதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அண்மையில் தருமபுர ஆதீனம் நிறுவியுள்ள அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தையும் குறிப்பிடல் வேண்டும். திருப்பனந்தாள் காசிமடம் ஆற்றி வரும் பணிகளும் குறிப்பிடத்தக்கன. சைவசித்தாந்தத்தை வட நாட்டிலும் பரப்பும் நோக்கத்துடன் திருப்பனந்தாள் ஆதீனம் பல ஆண்டுகளுக்கு முன் காசிப் பல்கலைக் கழகத்திலே ஒரு சைவசித்தாந்த பீடத்தை நிறுவியது. எக்காரணத்தாலோ அப்பீடம் தொடர்ந்து தனிப்பீடமாக இயங்காது நின்று விட்டது. காசிப் பல்கலைக்கழகத்திலும் அலகாபாத் பல்கலைக்கழகத்திலும் திருப்பனந்தாள் ஆதீனம் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்ந்த ஏற்பாடுகள் செய்தமையும் பின்னர்

அச்சொற்பொழிவுகள் நூல்களாக அச்சிடப்படுவதும் பயனுள்ள பணிகளாகும். மேலே குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக எதிர்காலத்தில் சைவசித்தாந்தத்தை உலகுக்கு நன்கு எடுத்துரைக்க வல்ல தரமான அரிய நூல்கள் பல வெளிவருமென எதிர்பார்க்கலாம். அதைப் போலவே சைவசித்தாந்த நுட்பங்களைத் திறம்பட உலகுக்கு எடுத்தியம்ப வல்ல சொல்வன்மை மிக்க சிந்தனையாளர்களும் உருவாகுவரென எதிர்பார்க்கலாம்.

2. பிறமொழிகளில் சைவ நூல்கள்

வேதாந்தத்தைப் பற்றி மேல் நாடுகளில் பலர் அறிந்திருப்பதற்கு ஒரு காரணம் அதைப் பற்றிப் பல கோணங்களிலிருந்தும் தரமான பல நூல்கள் எழுதப்பட்டுள்ளமையாகும். மற்றொரு காரணம் உலக மேடைகளிலே அதன் நுட்பங்களைக் கேட்போர் உளங் கொள்ளுமாறு டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் மகாதேவன், சுவாமி ரங்கநாதானந்தா போன்ற தத்துவ மேதைகள் ஆற்றிவந்த அற்புதமான ஆங்கிலச் சொற்பொழிவுகளுமாகும்.

சைவசித்தாந்த அறிவுக்கு அனுசரணையான சைவ சமய அறிவை இளம் வயதிலேயே பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்குக் கட்டாய பாடமாகப் புகட்ட முடியுமாயின் மிக நன்றாகும். இளம் வயதிலே பெற்ற அறிவு, வயது முதிர முதிர மேலும் மேலும் விருத்தியடைந்து சைவசித்தாந்தத்திலே ஈடுபடவும் ஏனையோரையும் அதிலே ஈடுபடச் செய்யவும் வழிகோலும்.

இந்தியா சமயச் சார்பற்ற நாடாகையால் பள்ளிக்கூடங்களில் சமய பாடத்தைக் கற்பித்தல் இயலாது. எனினும் அப்பணியைச் சைவ மன்றங்கள் ஒரளவு ஏற்றுச் சனி, ஞாயிறு நாட்களில் ஒழுங்கு செய்து நடத்த முன்வரலாம். அத்தகைய வகுப்புகளை நல்ல முறையாக நடத்த முடியுமாயின் பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அவ்வகுப்பு களுக்கு அனுப்ப முன் வருவர் என்பது நிச்சயம். வகுப்புகளை நடத்த முடியாவிடினும் சமய அறிவுப் பரீட்சைகள் நடத்திச் சிறந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தலாம். சிறுவர்களையும் இளைஞர்களையும் எந்தத் துறையிலும் ஈடுபடச் செய்வதற்குப் போட்டிகள் வைப்பதும் பரிசில்கள் வழங்குவதும் சிறந்த வழிகளாகும். சமயத்துறைக்கும் இது பொருந்தும். சமய அறிவுப் பரீட்சைகள் மட்டுமின்றி இளைஞர்களிடையே கட்டுரைப் போட்டி

களும் பேச்சுப் போட்டிகளும் நடத்தலாம். இவை தவிர இசைப் போட்டிகளும் நடத்தலாம். தேவாரங்களிலும் திருவாசகங்களிலும் எளிமையும் ஓசை நயமும் பொருந்திய பாசுரங்களைத் தெரிவுசெய்து தனி நூல்களாக அச்சிடலாம். இந்த நூல்களில் சிற்சில பகுதிகளைக் குறிப்பிட்டு மனனம் செய்யும்படிச் செய்து போட்டிகள் நிகழ்த்திப் பரிசில்கள் வழங்கலாம். இப்போட்டிகள் நல்லமுறையாக நடைபெற்றால் அவற்றிலே கலந்து கொள்ள சிறுவர்கள், இளைஞர்கள் பலர் முன்வருவர். இப்போட்டிகளை நடத்துவதற்காகும் செலவுக்காகக் கொடையாளிகள் பலரிடம் அறக்கட்டளைகளாகவும் வேறாகவும் பணவுதவி பெறலாம். இன்று கல்லூரிகளில் "மர்திகிற" (Mardigran) போன்ற கலாசார வாரங்கள் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளிலும் சைவ சித்தாந்த வினா – விடைகளும் இடம்பெற வழி வகுக்க முடியுமாயின் காலப்போக்கில் அந்த ஏற்பாடு நல்லதொரு களமாக அமைந்து பெரும் பயனளிக்கக்கூடும். சிறு வயதிலே இத்தகைய போட்டிகளிலே பங்குபெறுவோர் பிற்காலத்திலே பலவித சிறப்புகளையுடையவர் களாகத் திகழ்வதைக் காண்கின்றோம்.

வளர்ந்தபின் சைவசித்தாந்தத்திலே ஈடுபாடு ஏற்படும் பொருட்டு இளம் வயதிலேயே சமய ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான சில வழிவகைகளை இதுவரை விவரித்தோம்.

இன்னொரு விதமாக நோக்குவதாயின் சைவசித்தாந்தத்தைப் பரப்பும் வழிவகைகளை வீடு, தமிழ்நாடு, இந்தியதேசம், அயல்நாடுகள் அடங்கும் ஆசியாக் கண்டம், அகில உலகம் ஆகிய ஐந்து நிலைகளில் ஆராயலாம்.

3. இலவச சைவ வெளியீடுகள்

சைவசித்தாந்த தத்துவங்களைப் பின்பற்றுவோர் வாழும் இல்லங்களிலே சைவசித்தாந்த அடிப்படை நூல்களாகிய பதினான்கு சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள் ஆகியவற்றுள் முக்கியமானவை யாவது இடம்பெறுவது அவசியமாகும். சைவசித்தாந்த தத்துவங்கள் தெளிவாகவும் இலகுவாகவும் எழுதப்பட்ட உரை நடை நூல்கள் ஒன்றிரண்டாவது இருத்தல் அவசியம். நூல்கள் இருந்தால் மட்டும் போதாது. குடும்பத்தார் அனைவரும் தாமாகவோ அறிந்தவர்கள் மூலமாகவோ சித்தாந்தக் கொள்கைகளை நன்கு தெரிந்துகொள்வதும் அவற்றின் தனிச்சிறப்புகளை உணர்ந்தும் மதித்தும் அவற்றில்

ஈடுபடுவதும், அவற்றின் அடிப்படையையொட்டி வாழ்வதும் அவசியம். "சித்தாந்தம்" போன்ற சஞ்சிகைகளை வருவித்து வாசிப்பதும், சித்தாந்த வகுப்புகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் மகளிர், இளைஞர்கள் உட்படக் குடும்பத்தினர் அனைவரும் இயன்றவரை கலந்துகொள்வதும் பயன்தருவனவாகும்.

தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் கல்வி நிலையங்கள், சைவ மன்றங்கள் ஆகியவற்றின் பணிகளே முக்கியம். இவை செய்யக்கூடிய பணிகள் சிலவற்றைப் பற்றி மேலே சில பத்திகளிலே விவரித்துள்ளோம். இத்தொடர்பில் சென்னை, சைவசித்தாந்தப் பெருமன்றம் புதிது புதிதாகச் சிந்தித்துத் திறம்படச் செயற்படுத்தும் திட்டங்கள் உட்பட ஆற்றிவரும் அரும்பணிகள் யாவும் பாராட்டுக்குரியன.

இந்திய தேசம் முழுவதையும் எடுத்துக் கொள்ளின் இத்தேசத்திலுள்ள பிரதான மொழிகளனைத்திலும், முக்கியமாக இந்திமொழியில் சைவசித்தாந்தக் கருத்துக்களை வாசிப்போர் உளம் கவரும் வகையில் விளக்கும் நல்ல நூல்களோ மொழிபெயர்ப்பு நூல்களோ வெளிவருவது அவசியம்.

4. ஆங்கிலத்தில் சைவ தத்துவ நூல்கள்

ஆசியாக் கண்டத்தையும் உலகத்தையும் பொறுத்தவரையில் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைத் தர்க்க ரீதியாகவும் மனங்கவர் முறையிலும் விளக்கி எழுதப்பட்ட சிறந்த நூலகள் உலக மொழியாகிய ஆங்கிலத்தில் போதிய அளவு வெளிவரல் வேண்டும். இன்று உலகில் எழுநூறு மில்லியனுக்கு மேற்பட்ட தொகையினர் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனரெனத் தெரிகின்றது. சைவ சித்தாந்த நுட்பங்களை அகில உலகுக்கும் திறம்பட எடுத்துரைக்க வேண்டுமாயின், சைவசித்தாந்தத்தில் தீவிரப்பற்று, அதன்பல அம்சங்கள் பற்றிய ஆழமான அறிவு, ஏனைய தத்துவங்களோடு ஒப்பிடக்கூடிய தத்துவ ஒப்பியலறிவு, தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் ஆழ்ந்த புலமை, சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கி ஆங்கில மொழியில் மிகத் திறம்படப் பேசவும் எழுதவும் கூடிய தனியாற்றல் ஆகியயாவும் ஒருங்கு கைவரப் பெற்றவர் தொகை பெருகுதல் வேண்டும்.

எல்லா அம்சங்களையும் நுடபமாகவும் தெளிவாகவும் விளக்கி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மிகச்சிறந்த நூலொன்றே இன்று

சைவசித்தாந்தத்துக்கு உடனடியான தேவையாயுள்ளது. முதலில் அத்தகைய நூலொன்றை நல்ல முறையாகத் தயாரித்துக்கொண்டால் பின்னர் அதனை ஏனைய முக்கிய மொழிகளில் மொழி பெயர்ப்பித்துக் கொள்வது சுலபமாகும்.

இன்னும் இரண்டு கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு இக்கட்டுரையை முடிப்போம். இவை ஐந்து சமயம் முழுவதுக்குமே பொருந்தும். சமயம் வெறும் கோட்பாட்டுப்பெருமை பேசுவதோடு மட்டும் நின்றுவிடலாகாது. மறுமையை மட்டுமே முழுதும் நினைத்துக் கொண்டு இம்மையைப் புறக்கணித்தலாகாது. விண்ணுலகுக்குத் தயார் செய்யும் அதே வேளையில் திருஞானசம்பந்தர் கூற்றுக்கு ஒப்ப, மண்ணுலகிலும் நல்ல வண்ணம் வாழ வழியனைத்தும் செய்தல் வேண்டும். அதிலும் ஆத்மார்த்தம் பேசிச் சுயநலத்தை மட்டுமே குறியாக வாழாது சமுதாய நலன் கருதிச் சமயத்தையும் சமுதாயத்தையும் இணைத்துச் சமய அடிப்படையில் சமுதாய மேம்பாட்டுக்காக ஒவ்வொரு சமயமும் தன்னாலியன்ற அனைத்தையும் செய்தல் வேண்டும். இவ்வகையில் இன்று சமய அடிப்படையில் நின்று கொண்டு, சமயத்தையும் சமூகத்தையும் இணைத்துச் சமுதாய நலன்களுக்காகத் திட்டமிட்டுத் திறம்படச் செயலாற்றி வருகின்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரவர்கள் பாராட்டுக்குரியவராகின்றார்.

ஒவ்வொருவருடைய அகவாழ்வையும் நேர்மையும், புனிதமும் நிறைந்ததாக ஆக்குவதெ சமயக் கோட்பாடுகளின் முக்கிய நோக்கம். சமயக் கோட்பாடுகளை அர்ச்சனை, சமயச்சடங்குகள், வெளி வேடங்கள் ஆகியனவற்றுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டு அகத்தில் நேர்மை, தியாகம், பிறர் நலம் பேணல், பொறுமை முதலிய நற்பண்புகளில்லாத வாழ்வே இன்று அதிகரித்து வருகின்றது. இந்த இரட்டை வாழ்வு முற்றாக ஒழிதல் வேண்டும். சமயக் கோட்பாடு களின் உயர்வுக்கேற்ப அக்கோட்பாடுகளை அடிநாதமாகக் கொண்ட வாழ்வும் உயர்ந்ததாதல் வேண்டும். தத்துவக் கோட்பாடுகள் பரவுவதற்கு வழிவகைகளை ஆராயும் இச்சந்தர்ப்பத்தில் அக்கோட்பாடுகளுக்கும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை நெறிக்குமிடையேயுள்ள முரண்பாடுகளைக் களைந்து செயற்பட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

நன்றி : சை. சி. பெ. மலர்

21–ம் நூற்றாண்டில் உலக சைவம்

சைவத்தில் இளைஞர் பற்றுவைக்க வழிவகைகள்

சமய வளர்ச்சியும் இளைஞரும்

சைவம் வளர வேண்டுமாயின் சைவத்தை ஆதரிப்போரின் தொகை பெருகி, வளர்க்கின்றவர்களின் எண்ணிக்கை உயர வேண்டும் என்பதன்று. மதத்தை வளர்க்கின்றவர்கள், ஆதரிக்கின்ற வர்கள் ஆகியவர்களின் உள்ளம் தெளிவானதாக இருக்கவேண்டும் என்பதுதான். காலச் சூழ்நிலையில் மதத்தை வளர்க்கின்றவர்களும், ஆதரிக்கின்றவர்களும் பெருகுவார்கள். இதனால் மதம் வளர்ந்து விட்டது என்று கூறிவிட முடியாது. அதே சூழ்நிலையில், பெருகியதைப்போல் குறைந்து விடுவார்கள். முற்றிய உள்ளங்களில் காலச் சூழ்நிலையில் தூவப்பட்ட மதக் கருத்துக்களே இங்ஙனம் பெருகும்படி செய்கின்றன. மதத்தைப் போற்றி வழிபடும் கூட்டம் பெருகலாம். ஆனால் மதம் வளர முடியாது. காலச் சூழ்நிலையில் மாற்றப்பட்ட பல்லாயிரக் கணக்கான முற்றிய உள்ளங்களை நம்புவதைவிட, மதப்பற்றின் சூழ்நிலையில் மாற்றப்பட்ட இளம் உள்ளத்தை நம்புவது சால்புடைத்து. அந்த இளம் உள்ளம்தான் மதத்தை வளர்க்கும்; வாழச் செய்யும். முன்னது திடீரென்று தோன்றும் கானாற்று வெள்ளம்; பின்னது ஆற்றின் தோற்ற இடத்தில் சுரக்கும் நீரூற்று எனலாம். இளம் உள்ளம்தான் மதத்தை வளர்க்கும்; வாழச் செய்யும். முன்னது திடீரென்று தோன்றும் கானாற்று வெள்ளம்; பின்னது ஆற்றின் தோற்ற இடத்தில் சுரக்கும் நீரூற்று எனலாம். இளம் உள்ளத்தின்கண் புகுத்தப்படும் மதப்பற்றுத்தான் பல்லாயிரக் கணக்கான உள்ளங்களைப் பற்றுக்கொள்ளச் செய்யும். காலச் சூழ்நிலை எங்ஙனம் இருந்தபோதிலும் அவ்வுள்ளம் மாறாது; மங்காது. கி.பி. 7 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருஞான சம்பந்தரின் இளம் உளத்தில் படிந்த சைவப் பற்றுத்தான் பல உள்ளங்களைச் சைவத்திற்குத் திருப்பியது. சைவம் வளர்ந்தது; வாழ்கின்றது. எனவே சைவம் வளர வேண்டுமாயின், இளைஞர்களின் உள்ளங்களில் சைவக் கருத்துக்களைப் புகுத்தி அதில் பற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும்.

இன்றைய நிலை

இன்றைய சூழ்நிலை இளைஞர்களின் உள்ளங்களைச் சைவத்திற்குத் திருப்பக் கூடியதாக இல்லை. சமய வாழ்வினை நடத்தத் துணைபுரியும் சூழ்நிலையில் இன்றைய இளைஞர்கள் வாழவில்லை. ஒரு பக்கம் அரசியல் தலைவர்கள் அவர்களின் உள்ளங்களை ஈர்க்க, மற்றொரு பக்கம் ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் வெளியுலகப் பொருள்கள் அவர்களின் உள்ளங்களை இழுக்க, இவ்விரண்டிற்கும் இடையில் இன்றைய இளைஞர்கள் வாழ்கின்றார்கள். புறவாழ்வினை நடாத்த இளைஞர்களுக்கு இன்றைய உலகம் துணை செய்கின்றது; ஆனால் அகவாழ்வு நடாத்தத் துணை செய்வதாக இல்லை. மதம் எங்ஙனம் வளரும் ? சைவம் எவ்வாறு உயரும்?

இளமையிற் பழக்குதல்

இளைஞர்களின் உள்ளம் சமயத்தில் பற்றுக்கொள்ளும் வண்ணம் சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். வெளியுலக நிகழ்ச்சிகள் அவர்களின் உள்ளங்களை ஈர்க்காவண்ணம் அவர்களை வாழச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உள்ளங்கள் மாசுபடியாது தூய்மையுடன் விளங்கும். அத்தூய்மை உள்ளம் சைவப் பற்றினை வளர்க்கும். இவர்களைத் தூய்மையாக வைத்திருக்கும் சூழ்நிலை எது? கட்டுப்பாடான எளிய வாழ்க்கை, வெளியுலக நிகழ்ச்சிகளில் ஈடுபடாச் சூழ்நிலை, சமயப் பெரியோர் வாழும் இயங்களில் உறைதல், இறைவழிபாட்டில் ஈடுபடுதல் ஆகியவற்றினை இளைஞர்கள் பின்பற்றினால் சைவத்தில் பற்று ஏற்படும்; இறைவன் மீது பேரன்பு உண்டாகும். இளம் உள்ளத்தில் பெரியோர்கள் அறிவார்ந்த அன்பு முறைகளில் சைவத்தைப் புகுத்திவிட்டால், இளைஞர்கள் தாமாகவே அதில் பற்றுக்கொண்டு விடுவார்கள் என்பது திண்ணம்.

இன்றைய கல்வி நிலை

இன்றைய இளைஞர்கள் சைவத்தில் பற்றுக் கொள்ளாத வண்ணம் இன்றைய கல்வியும் தடையாக இருக்கின்றது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இளைஞர்களுக்கு ஏற்ற கல்வியாக இல்லை. புறவாழ்வினை நடாத்தத் துணைபுரியும் கல்வியாக விளங்குகின்றதேயன்றி, அகவாழ்வு நடாத்தத் துணை புரியும்

கல்வியாக இல்லை. பழங்காலக் குருகுலங்களில் இளைஞர்களது உள்ளத்திற்கும் மூளைக்கும் தகுந்த கல்வியளித்தார்கள். உள்ளம் முதலில் பண்படவேண்டும்; பின்னர் மூளை வளர வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் இளைஞர்களுக்குக் கல்வி அளித்தார்கள். உள்ளம் பண்படச் சமயக் கல்வியும், மூளைவளர அறிவியற் கல்வியும் அன்றைய இளைஞர்களுக்கு இருந்தன. உள்ளம் பண்பட்ட காரணத்தினால் சமயத்தில் பற்றுக்கொண்டு சிறந்த அகவாழ்வு (Spiritual life) நடாத்தினார்கள். மூளை வளர்ந்த காரணத்தினால் புறவாழ்வில் சிறந்த பங்குகொண்டு உயர்ந்த வாழ்க்கை நடாத்தினார்கள். இங்ஙனம் உள்ளமும், மூளையும் ஒருசேர வளரும் வண்ணம் தகுந்த கல்வியைப் பெற்றார்கள். மனம் வேறு, மூளை வேறு என்று வேறுபடுத்திக் காட்டக்கூடிய கல்வியாக இருந்தது. ஆனால் இன்றைய கல்வி இங்ஙனம் வேறுபடுத்திக் காட்டக் கூடியாத இல்லை. எனவே உள்ளமும் பண்படுவதாக இல்லை; மூளையும் வளருவதாக இல்லை. ஆக வாழ்விலும், புறவாழ்விலும் எங்ஙனம் சிறந்து வாழமுடியும்? சமயப் பற்று எப்படி உண்டாகும்? உள்ளத்திற்கும், மூளைக்கும் தகுந்த கல்வி இன்றைய இளைஞர்களுக்கு அளித்தால்தான் மதம் வளரும். வாழ்வு சிறக்கும்.

கிறித்தவர் செயல்

கிறித்துவமதம் நாளுக்குநாள் பெருகி, ஆதரிப்போர் தொகை உயருகிறதென்றால், இளைஞர்களின் உள்ளங்களில் மாறா மதப்பற்று உண்டாகும்படிச் செய்கின்றார்கள். அவர்கள் மனத்தையும் மூளையையும் ஒரு சேர, வளர்க்கின்றார்கள். இரண்டும் ஒன்றாக வளர ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கிக் கொடுக்கின்றார்கள். எனவே இளைஞர்கள் மதத்தில் மாறாப் பற்று கொள்ளுகின்றார்கள். மதம் வளர்கின்றது. மனம் வளரச் சமயக் கல்வியும், மூளை வளர அறிவியல் கல்வியும் அவர்கள் அளிக்கின்றார்கள். நம் இளைஞர்களுக்கு இத்தகைய கல்வி இல்லையே! அவர்களுக்குக்கேற்ற சூழ்நிலையைச் சைவர்களாகிய நாம் உண்டாக்கிக் கொடுக்கவில்லையே! சைவம் எங்ஙனம் வளரும்?

சைவ இளைஞர் கூட்டம்

சைவம் வளர வேண்டுமாயின் இளைஞர்களுக்கு ஏற்ற சூழ்நிலைகளை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். கிறித்துவ

இளைஞர்கள் வாரம் ஒரு முறை கூடித் தம் சமயக் கருத்துக்களைப் பேசுவது போல், சைவ இளைஞர்களும் கூடித் தம் சமயத்தைப் பற்றிப் பேச வேண்டும்; கருத்துக்களைப் பரப்ப வேண்டும். இங்ஙனம் கூடிப் பேசுவதினால் சமயப் பண்புமட்டும் வளருவதில்லை; இளைஞர் களிடையே உறவும் வளருகின்றது; சகோதர உணர்ச்சி ஊற்றெடுக் கின்றது. இவ்வுணர்வே சமயத்தை வளர்க்கும் எனலாம்; 'இறைவனின் குழந்தைகள் நாம்' என்ற எண்ணத்தையும் உண்டாக்கு கின்றது. அந்த எண்ணமே சமயத்தில் பற்றை உண்டாக்கும்.

நல்ல கல்வி

சமயம் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒன்று. புறவாழ்வின் நிகழ்ச்சிகளில் வேதனையுற்ற மனம் அகவாழ்வோடு தொடர்புடைய சமயத்தில் அமைதி காண்கின்றது; ஆறுதல் பெறுகின்றது. எனவே, சமயம் மனித வாழ்க்கைக்கு அடிப்படை எனலாம். அவ்வடிப்படை இளைஞர்களின் உள்ளங்களில் எழுப்பப்பட வேண்டும் என்பதே. நல்ல அடிப்படையின் மீது எழுப்பப்படும் கட்டிடம் தான் நிலைத்து நிற்கும்; நீடு வாழும் சமயத்தினை நிலைநாட்ட இடம் கொடுக்கும்; உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்; அதற்கேற்ற சூழ்நிலைகளை அமைக்க வேண்டும். மனமும், மூளையும் ஒரு சேர வளரும் வழி வகைகளையும் நல்ல கல்வி முறைகளையும் வகுத்துத்தர வேண்டும். அப்பொழுதுதான் சைவத்தில் இளைஞர்களுக்குப் பற்று ஏற்படும். சைவம் வளரும்.

உலக சைவம் எழுச்சி பெற எமது திருமடங்களின் திருப்பணிகள்

திருமடங்கள் வரலாற்றுப் பின்னணி

சங்ககாலத் தமிழர் வாழ்க்கையில் மடங்கள் இடம் பெறவில்லை. அவர்கள் அகத்துறவையே பெரிதென மதித்தார்கள். வடநாட்டிலிருந்து சமணம், பௌத்தம் முதலியவைகள் தமிழ்நாட்டில் பரவியிருந்தன. இந்தப் புறச்சமயங்களோடு சைவம் போர் செய்யத் தொடங்கியது. அந்தப் போரை நிகழ்த்தியவர்கள் இலகுலீச பாசுபதர், காளாமுகர், காபாலிகர் என்ற வடநாட்டுத் தொடர்புடைய சைவத்துறவிகளேயாவர். கோமடம், கோளகி மடம், காபாலிகர் மடம், வீர சைவமடம், வாரணாசிக் கொல்லாமடம், பிட்சாமடம் என்பவை தமிழ் நாட்டில் இருந்தன. அம்மடங்களின் தலைவர்கள் மடபதி என்றழைக்கப்பட்டனர். அவர்கள் அரசர்களுக்குக் குருமார்களாகவும் இருந்தார்கள். இராஜராஜன் குரு ஈசானசிவ பண்டிதர். 'சித்தாந்தசாரம்' என்ற நூலை எழுதியவர். சர்வசிவ பண்டிதர் இராஜேந்திரனின் குரு. சுவாமி தேவர் ஸ்ரீ கண்டசிவன், விக்கிரம சோழனுடைய குருவாக இருந்திருக்கலாம். அவரே 'சிந்தாந்த ரத்தினாகரம்' என்ற நூலை இயற்றியவர். திரிலோசன சிவாசாரியர் 'சித்தாந்த சாராவளி' என்ற நூலை இயற்றியவர்.

மடங்கள் கல்விச்சாலைகளாகவும், அமுதளிக்கும் அறச்சாலைகளாகவும், அடியார்கள் உறைவிடங்களாகவும், மருத்துவசாலைகளாகவும் பயன்பட்டன. சோழநாட்டில் அக்காலத்தில் இறைவன், நாயன்மார், அரசர், குறுநிலமன்னர், மற்றும் பல பெயர்களைக் கொண்ட எண்ணிறந்த மடங்கள் இருந்தன. தமிழ்ச் சைவமடங்களும் இருந்தன. திருச்சத்திமுற்றத்து முதலியார் சந்தானம், திருவிடைமருதூர் மாளிகை மடத்து முதலியார் சந்தானம், சென்னபக்குடி முதலியார் சந்தானம், மருதப் பெருமான் சந்தானம் என்ற மடங்களைச் சிறப்பாகச் சொல்லலாம். இந்த மடங்களேயல்லாமல் கோயில்களில் குகைகள் என்ற ஒருவகை மடங்கள் இருந்தன. சைவத்துறவியர் அங்கிருந்தனர். தவசிகள், ஆண்டார்கள், யாத்திரிகர்கள் முதலியவர்களுக்கு உணவளித்தார்கள். தலைவர்களும் அவர்கள் மாணவர்களும் தேவாரத் திருமுறைகளைப் பாடுவதில் வல்லவராகவும் இருந்தார்கள்.

இளைஞர்கள் வாரம் ஒரு முறை கூடித் தம் சமயக் கருத்துக்களைப் பேசுவது போல், சைவ இளைஞர்களும் கூடித் தம் சமயத்தைப் பற்றிப் பேச வேண்டும்; கருத்துக்களைப் பரப்ப வேண்டும். இங்ஙனம் கூடிப் பேசுவதினால் சமயப் பண்புமட்டும் வளருவதில்லை; இளைஞர் களிடையே உறவும் வளருகின்றது; சகோதர உணர்ச்சி ஊற்றெடுக் கின்றது. இவ்வுணர்வே சமயத்தை வளர்க்கும் எனலாம்; 'இறைவனின் குழந்தைகள் நாம்' என்ற எண்ணத்தையும் உண்டாக்கு கின்றது. அந்த எண்ணமே சமயத்தில் பற்றை உண்டாக்கும்.

நல்ல கல்வி

சமயம் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒன்று. புறவாழ்வின் நிகழ்ச்சிகளில் வேதனையுற்ற மனம் அகவாழ்வோடு தொடர்புடைய சமயத்தில் அமைதி காண்கின்றது; ஆறுதல் பெறுகின்றது. எனவே, சமயம் மனித வாழ்க்கைக்கு அடிப்படை எனலாம். அவ்வடிப்படை இளைஞர்களின் உள்ளங்களில் எழுப்பப்பட வேண்டும் என்பதே. நல்ல அடிப்படையின் மீது எழுப்பப்படும் கட்டிடம் தான் நிலைத்து நிற்கும்; நீடு வாழும் சமயத்தினை நிலைநாட்ட இடம் கொடுக்கும்; உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்; அதற்கேற்ற சூழ்நிலைகளை அமைக்க வேண்டும். மனமும், மூளையும் ஒரு சேர வளரும் வழி வகைகளையும் நல்ல கல்வி முறைகளையும் வகுத்துத்தர வேண்டும். அப்பொழுதுதான் சைவத்தில் இளைஞர்களுக்குப் பற்று ஏற்படும். சைவம் வளரும்.

உலக சைவம் எழுச்சி பெற எமது திருமடங்களின் திருப்பணிகள்

திருமடங்கள் வரலாற்றுப் பின்னணி

சங்ககாலத் தமிழர் வாழ்க்கையில் மடங்கள் இடம் பெறவில்லை. அவர்கள் அகத்துறவையே பெரிதெனை மதித்தார்கள். வடநாட்டிலிருந்து சமணம், பௌத்தம் முதலியவைகள் தமிழ்நாட்டில் பரவியிருந்தன. இந்தப் புறச்சமயங்களோடு சைவம் போர் செய்யத் தொடங்கியது. அந்தப் போரை நிகழ்த்தியவர்கள் இலகுலீச பாசுபதர், காளாமுகர், காபாலிகர் என்ற வடநாட்டுத் தொடர்புடைய சைவத்துறவிகளேயாவர். கோமடம், கோளகி மடம், காபாலிகர் மடம், வீர சைவமடம், வாரணாசிக் கொல்லாமடம், பிட்சாமடம் என்பவை தமிழ் நாட்டில் இருந்தன. அம்மடங்களின் தலைவர்கள் மடபதி என்றழைக்கப்பட்டனர். அவர்கள் அரசர்களுக்குக் குருமார்களாகவும் இருந்தார்கள். இராஜராஜன் குரு ஈசானசிவ பண்டிதர். 'சித்தாந்தசாரம்' என்ற நூலை எழுதியவர். சர்வசிவ பண்டிதர் இராஜேந்திரனின் குரு. சுவாமி தேவர் ஸ்ரீ கண்டசிவன், விக்கிரம சோழனுடைய குருவாக இருந்திருக்கலாம். அவரே 'சிந்தாந்த ரத்தினாகரம்' என்ற நூலை இயற்றியவர். திரிலோசன சிவாசாரியர் 'சித்தாந்த சாராவளி' என்ற நூலை இயற்றியவர்.

மடங்கள் கல்விச்சாலைகளாகவும், அமுதளிக்கும் அறச்சாலைகளாகவும், அடியார்கள் உறைவிடங்களாகவும், மருத்துவசாலைகளாகவும் பயன்பட்டன. சோழநாட்டில் அக்காலத்தில் இறைவன், நாயன்மார், அரசர், குறுநிலமன்னர், மற்றும் பல பெயர்களைக் கொண்ட எண்ணிறந்த மடங்கள் இருந்தன. தமிழ்ச் சைவமடங்களும் இருந்தன. திருச்சத்திமுற்றத்து முதலியார் சந்தானம், திருவிடைமருதூர் மாளிகை மடத்து முதலியார் சந்தானம், சென்னபக்குடி முதலியார் சந்தானம், மருதப் பெருமான் சந்தானம் என்ற மடங்களைச் சிறப்பாகச் சொல்லலாம். இந்த மடங்களேயல்லாமல் கோயில்களில் குகைகள் என்ற ஒருவகை மடங்கள் இருந்தன. சைவத்துறவியர் அங்கிருந்தனர். தவசிகள், ஆண்டார்கள், யாத்திரிகர்கள் முதலியவர்களுக்கு உணவளித்தார்கள். தலைவர்களும் அவர்கள் மாணவர்களும் தேவாரத் திருமுறைகளைப் பாடுவதில் வல்லவராகவும் இருந்தார்கள்.

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில், 'குகையிடிகலகம்' சில சுய நலக்காரர்களால் ஏற்பட்டது. ஆனால் அவ்வரசன் காலத்திற்குப் பின்னர்தான் குகைகள் அதிகமாயின என்று கல்வெட்டுக்களால் தெரிகிறது.

சைவத்தின் பொற்காலம்

பிற்காலச் சோழர் காலத்தில்தான் ஆயிரக்கணக்கான கோயில்கள் கட்டப்பட்டன என்றும், சிறந்த தமிழ்ச்சைவ இலக்கிய நூல்களும், பிறநூல்களும் எழுந்தன என்றும், தமிழ் நாடுமுழுவதும் சைவமடங்கள் பரவியிருந்து சமயத் தொண்டாற்றின என்றும் அறிவோம். கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழகேரளம், பழையாறையருகில் சோழன் மாளிகை, காஞ்சியில் பொன்மாளிகை போன்ற பெரிய அரண்மனைகளில் சோழமன்னர்கள் வாழ்ந்தார்கள் என்று கல்வெட்டுக்களால் அறிகிறோம். தமக்கென்று கட்டிய அவைகள் எல்லாம் மறைந்து போயின. ஆனால் அவ்வரசர்கள் இறைவனுக்கு எழுப்பிய கோயில்கள் சமயச் சின்னங்களாகவும், மௌனமதப் பாதிரிகளாகவும் (Silent missionaries) அன்றும், இன்றும், என்றும் நின்று நிலவுகின்றன. பிற்காலச் சோழர்காலமே சைவசமயத்தின் பொற்காலம். அக்காலம் எக்காலம் வருமோ அப்போதுதான் நம் நாட்டிற்கு நற்காலம். அது என்று வருமோ! இறையருளால் விரைவில் வருவதாக!

மேன்மைகொள் சைவநெறி விளங்குக உலகமெலாம்.

சைவ மடங்கள் சைவ சமயத்தை வளர்ப்பதற்கென்றே ஏற்பட்டவை. நாடாண்ட மன்னரும் பிறரும் இந்நன்னோக்கத்திற்கே செல்வத்தையும் பல வேலி நிலங்களையும் இம்மடங்களுக்கு உதவினர்; பல கோவில்களை இம்மடங்களின் ஆட்சியில் விட்டு வைத்தனர்; அறிவிலும் ஒழுக்கத்திலும் சமயசாத்திரக் கல்வியிலும் முதிர்ந்த பெருமக்களை மடத்துத் தலைவர்களாக வைத்தனர். பிற்காலத்தில் இந்நிலை மாறியது. மடாதிபதி ஜமீனை ஆட்சி புரியும் ஜமீன்தாரைப்போல, மடத்துக்குரிய வரவு செலவுகளிலும் வழக்குகளிலும் பெரும்பொழுதைப் போக்கத் தொடங்கினர். எனவே, கால வேறுபாட்டாலும் அரசியல் மாற்றத்தாலும் சைவ சமயப் பிரச்சாரம் இல்லாமையாலும் பொதுமக்களுக்கும் சைவ மடங் களுக்கும் தொடர்பு ஏற்படவில்லை. பொதுமக்களுக்குப் பொருள் விளங்காத நிலையில் சில நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தலும்,

படித்த ஒரு சிலருக்குப் பொன்னாடை போர்த்தலும், ஆண்டு விழாக்களில் சமயச் சொற்பொழிவு செய்வோருக்குச் சிறிது பொருள் கொடுப்பதுமே மடங்கள் செய்யும் சைவப்பணிகளாக இருந்து வந்தன. இன்று இந்த நிலை மாறி, இவற்றோடு பொதுமக்களுக்குப் பள்ளிக்கூடம் வைத்தல், மருத்துவ நிலையம் அமைத்தல், திருக்குறள் போன்ற அரிய நூல்களை வெளியிடுதல் முதலிய தொண்டுகளில் மடங்கள் இறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

சைவம் வளர வழிகள் : மடங்களின் திருப்பணி

1. பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எளிய வகையில் சைவ சமய வரலாறு, சைவ சமயக்கொள்கைகள், சைவம் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ள தன்மை, திருக்கோவில் களில் சிறப்பு, அவற்றை மக்கள் பயன்படுத்தும் முறை, சைவ சித்தாந்தத்தின் தெளிவான கருத்து – இவற்றைச் சிறு சிறு நூல்களாக வெளியிட்டுப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

2. பல சிற்றூர்களில் தொடக்கநிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்துச் சைவப் பிள்ளைகட்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டும். அப்பள்ளிகளில் சிறுவர்க்குச் சமய அறிவு கற்பிக்கப்படல் வேண்டும். அச்சிற்றூர்களில் மருத்துவ மனைகள், படிப்பகங்கள், நூல்நிலையங்கள் முதலியவற்றை அமைத்துப் பொதுமக்களுக்கும் மடத்துக்கும் தொடர்பு உண்டாக்கல் வேண்டும். ஏழாயிரம் கற்களுக்கு அப்பாலிருந்து இந்நாட்டுக்கு வந்த கிறித்தவப் பாதிரிமார் இவற்றைச் செய்தமையாற்றான் தங்கள் சமயத்தை வளர்த்தனர் என்ற உண்மையை நாம் உணர்தல் வேண்டும்.

3. சைவ சித்தாந்த சாத்திர நூல்களை விஞ்ஞானக் கண்ணாடி வழியாகக் காட்டிப், பின் மனோதத்துவ முறையில் விளக்கிக், கடைசியில் சிவ தத்துவமும் பொருள் உண்மையில் உறைந்து நிற்கச் செய்யலாம். இதற்காகக் கோடை விடுமுறையில், சைவ இளைஞர்களுக்கு – முக்கியமாகக் கல்லூரி மாணவர்களுக்கு – போக்குவரத்து உணவு உறையுள் வசதிகள் தந்து சைவசித்தாந்த வகுப்புக்கள் நடத்தலாம்.

மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் காலத்தில் சுருங்கி விட்ட அளவைவிட, இக்காலத்தில் சைவம் மோசமாகி விடவில்லை. எச்சரிக்கையாக இருந்து எதிர் காலத்திலும் சைவம் தழைத்தோங்கச் செய்யவேண்டுவதே நமது முன்னணி வேலை.

4. ஆங்கில அறிவும் தமிழ் அறிவும் பெற்ற சமயப் பிரசாரகரை நியமித்து ஒவ்வொரு மடமும் மக்களிடைச் சமயப் பிரசாரம் செய்தல் வேண்டும். வீணானவையும் வாழ்க்கைக்குப் பயன்படாதனவுமான கதைகளைச் சொல்லி மக்களை மேலும் மூடர்கள் ஆக்காமல் சமய நெறியில் வாழ வழி அமைத்துத் தருதல் வேண்டும்.

5. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்ற முறைபற்றிப் பொதுமக்களுக்குச் சிறிதும் பயன்தராத விழாக்களையும், ஆரவாரங்களையும் ஒழித்து, அவற்றிற்குச் செலவாகும் பணத்தை ஏழைச் சைவ மக்களுக்கு உதவி, அவர்களைச் சிவநெறியில் வாழ்விக்க வழிசெய்தல் வேண்டும்.

6. திருமுறை ஓதுதல்

கோவில்களில் காலை மாலை வழிபாட்டின்போது திருமுறைப் பாடல்கள் பாடப்படுதல் வேண்டும். மாலை நேரங்களில் ஒரு மணி நேரமாவது சிறந்த திருப்பதிகங்களைப் பாடி மக்கள் உள்ளங்களைச் சமயத்துறையில் திருப்பத் தக்கவாறு ஏற்பாடு செய்தல் வேண்டும். அருச்சனை முதலியன தமிழில் நடைபெற வேண்டும் என்னும் கிளர்ச்சி வலுத்து வருகிறது. அங்ஙனம் அவை தமிழில் நடைபெறு மாயின், தமிழ் மக்கள் மிகப்பலராகக் கோயிலுக்கு வருவர் என்பதில் ஐயமில்லை. சிறந்த ஓதுவார்கள் இசையோடு பொருள் உணர்ந்து பாடுவாராயின், பொதுமக்கள் கோயிற்செயல்களில் ஈடுபாடு கொள்வர் என்பது திண்ணம். சைவப் பெருமக்கள் இத்துறையில் முயலவேண்டுமென்பது எனது பணிவார்ந்த வேண்டுகோள்.

7. பொதுமக்கள் தொண்டு

சைவ மக்கள் தங்கள் இல்லங்களிற் பிறக்கும் குழந்தைகளுக்குச் சைவப் பெயர்கள் வைப்பது நல்லது. சிவநெறிச் செல்வன், தேவாரச் செல்வன், நெடுமாறன், கோட்புலி, கண்ணப்பன், கழற்சிங்கன் என்றாற்போல நாயன்மார் பெயர்களையும், திருமுறைகளில் வரும் அரும் பெயர்களையும் வைத்து வழங்குதல் பழமையைப் புதுப்பித்து நிலைக்கச் செய்வதாகும். இவ்வாறே பெண் பிள்ளைகளுக்கு மங்கையர்க் கரசி, சிவ அரசி, வெண்காட்டு நங்கை, சந்தன நங்கை முதலிய சைவப் பெயர்களை வைக்கலாம்.

இன்றைய சூழ்நிலையில் சைவம் வளர நாம் நிறைவேற்ற வேண்டிய எட்டு உடனடிச் செயல்திட்டங்கள்.

மேன்மைகொள் சைவநீதி மேதினியில் ஓங்குக!

முனைவர் ச. சாம்பசிவனார், மதுரை.

முன்னுரை :

சைவ சமயத்தைப் பற்றிக் கூறவந்த அருளாளர்கள், சைவ நன்னெறி என்றும், அருமறைச் சைவம் என்றும் மேன்மைகொள் சைவம் என்றும் பெருமையாக பேசுவர். அத்தகு சைவத்தின் சிறப்புக் குறித்தும். இன்றுள்ள நிலைகுறித்தும், இனி மேதினியில் சிறந்தோங்க யாதுசெயல் வேண்டும் என்பது குறித்தும் ஒரு சிறிது விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பழம்பெருமை சைவம்

சைவ சமயம் மிகமிகத் தொன்மையானது என்பது அறிஞர் பலரும் ஒப்புக்கொண்ட உண்மை. சிந்துவெளி நாகரிக காலந் தொட்டே சிவ வழிபாடு இருந்து வருவது என்பர் அறிஞர். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணத்தில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிக மிக நுட்பமாக மொழியப்பட்டுள்ளன. அவ்வாறே வான்புகழ் வள்ளுவரும், பல்வேறு குறட்பாக்கள் வாயிலாகச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மொழிந்துள்ளார். திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே என்று அறிஞர் பலர் நிறுவியுள்ளனர். சங்க இல்கியங்களில் சைவ சித்தாந்தம் வள்ளுவருக்குப் பின், காரைக்காலம்மையார் காலத்திலும், அதன் பின் நாயன்மார்கள் காலத்திலும் மேலோங்கி நின்றது. அதன் பின் அவ்வப்போது தோன்றிய அருளாளர்கள் பலரால் சைவம் தழைப்பதாயிற்று.

நால்வர் காட்டிய நன்னெறி

நான்குபேர் போனவழியே நாமும் போவோம் என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. அந்த நான்குபேர் யாவர்? சைவசமய குரவர்கள்

எனப் போற்றப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வரேயர்வர், அவர்கள் சென்ற நெறி இவ்வுலகிற்குக் காட்டிய நன்னெறி, சைவ நெறி. அவர்கள் வாழ்ந்த காலம் சைவசமயத்தின் பொற்காலம்.

அன்பை அடிப்படையாகக் கொண்டது சைவ சமயம். அன்பே சிவம் என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படை கொள்கை.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

(திருமந்திரம் 270) என்பது திருமூலர் திருவாக்கு.

தொண்டின் மூலமாகவே சைவசமயம் தழைத்தது. அறுபத்துமூன்று நாயன்மார்களின் வாழ்க்கையே இதற்குச் சான்று.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம் மூவரின் வாழ்க்கை வரலாற்றை ஊன்றி நோக்கினால், அவர்கள் எம்பெருமானுக்கு மட்டுமன்று, சமுதாயத்திற்கும் தொண்டாற்றிய சிறப்புப் புலனாகும். அவர்கள் எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருள் பெற்றமையால், வியக்கத்தக்க செயல்களையெல்லாம் செய்துகாட்டினர். அதனால் அன்று, மக்கள் அனைவரும் அப்பேராற்றலை நேரில் கண்டும் கேட்டும் சைவசமயம் மிகமிக உயர்ந்தது என்றெண்ணிச் சைவம் சார்ந்து இறையருளுக்கு உரியராயினார்.

இன்றைய நிலை

அன்று மேலோங்கி நின்ற மேன்மைகொள் சைவசமயத்தின் இன்றைய நிலை யாது எனச் சிந்தித்தல் ஒவ்வொரு சைவனின் கடமையாகும்.

சைவசமயஞ் சார்ந்தோர், இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் இருக்கின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும், சைவ சமயத் தத்துவங்களை அறிந்தவர்களா? திருக்கோயில் வழிபாட்டு முறைகளைத் தெரிந்தவர்களா? சைவ சமயத் தத்துவத்தை அழகுற எடுத்துக்கூறும் சிவஞான போதம் போன்ற மெய்நூல்களைப் பற்றி ஒரு சிறிதேனும் அறிந்துள்ளார்களா? சம்பந்தர் போன்ற நாயன்மார்களின் வாழ்க்கைமுறை பற்றியும் அவர்கள் அருளிய

திருமுறைகளைப் பற்றியும் நன்கு அறிவார்களா? இவையெல்லாம் கேள்விக் குறிகளே.

சைவம் இன்றும் வாழ்கின்றது. யாரால் வாழ்கிறது? சைவ சமயத்தவர்களால் இல்லை. எம்பெருமான் திருவருளினால் வாழ்கின்றது. சைவ சமய நன்னெறிகளை உலகிற்கு உணர்த்துவதற்கென மிகப்பெரும் நிறுவனம் இல்லை. அவ்வப்போது மாநாடுகளோ, கருத்தரங்குகளோ, சமயச் சொற்பொழிவுகளோ நடத்துவதால் மட்டுமே சைவம் வளர்ந்துவிடாது.

இன்று நம்மிடையே ஞானசம்பந்தர் போன்ற இறையருள் பெற்ற அருளாளர்கள் இல்லை. சித்து விளையாடல் புரியும் ஆன்மீகவாதிகள் பலராக உள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் தாம்பெற்ற அரிய சித்துக்களை மன்பதைக்கென்று பயன்படுத்தாமல் தமது சொந்தவாழ்க்கை முன்னேற்றத்திற்காகப் பயன்படுகின்றனர். மற்றும் சிலர், சித்துக்கள் என்னும் பெயரால், வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கத் தவமறைத்து அல்லவை செய்பவர்களாக உள்ளனர். இதனால் மக்கள் தாம் வணங்கும் கடவுள்மீதுகூட வெறுப்புக்கொண்டு பிற சமயத்தைச் சார்ந்து ஒழுகும் நிலைக்கு ஆளாகின்றனர்.

தமிழ்நாட்டில் மாதம் தவறாமல் சமயச் சடங்கு அல்லது திருவிழா நடந்துக்கொண்டுதான் இருக்கின்றது. அத்தகு நாட்களில் திருக்கோயிலுக்குக் கூட்டம்கூட்டமாகச் செல்வர். பலரோடு சேர்ந்து அரோகராப் போடுவர். ஆனால் சமய உண்மைகள் பற்றித் தெரியார். மற்றும் சிலர் போலித்துறவியர் வலையில் அகப்பட்டுத் தம் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கின்றனர். மகளிர் சிலர் தம் கற்பென்னும் திண்மையைக் கூடப் பறிகொடுத்து வருகின்றனர். வேறு சிலர், தம் சமயத்தின் தத்துவமோ உண்மையோ தெரியாதவர் களாய்ப் பிற சமயத்தவரின் இடைவிடாச் சொற் பொழிவுகளாலும் பிறவற்றாலும் உந்தப்பட்டு, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றி வந்த தமது ஒப்புயர்வற்ற சமயத்தைக் கைநழுவ விட்டுவிட்டுப் புறச்சமயத்தைச் சார்ந்துவிடுகின்றனர்.

மற்றும் சைவ சமயத்தினரில் சிலர், சாதிவேறுபாடுகளைத் தலைமேற்கொண்டு நடப்பதால், மற்றவர்கள் வெறுப்புற்றுப் புறச்சமயம் சார்ந்துவிடுகின்றனர். இன்னும் தீண்டாமைப் பேய் நம்மைவிட்டு முற்றிலும் அகன்று விட்டதாகச் சொல்லமுடியாது.

இப்பெருங்குறை காரணமாகப் பலர், வேற்றுச்சமயம் சார்ந்து விடுகின்றனர்.

இத்தகைய காரணங்கள் இன்னும் பல உள. சைவ சமயம் வளர உடன்டியாக நாம் மேற்கொள்ளவேண்டுவன சில உள:-

உடனடிச் செயல் திட்டங்கள்

1. அன்பின் வழியது உயிர் நிலை என்றார் வள்ளுவர். அன்பே சிவம் என்றார் திருமூலர். நாம் எவ்வுயிரிடத்தும் அன்பாக இருத்தல் வேண்டும். நமக்குள்ளே சாதிகள் – சாதிப் பூசல்கள். உயர்ந்தவர் – தாழ்ந்தவர். செல்வர் – ஏழை. படித்தவர் – படிக்காதவர் என்றெல்லாம் பார்க்கின்றோம். சைவ சமயஞ் சார்ந்தோர் அனைவருமே ஓரினம் – ஒருகுலம் என்று எண்ணி ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும். இங்கே ஒரு நிகழ்ச்சி உண்மையாக நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவது பொருந்தும்.

மதுரைமாநகரில், ஆட்டோவில் கணவன் – மனைவி (இந்துக்கள்) இருவர் வந்து கொண்டிருந்தனர். இடையே ஓர் விபத்து. ஆட்டோவிலிருந்து இருவரும் கீழே விழுந்து. அடிபட்டு மயங்கிய நிலையிற் கிடக்கின்றனர். அவ்வழிலே வந்தவர்கள் அனைவருமே ஐயோ பாவம் என்று முணுமுணுத்துக்கொண்டு சென்றனரேயன்றி அவர்களும் நம்மவர்கள்தாமே என்று எண்ணி உதவி செய்ய முன்வந்தாரிலர். ஆனால் அவ்வழியே வந்த இரு பெண்கள், வேற்றுச் சமயத்தைச் சார்ந்தவர்கள், கீழே விழுந்துகிடந்த அவர்களை தூக்கி அமரவைத்து, அங்கு வந்த வேறொரு ஆட்டோவில் அவர்களை இருத்தி தாமும் உடன் சென்று, அருகிலிருந்த மிகப்பெரிய மருத்துவமனையில் நிகழ்ந்ததைக் கூறிச் சேர்த்துவிட்டுச் சென்றுவிட்டனர். இத்தகைய மனப்பான்மையும் தொண்டுள்ளமும் கொண்டிலங்கும் சமயம் தழைக்குமா? நாம் உண்டு நமது வேலை உண்டு. எவர் எப்படிப் போனால் நமக்கென்ன என்றிருப்போரால் சமயம் தழைக்குமா? அன்பினாலே தான் சமயம் வளரும் என்பது ஆணித்தரமான உண்மை. நம் ஆன்றோர்களும் சமயச் சான்றோர்களும் அன்பின் வழி வாழ்ந்து காட்டியவர்கள்.

எனவே சைவ சமயத்தில் உண்மையான பற்றுக் கொண்டிருப்பவர்கள், உடனடியாகப் பின்பற்றத்தக்க பண்பு அன்புடைமையேயாம்.

2. என்கடன் பணிசெய்து கிடப்பதே என்றார் நாவுக்கரசர். தூய தொண்டினாலேயேதான் ஒரு சமயம் வளரமுடியும். வெறும் பேச்சினால் மட்டும் வளர்ந்துவிடாது. (ஆனால் சைவர்கள், தம் சமயத்தைப் பற்றிப் பேசுவதுகூடக் கிடையாது.)

3. சமயம் நம் அன்றாட வாழ்க்கைக்கு உதவுமா? என்றுதான் பலரும் கேட்கின்றனர். எங்கள் சமயம் மேலானது. அரிய தத்துவங்களைத் தன்பாற்கொண்டது. உலகத்து பேரறிஞர் பலராலும் ஒருங்கே பாராட்டப்படுவது என்று கூறினால் யாரும் செவி சாய்ப்பதில்லை. வறுமையினாலே வாடியோர், படிக்க வசதியற்றோர், சரியான மணமகனோ மணமகளோ கிடைக்கப்படாதோர், நோயுற்றோர், பிறராலே கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்றோர் – இவ்வாறு பல்வேறு திறத்தினர், தாம் சார்ந்திருக்கின்ற சமயமோ சமயத்தைச் சார்ந்த பெரியவர்களோ ஆதரவு தாராமையால், மெல்ல மெல்ல வேற்றுச் சமயத்தைச் சார்ந்துவிடுகின்றனர். இவ்வாறு நம்மிலிருந்து சென்றவர்கள் ஏராளம். இனியேனும் அவ்வாறு செல்லாமலிருக்க ஏதாவது வழிவகை செய்யவேண்டாமா? சைவர்களில் செல்வந்தர்கள் இல்லையா? அறிவுடையவர்கள் இல்லையா? செயலாக்க வீரர்கள் இல்லையா? இருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஒருமுகப்படுத்த – சைவசமயத்திற்குப் பாடுபடத் தூண்டும் ஓர் அமைப்பு உண்டு. அத்தகைய ஓர் அமைப்பு உலக சைவப் பேரவைக்கு நாம் உறுதுணையாகச் செயல்படவேண்டும்.

4. சிவபெருமானே தன் உடம்பில் ஒரு பாதியை பெண்ணுக்குத் தந்தான். அத்தகைய பெருமை பெற்றது. நமது சைவசமயம் என்றெல்லாம் கூறுகின்றோம். ஆனால் நம் சைவப் பெண்களுக்கு நாம் என்ன செய்தோம்? கணவன் இறந்துவிட்டால் விதவைக் கோலம்பூண்டு, பேணுவார் யாருமின்றிக் கூலிவேலை செய்பவர்கள், தெருக்களில் இட்லிக்கடை வைத்து வயிறு பிழைப்போர், கணவனால் கைவிடப்பட்டோர், திருமணத்தில் வெறுப்பு வந்து வாழ்க்கை முழுவதும் கன்னியாகவே காலம் கழிப்போர் எனப் பலராக உள்ளனர். இத்தகையோரிற் சிலர், பிற மதத்தவரால் ஈர்க்கப்பட்டு மதம் மாறிப் போகின்ற நிலையும் உண்டு. எனவே அக்காலத்தில் இருந்ததுபோல் இத்தகைய மகளிர்க்கெனக் கன்னி மாடங்கள் பல உருவாதல் இன்றியமையாதது. இம் மாடங்களும் சைவத் திருக்கோயில்களுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும் இருத்தல் வேண்டும்.

5. சைவசமயத்தைச் சார்ந்த மிகப்பெருஞ்செல்வந்தர்கள், பள்ளிகளையும் கல்லூரிகளையும் உருவாக்கிப் பிற கல்வியுடன், சைவசமயக்கல்வியும் கற்பித்தல் வேண்டும்.

6. தமிழகத்தில் வேதாந்த மடங்கள் பலவுண்டு. ஆங்காங்கே வேதாந்தத்தை முறையாகப் பயின்றோர், மடங்களில் அல்லது தாம் வாழுமிடங்களில் ஐவர் அறுவர் ஆனாலும் அவர்கட்கு முறையாக வேதாந்தத்தைக் கற்பிக்கின்றனர். அத்தகைய நிலை சைவசமயத்தில் இல்லை. இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தில் அஞ்சல்வழிக் கல்விமூலம் சைவ சித்தாந்தத்தைக் கற்பிப்பது ஓரளவு மனநிறைவு தருகின்றது. உலகச் சைவப் பேரவை எனும் ஓர் அமைப்புத்தோன்றி உலகில் பல்வேறு நாடுகளிலும் மாநாடுகள் கூட்டிச் சைவ சமயத்தின் மேன்மையை உலகறியச் செய்வதும் போற்றத்தகும். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் தோற்றுவித்த சைவப் பாடசாலைகள் மீண்டும் தமிழகமெங்கும், ஏன் வெளிநாட்டிலும் உருவாக்கப்பட வேண்டும். சைவசமய – சாத்திர – தோத்திரங்களில் ஆழ்ந்த புலமையுடையோர் ஆசிரியர்களாக இருந்து, மாணவர்களுக்குக் கற்பிப்பது இன்றியமையாதது. அவற்றில் படித்துப் பட்டம் பெற்றோர்க்குத் திருக்கோயில்களில் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும்.

7. சைவசமயம் சார்ந்தோர், தம் குழந்தைகட்கு இளமை தொட்டே, தம் சமய உண்மைகளைச் சொல்லி கொடுக்கவேண்டும். காலை எழுந்தவுடன் – உண்ணும்போது – உறங்கச்செல்லும்போது ஒவ்வொரு தேவாரம் அல்லது திருவாசகப் பாடலைச் சொல்லும் பழக்கத்தைக் கொண்டுவரவேண்டும். இதற்குப் பெற்றோர்களே முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

8. முடிவாகக் கூறுவதானால், ஒவ்வொரு சைவக் குடும்பமும் அந்தந்த ஊரிலே உள்ள சைவத் திருக்கோயிலோடு தொடர்புடையதாக விளங்கவேண்டும். பிறப்பு – இறப்புகளைக் கூடப் பதிவு செய்யும் ஆவணக்களரியாகவும் திருக்கோயில் திகழ்வது சிறப்பு.

முடிவுரை :

உலகம் வாழவேண்டும். உலகத்து உயிர்கள் வாழவேண்டும் என்று எண்ணியது பண்டைச் சைவசமயம். அதனால்தான், அனைத்துயிர்களும் வாழ, முதற்கண் மழைபொழிய வேண்டும், என்று வேண்டினர். மழை பொழிந்தால்தான் வளம் சுரக்கும். வளம்

சுரந்தால்தான் ஆட்சி நீதியுடன் திகழும். ஆட்சி நீதியுடன் திகழ்ந்தால்தான் உயிர்கள் எவ்விதக்குறையுமின்றி வாழும். உயிர்கள் குறைவின்றி வாழ்ந்தால்தான் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கமுடியும் என்று முன்னோர் வகுத்துக் கூறினர்.

ஆம், மேலே கூறிய கருத்துக்களை மனதிற்கொண்டு, செய்யத் தக்கவற்றை உடனடியாக மேற்கொண்டால், மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் ஓங்கும் என்பது திண்ணம்.

வான்முகில் வாழா அது பெய்க; மலிவளம் சுரக்க. மன்னன்
கோன்முறை அரசுசெய்க: குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க: நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

("சைவ உலக"க் கட்டுரைச் சுருக்கம்)

ACTION PLAN FOR SAIVA REVIVAL

Let Saivism Prosper

In this very stimulating article, Prof. Sambasivannar, an eminent Saivite scholar and also the Editor of Tamil Marutham bemoans the decadence of the saivites throughout the world and suggests a number of practical means of reviving Saivism so that it becomes an active force again.

By recalling the deeds of the FOUR saiva saints and the kinds of things they accomplished. he draws inspiration for this revival. These saints exemplified the life of pure LOVE of selfless social services. And furthermore they also exemplied a life of universal love that knew no barriers of caste, religion or sexuality. They were also bold and entered into spiritual combat of a vigorous kind to defeat the forces of evil in their day.

These Nayanmars though gifted with divine powers with which they effected a number of miracles, they were all done in the context of alleviating the pains and miseries of the ordinary people who sought their help. They never used these powers either to accumulate wealth for themselves or seduce innocent maidens. They were pure in spirit and went about the whole country to bring about a social revolution on the principle of love is SIVA. Thiru Jnana Sambanther made even the members of the lowly castes sleep in the middle hall of a Brahmins home. Apputhi Adikal, though a Brahmin worshipped ThiruNavukkarasar, a non Brahmin. He spend all his wealth to render a number of social services all in the name of Appar though he knew Appar only by word of mouth.

In ancient Tamil Nadu, during the period of great revival, a place of eminence was given to the women folk. Some of them have been raised to the status of Nayanmar. There were monasteries for women called kanni maadam where women can take shelter and practice the life of austerity. Women who lost their husband, or women disinterested in marriage enjoyed protection and seclusion in such centres doing services to God and people.

Nowadays though the Saivites are spread throughout the world, they are not leading saiva way of life. No body seems to know even the rudiments of Saivism let alone the classics such as Sivajnana Botham, Peria Puranam and so forth. The Saivite scholarship has declined immensely.

There are also no institution of an international stature to promote and foster saiva scholarship of a meaningful kind. Also there are many charlatans who have entered Saivism masquerading as swamijees but deep inside are really sex maniacs who are only bent on seducing the maidens. The ignorant people fall prey to them. Lacking suitable leadership, who like Appar and so forth are genuinely concerned with their welfare, the ordinary people fall prey to the malicious propaganda of foreign religions who are interested only in converting people to their faith.

The Saivite scholars who have become disguised Vedanties are unable to explain and relate the central tenets of Saivism to problems of ordinary living. Religion has become divorced from life, from practical concerns of ordinary people.

In order to arrest all these decays, we must institute sound saiva scholarship throughout the world. In this the services of World Saiva Council is highly commendable. We must also rejuenate the saiva school concept. Srila Sri Arumuga Navalar. There must be centers of sound Saiva scholarship of all kinds. The most important however is Saiva Education for young children. The parents must come forward and establish schools of various sorts where the essentials of Saivism are laught to children right from the early days. The parents must become good models themselves by practicing the essentilas of Saivism.

Most importantly however we must learn to show LOVE towards particularly the needy and downtrodden.

We must also learn to give more freedom to the women folk and built special institutions for their well-being.

(Abstract by Dr. K. Loganthan)

PART - IV

எமது தாய் மொழியாகிய தமிழிலேயே அர்ச்சனைகள் நடைபெறவேண்டும்

தமிழில் நாம் கூறும் நேர்த்திக் கடன்களை இறைவன் ஏற்றுக் காப்பாற்றுகிறார் எனில் தமிழில் அர்ச்சனையை மட்டும் ஏன்....?

ஆபத்து வரும்போது "அப்பனே முருகா காப்பாற்று" என்கிறோம். சோதனைகள் சூழும்போது நேர்த்திக்கடன்களை செய்வதாகக் கூறி வழிபடுகிறோம். இதையெல்லாம் நாம் சுத்தத்தமிழ் மொழியிலேயே மேற்கொள்ளும் போது பூஜையை மட்டும் எமக்குப் புரியாத மொழியில் செய்து வருவது ஏனென்றுதான் எனக்குப் புரியவில்லை. நாம் தமிழில் கூறி வழிபடும் நேர்த்திக் கடனை ஏற்று இறைவன் எம்மைக் காப்பாற்றிவிட்டான் என நம்பும் நாம், தமிழில் அர்ச்சனை செய்வதனை மட்டும் எதிர்ப்பது ஏன்?

சாதாரண மக்கள் மட்டுமல்ல வாழ்க்கையில் சோதனைகள் சூழும்போது பிராமணர்கள் கூட இறைவனை அதிகமாக வணங்கி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதாகவும் வேண்டுகின்றனர். இந்நேர்த்திக்கடனை எவரும் சமஸ்கிருத மொழியில் வேண்டுவதில்லை என்பதனை உறுதியாகக் கூறுவேன்.

தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் எனும் நடைமுறையை ஒவ்வொரு ஆலய அறங்காவலரும் கங்கணம் கட்டி செய்து விடுவோமென உறுதியாகச் செயற்பட்டால் நிறைவேற்றிவிடலாம். இலங்கையில் மட்டுமல்ல உலகிலுள்ள இந்து ஆலயங்களின் அறங்காவலர்களுக்கே முன்னுதாரணமாகவும், எடுத்துக்காட்டாகவும் திரு. தி. செந்தில்வேள் செயற்பட்டு வருகிறார். மாநாட்டில் கலந்து கொள்ள வந்த அடியேனை தனது ஆலயத்திற்கு அழைத்து அர்ச்சனை செய்வித்த அவரது துணிவை நான் பாராட்டுகிறேன். சைவப் பெருமக்கள் பெருமைப்பட வேண்டிய ஒரு விடயம் இது.

உலகில் ஒவ்வொரு ஆலயங்களின் அறங்காவலர்களும் இவரைப் போன்று மன உறுதியுடன் செயற்பட்டால் இந்த விடயம் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே அமையாது. பிராமணர்கள் மீது உரிய கௌரவமும் மதிப்பும் மக்கள் வைத்துள்ளார்கள். அவர்களது செய்கைகளில் நாம் குறைகூறவில்லை. உங்களை நம்பி வரும் மக்கள் பொருள் உணர்ந்து இறைவனை வணங்க ஒத்துழைப்பு வழங்கி தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என்றே நாம் கேட்கிறோம்.

(கொழும்பு சைவ மாநாட்டுரை) – பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

ஆதி சைவ அந்தணர்க்கு ஓர் அறைகூவல்

பேராசிரியர், முனைவர் ச. சாம்பசிவனார்.

யார் இந்த ஆதி சைவ அந்தணர்கள்?

முழுமுதற் கடவுளாம் சிவபெருமானின் திருக்கோயில்களில், அவனது திருமேனியைத் தீண்டுதற்கும், பூசை செய்வதற்கும் வழிவழியாக உரிமை பெற்றவர்கள் ஆதி சைவ அந்தணர்கள்! இவர்களை "பட்டர்கள்" என்றும், "குருக்கள்" என்றும் அழைப்பது உண்டு. (1) இறைவனின் திருமேனியைத் தொட்டு வழிபாடு செய்யும் உரிமை இவர்களுக்கே உண்டு. ஏனைய பிராமணர்களுக்கு எக்காலத்தும் இல்லை. (2) ஆதிசைவ அந்தணரில், ஏனைய பிராமணர் சமூகத்தில் பெண் கொடுக்கல் – வாங்கல் இல்லை. பொதுவாக ஆதிசைவ அந்தணர்களையும் "பிராமணர்" பட்டியலில் சேர்த்துக் கூறினாலும் இவர்களுக்கு உயர்ந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

இவ் ஆதி சைவ அந்தணர்கள், தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்கள், இத்தமிழ் மண்ணில் பிறந்தவர்களேயாவர்! மறைமலையடிகளாரின் ஆராய்ச்சியின்படி, இவர்கள் ஒரு காலத்தில் வேளாளர்களாக இருந்தவர்கள். நாளடைவில் வட ஆரியர் கூட்டுறவால், தங்கள் பழக்கவழக்கங்களை அடியோடு மாற்றிக் கொண்டு, தங்களையும் "ஆரிய இனத்தவர்" என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுபவர்கள்! அதனால்தான் இவர்கள், வடமொழியைத் "தேவபாஷை" என்று உயர்த்தியும், அருந்தமிழைத் தாழ்த்தியும் பேசுகின்றனர்.

இறைவன் திருவுளப் பாங்கு :

தமிழை இழிவாக எண்ணும் இக்கருத்தும் தேவார காலத்திற்கும் முன்பே இருந்து வந்துள்ளது. சைவத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு இல்லாத அவலநிலை! "எதனையும் வடமொழியில் கூறினால்தான் மோட்சம், இல்லையேல் நரகம்" என்று கூறி அப்பாவித் தமிழர்களிடையே தமிழ்மொழி மீது தவறான கருத்தை

நெடுக பல்லாண்டுகட்கு முன்பே ஆழமாகப் பதித்துவிட்டனர். அஃது இன்றுவரையும் இருந்து வருவது. தமிழன் பெற்ற சாபக்கேடு போலும்.

இந்த அவலநிலையைப் போக்கத் திருவுளம் கொண்டான் சிவபெருமான். எனவேதான், நாம் இன்று தெய்வமாகப் போற்றி வழிபடும் நால்வரில், மூவரை, அந்தணர் குலத்தில் தோன்றுமாறு செய்வித்தான் இறைவன்.

சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் இம்மூவரும் பிறந்த குலம் அந்தணர் குலம். இம்மூவரிலும், சுந்தரர் திருவவதாரம் செய்தது. ஆதிசைவ அந்தணர் குலம். அத்துணை உயரிய குலத்தில் பிறந்தும் அவர் திருமணம் செய்த பரவையாரும் சங்கிலியாரும் வெவ்வேறு குலங்கள் என்பதனையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

எந்தக் குலத்தினர், "வடமொழியே மேலானது; தமிழ் தாழ்ந்தது" என்று பறைசாற்றினரோ, அந்தக் குலத்திலேயே இவ்வருளாளர்கள் அவதரிக்குமாறு திருவுள்ளங் கொண்டதன்றி, அவர்களின் திருவாயினாலேயே தமிழின் மேன்மையை – தெய்வத்தன்மையை – மந்திரமாக விளங்குவதை எடுத்துக் கூறச் செய்தான் இறைவன் எனின் அவனின் திருவுளப்பாங்கு தெற்றெனப் புலனாகும்!

எனினும் ஆதிசைவ அந்தணர்களின் மனம் முழுமையாக மாற்றமடையவில்லை; பெரும்பாலோர் பழைய நிலையில்தான் இருந்தனர். "மூவர் முதலிகள்" பாடி அருளிய – மந்திரங்களாக விளங்கும் தேவாரத் திவ்வியப் பதிகங்களைத் தில்லைவாழ் அந்தணர்கள், இருட்டறையில் இட்டுக் கறையான்களுக்கு இரையாக்கினர் என்பதோடு நில்லாமல், சோழப் பேரரசனே வந்து கேட்டபோதும் முதலில் தர மறுத்தனர் என்பதும் எண்ணிப் பார்க்கத் தக்கது.

மந்திரங்களா? இல்லையே?

சம்பந்தப் பெருமான் தோன்றியதன் காரணம் யாது? தமிழ் வழக்கே வெற்றி கொள்ளவும், வடமொழி முதலாய அயல் வழக்குகள் தோல்வியறவுமாகச் சம்பந்தர் திருவவதாரம் செய்தார்.

"வண்டமிழ்செய் தவம் நிரம்ப"
"அசைவில் செழுந்தமிழ் வழக்கே
அயல்வழக்கின் துறை வெல்ல"

என்பது சேக்கிழார் திருவாக்கு.

இவ்வாறே அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த சுந்தரரைச் சொல்ல வந்தபோதும்,

"சொல்லார் தமிழ் இசை பாடிய தொண்டன்தனை
இன்னும் பல்லாறுலகினில் நம்புகழ் பாடு"

(பெ.பு.கந்த: 76)

என்று சிவபெருமானே மொழிந்ததாகக் கூறுவர் சேக்கிழார்.

தேவார – திருவாசகப் பாக்கள், வெறும் சொற்கள் அல்ல; எளிய மக்களின் வாயிலிருந்து வந்தவையும் அல்ல; அவை அனைத்தும் "மந்திரங்கள்" இறைவனருளால், இத்தமிழ்நாடு செய்த தவப் பயனாய் அவதாரம் செய்த அருளாளர்கள் திருவாய் மலர்ந்தருளிய "மந்திர உச்சாடனங்கள்".

"மந்திரம்" என்பது, வடமொழியில்தான் உள்ளது என்ற தவறான எண்ணம் இருந்து வருகின்றது ஒவ்வொரு மொழியிலும் "மந்திரங்கள்" உண்டு.

ஏறத்தாழ 3,000 ஆண்டுகட்கு முன்பே, இத்தமிழகத்தில் "மந்திரம்" இருந்து வருவது என்பதைத் தொல்காப்பியரே கூறுகின்றார்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

(தொல் செய்யு. 171)

இங்கே "நிறைமொழி மாந்தர்" என்பது சொல்லிய சொல்லினால் பொருண்மையாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றுலுடையாரைக் குறிக்கும். அவர் தம் ஆணையாற் கிளக்கப்பட்டுப் பொருள் பொதியச் சொல்லும் சொற்றொடர் எல்லாம் "மந்திரம்" எனப்படும்.

திருவள்ளுவரும், இத்தகைய "நிறைமொழி மாந்தர்" பெருமையைக் கூறுவதும் இங்கு எண்ணத் தக்கது. (குறள். 28)

எனவே, "மந்திரம்" நமக்கு வடவர் தந்ததன்று; அது, நம் அன்னைத் தமிழில் நெடும் பல்லாண்டுகட்கு முன்பிருந்தே இருந்து வருவது.

"மூவர் முதலிகள்" என்னும் அருளாளர்கள் மொழிந்த "தேவாரத் திருமந்திரங்கள்" எத்தனையோ பல அருஞ்செயல்களை இவ்வுலகிற்குச் செய்து காட்டின. அவற்றுள் சில வருமாறு—

சம்பந்தர் அருளிய மந்திரங்கள்

திருக்கோலக்காவில், "மடையில் வாளை பாய" என்று பாட, அஞ்செழுத்தில் எழுதிய "செம்பொன் தாளங்கள்" சம்பந்தர் திருக்கரங்களில் தவழ்ந்தன.

"தமிழில் முடியாது" என்று எந்த மறையவர்கள் முழங்கிக் கொண்டிருந்தார்களோ அந்த மறையவர்களைக் கொண்டே, சம்பந்தருக்கு "முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச் சிவிகை" முதலாயின கொடுக்கச் செய்தார் இறைவன்.

திருப்பாச்சிலாச்சிரமத்தில், கொல்லி மழவனின் மகளுக்கு உண்டான "முயலகன்" என்னும் கொடிய நோயைத் "துணிவளர் திங்கள்" என்னும் பதிகம் பாடி நீக்கினார் சம்பந்தர்.

திருச்செங்குன்றூர்ப் பதியில், "குளிர்சுரம்" கண்ட அடியார்களுக்கும் மட்டுமன்றி, அங்கு வாழ்ந்த அனைவரின் நோயையும், "அவ்வினைக்கு இவ்வினை" என்ற மந்திரப் பாடலைப் பாடிப் போக்கினார் நம் அருளாளர்.

திருமருகலில் அரவு தீண்டி இறந்த வணிகனைச் "சடையா யெனுமால் சரண்நீ எனுமால்" எனும் பாடல்பாடி உயிர்ப்பித்தார்.

திருவீழிமிழலையில், "வாசி தீரவே காசு நல்குவீர்" எனும் செந்தமிழ்ப் பதிகம் பாடிக் காசுகள் பெற்றுப் பஞ்சத்தைப் போக்கினார் சம்பந்தர்.

மதுரை மாநகரில் சமணம் கொளுவிய நெருப்பைப் "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று கூறிக் கூன் பாண்டியனுக்கு வெப்பு நோய் வரச்செய்து, பின்னர், "மந்திரமாவது நீறு" எனும் மந்திரப் பாடல்பாடி அவனது நோயை நீக்கினார்.

சமணர்களுக்கு எதிரியாகச் சம்பந்தர் நெருப்பிலிட்ட ஏடு, "தளிரிள வளரொளி" எனும் பதிகம் பாட அது வேகாமல் நிலைபெற்றது. அவ்வாறே வைகை ஆற்றில் இட்ட சம்பந்தர் ஏடு, "வாழ்க அந்தணர்" எனும் திருப்பதிகம் பாட, அஃது எதிரேறி வந்தது.

திருவோத்தூரில், "குரும்பை யாண்பனை" என்னும் பதிகம் பாட, ஆண்பனைகளே காய்த்தன. திருமயிலையில், பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பை, "மட்டிட்ட புன்னை" பாட, அவ்வெலும்பு பெண்ணுரு வாயிற்று.

இவ்வாறு சம்பந்தப் பெருமான் தீந்தமிழ் மந்திரப் பாக்களைப் பாடி, அளவிறந்த அற்புதச் செயல்கள் செய்தாரன்றோ?

ஆதி சைவ அந்தணர்களே! இப்போது கூறுங்கள், இவை யெல்லாம் உண்மையா இல்லையா என்று?

"உண்மையில்லை" என்றால், உங்கட்கு உண்மையிலேயே சிவபெருமான் மீது நம்பிக்கை இல்லை; நீங்கள் போலி வாழ்க்கை வாழ்கிறீர்கள் என்றாகும்! "நடந்தவைதாம்" என்றால், இப்பாடல்கள் அனைத்தும் "மந்திரங்கள்" அல்லவோ? அம்மந்திரங்கள் இன்றும் ஆற்றல் பெற்று விளங்குகின்றன அல்லவோ?

இவ்வாறே திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாக்களும் மந்திரங்களாக விளங்குகின்றன.

எம்பெருமானே தம் திருவாயால் "நாவுக்கரசு" என்று மொழிந்தான்! நாவரசர், தம் வாழ்வில் நுகர்ந்த அல்லல்கள் பலப்பல. சமணர் செய்த கொடுமைகள் சொல்லி முடியா! அரசனே அழைத்த போதுங்கூட, "நாமார்க்கும் குடியல்லோம்" என நெஞ்சுரத்துடன் பாடியவர். நாவரசரை நீற்றறையில் இட்டபோது, "மாசில் வீணையும்" எனும் மந்திரப் பாடல் பாடி உயர்ந்தார். நஞ்சுணவு கொடுத்தபோது, "நஞ்சும் அமுதாம் எங்கள் நாதனுக்கே" என்று கூறி உயர்ந்தார். வயக்களிறு தம்மீது பாய வந்தபோதும், "அஞ்சுவதில்லை" என்னும் அருமந்திரப் பாடல்பாடி அதனைப் புறம்கண்டார். இறுதியில் கல்லுடன் பிணித்துக் கடலில் போட்டனர் கொடுஞ் சமணர்கள். "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" எனும் சொற்றமிழ் மந்திரப்பாடல் பாடிக் கரையேறினார் நாவரசர்.

அப்பூதியடிகளார் மகன் அரவு தீண்டி இறந்தபோது, "ஒன்றுகொலாம்" எனும் மந்திரப்பாடல் பாடி உயிர்ப்பித்தாரே அப்பர் பெருமான்?

நாவுக்கரசரின் திருவாயிலிருந்து தெய்வத் தமிழ் மந்திரப் பாக்களைக் காதுகுளிரக் கேட்க வேண்டுமென்னும் விருப்பத் தாலன்றோ எம்பெருமான், அவருக்குத் திருக்கயிலை நண்ண முடியாதவாறு செய்தார்!

"அன்ன தன்மையர் கயிலையை அணைவதற்கு அருளார்
மன்னுதீந்தமிழ் புவியின் மேல் பின்னையும் வழுத்த"

(பெ.பு. திருநா 361) என்று தெய்வச் சேக்கிழார் கூறுவதும் பொய்யாமோ?

ஆதிசைவ அந்தணரீர்!

இவற்றையெல்லாம் நீங்கள் தள்ளினாலும், உங்கள் குலத்திலேயே திருவவதாரம் செய்தாரே சுந்தரர்? அவரின் அவதாரம் எதற்கு? "அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்தார்" அல்லரோ? "சொல்லார் தமிழ்இசை பாடிய இத்திருத்தொண்டர் தமை", "இன்னும் பல்லாறுலகினில் நம்புகழ் பாடு" என்றல்லவா இறைவன் வேண்டிக் கொண்டான்?

குண்டையூரில் சுந்தரருக்காக இறைவன், நெல்மலை வழங்கினான்; சுந்தரர் "நீள நினைந் தடியேன்" என்று பாட, அந்த நெற்களஞ்சியம் திருவாரூர்த் தெருக்களில் நிறைந்தனவல்லவோ? திருப்புகலூரில், செங்கற்களையே செம்பொன் கற்களாக மாற்றினா ரல்லவோ எம் பெருமான்? திருப்பாச்சிலாச்சிரமத்தில், "வைத்தனன் றனக்கே தலையும் என் நாவும்" என்று சுந்தரர் பாட, இறைவன் பெருநிதியும் அளிக்கவில்லையா? திருமுதுகுன்றத்திற்குச் சுந்தரருடன் இறைவனும் ஓர் அந்தணனாகத் துணைக்கு வந்தானே? "மெய்ப்பை முற்றப் பொடிபூசி" என்று சுந்தரர் பாடியதும் பன்னீராயிரம் பொற்காசு பெற்றதோடன்றி, அவற்றை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தாரன்றோ? திருக்குருகாவூர் போகுங்கால் இறைவனே சுந்தரர்க்குப் பொதி சோறு அளித்தான் அல்லவோ? திருக்கச்சூரில் வீடுதோறும் இரந்து பெற்ற உணவைச் சுந்தரர்க்கு அளித்து மகிழ்ந்தான் ஆண்டவன் அல்லனோ?

எல்லாவற்றிற்கும் மேலாக, "மாலும் அயனும் காணாதார் மணித்தாள்" கொண்டு, சுந்தரர் பொருட்டுத் திருவாரூரில் பரவையிடம் தூது நடந்தானே பரமன்? உலகில் எங்கேனும் இத்தகைய விந்தை நிகழ்ச்சியைக் கேட்டதுண்டா?

திருப்புக்கொளியூரில் "எற்றான் மறக்கேன்" எனும் பதிகம் பாடி, முதலையுண்ட சிறுவனை மீட்டுத் தந்தார் சுந்தரர் என்பதை அறியீரோ?

"தான் எனை முன்படைத்தான்" என்ற மந்திரப் பாடலைப் பாடிக் கொண்டே வெள்ளை யானை மீது இவர்ந்து திருக்கயிலை நண்ணிய சுந்தரர் வரலாறும் பொய்யாமோ?

இவ்வாறு ஆதிசைவ அந்தணர் மரபிலே தோன்றி அருந்தமிழ் மந்திரப் பாக்களைப் பாடி, அற்புதம் பல விளைத்த சுந்தரரை நீங்கள் நம்பமாட்டீர்களோ?

இஃது இங்ஙனமிருக்க, மணிவாசகப் பெருமானை இறைவனே வலிய வந்து ஆட்கொண்டு, அவருக்காகக் குதிரைச் சேவகனாக வந்தான் என்பதும் அறியீரோ? தன் அடியாருக்காக, மண்ணைப் படைத்த இறைவனே மண்ணைச் சுமந்த வரலாறு உலகில் எங்கும் கண்டதுண்டோ? அடியவருக்காகப் பிரம்படி பட்ட கதை பொய்யோ?

இங்ஙனம் நால்வர் பாடியவை, நீங்கள் கூறும் வடமொழி மந்திரங்களுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவையல்ல!

நால்வர் பாடிய "தேவாரம் – திருவாசகம்" ஆகிய இவை மந்திரங்களன்றி வெறும் சொற்களல்ல! எனினும் நீங்கள் இவற்றை யெல்லாம் மதிக்க மாட்டீர்கள் என்று தெரிந்துதான் போலும் சிவப்பிரகாச சுவாமிகள், உங்களுக்கு அறிவுரை கூறுவதுபோல்,

"வேதம் சிறந்ததா? மணிவாசகர் திருவாயிலிருந்து உண்டான திருவாசகத்தேன் சிறந்ததா?" என்னும் கேள்வியைக் கேட்டு, அதற்கு விடையாக,

"வேதம ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சுநெக் குருகி நிற்பவர்க் காண்கிலோம் ;
திருவா சகம்இங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையோர் இலரே"

(நால்வர் நான்மணிமாலை – 4) என அறுதியிட்டு உரைக்கலானார்.

இதனோடு மட்டும் அமைந்தாரிலர் சிவப்பிரகாசர் மேலும் கூறுகின்றார்.

"வேதம், மட்கலத்தைப் போன்றது எமது வாசகனின் மதுர வாசகமோ பொற்கலத்தைப் போன்றது; வேதம் ஓதின் விண்ணுலகு முதலாயின மட்டுமே கிடைக்கும். ஆனால் எமது மணிவாசகரின் திருவாசகம் ஓதின் முத்தி (சிவப்பேறு) பயன் கிடைக்கும்" என்றும் கூறுகின்றார். இதோ அவரது அருள்வாக்கு.

"வாசகன் புகன்ற மதுர வாசகம்...
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே"

(நா. மணிமாலை – 32)

ஆதி சைவ அந்தணர்களே!

"தமிழில் அருச்சனை" என்று நாம் கூறுவது, இந் "நால்வர்" அருளிய "தேவார திருவாசகம்" இவற்றிலிருந்து எடுக்கப்பெற்று அகவரிப் படித் தொகுக்கப்பட்ட மந்திரங்களேயன்றி வேறல்ல! எனவே இனியேனும் உங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு எம்பெருமான் திருக்கோயில்களில் மன்னுதீந் தமிழ் மந்திரங்களை ஓதுங்கள்; அதனால் உங்கட்குப் பலனுண்டு; வழிபடவரும் அன்பர்கட்கும் பலனுண்டு. பொருள் புரியாமல் மந்திரம் ஓதுதலைவிடப் பொருள் தெரிந்து ஓதும் தமிழ் மந்திரங்கள் மேலானவையல்லவோ?

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்..."

(திருவா. சிவபுராணம்)

என மணிவாசகர் மொழிந்ததையும் எண்ணிப்பாருங்கள்!

இலங்கையில் உள்ள பத்தினி கண்ணகி கோயிலில் உங்கள் வடமொழி மந்திரமா ஒலிக்கின்றனர்? சிங்களவர் தம் மொழியாம் சிங்களத்திலன்றோ வழிபாடு நிகழ்த்துகின்றனர்! இதனை நீங்கள் நன்கு தெரிந்திருந்தும் "அன்னைத் தமிழில் முடியாது" என்றால், நீங்கள் இப்போது செய்துவரும் வடமொழி வழிபாடு பொய்யாய்ப் பிறரை ஏமாற்றுவதாய் முடியும்.

சைவ மெய்யன்பர்களே!

உங்கட்குச் சைவசமயத்தின் மீதும், நால்வர் மீதும், ஏன் முழுமுதற் பரம்பொருளாம் சிவபெருமான் மீதும், நமது தாய்மொழியாம் தமிழின்மீதும் ஆழ்ந்த நம்பிக்கை உண்டா? "வடமொழி அருச்சனை செய்தால்தான் மோட்சம் கிட்டும்" என்னும் பகட்டுச் சொல்லை நம்பி விடுகின்றீர்கள்! "எல்லாம் தெரிந்தவன் இறைவன்" என்ற நம்பிக்கை உங்கட்கு இருக்குமானால், அவ் இறைவனுக்குத் தமிழ் மட்டும் தெரியாமற் போய்விடுமா? மூவர் தமிழும் திருவாசகமும் "மந்திரங்களே" என்பதை நீங்கள் மெய்யாகவே நம்புவதானால், இனியேனும் அவர்கள் அருளிப் போந்த தமிழ் மந்திரங்களையே திருக்கோயில்களில் ஒலிக்கச் செய்யுங்கள்.

உங்களது வேண்டுதலை ஆதிசைவ அந்தணர்கள் மறுப்பார்கள். ஆனால், அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்? ஹரப்பா மொகஞ்சதாரோ காலத்திலிருந்து உண்டான பழமையான சமயம் நம் சைவசமயம்; சிவவழிபாடு என்பது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருவது! எனவே திருக்கோயில்கள் நம்முடையன. ஆங்கே எழுந்தருளியிருப்பவன் நம் முழுமுதற் பரம்பொருளாம் சிவபெருமானே! எனவே திருக்கோயிலைப் புறக்கணிக்காதீர்கள்! வழக்கம் போல் கோயிலுக்குச் செல்லுங்கள்; இறைவனை மனம் மொழி மெய்களால் வழிபடுங்கள்; "அருச்சனை" செய்தேயாக வேண்டும் என்று நீங்கள் எண்ணினால், திருக் கோயிலில் கேட்பாரற்று எத்தனையோ தெய்வத் திருவுருவங்கள் உள்ளன. அவற்றில் ஏதேனும் ஒன்றினுக்கு நீங்கள் கொண்டுபோகும் நன்னீர் – பூக்களைக் கொண்டே தமிழ் மந்திரம் சொல்லி அருச்சனை செய்யுங்கள்!

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்;
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"

என்பதை நினைவிற் கொண்டு இத்தகைய வழிபாட்டைச் செய்யுங்கள்; இறைவன் அருள் உறுதியாக உங்கட்கு உண்டு! அனைவரும் இவ்வாறு ஒருமுகமாகச் செய்ய முற்பட்டுவிட்டால், "பணவருவாய் இல்லையே" என்ற நிலையால், ஆதிசைவ அந்தணர்கள் மனம் மாறித் தமிழ் அருச்சனை செய்ய முன்வருவர்! எப்பணிக்கும் முதற் பணி இதுவே!

(நன்றி : சைவ உலகம்)

A Call for the Adisaivas to Repent

Moved by the vehemence with which some Adisaiva Brahmins is Sri Lanka resist the reintroduction of Tamil as the language of worship in the Temples and a strong criticism of their attitude by the Editor of Saiva Ulagam (See SU 11&12), Prof. Sambasivam, one of the greatest living Saiva philosophers, recalls in this article the historical origins of these adi saivas, implore them to repent and return to the Tamil tradition to which in fact there are true heirs.

Adisaivas in the Tamil country called lattar of Gurukkal are highly respected as only they have the privilege to touch the divines murthies in temples and do the abisekam and so forth, a privilege that is not available to the smartha Brahmins and others today. These adisaivas are historically the priests of the ancient Tamil Vellalas, but who because of accidents of history, dissociated themselves from the Tamil people and classified themselves along with the Brahmins from the North who always advocated Vedism and Sanskrit. It is this conversion to the Sanskrit tradition and Vedism that make them ridicule Tamil and rebuff the attempt to re-introduce it as the language of archanas in the Temples.

But this is not new. The decline of Tamil and its displacement by Sanskrit was one of the factors underlying the emergence of Bakti movement around the 5th centruy. A.D. in the Tamil country. It is interesting to note that among the four pillars of this movement, except for Appar all the others are Brahmins. But these great reformers did not sing in Sanskrit but rather in chaste Tamil not only that they also sung eloquently about tamil itself, calling it the Divine language of unsurpassing beauty.

These saints were made to sing in Tamil, praise Tamil, in order to defeat the Sanskritzation and along with it the destruction of Tamil culture that took place about their time. They were reformers who were born to reinstate the Tamil

Tradition by defeating the alien cultures that introduced godless philosphies and nihilism of various kinds.

The hyms in Devaram and Thiruvasagam are not simply poetry, even of a magnificent kind. They are in fact mantras as they are utterances of beings who have reached perfections, following the grammar enunciated by Tolkappiyar. The mantric powers of these hymns can be abundantly shown by the historical contexts within which some of these hymns were sung and how they served to cause something miraculous to happen.

By archanas in Tamil what we mean is the worship in the Temples by singing these hymns which are in fact mantras proper.

The Adisaivas should wake up to the truth. Saivism is the most ancient religion in the world and it predates even Bedism.

The Tamil public must come forward to demand archanas in Tamil. They should not employ Brahmin priests who fail to honour our requests. At whatever cost we should not neglect temple worship. The temples belong to us, the worshippers and not to the arrogant priesthood. There are many temples in Tamil Nadu and elsewhere, decaying because uncared for. We can revive these temples, introduce simple prayers in Tamil with minimum of rites and rituals. What is important is purity of heart and not unnecessarily elaborate and bombastic rituals.

Courtesy "SAIVA ULAKAM"

தமிழில் அருச்சனை தமிழருக்கு உகந்தது

தமிழ் மக்கள் தமிழ் அருச்சனை செய்வதில் ஆர்வமும் அக்கறையும் கொள்ள வேண்டும். தங்கள் பகுதியிலுள்ள கோயில் நிருவாகத்தினரிடம் கூறித் தமிழ் அருச்சனை செய்யுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். கோயில் நிருவாகத்தினரும் இதனை ஏற்று ஆவன செய்ய வேண்டும். இது சிறந்த தமிழ்த் தொண்டாக அமையும். பொதுமக்களும் கோயில்களுக்குச் சென்று தமிழ் அருச்சனை செய்யுமாறு கேட்க வேண்டும். தமிழ் அருச்சனை செய்கின்ற கோயில்கள் தங்கள் அறிவிப்புப் பலகையிலும் அருச்சனை வாங்கு மிடத்திலும் தமிழில் அருச்சனை செய்யப்படும் என்பதை எழுதி வைக்க வேண்டும். அருச்சனை சீட்டு விற்பவர்களும் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

குருக்கள்மார்களும் பண்டாரங்களும் தமிழ் அருச்சனை என்பது வழிபாட்டின் ஒரு கூறு இப்பகுதியே என எண்ணி இதில் ஈடுபாடு கொண்டு செய்ய வேண்டும். இதனால் அவர்கள் வேலை போக வழி இல்லை என்பதை உறுதியாகக் கூறலாம். அவசரமாக இருந்தாலோ கூட்டமாக இருந்தாலோ விழாக்காலங்களிலோ முதல் 10 போற்றிகளும் அடுத்த 8 போற்றிகளுமாக 18 போற்றிகளாக மட்டும் சொல்லி அருச்சனை செய்யலாம். 108 போற்றிகளைக் காலை மாலைப் பூசையின் போது மட்டும் ஒரு முறை சொன்னால் போதும் என்று வைத்துக் கொள்ளலாம். எனவே குருக்கள்மாரும் பண்டாரங்களும் இந்தத் திருப்பணிக்கு தமிழ்ப் பணிக்கு முன்வந்து நல்வழி காட்டுவார்களென்று நம்புகிறோம். குருமார்கள் அல்லது பண்டாரங்கள் அருச்சனை செய்யும்போது தங்கள் உள்ளத்திற்குள் அமைதியாகப் போற்றி அருச்சனை தமிழில் சொல்லி வழிபடலாம்.

சிங்கப்பூரில் தமிழ் அருச்சனை டேங்க் ரோடு அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலிலும் சௌத் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோயிலிலும் செய்யப்படுகின்றது. டெப்போ ரோடு உருத்திரக் காளியம்மன் கோயிலும் செய்கிறார்கள். மலேசியாவில் கோலாலம்பூர் கோர்ட்டுமலை விநாயகர் கோவில், மாரியம்மன் கோயில், பத்துமலை முருகன் கோயில் ஆகியவற்றிலும் தமிழ் அருச்சனை நடைபெறுகின்றது. இக்கோயில்களைப் பின்பற்றி ஏனைய திருக்கோயில்களிலும் தமிழ் அருச்சனை நிகழ இறைவனை

வேண்டுகிறோம். தமிழ்ப் பெருமக்களையும் கோயில் நிர்வாகத்தினையும் ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இறைவழிபாடு என்பது இறைவன் திருவுருவத்தை மனத்தால் நினைத்து, வாயால் அவன் புகழ்பாடி, உடலால் அவனுக்குரிய பணிகளைச் செய்வதாகும். மனத்தால் நினைத்தற்கும் உடலால் செயலாற்றுவதற்கும் மொழி தேவையில்லை. வாயால் துதிப்பதற்குத் தான் மொழி தேவைப்படுகிறது. வாயால் இறைவன் திருப்பெயர் களைச் சொல்வதும் அவன் புகழ்பாடும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களைப் பாடுவதும் வாயினால் செய்யப்படும் வழிபாடு. இதற்கென்று கட்டாயம் ஒரு மொழி தேவை.

இறைவன் திருநாமங்களையும் பெருமைகளையும் எம்மொழி யிலும் கூறலாம். எம்மொழியில் கூறினாலும் இறைவன் உணர்ந்து கொள்வான். அவன் எல்லையற்ற அறிவுடையவன். ஆனால் வழிபடுவோர்களாகிய நம் அறிவிற்கு ஓர் எல்லை உண்டு. நாம் எம்மொழியினையும் புரிந்து கொள்ள இயலாது. நமக்கெனக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள ஒரு சில மொழிகள் உள்ளன. நாம் இளமையிலிருந்து பழகிய சிந்தனைகளை, உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் மொழியே தாய்மொழி அல்லது முதல்மொழி ஆகும். இறைவழிபாடு என்பது உணர்வுடன் ஒன்றிய ஒன்று. எனவே இது தாய்மொழியில் இருப்பது தான் நல்லது. அப்போது தான் நம் உள்ளத்தை இறைவன்பால் ஒன்றிடச் செய்ய முடியும். நமக்குத் தெரியாத புரியாத மொழியில் வழிபாடு செய்யும்போது நம் மனம் இறைவனிடத்து ஒன்றுபட ஈடுபட இயலாது. எனவே இறைவழிபாடு செய்வோர் அவரவர் தாய்மொழியில் செய்வதுதான் சிறந்த பயன் நல்கும். நம் தாய்மொழி தமிழ். தமிழில் வழிபாடு செய்வது நம்மைப் பொறுத்த வரையில் எவ்வகையில் தவறாகும். தமிழ்க் கிறித்துவர்களும் தமிழ் இஸ்லாமியர்களும் தங்கள் வழிபாடுகளையும் சடங்குகளையும் தமிழில் செய்கிறார்கள். தமிழ் அறிந்த இந்துக்கள் தமிழில் செய்தால் என்ன?

நம் தாய்மொழியாகிய தமிழ் வேறு எந்த மொழிக்கும், தாழ்ந்ததன்று. தமிழைப் பக்தி மொழி என்று பாராட்டுகிறார் தனிநாயக அடிகளார். தமிழைத் தெய்வீக மொழி (திரு நெறிய தமிழ்) என்று போற்றுகிறார் ஞானசம்பந்தர். யாமறிந்த மொழிகளிலேயே

தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்று கூறுகிறார் பாரதியார். உலகமொழிகளில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கிய தன்மை உடையது தமிழ் என்று சொல்கிறார் பரிதிமால் கலைஞர் எனப்படும் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார். "பண்ணிடைத் தமிழொப்பாய்" என்று இறைவனைத் தமிழாகவே அழைக்கிறார் சுந்தரர். இந்நிலையில் வழிபாட்டுக்குரிய மொழியாகும் தகுதி தமிழுக்கு இல்லை என எப்படி மறுக்க முடியும்?

அருச்சனை என்பது வழிபாட்டின் ஒரு கூறு ஆகும். இறைவனின் திருப்பெயர்களை 108 முறை அல்லது 1008 முறை கூறிப் போற்றி இறைவன் திருவடியில் மலர் இட்டு வழிபடுவது தான் அருச்சனை. இந்தத் திருப்பெயர்களை நமக்குப் புரியும் வண்ணம் தமிழில் சொல்வது நம் நெஞ்சத்தை நெகிழ்விக்க உதவும். இவ்வாறு தமிழில் போற்றி கூறுவது நீண்ட நெடுங்காலமாகத் தமிழர்களிடையே இருந்து வரும் இயல்பு என்பது திருநாவுக்கரசர் தேவார அடிகளால் அறியமுடியும். "பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத வாக்கு ஆக்கையால் பெற்ற பயன் என்ன?" என்று கேட்கிறார் நாவுக்கரசர். நிலைபெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே நீ இங்கே வா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு அலகிட்டு மெழுக்கிட்டுத் தலையாரக் கும்பிட்டுச் சங்கரா சயசய போற்றி என்று அலறா நில்லா" என்று அவர் நமக்கு அறிவுறுத்துகிறார்.

மேலும் தமிழர்கள் ஒவ்வொருவரும் சிவபெருமானுக்கு தமிழில் போற்றி சொல்லி அருச்சனை செய்ய உதவும் வகையில் திருநாவுக்கரசர் போற்றித் திருத்தாண்டகம் ஐந்து பதிகங்கள் தம் தேவாரத்தில் பாடிக் கொடுத்திருக்கிறார். மாணிக்க வாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் "போற்றித் திரு அகவல்" என்ற பகுதியைப் பாடியுள்ளார்.

மற்ற பகுதிகளிலும் இறைவன் திருவடியையும் திருப்பெயராகிய நமச்சிவாய மந்திரத்தினையும் போற்றிப் பாடி இருக்கிறார். சுந்தரனைத் தடுத்தாட் கொண்டபோது வடமொழியில் வேதத்தை அருளிய சிவபெருமான் அவரிடம் "அருச்சனை பாட்டே ஆகும். சொற்றமிழ் பாடுக" என்று சொன்னதாகச் சேக்கிழார் கூறுகிறார். எனவே தமிழில் அருச்சனை செய்வது தமிழர்க்கு உகந்ததே.

தமிழில் அனைவரும் அருச்சனை செய்வதற்குரிய வகையில் போற்றி அருச்சனைப் புத்தகங்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் விநாயகர், முருகன், சிவபெருமான், அம்மை ஆகியோர்க்குரிய தமிழ் அருச்சனைகள் உள்ளன. இவற்றைப் படித்து வீட்டிலும் கோயிலிலும் வழிபாடு செய்யும்போது அருச்சனை செய்யவேண்டும். இதனால் தமிழர்கள் தங்கள் வழிபாட்டில் மனத்தை ஈடுபடுத்த முடியும். அதே நேரத்தில் தமிழ் மொழியையும் ஒருவகையில் வாழ வைக்கமுடியும். உண்மையான வழிபாடும், உங்கள் மொழியும் உயர்ந்திட உங்களால் இயன்றதை இன்றே செய்யுங்கள்.

உலக சைவர்கள் திருநெறிய தமிழிலேயே, திருமுறைகள் மூலமே சிவாலய வழிபாடு நடத்தல் வேண்டும்; நடத்துவிக்க வேண்டும்

பேரவையின் தமிழ் அர்ச்சனை (மலர் வழிபாடு) இயக்கம் உலக சைவ ஆலயங்களில், குறிப்பாக வெளிநாடுகளில் வெற்றி பெற்று வருகிறது. இதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் தொடர்ந்து முரசொலிக்கிறோம்.

உ

ஓம் திருச்சிற்றம்பலம்

தமிழ்முறைத் திருக்குட நீராட்டுப் பெருவிழா

(தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்)

முன்னுரை :

இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது அருளைப் பெறத் திருக்கோயில் வழிபாட்டையே அருளாளர்கள் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர். மாட்டின் உடல் முழுவதும் பால் நிறைந்திருந்தாலும் அது மடிக்காம்புகள் வழியாகவே வெளிப் படுகிறது. திருக்கோயில்களில் உள்ள இறைவனின் திருமேனிகள் காம்பின் துளை போன்றன. எனவே அத்திருமேனிகளோடு அவை இருக்குமிடம், அதைச் சூழ்ந்துள்ள நீர் நிலைகள் போன்றனவும் சமய வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன.

"முர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானாரும் அருளியுள்ளார். திருமேனிகளைப் போலவே இவையும் சிவ வடிவங்களாகவே திகழ்கின்றன. திருமுறைகள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

'சாலக்சோயில் உளநின்கோயில் அவைஎன் தலைமேல் கொண்டாடி
மாலை தீர்ந்தேன் வினையுந்துறந்தேன் வானோர் அறியா
நெறியானே'

– (சுந்தரர் தேவாரம்)

பண்டைய முறையில் பக்தியில் சிறந்தோர் எங்கும் பரந்து, எல்லாமாய் விளங்கும் முழுமுதலைத் தாம் எண்ணிய வடிவத்தில் எழுந்தருளச் செய்தனர் என்பது தலபுராணங்களில் காணப்படுவன. வாகும். எழுந்தருளச் செய்யும் முறை காலப்போக்கில் வடமொழியில் மட்டுமே நின்று அயல்நெறி மரபுகளாய் நிலை பெற்றன. பண்டைக்காலம் முதலே கோயில் அமைத்தல், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை விளக்கும் நூல்களும் அவ்வப்பொழுதிருந்தே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. அவை முதலில் தமிழிலும், பிற்காலத்தில் வடமொழியிலும் ஆக்கப்பட்டன. நாளடைவில் தமிழ் நூல்கள் மறைய வடமொழி நூல்கள் நிலைத்தன. இன்று அவையும் அருகி வருகின்றன.

திருமுறைப் பாடல்கள் இறைவன் அருள் பெற்றவர்களால் வழங்கப்பட்டன. எனதுரை தனதுரையாக ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கித் தெய்வத் திருவருள் வடிவாய் நின்று அருளிய பாடல்களாகும்.

இறைவன் வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள் வதற்குத் திருமுறைப்பாடல்கள் துணைபுரிகின்றன. வண்ணம் காட்டி வடிவு காட்டி ஆட்கொண்ட பெருமையைத் திருமுறைப் பாடல்களால் உணர்கிறோம். நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்த நிலையே திருத்தொண்டர் புராண வரலாறுகளாகும். திருக்கோயில்கள் திருவுருவங்கள், வழிபாட்டு முறை ஆகியன பற்றிய செய்திகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பரவி வளர்ந்திருக்கின்றன. பாரதநாடு இமய மலைக்கும், கன்னியா குமரிக்கும் இடையில் உள்ள நாடு. இந்நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் தத்தம் மொழியில் இறைவழிபாடு செய்கின்றனர். அவற்றுள் தொன்மை மொழியாகத் திகழ்வது தமிழ். இது உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுகிறது. தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுதியாக உள்ளன.

அறு சமய வழிபாட்டில் சிவநெறியும், திருமால் நெறியும், பெரிதாக இடம்பெறுவன. சிவநெறியில் சக்தி, விநாயகர், முருகன் ஆகியன இணைந்துள்ளன. பருதி வழிபாடு இருவகை நெறிக்கும் உரியதாகக் கொள்ளுகின்றனர். இத்தகைய வழிபாட்டுக்குரிய முறைமைகளைக் கூறுவது ஆகமம் எனப்படும். இந்நூல் தமிழ்மொழியில் சிறப்பாக விளங்கி அயல் வழக்குகள் புகுந்த காலத்து

வடமொழியாக மாறியிருக்க வேண்டும். சிற்ப நூல் தமிழர்களுக்கு முற்றிலும் உரியது என்பதற்குத் தமிழகத்தின் சிற்பக்கலைகள் நிறைந்த கோயில்கள் சான்றாக விளங்குகின்றன.

ஏற்புடைய காலங்கள்

ஓராண்டில் கதிரவன் நேர்கிழக்கிலிருந்து சற்றுத் தள்ளி வடக்குப் பக்கமாக ஆறு மாதங்களும், தெற்குப் பக்கமாக ஆறு மாதங்களும் இருக்கிறான். பூமியின் சுழற்சியால் நமக்குக் கதிரவன் இவ்வாறு காட்சியளிக்கிறான். இதில் கதிரவன் வடக்கே தெரியும் (உத்தராயணம்) காலம் தை முதல் ஆனி வரை ஆகும். இக்காலத்தில் எல்லா நற்செயல்களையும் செய்யலாம். கதிரவன் தெற்கே தெரியும் (தட்சிணாயணம்) காலம் ஆடி முதல் மார்கழி வரை ஆகும். இக்காலத்தில் செய்வதாக இருந்தால், ஆவணி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் ஏற்புடையன அதே போல் வளர்பிறைக் காலம் ஏற்புடையது தேய்பிறையில் முதல் ஏழாம் நாள்வரை ஏற்புடையது.

தக்க இடங்கள்

புதிதாகத் திருக்கோயில் அமைக்கும்போது அதற்குத் தக்க நிலத்தைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்குச் சில வழிமுறைகள் உள்ளன. நல்ல நாளில் பிள்ளையாரை வணங்கி நிலத்தைத் தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்த நிலத்தைத் திருக்கோயில் அமைக்க ஏற்றதாக்க முதலில் நுழைவு வழிபாடு செய்ய வேண்டும் இதை வடமொழியில் பிரவேசபலி (பலி உணவளித்தல்) என்பர்.

நிலத்தேவர்

சிவபெருமான் அந்தகன் என்னும் அவுணனோடு போரிட்ட பொழுது அவருக்கு ஏற்பட்ட சினத்தால் நெற்றியில் வியர்வை தோன்றியது. அதில் ஒரு துளி நிலத்தில் விழுந்தது. அதிலிருந்து ஒரு பூதம் தோன்றியது. சிவபெருமானைக் குறித்து அது தவமிருந்து வரங்கள் பல பெற்றது. வரப்பயனால் அது எல்லா உலகங்களையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. அனைவரும் சிவபெருமானிடம் புகலடைந்தனர். சிவபெருமான் அதிபல உருத்திரர் என்ற உருத்திரன்ரயும், எட்டு மாயா பாசங்களையும் படைத்துப் பூதத்தை அடக்க ஏவினார். அதிபலர் மாயாபாசங்களால் அதைக் கட்டித் தள்ளினார். பிறகு நான்முகன் முதலான ஐம்பத்து மூன்று தேவர்களை

அதன் உடலில் எப்போதும் இருக்கச் செய்தார். ஒவ்வொருவரும் அதன் உடம்பில் ஒவ்வொரு இடத்தில் வாழத் தொடங்கினர். அன்று முதல் அது நிலத்தேவர் (வாஸ்து புருசன்) என்ற பெயரைப் பெற்றது.

நிலத்தேவர் வழிபாட்டு முறைகள்

தெரிவு செய்த இடத்தைச் சாணத்தால் மெழுகிப் பிறகு முறைப்படி ஐந்து நிறைகுடங்கள் வைக்கவும், அதற்கு முன்புறம் சதுரமான புதிய ஒரு வெள்ளைத் துணியை விரிக்கவும். அதன்மீது மஞ்சட்பொடியினால் ஐம்பத்து மூன்று (53) கட்டங்கள் ஏற்படுத்தவும். (7 x 7 = 49 கட்டங்கள், நான்கு மூலைகளில் நான்காக 53 கட்டங்கள்) ஒவ்வொரு கட்டத்திலும் திருநீறு, சந்தனம், குங்குமம். மலர்கள் முதலியவற்றை வைக்கவும் துணியின் நடுவில் தருப்பை முடி வைக்கவும்.

துணிக்கு முன்னால் சதுரமான வேள்விக்குண்டம் ஒன்றை அமைக்கவும். குண்டம் தோண்டியோ அல்லது செங்கற்களை அடுக்கியோ அமைக்கலாம் வலதுபுறம் ஒரு மனையை வடக்கு நோக்கி யிடவும். இடதுபுறம் ஒரு வாழை இலையை முறைப்படி போட்டு, அதன்மீது பச்சரிசி பரப்பி, அதன்மேல் ஓங்காரத்தையும் திருவைந்தெழுத்தையும் எழுதி ஒரு பூசணிக்காயை அதன்மீது வைக்கவும். அதற்கும் திருநீறு முதலியன இடவும். புதிய மண்கலசத்தில் ஆன் ஐந்தை எடுத்து வைக்கவும். (பசுவின் பால், நெய், தயிர், கோசலம், சாணம்)

நிறைகுடத்திற்கு வலதுபுறம் பிள்ளையார் வைக்கவும் முன்புறம் வைக்கோலால் மனித உருவம் செய்து. அதன் பகுதியில் ஒரு கயிற்றை நீரில் நனைத்துக்கட்டி வைக்கவும். அதற்கும் திருநீறு முதலியவற்றை இட்டு ஒரு சிறிய புத்தாடையைச் சுற்றி வைக்கவும்.

முதலில் பிள்ளையார் வழிபாடு செய்யவும் அப்பொழுது

"பிடியதனுரு வுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

– சம்பந்தர் தேவாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

– திருமந்திரம்

முதலிய பாடல்களைப் பாடவும்.

பிறகு ஆனைந்திற்கு வழிபாடு செய்யவும். ஆனைந்து வைக்கப்பட்டுள்ள கலத்திற்குத் திருநீறு முதலியவற்றை இடவும். அதனுள் ஒரு மாவிலைக் கொத்தையும், தருப்பையையும் இடவும். பிறகு அதற்கு நறும்புகை முதலியவற்றைக் காட்டி வழிபட்டு மலர்தூவி வாழ்த்தவும்.

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே

– அப்பர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதி வழிபடவும். மாவிலையால் ஆனைந்தை எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களின் மீதும் தெளிக்கவும். பிறகு நிறைகுடங்களுக்கு வழிபாடு செய்ய வேண்டும்.

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லாவினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி

– அப்பர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதி நிறைகுடங்களுக்கு மலர்தூவி வழிபடவும் பிறகு

வெந்த குங்கிலியப் புகை விம்மவே
கந்தம் நின்றுலவும் கழிப்பாலையார்

அந்தமும் அளவும் அறியா ததோர்
சந்தமாலவர் மேவிய சாந்தமே

– சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடலை ஓதி நறும்புகை காட்டி மலர் தூவி வழிபடவும். பிறகு துண்ரியிலுள்ள ஒவ்வொரு கட்டத்திலும் ஐந்தெழுத்தை ஓதி அமுதைச் சிறிது சிறிதாக வைக்கவும். பிறகு அதற்கும் நறும்புகை முதலியன காட்டி மலர்தூவி வழிபடவும்.

முறைப்படி வேள்விக் குண்டத்தில் எரி வளர்க்கவும். சிவபுராணம் கோளறு பதிகம் முதலியவற்றை ஓதி நெய் வார்க்கவும் மாவிலையாலே நெய் வார்க்கவும்.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருவும் தம்முருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே"

– அப்பர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும்

பிறகு எண்திசைக் காவலர்களுக்கு முறைப்படி அமுதூட்டவும். நெய்யாலேயெ நிறையவி (பூர்ணாகுதி) அளிக்கலாம். பிறகு நறும் புகை காட்டவும். விளக்குக் காட்டி,

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே – அப்பர் தேவாரம்

என்னும் பாடலை ஓதி மலர் தூவி வழிபாடு செய்யவும். அதே போல் பூசணிக்காய், வைக்கோல் உருவம் ஆகியவற்றுக்கும் கருப்பூர ஒளி காட்டவும். பிறகு பூசணிக்காயை எட்டுத் துண்டுகளாக்கிக் குங்குமம் தடவி ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொள்ளவும். நடுவிலுள்ள நிறைகுடத்தை எடுத்து அதில் மற்ற நான்கு நிறைகுடங்களிலுள்ள

நீரைச் சிறிது கலக்கவும், நிறைகுட நீரை வைக்கோல் உருவின் மீது சிறிது தெளிக்கவும் பிறகு அதை வேள்வித் தீயில் காட்டி நெருப்பு அதில் பற்றும்படி செய்யவும். ஒருவர் நிறைகுட நீரையும், மற்றொருவர் பூசணித் துண்டிகளையும் எடுத்துக் கொள்ளவும். இன்னொருவர் வைக்கோல் உருவை இழுத்து வர வேண்டும். அப்பொழுது.

உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறிநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே

என்னும் பாடல்களை ஓதியபடி திருக்கோயிலை வலமாகச் சுற்றிக் கொண்டு வரும்பொழுது எட்டுத் திசைகளிலும் நிறைகுடநீரைச் சிறிது தெளிந்து அதன்மீது ஒரு பூசணித் துண்டை வைக்கவும். இறுதியில் வடகிழக்கு மூலையில் எஞ்சிய உருவை முழுவதும் எறியும்படி செய்ய வேண்டும். நிறைகுடநீரை எல்லா இடங்களிலும் தெளிக்கவும். இவ்வாறு தூய்மையாக்கிய நிலத்தில் தான் பணிகளைத் தொடங்க வேண்டும்.

இளங்கோயில் அமைத்தல் (பாலாலயப் பிரதிஷ்டை)

34. மற்றவர்களெல்லாம் மனத்தளர்ச்சி அடையும்போது, தன்னந்தனியனாய் உறுதியுடன் இருப்பவனே மனிதன். தெய்வத்துக்குத் தன்னை ஒப்படைத்து விட்டுப் பணி செய்பவனுக்கு உலகெல்லாம் கீழ்ப்படிகிறது. குழந்தை போன்று அவனது கள்ளங்கபடமற்ற சொல்லுக்கு மக்கள் செவிமடுக்கின்றனர். ஈசுவர சங்கற்பம் அவன் வாயிலாக வெளிவருவதால், தளர்ச்சிக்கும் சந்தேகத்துக்கும் ஆங்கு இடமில்லை.

35. மண்ணின் தொகை மாநிலம். ஈசுவர சிருஷ்டியில் அற்பமானது ஒன்றுமில்லை. மனிதனது ஒரு சிறு செயலில் குற்றமுண்டானால் அவனது பாங்கே குற்றமுடையதாய்விடும். நமது ஒவ்வொரு சிறு செயலும் பெருஞ்செயலாய்த் திகழ்தல் வேண்டும்.

36. கைவசமுள்ள கைவிளக்கு ஒன்று, சில அடிகள் தூரமே வெளிச்சம் காட்டுகிறது. ஆயினும், கால் எடுத்து வைக்க வேண்டிய இடத்தைக் காட்டுவதற்கு அது போதுமானது. உடனே செய்ய வேண்டியதை அவ்வப்போது அறிந்து முறையாகச் செய்தால் நல்ல முடிவுக்கு அதுகொண்டு சேர்க்கும். மனச்சாட்சியே நம்மிடத்துள்ள கைவிளக்கு. செயலில் சிறியது பெரியது என்னும் வேற்றுமை இல்லை. செய்வதைச் செம்மையாகச் செய்வதே யோகம்.

37. சத்தியத்தைப் புறக்கணிக்குமளவு மனிதன் தன்னையே அழித்துக் கொள்ள வழி தேடுகிறான். ஏனென்றால், அண்ட மனைத்திலும் அது வியாபித்திருந்து ஒழுங்குப் பாட்டையும், முறைமையையும் இயக்குகிறது.

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

38. வெள்ளைத் துணியில் எந்தச் சாயத்தை வேண்டுமானாலும் ஏற்றலாம். மனதின் அமைப்பு அத்தகையது. எதை உவகையுடன் எண்ணுகிறதோ அதன் இயல்பை மனது வாங்கிக் கொள்ளுகிறது. உலகமெல்லாம் உன் சொரூபம் என்று காண்பதற்கான மன பரிபாகத்தை மெய்ப்பொருளே, நீ என்மாட்டு அமைத்தருள்வாயாக.

39. ஒழுக்கத்தில் நிலைநிற்கின்றவர்க்கு மனவுறுதி அதிகரிக்கின்றது. நாளடைவில் அது ஆத்மசக்தியாக வடிவெடுக்கிறது. புடமிடு மளவு பொன் புனிதமடைவது போன்று, மனது தூய உணர்ச்சியிலும் எண்ணத்திலும் கொதித்துக் கொண்டிருக்குமானால் அது தெய்வப் பெற்றி அடைவது திண்ணம்.

40. நமக்கு நாமே சுற்றம். புறவுலகில் கிடைக்கும் ஆதரவு இரண்டாம் தரமானது. நல்ல மனதே மாறாத்துணையாகிறது. கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு. ஆகையால் அதில் மேலானது, கீழானது என்பதில்லை. சலிப்பும், சஞ்சலமும் சுயநலத்தினின்று வருகின்றன.

41. இவ்வுலகில் சினத்தைக் கொண்டு சினத்தை ஆற்றிவிட முடியாது சினமின்மையைக் கொண்டே சினத்தை வெல்லலாம்.

> "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு,
> நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

42. உலகனைத்துமாய் வடிவெடுத்துள்ள கடவுளை இங்குமங்கும் தேடுவது வீண். குருடன் எங்குத் தேடியும் சூரிய வெளிச்சத்தைக் காண முடியாதது போலவே, ஞானக் கண்ணில்லாதார் தெய்வத்தை எங்குத் தேடியும் காணமாட்டார்; ஞானக் கண்ணுடையார் யாண்டும் கடவுளையே காண்பதால் அவர்கள் கடவுளைத் தேடுவதில்லை.

43. உள்ளம் துப்புரவாய்விட்டால் அது துன்பத்தை உறுதியுடன் தாங்கும் வலிமை பெறுகிறது. தன் சிந்தையை இவ்வாறு வென்றவன் சந்நியாசம் பெறுவதற்கு உரியவனாகிறான்.

44. சமய சாதனம் என்பது மடைமாற்றும் பயிற்சி. மனிதன் தன் இயல்புகளை அறவே மாற்றிவிட முடியாது. பொறி வழியே செல்லும் சிற்றியல்புகளையெல்லாம் மடைமாற்றிப் பரத்தை நாடும் பேரியல்பாக்க வேண்டுவதே தலையாய சமய சாதனம்.

45. உள்ளத்தில் கொந்தளிப்பு அடங்கியபோது தெய்வ தரிசனம் கிட்டுகிறது. வேட்கை ஒழியுமளவு உள்ளம் தெளிகிறது. ஆத்ம சொரூபம் தென்படுகிறது. பிறகு தெளிந்த மனதே ஆத்ம

சொரூபமாய் விடுகிறது – வேதாந்தமாவது வேட்கை ஒழிந்த இடம்.

46. மற்றவர்களுக்குப் பயன்படுவதும் தன்னைத் தெய்வத்திடம் ஒப்படைப்பதும் ஒன்றே. தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே ஆத்ம சமர்ப்பணம் செய்தவனாகிறான்.

47. சுவர்க்கத்தையோ நரகத்தையோ எனக்கு நானே உண்டு பண்ணிக் கொள்கிறேன். ஒரே ராசகுடும்பத்தில் சேர்ந்தும் ஒரே குருவான துரோணாச்சாரியாரிடம் பயிற்சி பெற்றும் வளர்ந்தவர் துரியோதனனும், தருமரும். ஆனால், குருவின் கட்டளைப்படி நல்லவன் யாராவது உண்டாவென்று உலகில் தேடிப் பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் யாரும் தென்படவில்லை. தர்மனுக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதே காலத்தில் அகப்படவில்லை. நலமும் கேடும் உலகில் அல்ல; தன் மனதில்.

48. நம்மைத் துன்பத்தில் தளைப்பதும், துன்பத்தளையினின்று விடுவிப்பதும் நமது எண்ணம். எண்ணத்தைக் கட்டுப்படுத்திய வனுக்கு அச்சமில்லை; ஏமாற்றமில்லை; பதைபதைப்பில்லை. அமைதியே வடிவெடுத்திருப்பவன் நிறைபொருளோடு ஒன்றித்து விட்டான். அசையாத, நடுநிலை மனதே ஆத்மசொரூபம்.

49. அனைத்தும் ஒரு பொருளின் பல்வேறு தோற்றம் என்று அறிவது யோகம்; தன் செயலெல்லாம் கடவுள் செயலென மாற்றி தன்னைக் கடவுளின் பிரதிநிதியாக்குபவனே யோகி.

50. ஒவ்வோர் உயிர்க்கும் உயிராய் மனத்தினுள் தெய்வம் மனச் சாட்சியாய் எழுந்தருளியுள்ளது – அதைச் சுட்டிக் காட்டவும் முடியாது, புறக்கணிக்கவும் முடியாது. ஆணவம் ஓங்கும்போது மறைந்துள்ள மனச்சாட்சி, ஆணவம் ஒதுக்கப்பட்டு மனம் அமைதியுற்றிருக்கும் போதுதான் பேசத் தொடங்குகிறது.

51. அப்போதைக்கப்போது கிடைக்கும் இன்பத்தை விரும்பி ஆடு மாடு போன்று பாமரர் சிற்றியல்புக்கு ஆட்படுகின்றனர். மருந்துக்குரிய செடியை மருத்துவன் தேடியெடுப்பது போன்று நலம் தரும் சீரிய எண்ணத்தை ஞானி மனத்தின்கண்

நாட்டுகிறான். எனவே வாழ்க்கை என்னும் இராச்சியத்தை ஞானி ஆளுகிறான் - மற்றவர் வாழ்க்கைக்கு அடிமைப் படுகின்றனர்.

52. 'சும்மா இரு' என்பது மனத்தில் அகங்காரம் அற்ற நிலையைத்தான் குறிப்பது - இந்த நிலையில்தான் பற்றற்ற கருமம் ஓயாது நிகழ்கின்றது. ஒரு ஓடத்தை வெறும் படகு வந்து மோதினால் யாருக்கும் ஆத்திரம் வராது - ஒரு ஆள் அதிலே இருந்து விட்டால் சண்டை.

53. உலகில் உள்ள அக்கிரமங்களைப் பற்றியோ, பாவங்களைப் பற்றியோ பேசாதே, அக்கிரமங்களைக் காணக்கூடிய குறைபாடு உன்னிடத்தில் இருப்பது குறித்துக் கதறியழு. உன் மனதில் உள்ளதையே உலகில் நீ காண்கிறாய்.

54. உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

ஆக, மிகைபடவோ, குறைபடவோ உண்டியை ஏற்பது பொருந்தாது. இதுவே யோகியர் வழி. உயிரை விளக்கு வதற்கென்றே உடல் இருக்கிறது.

55. சூரிய வழிபாட்டின் தத்துவம் இறைவனின் வியாபகத்தை உணர்த்துவதே. இறைவன் உலகத்துக்கே தன்னைப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறான் - அதன் பிறகு எல்லோருடனும் இறைவனே இரண்டறக் கலந்திருக்கிறான். இந்நிலையில் இறைவனைத் தேடுவது என்பது அதிசயமன்றோ? கஸ்தூரிமான் வாசனையைத் தேடி ஓடியலைவது வீண். உள்ளத்தில் உள்ளவன் இறைவன்.

56. மனிதனைத் துன்புறுத்துவது உலகில் ஒன்றுமில்லை. நமக்கு நாமே சிறை கட்டிக் கொண்டிருக்கிறோம். தன்னுடைய ஆசாபாசம், தனக்கு விருப்பமான இடம், பொருள், அந்தஸ்து இவைகளில் அவன் கட்டுண்டு கிடக்கிறான். எமது மனம் முற்றிலும் நேர்மையடைந்து விட்டால், புறத்திலும் அந்த நேர்மையைக் காண்போம்.

57. கோபுரத்தைச் சுமந்து கொண்டிருப்பது போன்று கோபுரந்தாங்கி காட்சி கொடுக்கிறது. உண்மையில் கோபுரந்தாங்கியைத் தாங்குவது கோபுரம். ஆணவம் ஒடுங்கிவிட்டால் தன்னிலும் மிக்கதொரு சக்தி தன்னைத் தாங்குவதை மனிதன் உணருவான்.

58. தரித்திரத்துள் பெரியது அதிருப்தி – போதவில்லை என்ற மனப்பாங்கு உருவாக்குவது தரித்திரம். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

59. சினிமாப்படம் என்பது நிழல், வெளிச்சம் ஆகியவைகளின் அசைவு. அந்த அசைவு ஒய்ந்தால் திரை தென்படும், இயற்கையின் கருமம் என்பது சத்துவம், ராசசம், தாமசம் ஆகிய வைகளின் அசைவு. இந்த அசைவு ஒய்ந்தால் இறைவன் தென்படுவார்.

60. விழிப்புக்கும் உறக்கத்துக்கும் வேற்றுமை அகலும்போது யோகநித்திரை அடையப் பெறுகிறது – உறங்குதல் இந்திரிய வயம்மயங்கி அக்ஞானத்தில் அழுந்துதல் விழித்திருப்பது ஆத்மபோதம் பெறுவது.

61. மனதில் உறுதிப்படும் எண்ணம் ஒவ்வொன்றும்மந்திரம் (மன + திரம்). இயற்கை தன்னை ஓயாது புதுப்பிப்பதுபோல, எண்ணத்திலும், வாழ்விலும் மனிதன் தன்னைப் புதுப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். படிப்படியாக வளர்ந்து பூசைக் குரியதாகப் பூவானது தன்னை அமைத்துக் கொள்ளுகிறது.

62. கடவுளை நோக்கிச் செல்லும் பயணம் என்பது நீண்டிருக்கலாம் அல்லது நொடிப்பொழுதாகலாம் – இது மனதைப்பொறுத்தது. உற்றார், நண்பர், செல்வம் எல்லாம் அழிந்த பிறகு உண்மை ஒன்று மட்டும் உறுதியாக நிற்கிறது – அவ் உண்மையும், இறைவனும் ஒன்றே.

63. மனிதன் எண்ணத்தில் மிக உயரமாய்ப் போய் விடுவானானால் உலகத்தவர்களிடமுள்ள குறைபாடுகளோடு அவனுக்கு முரண்பாடு உண்டாகாது. "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு"

64. நீர்வீழ்ச்சி என்னும் ஆகர்ஷண சக்தியை மின் சக்தியாக மாந்தர் மாற்றியமைக்கின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தில்

காமத்தைக் கடவுள் பக்தியாகவும், வெறுப்பை இரக்கமாகவும் மாற்றியமைக்கக்கூடிய மனிதன் சான்றோனாக மாறி விடுகிறான்.

65. வீடுகட்டுதற்குச் சாரம் துணை நின்றது உண்மை-கட்டிட வேலை முடிந்ததும் சாரத்தைக் கலைத்தாக வேண்டும். கடவுளை அடைவதற்கு உடல் வாழ்வு சாரம் - அவரை அடைந்தான பிறகு சரீரம் என்னும் சாரத்தைக் கலைக்க வேண்டும்.

66. சரணாகதி ஒன்றே வழிபாட்டின் எல்லை, "வேண்டத்தக்கது அறிவோய் நீ" - "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதெல்லாம் ஈசாவாசியமிதம் சர்வம் என்பதன் எதிரொலியே. நிகழ்வது எல்லாம் ஈசன் செயல் என்று காண்பவனுக்கு நலமேது தீது ஏது?

67. சீர்திருத்தம் யாவும் மனதில் இருக்கிறது. எண்ணத்துக்கு ஏற்றவாறு புறவுலகம் காட்சி கொடுக்கிறது. எண்ணத்தை ஒழுங்குபடுத்துமளவு கேடு உலகினின்று அகன்று விடுகிறது. நல்ல வாய்ப்பு என்பது மனிதனுடைய மனநிலையைப் பொறுத்தது.

68. மனிதன் ஆனந்தத்தைத் தேடியலைகிறான். நிலையற்ற உலகப் பொருள்களிடத்தில் அவன் அதை நாடி ஏமாற்றமடைகிறான். அழியும் பொருளில் ஆனந்தம் இல்லையென்பதை இயற்கைத் தாய் அடித்து அடித்துப் பாடம் புகட்டுகிறாள்; இறைவன் ஒருவனே ஆனந்தத்திற்கு இருப்பிடம் எனும் பாடம் தொடர்ந்து நடைபெறுகிறது.

69. அலைந்து கொண்டிருக்கும் மனதில் உண்மை ஒளிர்வதில்லை. மனம் அடங்கிய சமநிலையே ஞானத்திற்கு முற்றிலும் அவசியமானது. எண்ண விருத்திகளை ஒதுக்கி வைத்துவிடுவதற்கு உபாயம் நித்திய இறை வழிபாடு ஒன்றேயாகும். அமைதியும், பயிற்சிப் பண்பாட்டால் வரும். பொறுமையும் ஆற்றலுக்கு அறிகுறி.

70. "மரத்தை மறைத்தது மாமதயானை; பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்,"

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே
—திருமந்திரம்

71. இவன் நல்லான், அவன் கெட்டவன் என்று பாகுபடுத்துவது எமது மனம். இதனால் நன்மை, தீமை என்ற மனக் கற்பனைக்கு உட்பட்டு அல்லற்படுகிறேம். ஒரு பொருளே பலவாய்த் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஞானம்.

72. இடையறாது வினையாற்றுவதும், மனது யாண்டும் அமைதியுற்றிருப்பதும் ஒன்று சேர்ந்து நல்ல வழிபாடு ஆகிறது. ஊழை முன்னிட்டு உடலுக்கு வரும் நலம் கேடுகளை உணராது இருக்கப் பழகுவதே சமய வாழ்க்கை போதிக்கும் பாடம்.

73. மலையுச்சியில் நின்று பார்ப்பவர்களுக்குத் தரையிலுள்ள மேடு பள்ளங்கள் தெரிவதில்லை. அண்டத்தின் பேரமைப்பை உள்ளபடி காண்கின்றவர்களுக்கு அதன் குறைபாடு ஒன்றும் தென்படுவதில்லை. ஆதலால் அவர்களுக்கு வருந்துவதற்கு ஒன்றுமில்லை. இதுவே நடுக்கற்ற காட்சி.

74. ஏழ்மை என்பது பொருளில் தங்கியிருப்பதில்லை. கஷ்ட காலத்தை முன்னிட்டு மனம் தளர்வுறுபவன் ஏழை. தெய்வ சிந்தனை மூலம் நாம் பலமடைய முடியும்.

75. பிரபஞ்சம் என்னும் படத்தை அதற்குச் சாட்சியாயிருப்பவனே ரசிக்கிறான். அதில் கட்டுண்டிருப்பவன் ரசிப்பதில்லை.

76. உலகம் நல்லதா கெட்டதா? என்ற கேள்வி அடிக்கடி எமது மனதில் எழுகிறது. பூனையின் பல் கருணையின் இருப்பிடமென்று கண்டறிந்தது பூனைக்குட்டி; ஆயின், அதே பூனையின் பல் கொடூரத்துக்கு இருப்பிடம் என்று கண்டது எலி. இது உண்மையான முரண்பாடு, ஆக, உலகத்தைக் கடவுள் மயமாய் அதைக் காண்பவனுக்கு அது நல்லது; மற்றவனுக்கு அது கெட்டது.

77. சினத்திற்கு எமது உள்ளத்தில் இடம் இல்லையானால், பிறர் சினம் எமது முன்னிலையில் மாயமாய் மறைந்து விடும். இறை

வணக்கத்துக்கு நேரம் போதவில்லையே என்று ஏங்கியிருப்பவனுக்குப் பிறரோடு சண்டையிட நேரமெங்கே?

78. உலகினின்று தான் ஏற்பதைவிட யார் உலகுக்கு அதிகமாக வழங்குகின்றானோ அவன் வேள்வி செய்கிறான். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நரயாகம்; பூதயாகம்.

79. தொண்டன் யாருக்கும் எதிரியல்லன். "இன்புறுட எந்தை இணையடி ஏத்துவார், துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே"

80. உலகை இறைவனின் காட்சியாகக் காணும் வரையுமே நூல் படிப்பு – "காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் கண்டேன். அவர் திருப்பாதம்" கண்ட பின்பு நூல்களாற் பயனில்லை; சமயத்தில் அறிவதற்கு இதற்கு மேல் ஒன்றும் இல்லை. சாதனையே பாக்கி. அந்தக் கரணமாகிய மனதை உலகினூடே உள்ளும், புறமுமாய் உள்ள இறைவனைக் காண்பதே சமயத்தின் எல்லை.

81. மிகப் பெரிய சூரியனை எமது பார்வையிலிருந்தும் மறைப்பதற்கு ஒரு கைக்குடை போதும். அது போன்று அற்ப ஆணவத்திற்கும் இறைக் காட்சியை மறைக்கும் திறமையிருக்கிறது. இந்த ஆணவத்தை அகற்றுவது இறையருள் – சரணாகதியின் பெரும்பேறு இறையருள்.

82. வாழ்ந்திருக்கும் போதே மாய்ந்து போனவன் போன்று யார் ஆகிவிடுகிறானோ அவன் ஞானத்துக்குத் தகுதியுடையவன் ஆகிறான்.

83. புராணங்களிலும் இதிகாசங்களிலும் நம்முள்ளிருக்கும் கீழ்மையே அசுரன் என உருவகப்படுத்தி அசுரவதம் தெய்வத் தன்மையால் நடைபெறுகிறது. சூரன் ஆணவத்தின் அம்சம் துரியோதனன் பொறாமையின் உருவகம். எம்முள்ளிருக்கும் சிற்றியல்புகளை அழித்தலும், பேரியல்புடன் திகழ்வதுமே சமயத்தின் சாரம்.

84. தவத்துக்காகக் காடு சென்றும் சீதையின் பொய்மானுக்கு ஏற்பட்ட ஆசையால் ராமன் அல்லற் பட்டான். பிரபஞ்ச வாழ்வு, பிரபஞ்சப் பொருள்கள் என்னும் பொய்மானைப்

பார்த்து நாம்ஓடாதிருத்தலே, இவற்றைப் பார்த்தும் ஆசை வலையில் வீழாதிருத்தலே சமயத்தின் சாரம்.

85. செயலுக்குக் கர்த்தா மனிதன் அல்ல – இதை ஏற்கும் திறன் பெறுவதென்பது கடினம். துன்பத்திற்குக் காரணம் "நானே கர்த்தா" என்ற ஆணவம்தான். மனம் இருக்கும் வரையில் உலகக் காட்சி உண்டு – நல்ல மனதுக்கு உலகம் நல்லது. மனோ நாசத்திற்குப் பிறகு எஞ்சியிருப்பது மெய்ப்பொருள். அரசாங்க ஊழியன் அரச அதிகாரம் பெற்று, அதை நினைந்து வேலை செய்வது போலவே, உலக வாழ்க்கை.

86. நான் என்பதற்கு இலக்காயிருப்பது எது? உடலா? தசையா? மனமா? நான் என்பது வெங்காயம் போன்றது – சருகுகளை ஒவ்வொன்றாக நீக்கிய பிறகு வெங்காயத்தில் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. கருவி கரணங்களை நீக்கிய பிறகு நான் என்பதற்கு இலக்காக ஒன்றுமில்லை.

87. இருளில் பாம்பு என்னும் காட்சி தெரியும் போது, கயிறு என்னும் காட்சி தெரிவதில்லை. கயிற்றைக் கயிறாக உணரும் போது பாம்பு இல்லை; பயம் இல்லை; இருள் இல்லை, அதாவது மருள் இல்லை. பொருளை மாயைக்கு அடிமையாக்கி இயற்கையாகக் காண்பது மருள் நிலை (Delusion); பொருளை ஞான ஒளியில் பரமனாகக் காண்பது அருள்நிலை (Beatific Vision)

88. மனிதன் படும் வேதனைக்கு அக்ஞானமே காரணம் (Wrong identity) இருப்பது பரம்பொருள் ஒன்றே. பரம் பொருளைப் பிரபஞ்சமெனக் கருதி வாழ்வதே இன்னல்களுக்குக் காரணம் பரமனை உள்ளபடி காண்பது மெய்யறிவு.

89. அலையும் கடலும் இரண்டு பொருள்கள் அல்ல; அவைகள் அத்துவைதம். பிரமமும் மாயையும் அத்துவைதம்; உடலும் உயிரும் அத்துவைதம்; சீவனும் சிவனும் அத்துவைதம். சூரியனும், சூரியகிரணமும் அத்துவைதம்; சிவனும் சக்தியும் அத்துவைதம்.

90. மனக் கொதிப்பு அடங்கினால் மெய்க்காட்சி துலக்கமாகத் தெரியும். அமைதியே உருவான மனதில் பிரகாசிக்கும் ஜீவாத்மா பரமாத்மா போன்றது. மனதற்ற நிலையில் நீயும்

இறைவனும் அந்த நொடிப்பொழுதில் ஒன்றே – மனம் அற்றிருப்பது நிர்விகற்ப சமாதி. அதாவது ஜீவபோதம் அற்றநிலை உப்புப் பொம்மை கடலின் ஆழத்தை அளக்க முற்பட்டு அதில் இறங்கியது போல.

91. **அன்பும் – தொண்டும் உள்ளத்தில்**

(அ) அன்பும் சிவமும் இரண்டென்பர் அறவிலார்
– திருமந்திரம்

(ஆ) உண்டு உடுத்துப் பூண்டு இங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே
– தாயுமானவர்

(இ) திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்,
புரையற்றிருந்தான் புரிசடையோனே.

92. **மனக்கண்ணாடி**

(அ) சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே
– தாயுமானவர்

(ஆ) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். – குறள்

93. **மனவழிபாடு**

(அ) உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்

(ஆ) காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக

(இ) உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
– அப்பர்

94. **மனக்குரங்கு**

வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல் பாழ்த்தமனம்ஏதுக்குக்
கூத்தாடுது எந்தாய் பராபரமே – தாயுமானவர்

95. **காண்போனும் காணப்படு பொருளும் நீயே**

காட்சிக்கு எளியான்காண் கண்டாலும் காணான்காண்
மாட்சி மனம் வைத்தார்க்கு மாணிக்கத்து உள்ளொளிகாண்
– பட்டினத்தார்

96. மன பரிபாகம்

சிந்தந்தெளிந்து சிவமானோர் எல்லோர்க்கும்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே

– தாயுமானவர்

97. கோபம்

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற – குறள்

98. புடமிடுதல்

1. "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு" – குறள்

2. அஞ்சுவது யாதொன்றும் இல்லை, இனி அஞ்ச
வருவதும் இல்லை – அப்பர்

99. கடமை

செய்கருமத் தேயன்றிச் சேரும் பயன் தன்னில்
ஐய உனக்கில்லை அதிகாரம் – கீதை

100. மடைமாற்றுதல்

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து ....
எங்குற்றார் என்ற போதால் இங்குற்றேன் என்கண்டாயே

– அப்பர்

101. மனவேட்கை (மனக்கொந்தளிப்பு)

1. வேதாந்தம் ஆவது வேட்டை ஒழிந்த இடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே

– திருமந்திரம்

2. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

– திருக்குறள்

102. சமர்ப்பணம் (சரணாகதி)

1. ஊனுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலனழிந்தேன் பூரணமே

– பட்டினத்தார்

2. அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாம்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு
நாயகமே – திருவாசகம்

103. கடவுளிடத்து அன்பு வைப்பதும் அவரை அறிவதும் ஒன்றே

அன்பருக் கன்பான மெய்யன் – ஐயன்
ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான் – எனனைத்
தானறிந் தேன்மனந் தான் இறந்தேனே

– தாயுமானவர்

104. உபதேசம்

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்குபதேசம் இதே.

– பட்டினத்தார்

105. அடக்கம்

1. அச்சம் ஆங்காரம் அகத்தடக்கினாற் பின்னை
நிச்சயம் ஈசன் நிலை

– ஔவைக்குறள்

2. காக்க பொருளாய் அடக்கத்தை ஆக்கம்,
அதனினூங்கு இல்லை உயிர்க்கு

– திருக்குறள்

106. புத்தகப் படிப்பு

1. ஓங்கி நிறைந்தது கண்டால் – பின்னர் – ஒன்றென்று,
இரண்டென்று உரைத்திடலாமோ

2. ஓர் உரையால் வாய்க்கும் உண்மைக்கும் ஒரனந்த நூல்
கோடிப் பேருரையாற் பேசில் என்ன பேறாம் பராபரமே

107. மனக்கோயில்

நாடு நகரமும் நற்றிருக்கோயிலும், தேடித்திரிந்து
சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின் கூடிய நெஞ்சத்துக்
கோயிலாய்க் கொள்வனே

108. வேண்டுகோள்

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே

– தாயுமானவர்.

உலக சைவப் பேரவையின் தோற்றுநர் (W.S.C. Founder)

இங்கிலாந்தில் தவத்திரு சிவநந்தி அடிகளார் சாதனை

இலண்டனில் மெய்கண்டார் ஆதீனம்

உலகின் எந்தப் பாகத்திலும் தமிழர்கள் வாழுமிடமெல்லாம் தமிழோசை கேட்கிறது. இந்துக்கள் வாழும் இடம் எல்லாம் ஆலயங்கள் எழுகின்றன. ஆதீனங்களும், மடாலயங்களும் அருட் சங்கங்களும் ஆன்மீக நெறியைப் பரப்புகின்றன. அந்த வகையில் இலண்டனிலிருந்து இயங்கும் மெய்கண்டார் ஆதீனத்தை எமது வாசகர்களுக்கும் அறிமுகம் செய்வதில் மகிழ்வு கொள்கிறோம். 1979ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த பிரிட்டன் சைவ சித்தாந்தச் சங்க அமைப்பாக 1986ம் ஆண்டு ஜனவரியிலிருந்து இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. ஆதீனம் என்ற முறையில் பிரிட்டனில் அமைந்த முதலாவது சைவ ஆதீனம் இதுவாகும். அத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு தர்மஸ்தாபனமாகவும் இது விளங்குகின்றது. மேன்மைகொள் சைவ நீதியும், சைவ சித்தாந்தக் கருத்துக்களும் உலகமெங்கும் விளங்க லண்டனிலிருந்து பணியாற்றியோரில் திரு. ஞானசூரியர் என்ற பெருந்தகைக்கு மிகப் பெரிய பங்குண்டு. அன்னார் லண்டனில், தமிழும் சைவமும் தழைக்கப்பல்லாண்டுகளாகப் பாடுபட்டு வருகின்ற சைவத் தமிழ்ப் பேராளர். பல பட்டங்களைப் பெற்றுள்ளதோடு, உயர்பதவிகளையும் வகித்தவர் அவரே.

லண்டன் மெய்கண்டார் ஆதீனம் லண்டன் சைவ சித்தாந்த நிலையம் என்பவற்றை நிறுவியதோடு அவற்றின் அறங்காவலருமாகத் திகழ்கின்ற பெருமைக்குரியவர். லண்டனிலே நிலைத்துள்ள சைவ முன்னேற்றச் சங்கம் அன்னாரின் அரும் பணிகளைப் பாராட்டி 'சைவ சித்தாந்தச் செம்மல்' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது.

திரு. ஞானசூரியர் அவர்களோடு லண்டன் வாழ் இந்துப் பெருமக்கள் பலர் இவ்வாதீனத்தின் முகாமைத்துவ உறுப்பினர் களாகவும், ஆலோசகர்களாகவும் உள்ளனர். கடந்த ஆண்டுகளில்

லண்டன் வாழ் இந்துக்களின் பேருதவியோடு இவ்வாதீனம் பல அரிய செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது. சைவ சித்தாந்தக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டதோடு சித்தாந்தப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. ஆதீன அறங்காவலரான திரு. ஞானசூரியர் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், லண்டனிலுள்ள ஏனைய இந்து ஆலயங்கள் போன்றவற்றில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளை நடத்தினார். அத்துடன் மேலை நாட்டவரும் பிற மதத்தவரும் கூடியுள்ள பல கூட்டங்களில் திரு. ஞானசூரியர் 'சிவநடனம்' தென்னிந்திய சிவன் கோயில்கள் போன்ற சிறப்பு விரிவுரைகளை ஆற்றினார்.

மெய்கண்டார் ஆதீனம், பிரிட்டனிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள இந்து ஆலயங்களுடனும், நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு வருகிறது.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளையும், அவற்றின் தன்மைகளையும் கோயில்களிலும் குருபூஜைகளிலும் சமயப் பிரசுரங்கள் மூலம் பரப்புவதையும், சைவ சித்தாந்த வாழ்வு முறையை உணர்ந்து அனைவருக்கும் உணர்த்துதையும் ஆதீனம் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது. ஆதீனத்தில் அடிநாதமாக மெய்கண்டதேவர் அருளிச் செய்த சிவஞான போதம் விளங்கு கின்றது உலகளாவிய ரீதியில் சைவத் தொண்டாற்றவும் ஆதீனம் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

1989–ஆம் ஆண்டு தனது அறுபது வயதை நிறைவு செய்து கொண்ட கல்விமானான திரு. கி. ஞானசூரியர் அவர்கள் சைவ மரபினைப் பேணி சந்நியாச தீட்சை பெற்றுக் கொண்டதோடு மெய்கண்டார் ஆதீனத்தின் ஆதீனகர்த்தராகவும் விளங்குகின்றார்.

சந்நியாசம் பெற்றதோடு ஆதீன கர்த்தர் தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார் என்ற திரு நாமத்தோடு ஆன்மீகப் பணிகளை ஆற்றி வருகின்றார். கடந்த வருடம் ஏப்ரலில் சுவாமி சிவநந்தி அவர்கள், சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளுக்காக் கொழும்பு, சென்னை, சிதம்பரம், சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார். இங்கு ஆற்றிய சித்தாந்தச் சொற்பொழிவுகளில் சுவாமி சிவநந்தி அவர்கள் சமய வாழ்வு வாழ்வதன் அவசியத்தையும் இளைய சமுதாயத்தினருக்கு இதனை உணர்த்த வேண்டிய கட்டாயத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

தமிழகத்தில், தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்கள் சுவாமி சிவநந்தி அவர்கட்கு வரவேற்பும் கௌரவமும் அளித்தன. தர்மபுரம், மடாலயத் தலைவருடன் மூன்றாவது அகில உலக சைவ சிந்தாந்தப் பேருரைகளை இவ்வாண்டு கனடா மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் நடத்துவது பற்றியும் சுவாமி சிவநந்தி அவர்கள் உரையாடினார்.

அண்மையில் மகாராஜபுரம் சந்நிதானம் அவர்களின் இசைக் கச்சேரி அடங்கிய ஒலிப்பதிவு நாடா ஆதீனத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்வாண்டு மே மாதத்தில் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து ஆதீனம் தவத்திரு குன்றக்குடி அடிகளாரை வரவேற்று லண்டன் முருக ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியது. ஜூலை மாதத்தில் பிரசாத யோகம் எனும் பிரசுரம் ஆதீனத்தால் வெளியிடப்படவுள்ளது. ஆங்கிலத்திலும் தமிழிலும் பல சைவ நூல்கள் வெளியிடப் படுகின்றன.

இவ்வாறு லண்டனிலே மெய்கண்டார் ஆதீனம் சிறப்புற இயங்க ஆதீனகர்த்தர் சுவாமி சிவநந்தி அவர்களின் அயராத உழைப்பும் ஆன்மீக வலிமையுமே காரணமாகும்.

எந்நாட்டவர்க்கும் இறைவனான தென்னாடுடைய சிவனின் புகழை இந்நாட்டிலும் (லண்டன்) பரப்புகின்ற சுவாமி சிவநந்தி அவர்களின் பணிகள் சிறக்க வேண்டுமென இறைவனைப் பணிகின்றோம்.

உலக சைவப் பேரவை

தவத்திரு சிவநந்தி அடிகளாரின் அயராத முயற்சியால் உலக சைவப் பேரவை 29.9.92 ல் சென்னையில் சர்வதேச பேரளார்கள் முன்னிலையில் உருவாக்கப்பட்டும், இலண்டனில் சர்வதேச தலைமையகம் கொண்டும் விளங்குகின்றது. அரசியல் சார்பற்ற இந்த நிறுவனம் 'சைவ உலகம்" என்ற காலாண்டு இருமொழி இதழையும், பதினைந்துக்கும் மேற்பட்ட சைவ சமய தத்துவ பிரச்சார நூல்களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டுள்ளது. ஆண்டு தோறும் இதுவரை ஐந்து சர்வதேச சைவ உலக மாநாடுகளை வெற்றியோடுநடத்தியுள்ளது. தூர நோக்கு சிந்தனையுடன் பல நீண்ட காலத் திட்டங்களையும் தீட்டியுள்ளது. "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்".

WORLD SAIVA COUNCIL
London Meikandaar Adheenam Trust

(U.K. Charity)

BOOKS ON TAMIL CULTURE, AND SAIVITE HINDUISM

BY : H.H. SWAMI SIVA NANDHI ADIKALAAR

Books in English

1. **Introduction to Tamil Culture**
   Second Edition, January 1984
2. **A Date with Destiny**
   on Saiva Siddhanta Philosphy, 1980
3. **Introduction to Saivite Hinduism**
   A Primer for beginners, 1982
4. **Meaning of Life**
   in Saivite Hinduism, October 1985
5. **Thiruk Kural**
   Selected Translation, 1976
6. **What is Saiva Siddhanta ?**
   1986
7. **Periya Purana Pushpaanjali**
   1988
8. **Sarvam Sivamayam**
   An Outline of Saivism 1989
9. **Finding Fulfilment**
   Some insights on Saivism, 1990
10. **Prasada Yoga**
    On the Centrality of Grace, 1991

Books in Tamil

11. **Anchaa Nencham**
    On Literature 1980

12. Thamilaa Viliththelu
    Essays, 1981
13. Viduthalaiyum Veetuperum
    On Thiruvacagam, 1984
14. Saivite Hinduism
    (Paris, 1994)
15. Saiva Prayer Manual
    (Colombo, 1995)
16. Saivism Questions and Answers
    (Durban, 1996)
17. Metaphysica Universalis of Meikandaar
18. **By Dr. K. Loganathan**
    (1996)

    அருட்குறள் டாக்டர் கி. லோகநாதன்
    (1994)

Available from :
KAZHAHAM, CHENNAI - 108 &
PAARI NILAYAM, CHENNAI - 108.
W.S.C. London Hd. Qrs & Branches
Penang, Colombo, Chennai, Durban

AUM NAMASIVAYA: HAIL THE ALMIGHTY LORD SIVA

LONDON: THAVATH-THIRU SWAMI SIVA NANDHI ADIKALLAR :

A SHORT PROFILE OF HIS SERVICE TO WORLD SAIVA-TAMIL REVIVAL.

Totally dedicated to fulfil his Inner Divine Call to elevate Tamil Saivism, Not only to Its Past Glory as The World's Oldest but still Living Faith, but also to propagate it as A Noble Religion which meets the needs & challenges of the 20th Century, Swami Siva Nandhi works tirelessly & humbly as an Instrument of Lord Shiva, with the loving support of many Saiva Tamils throughout The World.

Swamikal Is founder-trustee & Aatheena Karthar (spititual Head) of London Meikandaar Aadheenam and also The Chairman and Chief Executive of The World Saiva Council Whose New Secretary General Is Dr. K.loganathan of Penang Science University in Malaysia. The World Saiva Council has been successful in forging wide International Co-operation among Saiva Tamil Communities throughout the world & has Seven Branches: The France Branch Organizing The W.S.C. 3rd Intl. Saiva-Tamil Conference In Paris, 5-26, June, '94 & The Penang Branch Publishing W.S.C. Journal: "Saiva Ulakam.".

Swamikal undertakes extensive World Saiva Lecture Tours To propagate Tamil-saivism.

Now 68, In his Previous Ashrama, Swamiji Was Born In Sri Lanka, The Home Of Resurgent Saiva-tamil Savants Like Sri Arumuka Navalar & Others. Having Graduated with A Science Degree & Worked as an Industrial Chemist, He migrated to U.K, where, obtaining A Master of Science Degree from London University, He Worked as A Scientist Until early Retirement And The Founding of The British Saiva Siddhanta Centre To

Deicate His Life To Tamil-saivism, Culminating, After 12 Years Of Saiva Sadhana In U.K. & South India, In Receiving The Holy Sannyasa Name Of Siva Nandhi, at Holy Chidamparam In Dec.1989.

Swamikal is The Author of over Ten Books In English & Five In Tamil, On Tamil Culture & Saiva Siddhanta and has been Honorary Editor of International Journals Like : "London Murasu" The W.S.C. organ: "Saiva Ulakam", For Several Years. Following Several Titles & Honours, Swamikal Has very recently been honoured with his Appointment As External Examiner For Ph.d Thesies By Bharatithasan University In Tamil Naadu, South India:, In The Fields of Tamil & Saiva Literature & Research.

Above all, worshipping Lord Sri Saiva-nataraja As Ishta Deivam & Reciting The Holy Thiruvacakam In His Daily Prayers, Swamikal Echoes The words of St Manicka-vacakar,

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்
பொன்னம்பலத்து எம் முடியா முதலே"

– திருவாசகம் (THIRUVACAKAM)

"TO BE AMONG THE SERVITORS OF LORD SIVA IS THE GREATEST HONOUR FOR SAIVA-TAMILS."

AUM NAMASIVAYA: ANBE SIVAM
DURBAN INTERNATIONAL SAIVA CONFERENCE,
SEPT, 1996

SAIVISM AND ITS UNIVERSAL CONCEPTS OF RELIGION AND CULTURE

Keynote Address:
SWAMI SIVA NANDHI ADIKALAR
Head of London Meikandar Aadheenam and Chairman,
World Saiva Council

PREAMBLE

Revered Swamijis, Hon. State Officials, Fellow Delegates, Brothers and Sisters of South Africa,

Vanakkam, Aum Namasivaya!

Religion is about thanksgiving to God and his creation and so, I begin with thanking the organisers of this great Conference for enabling us all to thank once again the Almighty Lord Siva. On behalf of the L.M. Aadheenam and the W.S.C., I warmly congratulate the General Organising Committee and all those who helped them in many ways, on this noble and laudable initiative in organising this historic World Saiva Conference in this beautiful city of Durban in the newly emerging free democratic South Africa. I pray to Lord Siva to bless this conference with all success and I am confident that the research papers, talks and discussions to follow will produce new ideas and insights for enriching the future of Saivism as a world faith on its own.

Our Saiva view of life is universal. 2000 years ago, our Sangam Tamil classic: Puranaanooru, proclaimed to the whole wide world: "Yaathum Uure, Yaavarum Keelir" words fit enough to be engraved in gold at the portals of the United Nations in

New York today- the world is my abode because all are my kinsmen. Our Saiva scripture, thirukkural, outlined a four fold path of positive life-affirmation based on Aram, Porul, Inpam and fulfilment leading to a Saiva religious way of life without recourse to meaningless rituals and foolish blind faith. "வையத்து வாழ்வாங்கு" living well the earthy life is the aim. And Saivism has echoed and re-echoed the sentiments of well-being of all. Let there be prosperity for all !

THE ORIGINS AND DEVELOPMENT OF SAIVISM : Tamils 5000 Years of Civilization

The Prehistoric Dravidian Siva

The recent, computer aided decipherement of the Indus valley scripts and excavations of the sites of mahenjodaro and Harappa have presented us with evidence for a reassessment and new interpretation of India's Pre-Aryan civilization and religion which now strongly point in the direction a Dravidian (perhaps Tamil) Civilization following a SAIVA cult going back in time to at least 2500 B.C. even beyond.(See Mortimer Wheeler, the civilization of the Indus Valley, London 1966, 37 - 41)

We know from the Rig Veda that the SIVALINGA (Phallic) worship belonged to the non Aryan people.

Dr. K. Loganathan more recently, through careful linguistic research of Sumerian literature has noted a close affinity so that not only Sumerian the proto Tamil language but also the repertoire of Saiva Agamic traditions then in vouge in the Sumerian Temples.. This important discovery makes our Saiva Tamil Dravidian heritage almost contemporaneous or forerunners to the Babylonian and other ancient cultures in ancient Middle East, considered the cradle of human civilization.

Let us all be proud of our ancient heritage and we appeal to scholars everywhere, particularly the South Indians to continue their research into these areas which will be a source of encouragement to Saiva posterity, the world over. To recover our rightful place in world history Sumero-Dravidian studies is a must.

The Universality of Saiva Siddhanta

Saiva Siddhanta believes in graded froms of worship to suit the cultural and religious level of the various groups of individuals that form the community. The catholicity of Saiva Siddhanta is very beautifully expressed in the following verses-

St. Arulnandi Sivachariyar in Siddiyar says :

Whatever God you worship, even as Him the consort of Uma(Siva) will appear there.

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்

St. Thayumanavar Says :

The path proclamimed by all saints who have had the true vision, is the same every where

கங்குல் பகல் அற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கு மொரு வழியே யெந்தாய் பராபரமே

St. Sundarar says :

I am the servant of those devotees even of other lands,

Who have reached the feet of God.

அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு மடியேன்

Our freedom to pray in our sacred mother tongue is our birthright. Let us make it crystal clear that our crusade is not against our Brahmin friends but it is against Brahminism just as our Saints Appar and Sambanthar fought against the imposition of Sanskrit and the caste system: Just as Mahatma Gandhi fought and won against British Imperialism and just as you fought and won against the Aparthied system in South Africa.

The Saiva Tamil Contribution to World Civilization

The following works of art and literature are among the most remarkable contributions of the Tamil creative genius to the world's cultural treasure and should be familiar to the whole

world and admired and loved by all in the same way as the poems of Homer, the dramas of Shakespeare, the pictures of Rembrandt, the cathedrals of France and the sculptures of Greece -

a) The ancient Tamil lyrical poetry compiled in the eight Anthologies which are so unique and vigorous.

b) The Thirukkural, one of those singular emanations of the human heart and spirit which preaches positive love, forgiveness and peace.

c) The Epic poem : Periya Puranam which by the charm and magic of its lyrical parts belong to the epic masterpieces of the world.

d) The excellent literary expressions of the school of Bhakti which is one of the most sublime efforts of man to grasp the absolute in the works of: Manickavasagar, Gnanasampanther, Appar, Sundarar and Thayumanavar.

e) The philosophical system of Saiva Siddhantam which may be ranked among the most perfect systems of human thought.

f) The South Indian Bronzes of the Chola period particularly the Nadarajah figures and images of the Saiva Saints recognised now as among the masterpieces of the world.

g) The Dravidian temple architecture of which the chief representatives are perhaps the temples of Tanjore, Chidamparam and Madurai.

h) Pann Isai is a distinct Tamil contribution to the world of music. As early as the 7th Century, St. Sampanthar's Tevarams were set to Pann Isai. Swami Vipulananda the distinguished author of Yaal Nool has identified 103 Panns and 120 kaddalais (Rhythmns). The present Carnatic system is only a poor distortion of this ancient Tamil Pann system

i) In the field reiligion, Tamil schools of personal religious devotion (Bhakti) have been important in Hinduism. South Indian

classical dance Bharata Natyam owes much to the Tamils who are masters and teachers of these arts, which are integral to Saivism.

Tamil Saiva Bhakti Movement Was Reformist

Our Saiva Saints initiated the 500 year old crusade against Sanskrit and foreign culture as well as against the degrading system of caste, colour and creed imposed by Brahminism, a crusade that is still going on even today in 1996. Guided by the lofty universal concepts "Onre Kulam Oruvane Thevan", "Yaathum Uure, Yaavarum Keelir", the whole movement is an impassioned cry against the ossified ceremonial religion of the Brahmans and the ideal of "Passionlessness" that they shared with the Buddhists and Jains. It was against the last that they launched their passionate crusade in the name of the One True God, Siva. In the following stanzas Appar, perhaps the most moving singer of them all, denounces the hollowness of purely mechanical religion in terms that bring to mind the much later reformers.

Why the meaningless chatter about the scriptures ?

What do you really gain by the meaningless castes and lineages?

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்,
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?"

Why bathe in Ganges' stream, or Kaviri?

Why go to Comori in Kongu's land?

கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்?
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே!

Saiva Siddhanta introduces a new element through bhakti, the dimension of sharing, communion, total surrender to the will of god so that God abides in his devotees and they in Him. Bhakti, here, is the natural culmination of any mystical theory which makes room for the many as well as the One Love manifesting as the universal mutual attraction of all things

to their centre, the Lord, and through the Lord to each other. "Anbe Sivam" "Lover itself is God Siva" is the central theme of Saivism as elaborated in Thirumular's THIRUMANTHIRAM.

A typical concomitant of bhakti is a sense of reliance on God's Grace, on his gift rather than the devoties' own effort. Quite different from the members of the Vedic pantheon, bhakti's deity cannot be manipulated. He is in charge, a free agent who dispenses or withholds favour in accord with his own designs. It is said that by means of the creator's grace, one sees that Lord and is freed from sorrow. "AVAN ARULAALE AVAN THAL VANANKI" says MANIVACAKAR.

What is historically relevant is that the longstanding Tamil Bhakti tradition, both Vaishnava and Saiva, represent the Tamil Protestant crusade starting from the 5th century onward to maintain our Saiva universal concepts of human equality (onre kulam) and God is love (அன்பே சிவம்) against the imposition of the caste system and untouchability by Brahminism designed to undermine and destroy Tamil culture just like the old apartheid system of South Africa. This is why we proclaim ourselves as Saivites and our religion as Saivism we have nothing to do with Hinduism ridden with caste and untouchability. This is our present crusade. In the name of Saint Kannappar; in the name of Mahatma Gandhi let us proclaim as Saivites " Onre Kulam, Oruvane Thevan."

Science, Spirituality and Shiva's Dance

The dance of Shiva is the dancing universe; the ceaseless flow of energy going through an infinite variety of patterns that melt into one another.

Thus the artistic symbol and focus of Saivas displaying the eternal DANCE OF SIVA, represents SIVA as the Panchakritya showing the dynamics and flow of life through the five-fold divine functions of creation, protection, obscuration, destruction and redemption through His Grace. It also potrays the unique, underlying unity of the worlds of man, mind and

matter, pulsating in unison with the source of cosmic energy which is God himself.

Tirumular in his Tirumandiram writes "let the dance of Lord Siva take place in the heart of every individual".

"எங்கும் சிதம்பரம், எங்கும் திருநட்டம், எங்கும் சிவசக்தி"

The Shiva Shakti principle pervading the whole Cosmos thus provides a logical and consistent insight into the subtle forces of creation and destruction continuously going on in the whole Cosmos.

The Universality of the Shiva - Shakti Principle

All these forces and energies are ultimately found to be integrated in "Shiva Shakti is a two dimensional unity known also as "Ardha naari Nateshwara" (half-female and half-male Lord of the Universe), in which the male represents Consciousness and the female, Pure Cosmic Energy. The Whole Universe is a manifestation of SIVAM brought about by this dual principle. Shiva is the static power potential while Shakti is the active energy of movement and change, actualizing in the various phenomena. Shiva is related to space, and Shakti to time.

Dr. Fritjof Capra further explaining the Shiva Shakti principle, points out : "The most spectacular aspect of subatomic physics is the creation and destruction of material particles. Modern physics shows that, movement and rhythm are essential properties of matter; that all matter whether here on earth or in outer space, is involved in a continual dance. The dynamic view of the Universe is similar to that of modern physics and, consequently, finds its most beautiful expression in India in the image of Shiva Nataraja".

The dance of Shiva is for the welfare of the world. The object of His dance is to free the souls from the fetters of Maya.

The Scientific and Rational Approach of Saiva Siddhanta is evident from its reliance on the following eternal principles:-

a. It is based on the scientific priciple of SATKARYA VADAM what is in the cause must be found in the effect and nothing that is not in the cause can be posited to exist in the effect.

b. The experimental analysis of all that exists into three eternal realities, including the world of Maya, to gain an insight into Reality.

c. The use of logic, psychology, and daily experience, both to underline the fact that Truth is always the golden mean between two poles and also to ensure that Truth can be experienced by all.

d. The classification of the 36 TATTUVAS can be explained in logical and rational way.

The Unique Interpretation of the Term "ADVAITA"

The aspects of God's transcendence and immanence explained as one, different, and being together, is definitely the most satisfying interpretation of advaitta commented on and realised in the experience of saints and given expression to in hymns and formulated by Sri Meikandar in his Sutras which set out the Jnanapada of the Agamas, together with the sadhana for mukti. So it is called the crown and fulfilment of philosophic thought grand manual of the philosophy of religion which appeals to theists and monists.

The Uniqueness of Realistic Pluralism of Saivism

The three fold bondage of Anavam, Kanmam & Maya or Pati Pasu Pasam

Human Bondage called Pacam or Malam is the most common and most general Saiva Siddhanta category designating what ails mankind. Along with pati (the supreme being Siva) and pasu (the individual soul) it is one of the three elements of reality which are eternal and uncreated. This tripartite ontology is central to Saiva Siddhanta philosophy. Pacam consists of three strands or aspects, viz : Anavam, Kanmam and Maya.

Conclusion

Brothers and sisters and fellow Saivites of South Africa: In the words of Thiruvacagam of our great St. Manicavacagar, I too thank Lord Siva and rejoice in your holy company, as we are all united and single minded as devotees of Lord Siva: "அடியேன் உன் அடியார் நடுவே..." As I near the end of my talk, I would like you all to read and carry out as far as you can, the 10 point plan approved at the Colombo conference.

As this Durban Conference is concerned, I would like to leave you with four new ideas for your consideration.

1. First and foremost is the need for an all round Saiva Education both for young and old. This spiritual rejuvenation, based on a sense of belonging to a rich ancient and yet highly scientific Saiva heritage, holds the key to our vision for the 21st century. Saiva devotees must be educated to understand (a) that our Lord Siva cannot be manipulated by money or ritual and that He can be-reached only by a melting heart (அவன் அருளாலே அவன்தாள் வணங்கி) The Periapurana story of St. Kannappar's is proof of this, is proof were needed that prayer in the mother tongue induces real Bhakti.

2. The second most important point is Saiva Social Service to the poor and destitutes in our midst "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" Although charity begins at home, we must progress from that to be magnanimous because there is no high and low in creation - "நடமாடும் தெய்வம் நம்பர்க்கு ஒன்று ஈயின்"

3. Every Saivite worthy of his name should be familiar with at least three Saiva books which are wellknown with translations ; (1) Thirukkural as a guide for daily life (2) Siva gnana bhodam for Saiva Philosophy and (3) Thirumurai for prayer devotion and Mantras.

4. Our vision of a glorious future for Saivism rests on the shoulders of the Saiva Youth of South Africa boys and girls who will not only learn all aspects of Saivism and practice

it, but also live and work with the courage and conviction that Lord Siva's Grace will guide and inspire them in their service to Saivism world wide.

சைவத்தின் சமயப்பொது

டர்பன் நகரத்தில் செப்டம்பர் 1996 – ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் சைவ மாநாட்டின் தலைமையுரையாக சைவத்தின் சமயப் பொதுவினை மிக அழகாக எடுத்துரைக்கின்றார் தவத்திரு சிவநந்தி அடிகளார் அவர்கள்.

சமயம் என்பது இறைவனது அருளை எண்ணி அவனுக்கு நன்றி கூறுவதை மையமாகக் கொண்டவொன்றாகும். அவ்வகையில் உலக சைவப்பேரவை சார்பில் இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்கட்கு அவர்கள் ஆற்றியிருக்கின்ற அரும் பெரும் சைவப்பணியைக் கண்டு பாராட்டி நன்றி தெரிவிக்கிறேன். வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாநாடு, வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வழகிய டர்பன் நகரில் கொண்டாடப்படுவது மிகவும் பொருந்துவதே. கட்டுரைகளும் கலந்துரையாடல்களும் சொற் பொழிவுகளும் சைவ மறுமலர்ச்சிக்கு அடிகோலும் என்பது உறுதி.

சைவம் யாண்டுமே சமயப் பேதங்களை போற்றிய வொன்றல்ல. சமயாதீதநிலைநின்று எல்லா வகை சமயங்களும் பண்பாடுகளும் இறைவனது வெளிப்பாடுகளே என்று கண்டு மகிழும் ஒரு பொதுச்சமயமாகும்– இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முழக்கத்திற்கு ஏற்ப, மனித உள்ளங்களின் ஆழ்தளத்திலே புதைந்து கிடக்கும் பேருண்மைகளைக் கண்டவொன்றாகும். திருக்குறளும் இதைத்தான் வற்புறுத்துகின்றது. மூடப் பழக்க வழக்கங்களை முற்றாகப் போக்கி, அறியாமையைக் கடிந்து ஞானத்தெளிவு பெற்று வையத்து வாழ்வாங்கு வாழ்வதே உயர்வு என்று வாழ்க்கையை நன்றாக வாழ்ந்து களிக்க வழிகாட்டும் சமயம் சைவமாகும் எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே சைவத்தின் மையக் கருத்தாகும்.

இவ்வாறான திறந்த மனத்தோடு கூடிய பரந்த சிந்தனை, பல்லாயிர ஆண்டுகாலங்களாக பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட பக்குவத்தின் காரணமாக எழுந்த வொன்றாகும். பழமைக்கும்

பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் மிளிர்வது சைவ சமயத்தின் தனிச்சிறப்பு. பேராசிரியர் மோர்டிமர் வீலர், அரப்பாவில் செய்த புதைப் பொருள் ஆய்வின் வழி, வேத ஆரியர்கள் வருவதற்கு முன்பே சிந்துவெளி நாகரிகத்தில் சிறப்புற்றிருந்தது சைவ சமயமே என்று காட்டுகின்றார். சமீப காலத்தில் முனைவர் கி. லோகநாதனின் ஆய்வு, சுமேரு எனப்படும் அந்த பண்டைய நாகரிகம் உண்மையில் முதற்சங்கத் தமிழ் நாகரிகமே என்றும், அங்கு மிக சிறப்பான முறையில் கோயில் வழிபாட்டோடு கூடியவொன்றாய் சைவம் வளர்ந்திருந்தது என்றும் தக்க சான்றுகளோடு நிறுவி உள்ளார். இவ்வாறு உலக நாகரிகத்திற்கு வழிகாட்டியாய் நின்ற சைவ சமயத்தின் பெருமையை நாம் நன்கறிந்து போற்ற வேண்டும். இத்தகைய் ஆய்வுகள் இன்னும் பல்குமேயெனில், தமிழினம் பெரியதோர் விழிப்போடு எழும் என்பது உறுதி.

சைவ சித்தாந்தம் என்பது தனியோர் சமயல்ல; எல்லா சமயவொழுக்கங்களையும் விளக்கியருளுகின்ற உண்மை விளக்கமாகும். அருணந்தியார், தாயுமானவர், சுந்தரர் போன்றோரும் இன்னும் பலரும், எங்கெங்கு எவ்வடிவில் எத்தெய்வம் தோன்றினும் ஆங்கெல்லாம் அம்மையப்பராகிய சிவப்பரம் பொருளே அவ்வடிவில் நிற்கின்றார் என்று விளக்கங்கூறி, எல்லா சமயங்களையும் வெறுக்காது அவ்வவற்றிற்குரிய இலக்கணம் பிழையாது கண்டு மகிழச் செய்கின்றனர், ஒவ்வொரு மனிதனும் தத்தமக்குரிய பக்குவத்திற்கு ஏற்ப வழிபடும் உரிமையை சைவம் போற்றுகின்றது.

தமிழ்ப்பெருங்குடி மக்கள் உலகப் பண்பாட்டிற்கு நன்கொடையாய் பலவற்றை அருளியுள்ளனர். இலக்கிய வகையில் சங்க இலக்கியங்களோடு, திருக்குறள், தேவாரத் திருமுறைகள், பெரியபுர்ாணம், திருவாசகம் என்பனவும் இன்னும் பலவும் இருக்கின்றன. தத்துவ விசாரணை வகையில் தமிழில் மெய்கண்ட சாத்திரங்களாகப் பல. கலைகள் வரிசையில் பெரும் பெரும் கோயில்களும், சிவநடராச மூர்த்தமும், இசையும், நடனமுமாகப் பல. பண் வழி இசை என்பது தமிழர்கள் இசை உலகிற்குத் தந்த பெரும் கொடையாகும். இவற்றோடு பத்தியை வளர்த்து அதன் வழி சமயவொழுக்கங்களையே அன்பு சார்ந்தவொன்றாக மாற்றி யமைத்ததும் தமிழர்களே.

தமிழ்ப் பெருங்குடி மக்கள், வேண்டியபொழுதெல்லாம் எழுந்து போராடி மக்களை நல்வழிப்படுத்தும் புரட்சியாளர்களாகவே, தறுகண்மை உடையவர்களாகவே இருந்துள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. கடைச்சங்கம் அழிய தமிழ் நாகரிகம் சிதைய, வேதமரபின் வடமொழியும் சாதிச் சழக்காடுகளும் தமிழ் மண்ணில் வேரூன்றித் தமிழ்ப்பண்பாட்டைச் சிதைக்க, அப்பரும் திருஞான சம்பந்தரும் சுந்தரரும் இன்னும் பலரும் துடித்தெழுந்து புரட்சி செய்து தமிழ்ப்பண்பாடு மீண்டும் தழைத்தோங்கிச் சுடரப் பாடுபட்டனர். திருமூலரும் மந்திராயானத்தைப் பெரிதும் வளர்த்து, சிந்தனையைப் போற்றும் சைவத்தை வளர்த்து மூட நம்பிக்கைகளை சிவஞானவொளியில் சுட்டெரியும்படிச் செய்து "அன்பே சிவம்" என்றவாறு அன்பு நெறியே சமய நெறி என்று அளப்பரிய அகலத்து நுணுக்கத்து திருமந்திரம் வாயிலாகக் கூறிச் சென்றார்.

ஆணவ மலத்தின் பந்தத்தால், அநாதியே கிடக்கும் அப்பந்தத்தால் வரும் சிற்றறிவுத் தன்மையைப் போக்கி, எல்லாமாயாமல கன்மமல பந்தங்களையும் கழற்றி வீசி சுத்தமாகிச் சிவபாதம் உறுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதாக அனைவருக்கும் உரிய ஓர் வாழ்வியலை அழகுபட விரிப்பது சைவ சித்தாந்தக் கோட்பாடாகும். ஒருவன் எச்சமயத்தைச் சேர்ந்திருந்தாலும், அவனது சமயத்தின் உட்சமயமாய்க் கிடப்பது சைவமேயாகும். தனது அபிமானங்களையும் கற்பனைகளையும் வீணான மதப் பற்றுக்களையும் போக்கி, தன்னையே தான் காண்பானெனில், சைவம் கூறும் முப்பொருள் உண்மையை அவனும் உணர்ந்தவன் ஆவான்.

உலகத்தையெல்லாம் ஆட்டிப் படைக்கின்ற ஆற்றலைத்தான், அறிவொடு கூடியவோர் பேராற்றலைத்தான் அன்றே தமிழ்ப் பெருங்குடி மக்கள், சிவசக்தி எனக்கண்டு அம்மையப்பர் வடிவில் வணங்கியுள்ளனர். சிவமின்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவமில்லை என்றவாறு அம்மையும் அப்பரும் இணைந்தே இந்த அற்புத உலகினைத் தோற்றுவித்து, நிறுத்தி, அழித்து பற்பல திருவிளையாடல்கள் புரிந்தவாறு, எல்லா வகை உயிரினங்களும் சிவஞானம் பெற்று உய்யுமாறு சிவத்தாண்டவம் புரிந்து கொண்டே இருக்கின்றனர். தமிழ் மக்களிடையே வேரூன்றி நிற்கின்ற இப்பழங்கருத்தை பழம்பெரும் உண்மையை சமீபகாலத்தில்

விஞ்ஞானிகள் பலரும் மீண்டும் கண்டுபிடித்து மகிழ்கின்றனர். பௌதிகப் பூவுலகெங்கும் இந்த சிவதாண்டவத்தையே காண்பதாகக் கூறுகின்றனர்.

சைவசித்தாந்தமும் ஓர் மதக் கோட்பாடு அல்ல. நூனெறி எனும் முறையியலைக் கொண்ட அறிவியல் துறையில் எழுந்த உண்மை விளக்கமாகும். ஏரணநியதி பிழையாது எவன் சிந்திக்கின்றானோ, அவன் சைவ சித்தாந்தத்தின் உண்மையைத் தெற்றெனக் கண்டு தானும் சைவன் ஆவான். மெய்கண்டார் அருளியவாறு அத்துவிதம் என்பது பொருளத்துவிதம் அல்ல, அறிவத்துவிதமாகும். இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று எல்லா ஆன்மாக்களும் சிவஞானம் போதித்துக் கொண்டே இருக்கும் பேருண்மையை உணர்த்துவது.

இதன் அடிப்படையில் நாம் புத்தெழுச்சி பெற்று, சைவக் கல்வியையும், சிவத்தொண்டு வாழ்க்கையையும் வளர்க்கவேண்டும். மேலான சைவசாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகிற்கு அளிக்கவேண்டும். திருக்குறளை வாழ்க்கை வழிகாட்டி நூலாகக் கொண்டு இளைஞர்கட்கு புதியபுதிய வழிகளில் சமய அடிப்படைகளை விளக்க வேண்டும்.

அன்பே சிவம்; நற்றுணையாவது நமச்சிவாயவே.

அவனே அவனி முதலாகி நின்றானும்
அவனே அறிவாய் நின்றானும் – அவனேகாண்
ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்
காணாமை நின்றானும் கண்டு.

– திருக்களிற்றுப்படியார் (88)

PART VI

APPENDIX

WORLD SAIVA COUNCIL: WHY WE ARE SAIVITES And NOT Hindus:

Despite lofty sentiments which find no expression in practical life, Hinduism by protecting the caste system and Brahminic power and previlege by both, is the very negation of human fundamental rights. It can no longer pretend to be all things to all men.

The Supreme Court of India explains -

WHAT IS HINDUISM?

"In principle, Hinduism incorporates all forms of belief and worship without necessitating the selection or elimination of any. The Hindu is inclined to revere the divine in every manifestation, whatever it may be, and is doctrinally tolerant, leaving others - including both Hindus and non - Hindus - whatever creed and worship practices suit them best. A Hindu may embrace a non-Hindu religion without ceasing to be a Hindu, and since the Hindu is disposed to think synthetically and to regard other forms of worship, strange Gods, and divergent doctrines as inadquate rather than wrong or objectionable, he tends to believe that the highest powers complement each other for the well-being of the world and mankind. Few religious ideas are considered to be finally irreconcilable. The core religion does not even depend on the existence or non-existence of God or on whether here is one God or many. Since religious truth is said to transcend all verbal definition, it is not conceived in dogmatic terms. Hinduism is, then, both a civilisation and conglomerate of religions, with neither a beginning, a founder nor a central authority, hierarchy, or organisation".

'In a recent case-1977 (1) NLI Page 5 at page 8 The Supreme Court of India explained the meaning of the term 'Hindu'.

Swami SIVA NANDHI ADIKALAAR,

HEAD OF London Meikandaar Aadheenam

CHIEF EXECUTIVE

WORLD SAIVA COUNCIL

LONDON (U.K.) HEADQUARTERS

To: Chairman & Board of Trustees,
Arulmiku Kandaswamy Temple, Scott Road,
Kuala Lumpur, Malaysia.

பேரன்புடையீர், ஓம் நமசிவாய, சிவநலமே மலர்க. வணக்கம்

In response to Appeals from saivites in Malaysia, we write this letter, as we understand that whether a Vikkirakam of Sri Rajarajeswary, deity of the smarta sect, can be installed as a parivara deivam. in your esteemed SAIVA koyil, is under consideration by you.

AS A WORLD SAIVA BODY, and basing our considered judgement on SAIVA Agamic & Temple Texts, including the relevant Kumara Tantiram, and concurring with the esteemed opinion & ruling of H.H.HEAD of DHARMAPURAM AADHEENAM,, we appeal to you NOT TO PROCCED WITH the above proposal, as it will undermine Saiva Sanctity and IDENTITY for generations to come. And more importantly, we appeal to you NOT TO PLAY INTO THE HANDS OF BRAHMINISM to use this, as a subtle & calculated tactics, AND FROM WITHIN --

(A) To mislead & confuse the Saiva rank and file, then to divide & rule.

(B) To seek to spread sanskrit & vedantic idas, BOTH ALIEN AND INJURIOUS to our Saiva-Tamil Culture.

(C) In the long term, to marginalise & destroy SAIVISM, the world's oldest Faith, bequeethed to us by Saints, Sages over Millenia and preserved by our NAAYANMARRS & Savants like SRI-la-SRI Arumuga Navalar & others.

WHILE WE RESPECT ALL SECTS, WE OWE A DUTY TO DEFEND SAIVISM.

2. As a practical response to the above, we in W.S.C after long deliberations, unanimously reolved at our 5th INTERNATIONAL SAIVA CONFERENCE, IN DURBAN on 8-20, SEPT, 1995 and DULY DECLARED, SAIVISM AS A WORLD FAITH ON ITS OWN & no longer an appendage of Hinduism.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" அன்பே சிவம்.

சிவ சிவ

FCA WITH OUR PRAYERFUL BLESSINGS TO YOU ALL,

Copy to : Thiru. A. Arumugam, FCA
Dr. K. Loganathan.

1985-1989 : ON-HINDU ORGANISATIONS

Ramakrishna Mission Wins Non-Hindu Status

Vedanta Institution Fighting for Control of Schools Takes Refuge as a New Minority Religion in India

It's been said that if you can't play both sides, you'd better get off the fence. That may be just what the Ramakrishna Order of monks, Head-quartered at Belur Math in Calcutta, is about to do. This world-renowned institution has for years straddled the "fence" bordering Hinduism-claiming to be both Hindu and not Hindu, or perhaps more precisely "more than Hindu." Now, in a decisive move, they are coming down on the Non-Hindu side, provided the Supreme Court lets lower court judgements stand.

On August 28, 1985, the Clacutta High Court ruled in favor of the Ramakrishna Order and its highly respected Mission in a case begun in 1980 in which they declared themselves a Non-Hindu minority religion- "Ramakrishnaism."

Ramakrishna Mission : A New Identity

Excerpts From an Article by Ram Swarup in New Delhi

The Ramakrishna Mission has recently hit headlines. It has acquired a new self-identity. One fine morning, Hindus got up to discover that the Mission, hitherto regarded as a spokesman of religious Hinduism was Non-Hindu. They were bewildered. The reaction was subdued but widespread and deep. It reached down deep into their psyche...

One option for the Mission was to give Hindus a leading position and to fight discrimination, but it chose a lesser way. It gave up Hinduism itself and claimed the status of a minority religion in order to secure certain privileges. To belong to Hinduism entails several disadvantages and to leave it is profitable. Under the circumstances, it would require a faith greater and deeper than the Mission could muster to continue in the old loyalty.

Kerala's Ramakrishna Mission Granted 'Non-Hindu' Status

Over three years ago, the Ramakrishna Mission in India's Bengal state sought for and received minority religious status, a move which allowed them to retain control over the Vivekananda Centenary College and win a dispute with the college's teachers. A firestorm of complaint followed, with Hindus objecting to the argument that the heirs of Sri Ramakrishna and Swami Vivekananda were no longer Hindus. [See HINDUISM TODAY, March, 1986.] Now, in a move made with a good deal less commotion, the Kerala branch has also been granted minority status. Under Indian law, institutions of religions which constitute minorities in the country are granted much more autonomy from government control than are Hindu institutions.

இந்திய இசைக்கு அடிகோலியது சைவப் பண் இசை. கர்நாடக சங்கீதத்திற்கு ஆயிரம் வருடங்கள் முந்தியது சைவப் பண் இசை

தேவாரப் பண் முறை

இசை ஆராய்ச்சிப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி

இந்திய சங்கீத சரித்திரத்திலே தேவாரப் பதிகங்களே மிக்க பழமையான இன்னிசை உருப்படிகளாகும். வேதகானம் தேவாரத்துக்கு முந்தியதாயினும், அது ஒரு தாளத்தில் அமைக்கப் பெற்றுப் பாடப்படவில்லை. ஆகவே தேவாரப் பண்களைப் பற்றி எல்லோரும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். இன்னும் கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானிக சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்படாத காலத்திலே தேவாரங்கள் அருளப்பட்டதனால் இந்தியாவிலே எல்லாச் சங்கீத வித்துவான்களும் தேவார இசையிற் கவனஞ் செலுத்தி வருகின்றார்கள்.

சைவ ஆலயங்களில் தேவாரப் பதிகங்கள் தொன்று தொட்டு, மரபு வழுவாமல் ஓதுவார் மூர்த்திகளால் ஓதப்பட்டு வந்தமையினால், அவற்றின் இசை காப்பாற்றப்பட்டன. ஓதுவார் மூர்த்திகள் சிறந்த பக்திமான்களாவர். அவர்கள் தாம் கற்றுக்கொண்ட தேவார இசையைக் கிரமம் தவறாது பாடிவந்தனர். யாதேனும் மாறுதல் செய்தால் தெய்வ அபசாரம் நேருமென்று பயந்து வந்தார்கள். இக்காரணத்தினால் அவர்களின் இசை புராதனமானதென்று நிச்சயமாகக் கூறிக்கொள்ளலாம்.

மேலும் பிற்காலத்திற் பல ராகங்கள் உற்பத்தியாவதற்குத் தேவாரப் பண்கள் வழிகாட்டியாயிருந்தன. தேவாரப் பண்கள் எல்லாம் இரக்தி இராகங்கள் – உள்ளத்தைத் தொடும் இராகங்கள், பலவகையான கமகங்களும் நுட்ப சுருதிகளும் பண்களில் ஒலிப்பதைக் கவனித்தல் வேண்டும் பண்களின் இசை வடிவங்களை அறிதற்குத் தேவாரப் பதிகங்கள் பளிங்குகள் போல் விளங்குகின்றன.

தமிழில் கீர்த்தனைகள் தந்து "மும்முர்த்திகளுக்கும்" காலத்தால் முந்தியவர்கள் மூவர் யார்?

தமிழில் கீர்த்தனைகள்

தெலுங்கிலும் ஸமஸ்கிருதத்திலும் பாடல்கள் இயற்றிய தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் வாழ்ந்த காலம் சென்ற நூற்றாண்டு. இப் பெரியோர்கள் இறையருள் பெற்றவர்கள். இசைத் துறையின் மிக்க புலமை உடையவர்கள். ஆகையால் இவர்கள் கீர்த்தனைகள் யாவரும் விரும்பிப் பாடும் பெருமை யுடையவை. ஆனால் இவர்கள் தம் கீர்த்தனைகளைக் தமிழ் மொழியில் உருவாக்கியவர்களா? இல்லை.

தியாகையர், தீட்சிதர், சாஸ்திரி – இவர்களுக்கு முன்னால் வாழ்ந்து தெய்வ நலம் பெருகும் தமிழில் கீர்த்தனைகளைத் தந்த பெரியோர்கள் முத்துத் தாண்டவர், மணிமுத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆவர். என்ன காரணத்தாலோ இசைப் புலவர்கள் இடைக் காலத்தில் இவர்களை மறந்தார்கள்.

தியாகையர் முதலிய சங்கீத மும்மூர்த்திகளுக்கு முந்தியவர்கள் அருணாசலக் கவிராயரும், மாரி முத்துப் பிள்ளையும். அவர்கட்கும் காலத்தால் முந்தியவர் முத்துத் தாண்டவர். அப்படியிருக்கத் தமிழில் முதன் முதல் கீர்த்தனைகள் உண்டாகவில்லை என்பது விபரீதம். அதனோடு தியாகையர் முதலியவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர்கள் என்பதோடு தமிழ் மரபைப் பின்பற்றியே கீர்த்தனைகள் செய்துள்ளார்கள் என்பதும் புலப்படும்.

A SCHOLARLY AND INSPIRING INSIGHT INTO SAIVA SOURCES:

[For the attention of our Saiva Scholors: with an appeal for research into Saivism and the Middle East]

THE MYSTERY OF MECCA, MAKHESHVARA, the BLACK STONE AND SIVA LINGA.

HISTORICAL SOURCES

The Puranas (ancient chronicles) are sacred writings of the Hindus similar in layout to the Bible, which contain a vast amount of information, genealogies, stories of gods and heroes, treatises on art, science, ritual and magic, philosophical instruction, etc.

There are eighteen principal Puranas and eighteen secondary Puranas. These highly important texts, which represent an entire range of knowledge dating from the most ancient periods, have often been revised and supplemented by new chapters.

Most of the Puranas probably existed in the ancient languages of India which belonged to the agglutinating type, from which the Dravidian languages of South India may be derived. The Puranas were translated into Sanskrit and other languages in comparatively recent times when the ancient cults, Shaivism in particular, were finally re-absorbed by Brahmanism. The translations of the Puranas in the modern Dravidian languages of South India, such as Tamil and Kannada, are often older than the Sanskrit translations.

The Vedas, the religious texts of the invading Aryans, fulminate against the phallus worshippers and the various forms of the Shaivite cult. It was to take more than two thousand years before the religion of Shiva, which has always remained the religion of the Indian people, was tolerated and then absorbed by Brahmanism.

At the present time. the Shaivite conception of spirituality and the techniques of Shaivite yoga are again regarded as the highest forms of religion and thought in Hinduism. In monastic life the highest stages of initiation always have a Shaivite character, and the same applies to Mahayana Buddhism. Islamic Sufism is also derived from it. Christianity, however, by its methods of inquisition and excommunication and the terrible massacres it per-petrated, eliminated all the sects which had preserved the secret of the knowledge, and, having taken leave of all feeling and comprehension, opened up senseless developments which are leading mankind to ruin.

The information given in the Puranas on the religion, philosophy rites and holy places of Shaivism are substantiated by archaeological investigations concerning the period which we may call the protohistorical period in India, extending from the sixth millennium before our era down to the rise of Buddhism in the fifth century B.C. This information relates not only to the territory of India itself but also to the "seven continents". The holy place mentioned are often difficult to identify, although they have in most cases been taken over by later religions. This is the case, for example, with Mecca (Makheshvara in Sanskrit), where the "black stone" referred to in the Puranas was an emblem of Shiva.

Apart from the Puranas, which are historical works, the very numerous writings called Agamas and Tantras preserve accounts of the principal aspects of the philosophy, the rites and the symbols of Shaivism.

After Shaivism and yoga had been reintegrated within Brahmanism, a number of technical works on yoga were written in the Sanskrit language. These will be discussed later on.

—Courtesy :" YOGA,"

(French) Prof. Alain DANIELOU,

(LOND) 1973.

குறிப்பு:-

தமிழர்களுக்கும், சைவர்களுக்கும் தமது தாய் மொழி மீது உள்ள நியாயமான பற்றையும் உரிமையையும் மொழியாளர்கள் குறிப்பாக வடமொழியாளர்கள் திசை திருப்பி அழிக்க பல நூற்றாண்டுகளாக முயன்றிருக்கிறார்கள்; தற்போதும் முயன்று கொண்டே இருக்கிறார்கள்.

சைவத்தின் மூல நூல்களான சிவஞானபோதம், திருமுறைகள் தமிழிலேயே உள்ளன. திருமுறை "ஒழித்த" படலங்கள் மேலும் நடப்பதற்கு தமிழர்களும், சைவர்களும் இடம் தரலாகாது. இது பழைய கட்டுரையானாலும், புத்துணர்ச்சிக்கு வழி கோலுவது.

தீபம் பார்த்தசாரதிகள் தெளிவடையட்டும்!

– பெருஞ்சித்திரனார் –

கடந்த 15–1–80 ஆம் நாளைய 'துக்ளக்' இதழில் 'தேசிய மொழிகளும் தமிழ்நாடும்' என்னும் தலைப்பில், 'தீபம் நா. பார்த்தசாரதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் எவ்வகைக் கரணியமும் இல்லாமலேயே தமிழ்நாட்டு அறிஞர்கள் மேல் ஒரு குற்றச்சாட்டைக் கூறியுள்ளார். தமிழறிஞர்களுக்குச் சமசுக்கிருதத்தின் மேல் அளவு கடந்த வெறுப்பு இருக்கின்றதென்றும், எவ்வளவுக் கெவ்வளவு அவ்வெறுப்பு மிகுந்திருக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் அறிஞர்கள் என்று பாராட்டப் பெறுகிறார்கள் என்றும் அவர் அதில் குறைபட்டுக் கொள்கிறார். இக்குற்றச்சாட்டுடன் அவர் சமசுக்கிருத மொழியின் அருமை பெருமைகளை அக்கட்டுரையில் அளவிறந்து கூறி, அம்மொழியைத் தமிழர்கள் வெறுக்கக் கூடாது; தமிழோடு ஒப்பவைத்துப் பாராட்டிக் கொள்ளுதல் வேண்டும் என்று பொருள் படும்படி கூறியுள்ளார். அவர் வேண்டுகோள், ஒருவேளை தமிழ் வரலாறு தெரியாதவர்களுக்கும் ஆரியப் பார்ப்பனர்களின் மொழி இன வரலாற்று அழிம்புகள் விளங்காதவர்களுக்கும் 'சரியானது அல்லது நயன்மையுடையது' போல் படலாம். ஆனால், கடந்தகால பிராமணிய மொழி, இனத் தாக்குதல்களை நன்கு உணர்ந்தவர்கள் பார்த்தசாரதியின் உரைகளை ஆரியப் பசப்பு மொழிகளில் ஒன்றாகவே கருதுவர்.

பொதுவாக, ஆரியப் பார்ப்பனர்கள் அஃதாவது பிராமணர்கள் தமிழ்மொழியை என்றுமே பாராட்டியதில்லை; பேணிக் கொள்வதுமில்லை. அதைச் சூத்திரமொழி என்றும், நீச பாஷை என்றுமே கூறிவந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். மறைந்த நயன்மைக் கட்சித் தலைவர்களுள் ஒருவரும், மிகச் சிறந்த அரசியல் வரலாற்று அறிஞருமாகிய வயவர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் 'ஆரியப் பார்ப்பனர்கள் தேவையின் பொருட்டே தமிழைப் பயன்படுத்தினர்; அஃதாவது ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதைப் போல. மற்றபடி அவர்கள் சொந்த மொழியாகக் கருதுவது சமசுக் கிருதத்தையே! தமிழை விட சமசுக்கிருதமே மேல் என்பது அவர்களின் முடிந்த முடிபாகும்' என்று தெளிவாகக் கூறியுள்ளார். பொதுவாக இன நிலையில் ஆரியத்தையும், மொழி நிலையில் சமசுக்கிருதத்தையும், அது முடியாத பொழுது அதற்கு முற்றிலும் இலக்கண இலக்கிய வழியில் வயப்பட்ட இக்கால் உள்ள இந்தி மொழியையுமே ஆரியப் பார்ப்பனர்களும் அவர்கள் வழி வடநாட்டினரும் தலைமைப்படுத்த வேண்டும் அல்லது அதிகாரம் கொண்டனவாக ஆக்க வேண்டும் என்று அங்காந்து திரிகின்றனர். இந்நிலையில் தமிழுக்கு இக்கால் ஏற்பட்டு வருகிற மேம்பாடுகளும், தமிழர்களிடையில் தோன்றி வளர்ந்து வருகின்ற விழிப்புணர்வுகளும் பார்த்தசாரதி போலும் படித்த ஒரளவு பொதுமக்களிடையே விளம்பரம் பெற்ற – பார்ப்பன எழுத்தாளர்களுக்கு எரிச்சலையும் அதிர்ச்சியையும் தருகின்றனவாக இருக்கலாம். இவ்வுணர்வு வெளிப்பாட்டின் ஒரு பகுதியாகவே' 'துக்ளக்'கில் அவர் எழுதிய கட்டுரையை நாம் கருதுதல் வேண்டும்.

ஆரியப் பார்ப்பனர்களின் குணக்கேடுகளைப் பற்றி ஆபர்சுபாய்சு என்னும் வரலாற்று மேலையறிஞர் தம் புகழ்மிக்க 'இந்துக்களின் ஒழுக்க வழக்கங்களும், வினைமுறைகளும்' (Hindu Manners, customs and ceremonies), என்னும் வரலாற்று நூலில், 'அவர்கள் பேராசை (avarice) அதிகார வெறி (ambition), வஞ்சனை (Cunning), நேர்மையின்மை (dishonest), இரட்டை நாக்கு (double tongue), ஏய்த்தல் (Fraud), முறைகேடு (Injustice), நயவஞ்சகம் (Insurwating), கள்ளத் தொடர்பு (Intrigue), கொடுமை (Oppression), இழிதகைமை (Servile), சூது (Wile) போன்ற தீய பழக்கங்களுடைய வர்கள்' என்கிறார். இத்தீக் குணங்களுள் முழுமையுமோ ஒன்றிரண்டோ இன்றுள்ள ஆரியப் பார்ப்பனர்களிடமும்

காணப்படக் கூடியவையாகவே உள்ளன. எனவே, தமிழ்மொழியின் உண்மையான சிறப்பையும் அல்லது தமிழின மேம்பாட்டையும் எவ்வகையிலும் அவர்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். அதனால் நாமும் பார்த்தசாரதி போலும் தமிழ் படித்த பார்ப்பனர்களின் கருத்துகளையும் கவனிக்க வேண்டுவதில்லை. இனி, அவர்கள் வழி, சமசுக்கிருதத்தையும் அதன் மேலாளுமையுமே சிறப்பென்று கொண்ட வையாபுரி, மீனாட்சிசுந்தர, கண்ணதாச அடியார்களையே அவர்கள் தமிழறிஞர்கள் என்று இதுவரை ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழுக்கு உண்மை ஏற்றம் கண்ட மெய்யான தமிழறிஞர்களைப்பற்றி அவர்கள் எப்பொழுதுமே காழ்ப்புக் கொண்டவர்களாகவும், எரிச்சலுற்று மறைமுகத் தாக்குதலை நடத்துபவர்களாகவும், இன்னும் முடிந்தால் அப்படிப்பட்டவர் களையே திட்டமிட்டு அழித்தொழிப்பவர்களாகவுமே இன்றுவரை இருந்து வருகின்றனர்.

இனி, பார்த்தசாரதி தம் கட்டுரையில் சமசுக்கிருதத்தைப் பற்றி வரம்பின்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார். சமசுக்கிருதம் ஓர் அரைச் செயற்கைக் கலவை மொழி என்பதையும், ஏறத்தாழ கி.மு. 5–ஆம் நூற்றாண்டளவில் தோற்றுவிக்கப் பெற்ற மொழி என்பதையும், வேதகால ஆரியர் பேசி வந்த அரிய மொழி அழிந்து போன பின் பிராகிருதம் (வடதிரவிடம்), பாலி மொழிகளினின்று தோற்றுவிக்கப் பெற்றதென்பதையும் மறைமலையடிகள், பாவாணர் போலும் மொழி வரலாற்றறிஞர்கள் நன்கு ஆய்ந்து புலப்படுத்தியுள்ளனர். இனி, பாவாணரவர்கள் சமசுக்கிருதத்தில் ஐந்தில் இரு பகுதி முழுத் தமிழ்ச் சொற்களும் ஐந்தில் இரு பகுதி தமிழ்வேரினின்று திரிந்த சொற்களும், ஐந்தில் ஒரு பகுதி இடுகுறிச் சொற்களென்றும் தம் நுண்மாண் நுழைபுல வன்மையால் முற்ற ஆய்ந்து முடிவுகட்டியுரைப்பார். சமசுக்கிருத அகர வரிசையில் உள்ள நால்வகை ஒலிப்புகளும் பிராகிருத மொழியில் இருந்தவையே. இக்கால் பேசப்பெறும் மணிப்பிரவாளத் தமிழில் தமிழுடன் பிராகிருதமொழிச் சொற்களே மிகுதி. சமசுக்கிருதம் பிராகிருதம் கலந்து செய்யப்பட்டதால் அவை சமசுக்கிருதச் சொற்கள் போலவே தோன்றுகின்றன.

சமசுக்கிருதம் ஒருபோதும் பேசப்பட்டதில்லை. அந்த இழுக்கைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆரியர்கள் அதால் தம் வேத மதக் கொள்கைகளை மக்கள் இழிவாகப் புறக்கணித்து விடுவார்கள் என்பதற்காக, அஃது இங்குள்ளவர்களால் அன்று,

தேவர்களால் பேசப் பெறுவது என்று அதற்கு உயர்வு கூறினர். மொட்டையனைக் கேசவன் என்றும், பெட்டையனைப் புருசோத்தமன் என்றும், மூங்கையனை வாகீசன் என்றும், குருடனைக் கண்ணாயிரம் என்றும் அழைப்பதுபோல், இந்நிலவுலகத்து எப்பொழுதும் எங்கும் எவராலும் பேசப் பெறாத மொழியைத் தேவருலகத்துப் பேசப் பெறுகிற மொழி என்னும் பொருளில் தேவ பாஷை என்று பெருமைப் படுத்திப் பேசினர். பிரம்மசிரி மருவூர் கணேச சாத்திரியார் என்பவர் எழுதியுள்ள 'வேத மதம் அல்லது வேதாகம இதிகாஸ புராண ரகஸ்ய நிருபணம்' என்னும் நூலில் (பக்கம் 194 – 195) கீழ்வருமாறு எழுதுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

"சிலர் நமது முன்னோர் குடும்பங்களில் ஸம்ஸ்கிருத பாஷை தேச பாஷையாக பூர்வகாலத்தில் வழங்கி வந்ததெனவும், அந்த பாஷை இப்போது செத்த பாஷையாகப் போய் விட்டது எனவும் தற்காலம் சொல்லுகின்றனர். இவ்வுலகில் ஸம்ஸ்கிருத பாஷை ஒரு ஸமயமும் தேச பாஷையாக வழங்கப்பட்டதில்லை. கற்றோர்கள் கூட்டங்களில் மாத்திரம் வழங்கப்பட்டதேயன்றி வேறு எவ்விதமுமல்ல. இவ்வுண்மை தெரியாமல் தாறுமாறாய் வசனிக்கும் விஷயங்கள் தற்காலம் விசேஷமாயிருக்கின்றமையால், ஏதோ அவ்விஷயத்தையும் இங்கு நாம் குறிக்க வேண்டியதாயிற்று. ஸம்ஸ்கிருத பாஷை புண்ணிய புவனங்களாகிய ஸூவர்லோகம், மஹர்லோகம், கைலாசம்– முதலிய இடங்களில் வழங்கும் பாஷையேயன்றிப் பூலோக தேச பாஷையல்ல. தென்தேசத்திலிருந்த நம்முடைய முன்னோர்கள் எப்போதும் தென்மொழியையே பேசும் பாஷையாக வழங்கி வந்தனரே யன்றி வேறு எந்த பாஷையும் பேசியவர்களல்லர். ஆன்து பற்றியே மகாபாரத்தில் அர்ஜுனனது தீர்த்தயாத்ரா ப்ரகரணத்தில் 'மணலூர்புரே' எனும் சொல்லிலும் ஸ்கந்த புராணத்தில் 'பெண்ணாநல்லூர்' எனும் சொல்லிலும் தமிழ் வார்த்தைகளை உபயோகப்படுத்தி யிருப்பதனாலும். இவ்வாறே மற்று சிவரஹஸ்யாதி நூல்களிலும் நகர,கிராம ஜனங்களின் பெயர்களை வழங்கும் ஸந்தர்ப்பங்களில் தென்மொழியே பல இடங்களில் வழங்கப்பட்டிருப்பதினாலும் தென் தேசத்தில் தமிழ்மொழியே தேச பாஷையாக வழங்கி வந்ததென வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வுலகில் இவ்வாறு தேச

பாஷைகள் வழங்குவது போல், தேவ உலகில் வழங்கும் பாஷை ஸம்ஸ்கிருதமே"

எனவே, அவர்கள் கூற்றுப்படியே சமசுக்கிருதம் தேவருலகத்தில் வழங்கி வரும் மொழியாக இருக்கிறதென்றால், இங்கு, இந்தத் தமிழ்நாட்டில், அல்லது இந்தியாவில்தான் அதற்கென்ன வேலை? இதற்குப் போய் ஏன் நீபம் பார்த்தசாரதியார் அலட்டிக் கொள்கிறார். அவ்வாறு அலட்டிக் கொள்வது அவர் அறிவன்று; அவர்போட்டிருக்கும் பூணூல். தமிழ் பேசும் ஒரு பெரிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு கூட்டத்தினரைச் சூத்திரர் என்றும், தங்களைப் பிராமணர்கள் என்றும் அறிவியல் வளர்ந்து வரும் இந்த நாளிலும் கூறிப் பெருமை பேசும் வெட்கங்கெட்ட இனம் சார்ந்த பார்த்தசாரதியா, சமசுக்கிருதத்தை வெறுப்பவர்களே தமிழறிஞர்களாக இத்தமிழ்நாட்டில் மதிக்கப் பெறுகின்றனர் என்று வயிறெரிந்து சாவது? உண்மை அதுவன்று அற்றைநாள் தமிழறிஞர்கள் சமசுக்கிருதத்தைத் தேவ மொழி என்று கைகட்டி வாய் பொத்தி வணங்கி வாழ்த்துப் பாடினர். அவர் வழி வையாபுரி, தெ. பொ. மீக்கள் தோன்றினர். இன்றுள்ள நிலை வேறு, தேவமொழியை மட்டுமன்று, தெய்வத்தையே ஆராயும் அறிவியல் காலம் இது. சமசுக்கிருதத்தின் உண்மை வரலாறு இங்குள்ள அனைவர்க்கும் தெளிவாகத் தெரிகின்ற காலம் இது. இந்நிலையில் அதற்குள்ள இயல்பான வரலாற்று நிலைக்கு மேல் தெய்வீகத்தனம் கற்பித்துப் பேச, தமிழர்கள் இன்னும் குடுமி வைத்தவர்கள் அல்லர். இன்னும் சொன்னால் தமிழ் சமசுக்கிருதத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் விளக்கம் தேவையானால் கேளுங்கள்; தெரிவிக்கிறோம். மற்றபடி எழுதுவதற்குத் துக்ளக் போலும் இதழ்களும், அவற்றைப் பொதுமக்களிடம் பரவலாக விளம்பரப்படுத்த செல்வக் கொழுப்புடையவர்கள் பணமும், அதிகாரக் கொழுப்புள்ளவர்களின் ஆட்சியும் உள்ளதென்று தமிழ் மொழியையும் தமிழ் அறிஞர்களையும் தாழ்த்திப் பேச வேண்டா.

திரவிடமொழிக் குடும்பத்தை வடமொழிச் சார்பற்றவை என்று முதன்முதலிற் கண்டு காட்டியவர் கால்டுவெல் ஆவர். அவர்க்குப் பின் தமிழியல் வரலாறு மிகவும் தெளிவுபடுத்தப் பெற்று விட்டது. இதற்கு மேலும் தமிழ் சமசுக்கிருதத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்க முடியாது. அவ்வாறு கிடக்க சமசுக்கிருதம் தமிழைவிட மேம்பட்ட

மொழியுமன்று. சமசுக்கிருத இலக்கணத்தின் தன்மை மிகமிகக் காட்டுவிலங்காண்டித்தனமானது. ஓரிரண்டு எடுத்துக் காட்டுகளிலேயே இதை மெய்ப்பிக்கலாம். சமசுக்கிருத பாலியற் பாகுபாடு என்னும் இலக்கணக் கூறு ஒன்றில் உள்ள செயற்கைத் தன்மையைக் கீழ்வரும் சொற்களில் காணலாம்.

சமசுக்கிருதத்தில் அஃறிணைப் பொருளாகிய 'கல்' என்று பொருள்படும் 'பாஷாணம்' ஆண்பால். அதே கல்லைக் குறிக்கும் சிலா என்னும் சொல் பெண்பால். இன்னும் 'மனைவி' என்று பொருள் படும் மூன்று சமசுக்கிருதச் சொற்களில் தார – ஆண்பால்; பார்ய – பெண்பால்; களஸ்திர – அலிப்பால். அதே போல் பொத்தகம்' என்று பொருள்படும் மூன்று சொற்களில் கிரந்த – ஆண்பால்; ச்ருதி– பெண்பால்; புஸ்தக – அலிப்பால். தத்கச்சதி என்னும் ஒரே படர்க்கை வினைமுற்று இடத்தைப் பொறுத்து அவன் போகிறான், அவள் போகிறாள், அது போகிறது என்று மூன்று வகையாகவும் பொருள்படும். இத்தகைய திணை, பால் எண், இடம் தெளிவாக இல்லாத சமசுக்கிருதம் எப்படித் தேவமொழியாகும்? மேலும் தூய தனித்தமிழ்ச் சொற்களை ஒலி மாற்றியும், திரித்தும், கடைக்குறைத்தும் சமசுக்கிருதம் என்று கூறி வந்த பொய் பித்தலாட்டத்தைத் தமிழர்கள் இன்னும் கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்க முடியாது. ஆயிரக்கணக்கான சொற்களை இதுபோல் காட்டலாம். எடுத்துக்காட்டுக்குச் சிலசொற்கள்: (இவை பாவாணரின் ஆராய்ச்சி வெளிப்பாடுகள்.)

தமிழ்	வ. சொல்	தமிழ்	வ. சொல்
அக்கை	அக்கா	படி	ப்ரதி
அம்பலம்	அம்பரம்	நிலையம்	நிலைய
அரசன்	ராஜன்	பாதம்	பாத
இடைகழி	தேஹலி	பல்லி	பல்லி
உருவம்	ரூப	பலகை	பலக
உலகு	லோக	பிண்டம்	பிண்ட
உவமை	உபமா	புடவி	ப்ருத்வி
கரணம்	கரண	புழுதி	பூதி
கருமம்	கர்ம	புருவம்	ப்ருவ
கலுழன்	கருட	பொத்தகம்	புஸ்தகம்
கன்னி	கன்யா	மண்டபம்	மண்டப
காக்கை	காக்க	மயிர்	ச்மச்ரு

காளி	காலீ	மயில்	மயூரா
குண்டம்	குண்ட	மாத்திரை	மாத்திர
கும்பம்	கும்ப	முத்தம்	முக்த
கோபுரம்	கோபுர	மெது	ம்ருது
சவம்	சவ	வட்டம்	வ்ருத்த
சவை	சபா	சாயை	சாயா
சுக்கு	சுஷ்க	கடிகை	கடிக
திரு	ஸ்ரீ	கலாவம்	கலாப
தூதன்	தூத	சகடம்	சகட
தோணி	த்ரோணி	சடம்	ஜடம்

மேலும், சமசுக்கிருதத்திற்கு முன்னர் வேத ஆரியர் பேசி வந்த வேதமொழியிலேயே தமிழ்மொழிக் கூறுகள் மிக்கிருந்தன என்று பல சான்றுகளுடன் நிலைநாட்டுவர் கேம்பிரிட்சு வடமொழிப் பேராசிரியராகிய இராப்சன் (Rapson) என்னும் அறிஞர்.

இன்னும் தமிழ்மொழி சீரிழந்து போனதற்கும், தமிழினம் சீரழிந்து போனதற்கும் சமசுக்கிருதமும் ஆரியப் பார்ப்பனருமே தலையாய கரணியமும் கரணியரும் ஆவர். சமசுக்கிருதத்தை வேண்டுமென்றே ஆள் பெயர், ஊர்ப் பெயர், நாட்டுப் பெயர், கோவில் பெயர் அனைத்திலும் புகுத்தியவர்கள் சமசுக்கிருத வெறியர்களே. பார்த்தசாரதி கூறுவதுபோல் தமிழில் இன்னும் வெறியர்கள் தோன்றவில்லை. தமிழ் வெறியர்கள் ஒரு பத்துப் பெயரர்கிலும் இருப்பாரேயாகில், உண்மைத் தமழகத்தில் பார்த்தசாரதியும் இரார்; 'துக்ளக்'கும் இருக்காது. ஒருவேளை இருந்தாலும் பார்த்தசாரதி மார்பில் பூணூலும், 'துக்ளக்' இதழில் பெயருடன் கலப்புத் தமிழும் இல்லாமலிருந்திருக்கும். நிலை அவ்வாறில்லாமல் இருப்பது ஒன்றே பார்த்தசாரதி கூறும் தமிழ் வெறியர்கள் யாரும் இங்கு இல்லை என்பதை உணர்த்தும்.

பார்த்தசாரதி கூட்டத்தினரின் சமசுக்கிருத வெறி இத்தமிழகத்தில் எப்படிச் செயற்பட்டது என்பதற்கான சான்றுகள் :

மாற்றப்பட்ட ஆட்பெயர்கள்:

வடமொழிப் பெயர்	பொருள்
கேசவன்	மயிரான்
பூவராகன்	நிலப்பன்றி
கும்பகர்ணன்	குடக்காதன்

மண்டோதரி	பானைவயிறி
சூர்ப்பநகா	முறம்பல்லி
காமாட்சி	காமக்கண்ணி
மீனாட்சி	கயற்கண்ணி
ஸ்வர்ணாம்பாள்	பொன்னம்மை

மாற்றப்பட்ட ஊர்ப் பெயர்கள்:

தமிழ்ப் பெயர்	வடமொழிப் பெயர்
இடைமருதூர்	மத்தியார்ச்சுனம்
கழுகுக்குன்றம்	பட்சிதீர்த்தம்
சிற்றம்பலம்	சிதம்பரம்
திருவரங்கம்	ஸ்ரீரங்கம்
திருவானைக்கா	ஜம்புகேசுவரம்
நாவலந்தீவம்	ஜம்புத்வீபம்
பழமலை (முதுகுன்றம்)	விருத்தாசலம்
பாதிரிபுரம்	பாடலிபுரம்
புக்கொளியூர்	அவிநாசி
மயிலாடுதுறை	மாயூரம்
மரைக்காடு	(மறைக்காடு) வேதாரண்யம்
வினைதீர்த்தான்கோயில், புள்ளிருக்குவேலூர்	வைத்தீசுவரன்கோயில்
வெண்காடு	சுவேதவனம்

மாற்றப்பட்ட கடவுள் பெயர்கள்

தமிழ்	வ.மொழி	தமிழ்	வ. மொழி
பொன்னன்	ஹிரண்யன்	தூக்கிய திருவடி	குஞ்சிதபாதம்
அரவணையன்	சேஷசாயி	தென்முகநம்பி	தக்ஷணாமூர்த்தி
அடியார்க்கு நல்லான்	பக்தவத்சலம்	மங்கைபாகன்	அர்த்த நாரீசுவரன்
அம்மையப்பன்	சாம்பமூர்த்தி	உலகநம்பி	ஜகநாதன்
உலகுடையான்	ஜகதீச்வரன்	செம்மலையான்	அருணாசலம்
சொக்கன்	சுந்தரன்	பிறைசூடி	சந்திரசேகரன்
தாயுமானவன்	மாத்ருபூதம்	மாலிடங் கொண்டான்	சங்கர நாராயணன்

கருமாரி	கிருஷ்ணமாரி	முருகன்	சுப்பிரமணியன்
ஆடலரசன்	நடராஜன்	பிள்ளையார்	கணபதி

இவ்வாறு தூய தமிழைக் கெடுத்து இழிவு தோன்றுமாறும் அதை விளங்கிக் கொள்ளாதவாறும் செய்த ஆரியப் பார்ப்பனர்கள் மொழி வெறியர்களா. இத்தீமையை ஏற்றுக்கொள்வதனால் எதிர் வரும் தாழ்ச்சிகளையும் அழிவுகளையும் அறியாத கள்ளங் கவடற்றவர்களானவர்களும், அன்பினாலும் விருந்தோம்பலினாலும் பகைவர்களையும் அரவணைத்து ஆதரித்துப் போற்றி, இன்று அவலத்திற் காட்பட்டுக் கிடப்பவர்களும் ஆன தமிழர்கள் மொழி வெறியர்களா? இதற்குப் பார்த்தசாரதியார் 'துக்ளக்'கிலேயே விடை தருவாரா? அல்லது தெனமொழிக்கே எழுதித் தம் பெருந்தன்மையை உணர்த்துவாரா?

இன்னொன்றை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் நன்று. மக்களினத்தில் மட்டும் ஆரியப் பார்ப்பனர்கள் சாதி யிழிவுகளைப் புகுத்தவில்லை. தமிழ் எழுத்துகளிலும் சாதிப் பாகுபாட்டைப் புகுத்தியிருப்பதைப் பார்த்தசாரதியார் அறிந்திருப்பார். ஏனெனில் அவர் தமிழாசிரியராக இருந்தவர். பாட்டியலில் உள்ள எழுத்துச் சாதிப் பாகுபாடுகள் இவை :

உயிரெழுத்துகளும்,

முதல் ஆறு மெய்யெழுத்துகளும் — பார்ப்பன எழுத்துகள்

இரண்டாவது ஆறு மெய்யெழுத்துகள் – சத்திரிய எழுத்துகள்

ல், வ், ழ், ள் – வைசிய எழுத்துகள்

ற், ன் – சூத்திர எழுத்துகள்

இன்னும் அதில் குறிப்பிட்டுள்ள பாட்டு நிலைகள் வருமாறு :

பார்ப்பனர்க்கு – வெண்பா. வைசியர்க்கு – கலிப்பா
சத்திரியர்க்கு – ஆசிரியப்பா சூத்திரர்க்கு – வஞ்சிப்பா.

கலம்பகத்தில், தேவர்க்கு 100 செய்யுள், பிராமணர்க்கு 95, அரசர், அமைச்சர்க்கு 70 வணிகர்க்கு 50 செய்யுள், சூத்திரர்க்கு 30 செய்யுள் பாட வேண்டும் என்பது பாட்டியல்.

இப்படி எழுத்து, சொல், பாட்டு, மக்கள், ஊர், பேர், கடவுள் எல்லாமும் பார்ப்பனர்க்கு அடிமையாக இருந்தால் பார்த்தசாரதியார் மெச்சி, உச்சி குளிர்வாரோ? (நல்லவேளை அவர் உச்சிக்குடுமி

எதுவும் வைத்திருக்கவில்லை; பரட்டைத்தலையராக இருக்கிறார்) இல்லாவிட்டால், அல்லது தட்டிக் கேட்டால், அல்லது ஆரியப் பார்ப்பனர்க்குத் தமிழர் அடிமைகள் ஆக முடியாது என்றால், அல்லது சமசுக்கிருதத்திற்குத் தமிழ்மொழி தாழ்ந்ததன்று, உயர்ந்ததே என்றால் உடனே 'லோகம் கெட்டுப் போயிடுத்து' என்று கூத்தாடும் சவண்டிப் பார்ப்பனர் போல, பார்த்தசாரதியாரும் தமிழ் நாட்டு அறிஞர்களுக்குச் சமசுக்கிருதத்தின் மேல் காரணமற்ற வெறுப்பு, துவேஷம் என்று 'துக்ளக்'கில் இல்லையென்றால் தினமணிக் கதிரில் எழுதோ எழுதென்று எழுதுவார். இல்லையா, தீபம் பார்த்தசாரதி அவர்களே!

இன்னொன்றைப் பார்த்தசாரதியார் தம் கட்டுரையில் கூறியிருக்கிறார். அதுதான் சமசுக்கிருதம் கழகக் காலத்திலும் அதையடுத்த காலங்களிலும் ஓர் அறிவுத் தொடர்பை (Intellectual companianship;) தொடர்ந்து அளித்து வந்திருக்கிறதாம். நல்ல வேடிக்கை இது. தமிழ்மொழியில் இருந்த நூற்றுக்கணக்கான அறிவு நூல்களைச் சமசுக்கிருத்தில் பெயர்த்து எழுதிக் கொண்டு, தமிழ் மூலங்களை அழித்து விடுதல் பார்ப்பனர்கள் அன்றிலிருந்து இன்றுவரைத் தொடர்ந்து செய்து வரும் ஓர் அப்பட்டமான அழிம்பு வேலை. இது பற்றித் தென்மொழியில் முன்பே பல செய்திகளையும் குறித்திருக்கிறோம். இப்பொழுது தஞ்சை சரசுவதி மகாலில் தொடர்ந்து இவ்வேலை நடந்து வருவதையும் சுட்டியிருக்கிறோம். வேதத் தொடரின் இறுதியில் சேர்க்கப் பெற்றிருக்கும் உபநிடதங்கள் யாவும் தமிழ் முனிவர்கள் எழுதியவை என்பதை மறைமலையடிகள் உறுதிப்படுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் அறிவுத் தொடர்புக்கு மட்டுமன்று, உலகத்தின் அறிவுத் தொடர்புக்கே தமிழ்தான் மூலமாக இருந்து உதவும் என்பதைக் கீழ்வரும் பர். கில்பர்ட் சிலேட்டர் (Dr. Gilbert Slater) அவர்களின்கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

Since Dravida is at once the part of India where the most ancient culture still survives and the part which is closest in touch with the twentieth century, in the flow of intellectual commerce between the east and the west. the English speaking students of Tamil will supply many of the most achive intermediaries.

இனி, அறிஞர்களின் அறிவுப் பரிமாற்றத்திற்கு மட்டுமன்று இந்திய மக்களினத்தின் ஒருமைப்பாட்டுக்கே தமிழ்தான் இணைப்பு

மொழியாக இருந்து உதவும் என்று காந்தியடிகள் கூறியதையும் பார்த்தசாரதிக்கு நினைவூட்டுகிறோம். (Calcutta 'Modern Ruview')

இனி, இறுதியாக,

"தெய்வா தீனம் ஜத்ஸர்வம்
மந்த்ரா தீனந்து தைவதம்
தன்மந்த்ரம் ப்ராஹ்மணா தீனம்
ப்ராஹ்மணா மம தைவதம்"

(இதன் பொருள் : உலகம் தெய்வத்துள் அடக்கம்; தெய்வம் மந்திரத்துள் அடக்கம்; மந்திரம் பிராமணருள் அடக்கம்; ஆதலால் பிராமணரே நம் தெய்வம்)

என்ற காலம் மலையேறி விட்டது. தேசியம், ஒருமைப்பாடு, ஒற்றுமை, இந்தியா என்றெல்லாம் பேசி ஆரிய இனத்துக்கும் மொழிக்கும் பிற இனத்தவரை, குறிப்பாகத் திரவிடரை, இன்னுஞ்சொன்னால் தமிழரை அடிமைப்படுத்தி அரசோச்சிய காலம் கழிந்து விட்டது; இனிமேலும் தமிழினத்தைப் பார்ப்பனர்க்கு மட்டுமன்று உலகில் வேறு எந்த இனத்துக்கும் அடிமைப்படுத்திவிட முடியாது. தமிழினம் விழித்துக் கொண்டது;விழித்துக் கொள்கிறது; விழித்துக் கொள்ளும்! பார்த்தசாரதிகளும் துக்ளக்குகளும் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

—நன்றி : "தென்மொழி"

LONDON MEIKANDAAR ADHEENAM TRUST

British Saiva Siddhanta Centre, London E17.6JE
[A Registered Charity in UK.]

A non-profit, service-oriented SAIVA religious charitable organisation.

OUR AIMS include the following:

1. To uphold our motto: "Compassionate service for the welfare of all and a devout life of discipline and publications.

2. To propagate the tenets of Saiva Siddhanta through Temple Service, Gurupoojahs, religious discourses and publications.

3. To inculcate the spirit and practice of Saiva Bhakti and an ethical way of life inherent in a resident Ashrama life of total dedication through religious service and self-discipline.

4. To emphasize and widen the scope of social relevance and humanitarian service, enshrined in Saiva doctrine, to gain a new momentum in the hitherto neglected areas of community and national welfare.

5. Future Plans: In due course, it is proposed to widen the scope of Hindu Saiva religious and charitable work as an international-saiva service.

OUR APPEAL

The Trustees take this opportunity to make a religious and charitable appeal for funds not only from Saivites and Hindus but from all religious minded seekers of Truth, throughout the world.

ACKNOWLEDGEMENTS

The World Saiva Council, The London Meikandaar Aadheenam Trust and the Joint Editors express their grateful thanks to all authors and publishers whose works adorn this labour of love dedicated to all lovers of Truth in search of Reality here and now, according to Saiva Siddhanta Philosophy, and using the Holy Saiva, Thirumural Tamil HYMNS (Mantrams) for Prayer and Poojahs in Temples.

WORLD SAIVA COUNCIL : BACK GROUND

(1) POLICY STATEMENT : The world Saiva Council and its accredited committees shall:

(a) Strictly adhere to the traditional South Indian Saiva Siddhanta Philosophy of the Meikandaar School and confirmed by the International Saiva Siddhanta seminars held in Dharmapuram (1984) and Kuala Lumpur (1986) AND SAIVA conferences in world cities annually.

(b) Promote, foster & protect, nationally & internationally, the welfare & progress both of Saivism and Saivite Hindus throughout the world.

(2) SHORT TERM ACTION PLANS
(1) QUARTERLY INTERNATIONAL SAIVA NEWS-LETTER AND
(2) W.S.C. ANNUAL CALLENDAR with Internationally acceptable SAIVA FESTIVAL DATES.

LONG TERM ACTION PLANS (1) INTERNATIONAL SAIVA SIDDHANTA SEMINARS

(2) CONDENSED SAIVA THEOLOGY BOOKS IN ENGLISH and TAMIL

(3) An outline plan for urgent Action for Saiva Religious Regeneration in EACH COUNTRY REGION.

1. It is vital that the custom of paying homage to a multitude of deities be discouraged as this has weakened the fabric and foundation of Hinduism & Saivism.

2. Following the current practice in North Indian Hindu Temples, we must restore our lost birhtright to enter the sanctum of the temple and directly worship the Deity ourselves with flower and holy water. In this we will only follow the examples set by our many saints like Kannappar.

3. It is our birthright to pray in our temple in our sweet mother toungue, Tamil, as this mode of prayer will enhance our faith and religious fervour and promote Bhakti.

4. There is a dire need for Saiva Volunteer Teachers in the Saiva community to work with the direction and guidance of Saiva Mutts. It is vital that each village sponsers one youth enabling him to dedicate his life for Saiva services in the community.

5. Now, there is a dire need for religiously trained Saiva Swamis especially in the west with populations of several lakhs of Saiva Tamils living in most of the western capital cities. The presence and availability of trained Saiva Swamis would also be helpful, both in India abroad, to stem the tide of forced religious conversions of Hindu

6. In the context of the 20th century closeness of world communities, it is vital that we publish more Saiva theological books in English. Top of the list should be an authorized Saiva theological book on doctrine and an Encylopaedia on Saivism and Saiva Siddhanta. W.S.C has also released many Books.

உலக சைவப் பேரவை சென்னையில் 29.2.92ல் தொடக்கப்பட்டு, சிங்கப்பூரில் 13.9.92 நடந்த பேராளர் ஆலோசகர் பொதுச்சபையில் ஒரு வரலாற்றுச் சிறப்புக் கொண்ட சர்வதேச சைவப்பேரவையாக இன்று இலண்டனில் தலைமைச் செயலகம் அமைய நிறுவப்பெற்று, ஒன்பது உலக நாடுகளில் செயற்குழுக்கள் செயலாற்றுகின்றன.

சைவ மறுமலர்ச்சிக்கான உடனடி செயல் திட்டம்

1. இந்து சமயம் என்ற பெயரில் பல கடவுள்களை வழிபடும் வழக்கம் பரவாமல் பாதுகாப்பது அவசியம் சிறுதெய்வ வழிபாட்டை விலக்கல் வேண்டும்.

2. வட இந்தியாவில் உள்ள முறையைப் பின்பற்றி, நாமும் திருக்கோயில் கருவறைக்குள் சென்று புனலும், பூவுமிட்டு வழிபடும் உரிமையைக் கண்ணப்பர் பெயரால் நாம் அடைந்தே தீர வேண்டும்.

3. இறைவனைத் தமிழில் வழிபாடு செய்து கொள்ளும் உரிமை நமது பிறப்புரிமை. தமிழ் வழிபாட்டு இயக்கத்தின் நோக்கம் பக்திநெறியை வளர்ப்பதே ஆகும்.

4. இன்று, திருமடங்களைச் சார்ந்து மக்கள் மன்றத்தில் உலா வரும் தொண்டர்கள் இல்லாப் பெருங்குறையை சைவ சமுதாயம் நீக்க வேண்டும். ஒரு கிராமத்தவர் ஒரு இளைஞரை சைவப்பணிக்கென ஆதரிக்க வேண்டும்.

5. முழுநேரச் சைவ சமுதாய சேவைக்காக நாடு தோறும் சிவதொண்டர் அணி இந்தப் பேரவை சமய வழிப்பட்ட சமுதாயப் பணியைச் செய்யச் சைவத் துறவிகளை உண்டி, உறையுள், உடை வழங்கி ஊக்கி, உருவாக்க வேண்டும். இவ்வாறு பயிற்சி பெற்ற துறவிகள் திருக்கோயில்களில் உருவாகும் ஊர்ச்சபையின் இயக்குநர்களாக அமைவார்கள்.

இதனால் சமயவழித் தொடர்பும், வழிகாட்டலும் வலுப்பெறும், மதமாற்றத்தையும் இவ்வாறு ஒரளவேனும் தடுக்கலாம்.

இன்றைய "சைவ உலகின்" உடனடித்தேவை செயல். சேவை, சாதனை! சேரவாரும் சைவர்களே!

அன்பே சிவம்

